
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
केन्द्रीय सरकार द्वारा प्रत्याभूत
GUARANTEED BY THE CENTRAL GOVERNMENT
100
एक सौ रुपये
I PROMISE TO PAY THE BEARER THE SUM OF ONE HUNDRED RUPEES
MAHATMA GANDHI
பத்து
எண்டமூரி வீரேந்திரநாத்

பணம்

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்:

கௌரி கிருபானந்தன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமைப் பதிப்பு

முதற் பதிப்பு	2006
இரண்டாம் பதிப்பு	2008
மூன்றாம் பதிப்பு	2010
நான்காம் பதிப்பு	2013

© ஆசிரியருக்கு

விலை : ரூ.195.00

அல்லயன்ஸ் கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : srinivasan@alliancebook.com

Typesetting Print Point Graphics, Chennai - 20
Printed at Logha Offset Printers, Chennai - 14

பணம்

1

இரவு பதினோரு மணி நெருங்கிக் கொண்டிருந்தது.

பெட்டிக் கடையில் சிம்னி விளக்கு மினுக் மினுக்கென்று மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. தெரு விளக்குகள் ஏனோ எரியவில்லை.

ஓடிவந்த களைப்பினால் காந்திக்கு மூச்சு இரைத்துக் கொண்டிருந்தது. மூச்சை இழுத்துக் கொள்வதற்காக ஒரு நிமிடம் நின்றவன் சுற்றிலும் பார்வையிட்டான். தெருவில் மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை. தொலைவில் ரயில்வே ஸ்டேஷன் டவர் தென்பட்டது. அதைப் பார்த்ததும் அவன் முகம் மலர்ந்தது. சட்டென்று அந்தப் பக்கத்தை நோக்கி ஓட்டமெடுத்தான்.

இரண்டே நிமிடங்களில் அந்த இடத்தை அடைந்தான். ஒரே ஒரு ஆட்டோ தென்பட்டது. ஓடிப்போய் அதன் கம்பியைப் பிடித்துக் கொண்டே, ''ஆட்டோ வருமா?'' என்று கேட்டான்.

தூக்கக் கலக்கத்திலிருந்த டிரைவர் நிமிர்ந்து பார்த்துக் கொண்டே ''எங்கே?'' என்று கேட்டான் எரிச்சலுடன்.

''மருந்துக் கடையைத் தேடணும்.''

காந்தி ஏறி உட்கார்ந்து கொண்டதும் ஆட்டோ கிளம்பியது. நேரம் ஆக ஆக அவனுள் பயமும், கவலையும் அதிகரித்தன. ஐந்து நிமிடங்கள் கழிந்தன. திறந்திருந்த மெடிகல் ஷாப்பைப் பார்த்ததும் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டான்.

ஆட்டோ நின்றது.

ஒரு நிமிடம் யோசித்தான் அவன். கையில் இருந்த பணத்தில் மருந்தையும் வாங்கிக் கொண்டு ஆட்டோவிலேயே திரும்பிப் போவதென்றால் கஷ்டமாக இருக்கக் கூடும். மருந்துகளை வாங்க எவ்வளவு பணம் தேவைப்படுமோ தெரியாது. குனிந்து மீட்டரைப் பார்த்தான். மினிமம் சார்ஜ்தான் ஆகியிருந்தது.

வியர்வையில் நனைந்து கசங்கியிருந்த நோட்டுகளை எடுத்து ஏழு ரூபாயை எண்ணிக் கொடுத்தான். எஞ்சியிருக்கும் பணம் மருந்து வாங்குவதற்கு போறுமோ போறாதோ.

பட்டிக்காட்டானைப் பார்ப்பதுபோல் அவனை ஏற இறங்க நோக்கிய ஆட்டோக்காரன், ''இரவு பதினோரு மணியைத் தாண்டிவிட்டால் ஒன்றரை மடங்கு சார்ஜ். முன்னாடி எழுதியிருந்ததே படிக்கவில்லையா?'' என்று கேட்டான் ஏளனமாக.

காந்தி அவனைக் குழப்பத்துடன் பார்த்துவிட்டு மேலும் மூன்று ரூபாயை எடுத்து நீட்டப் போனான்.

அப்பொழுதுதான் சர்ச்சிலிருந்து பதினோரு மணி அடிக்கும் சத்தம் கேட்டது. நீட்டிய அவன் கை பாதி யிலேயே நின்றுவிட்டது.

அவன் தயக்கத்தை உணர்ந்தவன் போல் டிரைவர் சிரித்துக் கொண்டே, ''அந்த கடியாரம் தாமதமாக ஓடும் சார்'' என்றான்.

தனக்குப் பணம் எவ்வளவு தேவையாக இருக் கிறதோ, ஒவ்வொரு ரூபாயையும் எவ்வளவு கவனமாக செலவு செய்ய வேண்டியிருக்கிறதோ அவனுக்கு எடுத்துச் சொல்ல நினைத்தான். ஆனால் அதனால் பலன் எதுவும் இருக்கப் போவதில்லை. மேலும் நேரமும் வியர்த்தம்.

காந்தி கொடுத்த பணத்தை எண்ணிப் பார்த்த ஆட்டோ டிரைவர் மறுபடியும் கையை நீட்டினான். ''இன்னும் மூன்று ரூபாய் தரணும்'' என்றான்.

காந்தி வியப்புடன் ''எதுக்கு?'' என்றான்.

''ஸ்டேஷனில் பார்க்கிங் சார்ஜெஸ் மூன்று ரூபாய்.''

காந்தியின் முகம் கோபத்தில் சிவந்துவிட்டது. ''நீ பார்க்கிங் இடத்தில் இருக்கவில்லையே?''

''இருந்தேன்.''

காந்தியின் கைப்பிடிகள் இறுகின. அந்த அடி மட்டுமே ஆட்டோக்காரன் மீது பட்டிருந்தால் அவன் காற்றிலேயே இரண்டு மூன்று குட்டிக்கரணம் போட் டிருப்பான். ஆனால் அடிப்பதற்காக உயர்ந்த கையை

வலுக்கட்டாயமாக கீழே இறக்கினான். அந்த நேரத்தில் ரகளையை வளர்ப்பது சரியில்லை.

சட்டென்று மறுபடியும் ஆட்டோவில் உட்கார்ந்து கொண்டு ''கிளம்பு'' என்றான்.

''எங்கே?'' டிரைவர் வியப்புடன் கேட்டான்.

''ரயில் நிலையத்தில் பார்க்கிங் சார்ஜஸ் எவ்வளவு என்று காவல் நிலையத்திற்குப் போய் தெரிந்து கொள் வோம்.''

''இவ்வளவு சின்ன விஷயத்திற்குப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவானேன். விடுங்க தம்பி.'' அவனை இறக்கி விட்டுவிட்டு ஆட்டோக்காரன் கிளம்பிப் போய் விட்டான்.

அத்தனை வேதனையிலும் அவனால் ஆட்டோக் காரனின் சாமர்த்தியத்தையும், திறமையையும் பாராட் டாமல் இருக்க முடியவில்லை. அந்த நள்ளிரவு நேரத்தில் மருந்துக் கடையைத் தேடிக் கொண்டு ஒருவன் வந்திருக் கிறான் என்றால் யாரோ ரொம்ப ஆபத்தான நிலையில் இருப்பதாகத்தானே அர்த்தம். அந்த நிலைமையில் இருப்பவன் வாதம் புரிந்து கொண்டோ, மத்யஸ்தம் செய்து கொண்டோ இருக்கமாட்டான். இது தெரிந்து தான் ஆட்டோக்காரன் அவன் நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். பதினோரு மணி ஆகவில்லை என்று அப்பொழுதே வாதம் புரிந்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு போவதாக சொல்லியிருந்தால் அதிகப்படியாக ரூபாய் கொடுத்திருக்கத் தேவையில்லை. தன்னுடைய கவனக்குறைவினால் மூன்று ரூபாய் நஷ்டம்.

ஷட்டரை இறக்கிக் கொண்டிருந்த கடைக்காரன் உள்ளே நுழைந்த காந்தியைப் பார்த்துவிட்டு, ''என்ன வேண்டும்?'' என்று கேட்டான்.

காந்தி மருந்து சீட்டைக் கொடுத்தான். ''ஒரு காப்ஸ்யூல், அரை டஜன் மாத்திரைகள், இரண்டு இன்ஜக்ஷன்கள்.''

கடைக்காரன் மருந்துகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது, அவற்றின் மீதிருந்த விலைக் குறிப்பைக் கவனித்து மனதிலேயே கணக்கு போட்டான்.

இருபத்தெட்டு ரூபாய். அவனிடம் இருபத்தாறு ரூபாயும் சில்லறையும் மட்டுமே இருந்தன. மூன்று மாத்திரைகளைத் திருப்பித் தந்துவிட்டால் சரியாக இருக்கும்.

அவன் ஏதோ சொல்லப் போகுமுன், கடைக்காரன் பென்சிலால் கணக்கிட்டு முடித்துவிட்டு, ''முப்பத்து மூன்று ரூபாய்'' என்றான்.

ஒருகால் கடைக்காரன் தவறாக கூட்டியிருப்பானோ என்னவோ என்று எண்ணிய காந்தி ''எப்படி?'' என்று கேட்டான்.

கடைக்காரன் அலட்சியமாகக் காகிதத்தை அவன் பக்கமாக தள்ளினான். அவன் போட்ட விலைக்கும், மருந்துகள் மீது எழுதியிருந்த விலைக்கும் சம்பந்தமே இல்லை.

காந்தியின் எண்ணத்தை உணர்ந்து கொண்டு விட்டானோ என்னவோ, ''உள்ளூர் வரிகள் தனி'' என்ற

எழுத்துக்களைச் சுட்டிக் காட்டினான் கடைக்காரன், மேற்கொண்டு எதுவும் பேசத் தேவையில்லை என்பது போல்.

''இருபத்தெட்டு ரூபாய்க்கு ஐந்து ரூபாய் வரியா?''

''பின்னே இல்லையா?''

''சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், ஸ்டேட் டாக்ஸ் பன்னிரண்டு சதவீதம்னு போட்டாலும் அத்தனை ஆகாதே. வருமான வரி, சொத்து வரி எல்லாவற்றையும் இதோடு சேர்த்து விட்டாயா?'' கோபமும் ஏளனமும் கலந்த குரலில் கேட்டான் காந்தி.

''வேணும்னால் வாங்கிக் கொள்ளுங்க. இல்லையா விடுங்க.'' கடைக்காரன் மருந்துகளை எடுத்து மறு படியும் உள்ளே வைக்கப் போனான்.

வேறு வழியில்லை. வாங்கிக் கொண்டுதான் ஆகணும். இங்கே வாதம் பயன்படாது. பில்லைக் கேட்டாலும் கடைக்காரன் தரமாட்டான், அது டாக்யு மெண்டரி ப்ரூஃப் ஆக மாறக்கூடும் என்பதால். சட்டத் தால் கடைக்காரனை எதுவும் செய்யமுடியாது. மக்கள் இதை கண்டும் காணாததுபோல் தங்கள் வேலையில் மூழ்கியிருக்கிறார்கள்.

தன்னுடைய அவசரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்டோக்காரன் லாபம் சம்பாதித்தான். தன்னை யாரும் தட்டிக் கேட்க மாட்டார்கள் என்ற துணிச்சலில் கடைக் காரன் தன் விருப்பம்போல் விலையைக் கூட்டுகிறான்.

காந்தி தலையை அசைத்துவிட்டு, மாத்திரைகளைத் திருப்பித் தந்துவிட்டு, ''இதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்'' என்று இன்ஜக்ஷன் மருந்தையும், காப்ஸ்யூலையும் மட்டும் எடுத்துக் கொண்டான். இருபத்தேழு ரூபாய் ஆயிற்று. கையில் எட்டணா பாக்கியிருந்தது.

அதை வைத்துக் கொண்டு ரிக்ஷாவில்கூட போக முடியாது. அவன் ஓடத் தொடங்கினான். ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர கால்மணி நேரம் பிடித்தது.

உயரமான மரங்கள் இருட்டில் தலைவிரித்தாடும் பேய்களைப் போல் இருந்தன. நடுவில் வெள்ளை நிறத்தில் அந்தக் கட்டடமே பெரிய சமாதியைப் போல் தோற்றமளித்தது. மயானத்தைப் போலவே கள்ளிச் செடிகள் காம்பவுண்டிற்குள் மண்டிக் கிடந்தன.

காந்தி ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தான். அப்பொழுதான் பன்னிரண்டு மணி அடித்தது.

வார்ட் உறங்கிக் கிடந்தது. தம் அறையிலேயே ஒரு உயிர் அப்பொழுதுதான் தன் கூட்டிலிருந்து விடுபட்டுச் சென்று விட்டது என்பதை அங்கிருந்தவர்கள் உணரவில்லை. திடீரென்று விழித்துக் கொண்ட ஒரு நோயாளி மட்டும் குறுக்கே போடப்பட்டிருந்த திரைச்சீலை பக்கமாக பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். திரைச்சீலைக்குப் பின்னாலிருந்த கட்டிலில்தான் உயிரற்ற அந்த உடல் கிடந்தது.

காந்தி பிணத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். விரக்தியின் எல்லையைக் கடந்து விட்ட நிலை.

நர்ஸ் அருகில் வந்து இரக்கம் தெரிவித்துவிட்டுப் போனாள்.

உற்றார் உறவினர் யாரும் இல்லை. ஒரு அழுகைக் குரல் இல்லை. காந்தி வெளி வராண்டாவில் வந்து நின்று கொண்டான். சுற்றிலும் இருந்த இருள் அவனைப் பரிவோடு விசாரித்தது, தன்னோடு நட்பு கொள் என்பது போல். எல்லோரும் இருக்கும்போதும், எல்லோரும் போன பிறகும் எப்போதும் தான் தனியன்தான்.

அவன் எண்ணங்களைச் சிதறடிப்பதுபோல் காலடி யோசை கேட்டது. திரும்பிப் பார்த்தான். ஹெட்நர்ஸ் அருகில் வந்தாள். ''பாடியை எடுத்துக் கொண்டு போகலாம், இதோ ரிப்போர்ட்.''

அவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. ''பாடியை எடுத்துப் போகும்போது எல்லோருக்கும் பணம் கொடுக்கணுமா?''

அந்த திடீர் கேள்விக்கு நர்ஸால் உடனே பதிலளிக்க முடியவில்லை. ''சாதாரணமாக நோயாளி உடம்பு தேறி போகும்போது இனாம் தருவது வழக்கம். நோயாளி இறந்துவிட்டால் வேதனையில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதால் தரமாட்டாங்க.''

''பிணத்தை நாளை காலையில் வந்து எடுத்துக் போகிறேன்.''

நர்ஸ் அவனை தர்மசங்கடத்துடன் பார்த்தாள். அவளுக்கு ஐம்பது வயது இருக்கும். இத்தனை வருட அனுபவத்தில் இதுபோல் சொன்ன முதல் ஆள் இவன் தான், பிணத்தை சர்வகாசமாக கொண்டு போவதாக சொன்னது.

அவள் எண்ணத்தை அவன் புரிந்து கொண்டு விட்டான். 'ரிக்ஷாவில் எடுத்துக் கொண்டு போவதற்குக் கூட கையில் பணம் இல்லை' என்று சொல்ல நினைத் தான். ஆனால் சொல்லவில்லை.

நர்ஸ் தன் கையிலிருந்த ரிப்போர்ட்டை மடித்து வைத்துக்கொண்டே, ''சரி அப்படி என்றால் நாளை காலையில் மார்ச்சுவரிக்கு வந்து எடுத்துக்கிட்டு போங்க. ஆனால் அப்போ சில ஃபார்மாலிடீஸ் முடிக்க வேண்டி யிருக்கும். ஒருகால் நீங்க வராமல் போனால் அநாதைப் பிணமாகக் கருதி முனிசிபாலிடீக்காரர்கள் மற்ற காரியங் களைச் செய்ய வேண்டியிருக்கும்.''

அவன் முகம் சிவந்துவிட்டது. தன் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை மங்கலான வெளிச்சத்தில் தென்படாதவாறு மறைக்க முயன்று, ''நாளை காலை யிலேயே வருகிறேன்'' என்று கிளம்பப் போனான்.

''அது சரி. அவங்க யாரு? உனக்கு என்ன உறவு?'' பிணம் இருந்த பக்கம் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

''என் தாயார்.''

அதிர்ந்து போனவளாய் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். கடினமாக இறுகியிருந்த அந்த முகத்தி

லிருந்து அவளால் எதையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. ஏதோ சொல்ல வந்தவள் எதுவும் சொல்லாம லேயே போய்விட்டாள். நர்ஸாக முப்பது ஆண்டுகள் அனுபவம் அவளுக்கு இருக்கலாம். ஆனால் மென்மை யான உணர்வுகளைக் கொண்ட நபர்களைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது.

அவனுக்கும் அவன் தாய்க்கும் பெரிதாக ஒன்றும் தொடர்பு இருந்தது இல்லை. தந்தை இறந்தபிறகு கூட அவன் தாயிடம் போகவில்லை. அதற்குக் காரணம் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. தன் எல்லைகளைத் தாண்டி என்றுமே வெளியே வர முயற்சி அவன் செய்தது இல்லை.

காந்தி படியிறங்கப் போனபோது வார்ட் பையன் பின்தொடர்ந்து வந்தான்.

''பிணத்தை நாளை காலையில் கொண்டு போகப் போறீங்களா?''

''ஆமாம்.''

''இறந்து போனது யாரு?''

''என் தாயார்.''

''சவக்கிடங்கு எப்படி இருக்கும்னு என்னிக்காவது பார்த்திருக்கீங்களா?''

''இல்லை. நான் இன்னும் உயிரோடுதான் இருக் கிறேன்.''

''இங்கே இருக்கும் சவக்கிடங்கைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. இஷ்டம் வந்ததுபோல் பிணங்களைக் கடாசி விடுவார்கள். எலி, பெருச்சாளி எல்லாம் புகுந்து விளையாடும். காலையில் வந்து பார்த்தால் பிணத்தின் காதோ, விரலோ காணாமல் போயிருந்தால் கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அதிகாரிகள் யாரும் பொருட்படுத்துவதில்லை. கோல்ட் ஸ்டோரேஜ் சரியாக வேலை செய்யாது. பெயரளவுக்குத்தான் மார்ச்சுரி.''

காந்தி பதில் பேசவில்லை.

''உங்க அம்மாவின் பிணத்தை உயரத்தில் தனியாக வைக்கிறேன். எலிகள் நெருங்காமல் மருந்துகள் ஸ்ப்ரே செய்து பாதுகாப்பாக வைக்கிறேன்.''

காந்தி அவனைக் கண் இமைக்காமல் நோக்கினான். கோட்டும் சூட்டும் அணிந்திருந்தால் டாடாவோ, பிர்லாவோ ஆகி இருப்பான். இரண்டும் இல்லாததால் வெறும் வார்ட் பையனாக இருக்கிறான்.

''எவ்வளவு பணம் கொடுக்கணும்?''

''உங்க விருப்பம். பத்தோ பதினைந்தோ.''

''அப்படி என்றால் சரி. நாளை காலையில் வந்து தருகிறேன்.''

வார்ட் பையன் சற்று தயங்கி, ''நாளைக்கு நீங்க வரவில்லை என்றால்?'' என்று கேட்டான்.

பளாரென்று கன்னத்தில் அறைந்தாற்போல் இருந்தது காந்திக்கு.

''முட்டாளே அது என் தாயார்'' என்று சொல்லப் போனவன் நிறுத்திக் கொண்டான். டாடாவும் பிர்லாவும் மற்றவர்களின் உணர்வுகளின் மதிப்பை வியாபாரத் தோடு கலக்க மாட்டார்கள். அப்படிச் செய்தால் அவர் களும் வார்ட் பாயாகத்தான் இருந்திருப்பார்கள்.

காந்தி ஏதோ சொல்ல முற்பட்டபோது வாகனம் ஏதோ வரும் சத்தம் கேட்டது. முன்னால் ஒரு சவர்லெட் வந்தது. அதைத் தொடர்ந்து பிளிமத் கார். அதற்கும் பின்னால் இரண்டு அம்பாசிடர்கள்.

சவர்லெட் காரிலிருந்து ராஜாராம் இறங்கினார். அவருக்கு வயது ஐம்பதுக்குமேல் இருக்கும். கோட் சூட்டில் கம்பீரமாக இருந்தார். பின்னாலிருந்த பிளிமத் கார் வந்து நின்றதுதான் தாமதம், அதன் கதவைத் திறந்து கொண்டு அம்பாய்க் கீழே குதித்தாள் ஒரு பெண். ஓடி வந்து முன்னாலிருந்த காரின் கதவைத் திறக்கப் போனாள்.

ராஜாராம் அவளைத் தடுத்துக் கொண்டே, ''பரவா யில்லை ஹாரிகா! மம்மிக்கு ஒன்றுமில்லை'' என்றார்.

பின்னாலேயே வந்த அம்பாசிடரிலிருந்து டாக்டர் ஸ்ரீபதி இறங்கினார்.

அடுத்த நிமிடம் ஆஸ்பத்திரி முழுவதும் விழித்துக் கொண்டுவிட்டது.

மனைவிக்கு லேசாக நெஞ்சுவலி என்றதுமே நள்ளிரவு ஒரு மணிக்கு ஊரிலேயே சிறந்த இதயநோய் நிபுணரையும், பிரபல டாக்டரையும் கையோடு

அழைத்து வரக்கூடிய செல்வாக்கு மிகுந்த ராஜாராமைப் பார்த்து ஆஸ்பத்திரி துயிலெழாமல் உறங்கியா கிடக்கும்?

நோயாளியை உள்ளே அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஹெளஸ் சர்ஜன்கள் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சவர்லெட் அருகிலேயே தனியாக நின்றுகொண்டிருந்தாள் ஹாரிகா.

காந்தியின் மூளையில் மின்னல் போன்ற யோசனை வந்தது. தன் தாயின் உடலை பத்திரப்படுத்தி வைப்பதற்காக வெறும் பதினைந்து ரூபாய் சம்பாதிப்பது அவ்வளவு கஷ்டமா என்ன?

அவன் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

தாயை அவர்கள் உள்ளே அழைத்துச் செல்வதைப் பார்த்துக்கொண்டு இயலாமையுடன் நின்றுகொண்டிருந்தாள்.

காந்தி வார்ட் பையனைப் பார்த்து, ''இப்படி வா'' என்றான். அவன் அருகில் வந்ததும், ''உனக்கு வேண்டியது பதினைந்து ரூபாய்தானே?'' என்றபடி சவர்லெட் இருந்த பக்கம் பார்த்தான்.

பாதி திறந்திருந்த கார்க் கதவின் மேல் கண்களை மூடிய நிலையில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

வார்ட் பையனிடம் என்ன செய்ய வேண்டுமோ காந்தி சொன்னான். அவன் சொன்னதைக் கவனமாக

கேட்டுக் கொண்டான் வார்ட் பையன். பிறகு கார் அருகில் நின்றுகொண்டிருந்த ஹாரிகாவிடம் சென்றான்.

''எக்ஸ்க்யூஸ் மி மேடம்.''

ஹாரிகா நிமிர்ந்து பார்த்தாள். பேசவில்லை.

''உங்க அம்மாவுக்கு குணமாகிவிடும். கவலைப் படாதீங்க.''

அந்தச் சமயத்தில் பேச்சுத்துணை எவ்வளவு அவசியம் என்று உணர்ந்தவள் போல் ''தாங்க்ஸ்'' என்றாள், தெளிவற்ற குரலில்.

''உங்க அம்மாவுக்கு சீக்கிரமாக குணமாக வேண்டும் என்று உங்கள் சார்பில் பாபா கடவுளிடம் பிரார்த்தனை செய்வார்'' என்று வார்ட் பாய் சொன்னான். அதைக் கேட்டு அவள் வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். இருட்டில் காந்தி தன் முகத்தை மேலும் மறைத்துக் கொண்டான்.

''க்டவுளிடம் நேரிடையாக பேசும் சக்தி பாபாவுக்கு இருக்கிறது. இந்த நேரத்தில் அவர் இங்கே இருப்பது நம் அதிர்ஷ்டம்தான்.'' வார்ட்பாய் சொல்லிக்கொண்டே போனான்.

வெடிக்கொண்டு வரச்சொன்னால், கட்டிக் கொண்டே வருபவன்போல் தோன்றினான் அந்த வார்ட் பாய். தனக்குக் கொடுத்த போர்ஷனை அற்புதமாக நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

''தாமதம் செய்யாதீங்க மேடம். அவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். உங்க அம்மாவைப் பற்றி

கடவுளிடம் பேசச்சொல்லி கேட்டுக் கொள்ளுங்கள்... ஃபீஸ்கூட அதிகம் இல்லை. இருபத்தைந்து ரூபாய் தான்.''

''அடப்பாவீ! அவசரப்பட்டுவிட்டாயே'' என்று காந்தி நொந்துகொண்டான்.

பணத்தைப் பற்றி பேச்செடுத்ததுமே ஹாரிகாவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது போலும். மறுப்பது போல் தலையை அசைத்துவிட்டு, ''சாரி'' என்று சொல்லி விட்டு உள்ளே போகப் போனாள்.

காந்தியை ஏமாற்றம் சூழ்ந்துகொண்டது. வார்ட் பாய் மட்டும் பணத்தைப் பற்றிய பேச்சு எடுக்காமல் இருந்திருந்தால் திட்டம் நிறைவேறியிருக்குமோ என்னவோ.

ஹாரிகா ஆஸ்பத்திரிக்குள் நுழைய போனப் போது வார்ட்பாய் பின்னாலேயே வந்தான்.

''மேடம்! உங்களுடைய பிறந்த தேதியைக் கூட சரியாக சொல்லக்கூடிய சக்தி அவருக்கு இருக்கு.''

அதைக் கேட்டதும் மந்திரத்திற்கு கட்டுப்பட்டவள் போல் அவள் அப்படியே நின்றுவிட்டாள்.

''வேண்டுமானால் நீங்களே சோதனை செய்து தெரிந்துகொள்ளுங்கள்'' என்றான் முறுவலுடன்.

அவள் மௌனமாக இருப்பதைச் சம்மதமாக எடுத்துக் கொண்டு, ''மாதத்திற்கு எத்தனை நாள் இருக்கு மேடம்?'' காந்தியின் சார்பில் வார்ட் பாய் கேட்டான்.

''முப்பத்தொன்று'' என்றான் ஹாரிகா.

''வருடத்தில் எத்தனை மாதங்கள்?''

''பன்னிரெண்டு.''

''உங்க பிறந்த தேதியை பன்னிரெண்டாலும், பிறந்த மாதத்தை முப்பத்தொன்றாலும் பெருக்கி வந்த தொகையைக் கூட்டிச் சொல்லுங்கள். எத்தனை?''

''நூற்றி எழுபது'' என்றாள் ஹாரிகா மனதிலே கூட்டிப் பார்த்துவிட்டு.

''சார்! உங்களுடைய திவ்ய சக்தியால் அந்த அம்மாவின் பிறந்த தேதியைச் சொல்லுங்கள்.''

''பிப்ரவரி ஒன்பது'' என்றான் காந்தி.

அந்த இருட்டில் ஹாரிகாவின் முகத்தில்கூட ஒரு வினாடி ஆச்சரியக்குறி தோன்றி மறைந்தது.

வார்ட் பாயின் முகத்தில் சிரிப்பு மறைந்தது. ஏதோ அற்புதத்தைப் பார்ப்பதைப் போல் காந்தியை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று கடமையை உணர்ந்தவன் போல், ''பார்த்தீங்களா மேடம். இப்பொழுதாவது உங்களுக்கு நம்பிக்கை வந்திருக்கும். சர்வ சக்திகளும் நிறைந்த காந்தீபாபா உங்களுக்காக உங்கள் தாயாருக்காக – கடவுளிடம் பிரார்த்தனை செய்வார்.''

ஹாரிகா உள்ளே போய்க் கொண்டிருந்தாள். வார்ட் பாய் அவள் பின்னாலேயே போனான்.

''அவர் பெயர் என்னவென்று சொன்னாய்?''

''காந்தி.''

''இந்த நள்ளிரவு வேளையில் இங்கே எதுக்கு உட்கார்ந்திருக்கிறார்?''

''அவருடைய தாயாரின் பிணத்தை மார்ச்சுவரியில் பாதுகாப்பாக வைக்கணும்.''

அவள் நின்றுவிட்டாள். அந்த வார்த்தையைக் கேட்டதுமே அவள் முகம் வெளிறிப் போய்விட்டது. வார்ட்பாய் இந்தச் சந்தர்ப்பத்தை இழக்கத் தயாராக இல்லை. இரக்கம் ததும்பும் குரலில் சொல்லத் தொடங்கினான். ''சற்றுமுன்தான் அவருடைய தாய் இறந்து போய்விட்டாள். உங்களுடைய தாயாருக்காக அவர் கடவுளிடம் வேண்டிக் கொள்வார். தன்னுடைய அற்புத சக்திகளால்...''

அவன் வார்த்தைகள் பாதியிலேயே நின்றுவிட்டன. ஹாரிகா உள்ளே போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து ஸ்ப்ரிங் கதவு தானாக மூடிக்கொண்டது. முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாக தென்பட வார்ட்பாய் காந்தியிடம் வந்தான்.

''என்ன நடந்தது?'' காந்தி கேட்டான்.

''இந்தப் பணக்காரர்களிடம் சல்லிக்காசுகூட பெயராது சார்.''

காந்தி மௌனமாக இருந்தான். வார்ட்பாய் மேலும் சொன்னான். ''உங்க அம்மாவின் விஷயத்தை என்னிடம் விடுங்க சார். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

காந்தி நம்பமுடியாதவன் போல் நிமிர்ந்து பார்த்தான்.

''ஆமாம் சார். அந்தம்மா ஏதாவது கொடுத்தால் அதை வாங்கிக் கொண்டு உங்களுக்கு உதவி செய்யலாம் என்று நினைத்தேன். அவங்க தரவில்லை. அதனால் சும்மாவே உங்களுக்கு உதவுகிறேன். ஒரு விஷயம் மட்டும் சொல்லுங்க. உண்மையிலேயே உங்களுக்கு அற்புத சக்திகள் இருக்கா?''

அத்தன்னை வேதனையிலும் காந்திக்குச் சிரிப்புத்தான் வந்தது.

இங்கே இந்த உரையாடல் நடந்துகொண்டிருக்கும் போது உள்ளே ஹாரிகா டாக்டரிடம் கேட்டுக் கொண் டிருந்தாள். ''மம்மிக்கு எப்படி இருக்கு டாக்டர்?''

டாக்டர் ஸ்ரீபதி முறுவலுடன், ''உங்க அப்பாவுக்கு பதட்டம் அதிகம். இரவு சாப்பாடு கொஞ்சம் ஹெவி யாக இருந்திருக்கும் போலிருக்கு. அதனால் எங்களை எழுப்பி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்துவிட்டார்'' என்று உள்ளே போகத் திரும்பியவர், ''அரைமணி நேரம் கழித்து நீங்க எல்லோருமே போய்விடலாம்'' என்றார்.

ஹாரிகா நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டாள். தாய்க்கு ஒன்றுமில்லை என்று தெரிந்ததும் மனம் இலே சாகிவிட்டது. அதற்குள் தந்தை உள்ளேயிருந்து வேக மாக வந்தார். ''இன்ஜக்ஷன் ஏதோ போடப் போகிறா ராம். அதற்குப் பிறகு போய்விடலாம்'' என்று சொல்லி விட்டு அதே வேகத்துடன் உள்ளே போய்விட்டார். ஹாரிகாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. கோடிக்கணக்கில் வியாபாரத்தை அனாயாசமாக கையாளும் தந்தை சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பதட்டமடைந்து விடுவார்.

யோசித்துக் கொண்டே ஹாரிகா மேஜைக்கு பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். மேஜைமீது பேப்பரும், பேனாவும் இருந்தன. காந்தியின் திவ்ய சக்தியைப் பற்றி வார்ட்பாய் சொன்னது நினைவுக்கு வந்ததும் அவள் இதழ்களில் முறுவல் பூத்தது. தன்னையும் அறியாமல் பேனாவை எடுத்து கணக்கு போட்டாள்.

12x + 31y = 170

இதைமட்டும் வைத்துக் கொண்டு விடையை எப்படி கண்டுபிடிப்பது? அவளுக்குப் புரியவில்லை. சுமார் கால்மணி நேரம் கழித்துத் தந்தை வந்தார். ''போகலாம் வாம்மா'' என்று அவர் அழைத்ததும் பேப்பரை மடித்து எடுத்துக் கொண்டு கிளம்பினாள். பின்னாலேயே தாய் மூச்சு வாங்கியபடி ஆடி அசைந்து வருவதைப் பார்த்தாள். 'கொஞ்சம் சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா' என்று சொல்ல வாயைத் திறந்தவள் நிறுத்திக் கொண்டாள்.

ஹாரிகாவுக்கு வயது இருபத்திமூன்று. எல்லோரிடமும் இயல்பாக பேசுவாள். மனதில் இருக்கும் உணர்வுகளை வெளிப்படுத்தமாட்டாள். ரொம்ப அழுத்தமான சுபாவம். பணம் அவளைக் கொஞ்சம் கூட மாற்றவில்லை. அவளைச் சுற்றியிருந்த உலகம் சர்வாதிகாரம் வாய்ந்ததாக இருந்தபோதிலும் அவள் நடவடிக்கையில் அடக்கமும், மென்மையும் குடிகொண்டிருந்தன. வேடிக்கை என்னவென்றால் அவள் அடக்கத்திலும் ஒரு விதமான கம்பீரம் இருந்தது. அது அந்த வீட்டு வேலைக்

காரர்களை அதிகாரம் செய்யவும், தந்தையிடம் குறும்புத் தனமாக நடந்துகொள்ளவும் வழிவகுத்தது. யாரையுமே பொருட்படுத்தாத அவள் தாய்க்குக் கூட ஹாரிகாவுடம் ஒருவிதமான பயம் இருந்தது.

தாய்க்கு சீரியஸாக இருப்பதாக சொன்னபோதுகூட அவள் கலங்கவில்லை. முகத்தில் சிறிது வருத்தம் தோன்றி மறைந்ததோடு சரி. இப்பொழுது தாய்க்கு ஒன்றுமில்லை என்று தெரிந்த பிறகும் அவள் எப் போதும் போலவே இருந்தாள். மனதைக் கட்டுப் பாட்டில் வைத்திருப்பவர்களால்தான் அப்படி இருக்க முடியும்.

ஹாரிகா தந்தையோடு வெளியே வந்தாள். தாய் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். தந்தை தொலைவில் டாக்டருடன் பேசிக்கொண்டிருந்தார். அவள் சுற்றிலும் பார்வையிட்டாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த காந்தியும் வார்ட் பையனும் கண்ணில் பட்டார்கள்.

ஒருவன் கோபமாக, மற்றொருவன் ரோஷமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி வா என்பதுபோல் தலையை அசைத்தாள் ஹாரிகா. அதற்காகவே காத்திருப்பதுபோல் வார்ட்பையன் ஓடிவந்தான். அவன் கையில் தான் எழுதிய காகிதத்தை வைத்துவிட்டு கைப்பையிலிருந்த கவர் ஒன்றையும் எடுத்துத் தந்துவிட்டு காரில் போய் உட்கார்ந்தாள்.

வரிசையாக எல்லாக் கார்களும் கிளம்பிவிட்டன. காந்தி வார்ட் பையனிம் வந்தான். ஹாரிகா தன்னிடம் கொடுத்த பேப்பரை பையன் காந்தியிடம் தந்தான்.

காந்தி அதைப் பிரித்துப் பார்த்தான்.

12x + 31y = 170 என்று தொடங்கப்பட்டு படிப் படியாக கணக்கு போடப்பட்டு கடைசியில் பிறந்த தேதி ஒன்பது, பிப்ரவரி மாதம் என்று விடை எழுதி யிருந்தது.

பேப்பர் மீது இருந்த கணக்கைப் பார்த்ததும் காந்தி யின் முகம் வாடிவிட்டது. அவனையே பார்த்துக் கொண்டிருந்த வார்ட் பையன், ''என்ன சார்? என்ன ஆச்சு?'' என்று கேட்டான்.

''அவளுக்கும் திவ்யசக்திகள் இருக்காம். நாம் போட்ட புதிரை அவள் அந்த சக்தியால் அறிந்து கொண்டு விட்டாளாம்'' என்றான். அத்தனை கடினமான கணக்கை அவள் இவ்வளவு சுலபமாக போட்டு விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''நமக்கு அதிர்ஷ்டம் இல்லை சார்'' என்று சொல்லிக் கொண்டே கவரைப் பிரித்துப் பார்த்த வார்ட் பையன் சந்தோஷத்தின் மிகுதியில் வீலென்று கத்தினான். கவரில் ஐநூறு ரூபாயும் ஒரு ஒற்றை ரூபாயும் இருந்தன. சிறிய காகிதத்தில் நாலே வரிகள் எழுதியிருந்தாள். காந்தி அதைப் படித்தான்.

'வணக்கம். பேப்பரும் பேனாவும் இருக்கும்போதே போடுவதற்குப் பத்து நிமிஷம் பிடித்த இந்தக் கணக்கை நொடியில் மனக்கணக்காக போட்டு முடித்த உங்க ளுடைய திவ்ய சக்திக்கு பரிசு இந்தத் தொகை. வாழ்க் கையில் இழந்துவிட்டால் மீண்டும் பெறமுடியாதது

தாய் மட்டும்தான். உங்க தாயாரின், ஈமச்சடங்குகளுக் காக இந்த ஐநூறு ரூபாய்.'

கடிதத்தை மடித்து வைத்துவிட்டு, ''பணம் எங்கே?'' என்று காந்தி கேட்டான்.

''எந்தப் பணம்?''

காந்தி வியப்புடன் பார்த்தான். ''அந்தப் பெண் தந்துவிட்டுப் போனது.''

''அதெல்லாம் என்னுடையதுதானே?'' என்றான் வார்ட் பையன்.

''அநியாயம்! உனக்குப் பதினைந்து ரூபாய் தருவ தாகத்தானே பேச்சு.'' காந்தி சொன்னான்.

''அது முதலில் செய்து கொண்ட ஒப்பந்தம்'' என்றான் வார்ட் பையன். ''உங்களுக்காக அவளிட மிருந்து பணம் எதுவும் பெயராது என்று தெரிந்ததும் நான் என்ன சொன்னேன் நினைவு இருக்கா? அவள் என்ன தருகிறாளோ அதை வாங்கிக் கொண்டு உங்களுக்கு உதவி செய்வதாக இருந்தேன். அவங்க எதுவும் தராததால் ஃப்ரீயாகவே செய்வதாகச் சொன் னேன். அதைக் கேட்டுக் கொண்டு சும்மா சிரிச்சீங்க. அதனால் இப்போ அவள் தந்ததெல்லாம் என்னைத் தானே சேரும். அவள் எதுவும் தராமல் இருந்தால் நான் ஃப்ரீயாக செய்திருப்பேனா இல்லையா.'' அவன் பேச்சு பாதியிலேயே நின்றுவிட்டது, காந்தி அங்கிருந்து கிளம்ப முற்பட்டதால்.

''அப்படி என்றால் சரி நாளை காலையில் வருகிறேன். அந்தப் பணத்தை நீயே வைத்துக் கொள்.''

''சார்!''

காந்தி நின்றான்.

''நான்... நான் கெட்டவன் ஒன்றும் இல்லை சார். என்மீது கோபம் வைத்துக் கொள்ளாதீங்க.''

''அப்படி எல்லாம் எதுவும் இல்லை.'' காந்தி கிளம்பினான். உண்மையிலேயே அவன் மனதில் எதுவும் இல்லை.

யாரும் கெட்டவர்கள் இல்லை. ஆட்டோக்காரனும் சரி, வார்ட் பையனும் சரி, மருந்துக் கடைக்காரனும் சரி யாருமே கெட்டவர்கள் கிடையாது. அடுத்தவரின் அவசரத்தை, தேவையைத் தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்கிறார்கள். இதில் நியாய அநியாயம் எதுவும் இல்லை. எல்லாம் சட்டத்திற்கு உட்பட்டவை. கடன் வாங்கினால் திருப்பித் தருவது நியாயம். ஆனால் மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டால் அந்தக் கடன் செல்லுபடி ஆகாது என்று சட்டம் சொல்கிறது.

மற்றவர்களைவிட இந்த வார்ட்பையன் மேல். எதிராளியின் உணர்வுகளை ஓரளவுக்கு மதிக்கத் தெரிந்தவன்.

2

காந்தி யோசித்துக் கொண்டே வீடு வந்து சேர்ந்தான். அப்பொழுது மணி காலை நாலரை ஆகியிருந்தது. பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். வீடு என்று பெயர்தானே தவிர ஒரே ஒரு அறைதான் இருந்தது. கயிற்றுக் கட்டில் சிதிலமடைந்து உடையும் தருணத்தில் இருந்தது. இரண்டு மூன்று பாத்திரங்கள் இருந்தன. அடுப்பைப் பற்றவைத்து பல நாட்களாகி விட்டன. அந்தச் சின்ன அறையில்தான் அவனும் அவன் தாயும் சில ஆண்டுகளாக தங்கியிருந்தார்கள். ஏதாவது வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவனும், என்றாவது தங்கள் வாழ்க்கையில் வசந்தம் வரும் என்ற எதிர்பார்ப்பில் அவன் தாயும் நடைப்பிணமாக வாழ்ந்து வந்தார்கள். அந்த எதிர்பார்ப்பு பொய்த்து விட்டதால் அவன் தாய் மறுஉலகம் போய்ச் சேர்ந்தாள். அவன் மட்டுமே தனித்து இருந்தான். சூனியமான அந்த அறையில், இருளில் அறைக்கு நடுவில் அவன் கொஞ்ச நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தான். பிறகு வெளியே வந்தான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்கவில்லை. வழக்கத்தைவிட ரொம்ப அமைதியாக தென்பட்டான்.

பக்கத்து வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டினான். வீட்டுக்காரர் பாதி தூக்கத்தில் கண்களைக் கசக்கிக் கொண்டே வந்து கதவைத் திறந்தார். காந்தியைப்

பார்த்ததும் அவருடைய நெற்றி சுருங்கியது. ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அத்தனை காலையிலேயே வந்து எழுப்பிவிட்டதால் ஏற்பட்ட எரிச்சல் அவர் முகத்திலேயே தெரிந்தது.

''நேற்று மாலையில் நாம் பேசிக்கொண்டதைப் பற்றி –'' என்றான் காந்தி.

வீட்டுக்காரரின் முகம் மலர்ந்தது: ''உங்க அம்மா...'' என்று மேலும் ஏதோ கேட்கப் போனவரை இடைமறித்துவிட்டு ''இறந்துவிட்டாள்'' என்றான்.

மனதில் தோன்றிய நிம்மதியை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''அடடா பாவமே'' என்றார் வீட்டுக்காரர்.

காந்தி ஒரு வினாடி மௌனமாக இருந்துவிட்டு ''போகலாமா?'' என்றான்.

இருவரும் காந்தியின் அறைக்கு வந்தார்கள். வீட்டுக்காரர் அங்கே இருந்த பொருட்களை பார்வையாலேயே எடைபோட்டுக் கொண்டிருந்தார். முதல் நாளே அவற்றை விற்பதை பற்றி அவரிடம் பேசியிருந்தான் காந்தி. பெரிதாக சாமான்கள் எதுவும் இல்லை. பாத்திரங்கள், உடைகள், பத்து பன்னிரெண்டு புத்தகங்கள், உடைந்த வாளி, தாயின் திருமாங்கல்யம் மட்டும் கொஞ்சம் விலை மதிப்பு வாய்ந்தது.

வீட்டுக்காரர் மனதிற்குள்ளேயே கணக்கிட்டு முடித்து விட்டு ''முன்னூறு'' என்றார்.

''எல்லாம் சேர்த்தா?''

''ஆமாம்.''

''ரொம்ப அநியாயம்.''

''இல்லை, நியாயம்தான்.''

''சரி.''

''பணம் இப்பொழுதே வேணுமா?''

''ஆமாம்.''

வீட்டுக்காரர் கையோடு பணத்தைக் கொடுத்து விட்டார். டிரங்க் பெட்டியை, அதிலிருந்த தாலியை அவரிடம் தந்துவிட்டான். அறையிலிருந்த மற்ற பொருட்களை அப்படியே விட்டுவிட்டான்.

''பிணத்தை வீட்டுக்குக் கொண்டுவரப் போகிறாயா?''

''ஊஹூம்'' என்றான் காந்தி. ''அறையைக் காலி செய்கிறேன்.''

கட்டிய உடையுடன் வெளியேறுவது என்றால் அது தான்.

★ ★ ★

காந்தி மயானத்தின் படியில் அமர்ந்திருந்தான்.

''எழுந்திரு தம்பி. இனி இங்கே உட்கார்ந்திருப்பதில் என்ன பிரயோஜனம்?'' யாரோ சொன்னார்கள்.

வெளியில் போய்க்கூட செய்வதற்கு எதுவும் இல்லை என்று நினைத்துக் கொண்டே எழுந்து கொண்டான். வெட்டியான் வந்து கையை நீட்டினான்.

''இதென்ன? கொடுக்க வேண்டிய ரேட் முழுவதுமாக கொடுத்துவிட்டேனே.'' பொறுமையிழந்தவனாக சொன்னான் காந்தி.

''இனாம் சார்.''

''எதுக்கு?''

''பிணத்தை எரிப்பதற்கு.''

''அதற்குத்தான் கொடுத்துவிட்டேனே.''

''அது சாதாரணமாக எரிப்பதற்கு. நடுவில் பிணத்தைத் திருப்பிப் போடணும். இல்லாவிட்டால் முழுவதுமாக எரியாது. இரவு நேரத்தில் நரி, ஓநாய் ஏதாவது வந்து பிடுங்கிக் கொண்டு போய்விடும். அதனால் ஏழையாக இருந்தாலும் சரி, இந்த நேரத்தில் பணத்தைப் பார்க்க மாட்டார்கள். ஸ்பெஷலாகத்தான் எரிய வைக்கச் சொல்லுவார்கள்.''

பிணத்தை எரிப்பதில்கூட சாதாரணம், ஸ்பெஷல் என்று ரேட்டை வைத்திருக்கிறான் வெட்டியான். அவனுக்குத் தரவேண்டிய இனாமைத் தந்துவிட்டு உலகம் என்ற மயானத்திற்குக் கிளம்பினான் காந்தி.

★ ★ ★

அதற்குப் பிறது வந்த ஆறு மாதங்களும் காந்தியின் வாழ்க்கை ரொம்ப மோசமாகக் கழிந்தன. நடைபாதையில் படுப்பதும், குழாய் தண்ணீரைக் குடித்து, வயிற்றை நிரப்பிக் கொள்வதும் அவனுக்கு வேதனையைத் தரவில்லை. தாய் இருந்தபோது இருக்க ஒரு

இடம் தேவையாக இருந்தது. அதற்காக பஸ்ஸ்டாண்டில் சுமை தூக்க வேண்டியிருந்தது. இப்பொழுது அது போன்ற கட்டாயம் எதுவும் இல்லை, மனச்சோர்வு தவிர. எந்த விஷயத்திலும் பற்று இல்லை. ஆர்வமும் இல்லை. நாள் ஆக ஆக மனச்சோர்வும் அதிகரித்தது. ஒவ்வொரு விஷயத்திலும் லாப நஷ்டத்தையே குறிக் கோளாகக் கொண்டு வாழும் இந்த மனிதர்களைப் போல் தானும் வாழ்வதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பதை உணர்ந்து தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தான்.

அதற்காக அவன் சிரமம் எதுவும் மேற்கொள்ள வில்லை. தினசரி வேலைகளை இயல்பாகச் செய்வது போல், தற்கொலைக்குத் தேவையான சாதனங்களைச் சேகரித்தான். காலில் கயிற்றைக் கட்டிக் கொண்டு, அந்தக் கயிற்றில் ஒரு கல்லையும் கட்டினான்.

நீச்சல் அவனுக்குக் கை வந்த கலை. தன்னைத் திரும்பவும் இந்த உலகிற்கு மீண்டு வரச் செய்யாமல் இருக்கத்தான் அந்தக் கல்!

கல்லைக் கட்டிக் கொண்டதும் வேகமாக சுழன்று கொண்டிருக்கும் ஆற்றில் 'தொபீர்' என்று குதித்து விட்டான். தண்ணீருக்குள் போனதும் உயிர் மீதுள்ள ஆசையில் உடல் மேலே வந்துவிட துடித்தது. ஆனால் கல்லின் கனம் அடியில் இழுத்துக் கொண்டிருந்தது. கல் தன்னுடைய வேலையை சரியாக செய்ததில் அவனுக்கு சந்தோஷம் ஏற்பட்டது. ஒரு மடக்கு தண்ணீரைக் குடித்தான். இன்னும் பத்து பதினைந்து மடக்கு தண்ணீர்

குடித்துவிட்டால் போதும். இந்த உலகிற்கு குட்பை சொல்லிவிடலாம்.

மூச்சுத் திணறியது. இரண்டாவது மடக்கு தண்ணீரை குடிக்கப் போனபோது அவனை உராய்ந்துகொண்டு உடல் ஒன்று வெள்ளத்தில் அடித்துப் போகப் போனது. அவன் தட்டுப்பட்டதும் அவனைப் பிடித்துக் கொண்டது. அவன் முதலில் குழம்பினான். பிறகு தன்னைப் பிடித்துக் கொண்டது பாம்போ முதலையோ இல்லை என்றும் மனிதனின் கை என்றும், அது இன்னும் உயிரோடுதான் இருக்கிறதென்றும் உணர்ந்து ஒருவினாடி செய்வதறியாமல் தவித்தான். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற தவிப்பு அந்த உடலில் இருந்ததை நன்றாக உணர்ந்தான். சக மனிதனாக மற்றொரு உயிரைக் காப்பாற்றுவது தன்னுடைய கடமை. ஒற்றைக் கையால் காலில் இருந்த கல்லை விடுவித்துக் கொள்வதற்கு இரண்டு நிமிடங்கள் பிடித்தன.

அந்த உடலைக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்து படுக்க வைத்தான்.

அந்த உடல் ஒரு பெண்ணுடையது.

அவள் பெயர் லக்ஷ்மி.

★ ★ ★

''நானா? தற்கொலை செய்து கொள்வதா? என்னுடைய அகராதியிலேயே இல்லாத சொல் அது.'' லக்ஷ்மி சொன்னாள். ''தனியாக இருக்கேன்னு எப்படித் தான் தெரிந்ததோ, மூன்றுபேரும் குடிசையைச் சுற்றிக்

கொண்டு விட்டார்கள். ஓடினேன். பின்னால் துரத்திக் கொண்டே வந்தார்கள். வேறுவழியே தெரியவில்லை. எதிரே ஏரி தென்பட்டது, குதித்துவிட்டேன். அவ்வளவு தானே தவிர தற்கொலை செய்து கொள்வதாவது? அதெல்லாம் கோழைகளின் வேலை.''

காந்திக்கு சுருக்கென்று தைத்தது. உடனே சமாளித்துக் கொண்டு ''ஆமாம், ஆமாம். தற்கொலையாவது? நான் சென்ஸ்'' என்றான். பிறகு குடிசையைச் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''இந்த வீட்டில் தனியாகத்தான் இருக்கி றாயா?'' என்று கேட்டான்.

''ஆமாம்.''

''உனக்கு யாருமே இல்லையா?''

''இருக்காங்க. அண்ணியின் சொற்படி தலையை ஆட்டும் அண்ணன். உத்யோகம் என்ற பெயரில் விபச் சாரம் செய்யும் அண்ணி, எல்லாம் தெரிந்தும் கண்டு கொள்ளாமல் இருக்கும் அம்மா. இவர்களுடைய மன அழுக்குகளைச் சகித்துக் கொள்ள முடியாமல் அந்த வீட்டைவிட்டு வந்துவிட்டேன்.''

''பின்னே எப்படி நடக்கிறது ஜீவனம்?''

''முதலில் நாலைந்து வீடுகளில் வீட்டு வேலை களைச் செய்துவந்தேன். கொஞ்சம் காலூன்றி கொண்ட பிறகு சின்ன பசங்களுக்கு ட்யூஷன் சொல்லித்தர ஆரம் பித்தேன். அது சரி. என்னை நீங்க ஒருமையில் அழைக் கறீங்க. அப்போ நானும் உங்களை நீ என்றே அழைக்க லாமா?''

காந்தி சிரித்துவிட்டு, ''தாராளமாக'' என்றான்.

''அதுதான் நன்றாக இருக்கும். பன்மையில் விளிப்பது நெருக்கத்திற்குத் தொலைவு. இன்னொரு விஷயம். எனக்கு இந்த மாதிரி லொட லொடவென்று பேசுவது பழக்கம். குறைவாகப் பேசுபவர்கள் ரொம்ப அழுத்தமாக இருப்பார்கள் என்றும், அதிகமாகப் பேசு பவர்கள் மூட்டாள்கள் என்றும் சொல்வார்கள். ஆனால் அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அதிகமாகப் பேசுவதால் சில சமயம் ஏதாவது தொல்லை வந்து சேரும். ஒரு வீட்டில் நான் வேலைக்காரியாக சேர்ந்த புதிதில் அந்த வீட்டுக்காரன் ஒரு நாள் நான் வீட்டைக் கூட்டிக் கொண்டிருந்தபோது, ''கண்ணைப் பறிக்கிறது உன்னைப் பார்க்கும்போது'' என்றான். நான் உடனே ''பெட்டர் கோ டு ய ந்யூரோசர்ஜன் ஆர் என் ஐ ஸ்பெஷ லிஸ்ட்'' என்றேன். அதிர்ச்சி அடைந்து வேலையை விட்டு நீக்கிவிட்டான்.

அவளுடைய பேச்சு காந்தியைக் கவர்ந்தது. அழகாக இருந்த அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டே, ''நீ எது வரையில் படித்திருக்கிறாய் லக்ஷ்மீ?'' என்று கேட்டான்.

கலகலவென்று பாயும் அருவிச் சத்தம் திடீரென்று தடைபட்டாற் போலிருந்தது. நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு லக்ஷ்மி மெதுவாகச் சொன்னாள். ''அதெல் லாம் இப்போ எதுக்கு? எப்பவோ மறந்துவிட்டேன்.''

''சொல்லக்கூடாதா என்ன?''

''பட்டதாரி. ஸ்டெல்லா மேரி கல்லூரி.''

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. ஒன்றுமில்லாத நிலையிலிருந்து வேலைக்காரியாய் மாறி ட்யூஷன் டீச்சராக உயர்வது.

''இந்தக் குடிஸையில் எப்படி இருக்கிறாய்?''

''வசதியாகத்தான் இருக்கு. பக்கத்திலேயே ஏரி. செலவும் குறைவு. அக்கம் பக்கத்து மனிதர்களுக் கிடையே கௌரவம்.''

''ஆனால் ரவுடிக்களின் தொல்லை...

''எங்கேதான் இல்லை?''

அவன் மௌனமாக இருந்தான். தன் எதிரே சாதாரண மாகத் தோற்றமளித்த அந்தப் பெண் அந்த நிமிடம் அபூர்வமான பெண்போல் தோன்றினாள்.

''ஐயாம் சாரி'' என்றாள் அவள்.

''எதுக்கு?''

''அதிகம் பேசாதவர்களைப் பற்றி நான் ஏதேதோ பேசிவிட்டேன். உன்னைப் பார்த்தால் நீ அந்த ரகத்தைச் சேர்ந்தவன்போல் தென்படுகிறாய். நான் சொல்ல நினைத்தது புத்திசாலிகள் குறைவாகப் பேசுவார்கள் என்று. அதாவது ஐ மீன்...''

அவள் தடுமாறுவதைக் கண்டு அவன் சிரித்து விட்டான். பேச்சை மாற்றும் நோக்கத்துடன், ''உங்க வீட்டார் யாரும் உன்னைத் தேடிக் கொண்டு வர வில்லையா?'' என்று கேட்டான்.

''அண்ணனை ஒருமுறை வழியில் பார்த்தேன். வீட்டுக்கு வரச் சொன்னான். அதற்கு முதல் நாள்தான் அண்ணியை நடுவில் உட்காரவைத்துக் கொண்டு அண்ணனும் அவன் நண்பனுமாக சேர்ந்து சினிமா பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அதான் வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தபோது மறுத்து விட்டேன். அம்மா என்னோடு வந்து இருக்கட்டும். அனுப்பி வை என்று சொன்னேன். 'உன்னோடு எதுக்கு?' என்று கேட்டான். 'உன்னிடம் அம்மா இருந்தால் ஆபத்து. யாராவது கிழ நண்பன் கேட்டால் அம்மாவையும்...' என்று சட்டென்று நிறுத்திவிட்டு சிவந்து கன்றிப் போய்விட்ட காந்தியின் முகத்தைப் பார்த்தாள். ''ஐயாம் சாரி. ரொம்ப கொச்சையாக பேசிவிட்டேன் இல்லையா'' என்றாள். அவள் குரல் திடீரென்று மாறியது. என்ன செய்வது? சூழ்நிலை எவ்வளவு பலம் வாய்ந்தது என்றால் எப்படிப்பட்ட மனிதனையும் மாற்றிவிடும்.

அவன் அவளையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். இவ்வளவு சின்ன வயதில் வாழ்க்கையில் எத்தனை விதமான அனுபவங்கள்! அவளுடைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தன்னுடைய பிரச்னை எவ்வளவு சிறியது? மனோதைரியம் குறைந்து விடாமல் இருப்பதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகளே தனக்கு வழிகாட்டி.

''என்ன யோசிக்கிறாய்?''

அவன் திடுக்கிட்டு, ''ஒன்றுமில்லை'' என்றான்.

''பின்னே என் கேள்விக்கு ஏன் பதில் சொல்ல வில்லை?''

''என்ன கேள்வி?''

''என்ன செய்துக்கிட்டு இருக்கிறாய்?''

''ஒன்றும் செய்யவில்லை.''

அவள் சிரித்துவிட்டு, ''எதுவும் செய்யாமல் எப்படி இருக்கமுடியும்?'' என்றாள்.

''வேலை கிடைக்கவில்லை.''

''வேலை என்ன பெட்டியில் இருக்கும் பொருளா போய் எடுத்துக் கொள்ள? நாம்தான் தேடிக் கொள்ளணும்.''

பட்டதாரியாக இருந்தும் வீட்டு வேலைகளை செய்யத் தயங்காதவள் அவள். தானோ டிக்னிடி ஆஃப் லேபர் பற்றி யோசிப்பவன்.

''எந்த வேலை வேண்டுமானாலும் செய்யலாம். கிடைக்கவில்லை என்ற பிரச்னையே இல்லை. வெயிட்டர் வேலை, தோட்ட வேலை, கூர்க்கா வேலை, கார் டிரைவிங்... இப்படி எத்தனையோ வேலைகள்'' லக்ஷ்மி சொன்னாள்.

செய்யலாம். லக்ஷ்மி போன்று ஊக்கமளிக்கும் பெண் கூடவே இருந்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம்.

அவன் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து விட்டதைக் கவனித்து அவள் சிரித்தாள்.

''உன்னிடம் இருக்கும் பெரிய குறை, அது குறை யாக இருந்தாலும் இப்போது எனக்கு ரொம்பப் பிடித்து விட்ட குணம் என்ன தெரியுமா?''

''என்ன?''

''குறைவாகப் பேசுவது. பேசிக்கொண்டிருக்கும் போதே யோசனையில் ஆழ்ந்து விடுவது.''

அவன் சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்தான்.

''இப்போ நாம் ஏதாவது சாப்பிடுவோம்.'' அவள் எழுந்துகொண்டாள். ''எங்கேயோ வேர்க்கடலை வைத்த நினைவு'' என்று தேடிப் பொட்டலத்தை எடுத்து வந்தாள். பொட்டலத்தைப் பிரித்தவள் ''நம் சாம்ராஜ்யத் தின் மீது எறும்புகள் படையெடுத்து இருக்கின்றன. என்ன செய்வது மகாராஜா?'' என்று நாடகபாணியில் கேட்டாள்.

''உதறித் தள்ளிவிடும்'' ஆணையிட்டான்.

கையால் எறும்புகளை தட்டிவிட்டு வேர்க்கடலையை அவனிடம் நீட்டியவள், ''அட! இதைப் பாரு'' என்றபடி பொட்டலம் கட்டியிருந்த பேப்பரைக் காண்பித்தாள்.

காந்தி பேப்பரை வாங்கிப் பார்த்தான். கொட்டை எழுத்துக்களில் மூன்று விளம்பரங்கள் தென்பட்டன.

'தேவை'

கோடீஸ்வரரின் ஒரே மகளை மணம் புரிந்து சொத்து விவகாரங்களைப் பார்த்துக் கொள்வதற்கு ஒரு இளைஞன் தேவை. பட்டதாரியாக இருந்தால் போதும்.

நல்ல குணம் கொண்டவனாகவும், அதிக ஆசைகள் இல்லாதவனாகவும் இருப்பது முக்கியம். பாக்ஸ் நம்பர் 918.

அதற்குக் கீழே இன்னொரு விளம்பரம் தென் பட்டது.

'தேவை'

வர்த்தக நிறுவனத்தில் எக்ஸிக்யூடிவ் டைரக்டராக வேலை செய்வதற்கு பட்டதாரி தேவை. முன் அனுபவம் தேவையில்லை. சம்பளம் ஐயாயிரம். வீடும் காரும் கம்பெனியே வழங்கும். பாக்ஸ் நம்பர் 919.

அதற்குக் கீழே மூன்றாவது விளம்பரம்.

'தேவை'

சின்ன கம்பெனி ஒன்றில் அக்கௌண்டெண்ட் ஆக வேலை செய்வதற்கு ஆர்வமுள்ள பட்டதாரி தேவை. சம்பளம் ஆயிரம் ரூபாய். இன்க்ரிமெண்ட் ஆண்டுக்கு ஐம்பது ரூபாய். உடனே விண்ணப்பம் அனுப்பவும். பாக்ஸ் நம்பர் 920.

★ ★ ★

''என்னப்பா இதெல்லாம்?'' என்றாள் ஹாரிகா பேப்பரைப் பார்த்துவிட்டு.

''என்ன நடந்துவிட்டது இப்போ?'' ராஜாராம் கேட்டார்.

''நான் என்ன தனித்தன்மை இல்லாதவளா? இந்த விளம்பரம் எதுக்கு?''

''யாருக்கு என்று அதில் போடவில்லையே?''

''இருந்தாலும் இந்த மாதிரி விளம்பரம் ஏன் தர வேண்டும்?''

''பைத்தியம் பலவிதம். அதில் இதுவும் ஒன்று. இதில் இருக்கும் சூட்சுமம் உனக்குப் புரியவில்லையா?''

★ ★ ★

''இதில் ஏதோ சூட்சுமம் இருக்கு'' லக்ஷ்மி விளம்பரத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

''என்ன?'' காந்தி கேட்டான்.

''கோடீஸ்வரரின் மகளைத் திருமணம் செய்து கொள்பவனுக்குப் பெரிய பெரிய ஆசைகள் இருக்கக் கூடாதாம். நான் நினைப்பது என்னவென்றால் இந்த மூன்று விளம்பரங்களையும் ஒருத்தரே தந்து இருக்கணும். மக்களை முட்டாளாக்கும் எண்ணத்தில் யாரோ பணக்காரன் இந்த வேலையைச் செய்திருக்கணும்.''

★ ★ ★

''மக்கள் முட்டாள்கள்'' என்றார் ராஜாராம்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க டாடீ?''

''இந்த இளைஞர்கள் அதைவிட மோசம்.''

''விஷயத்தைச் சொல்லக் கூடாதா?'' ஹாரிகா கேட்டாள்.

''ஓசியில் கிடைக்கும் பொருளுக்கு எத்தனைபேர் ஆசைப்படறாங்களோ பாரு. பாக்ஸ் நம்பர் 918க்கு

பன்னிரெண்டாயிரம் அப்ளிகேஷன்ஸ் வந்திருக்கு. பாக்ஸ் நம்பர் 919க்கு ஆறாயிரத்திற்கு மேலே கடிதங்கள் வந்திருக்கு. ஒவ்வொருத்தனுக்கு கோடீஸ்வரனின் மாப்பிள்ளையாகவோ, பெரிய பிசிநெஸ் எக்ஸிக்யூடிவ் ஆகவோ இருக்க வேண்டும் என்ற ஆசையே தவிர, வேலை சிறியதாக இருந்தாலும், நேர்மையாக உழைப் போம் என்ற எண்ணமே இல்லை.''

''உங்களுக்கு உண்மையிலேயே தேவை ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் ஒரு அகௌண்டெண்ட் தானே.''

''ஆமாம்.''

''அதற்குப் போய் இத்தனை விளம்பரங்கள் ஏன் கொடுத்தீங்க?''

''தங்களுடைய தகுதி என்னவென்று யோசித்துப் பார்க்கிற இளைஞர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ளத்தான்.''

''பாக்ஸ் நம்பர் 920க்கு எத்தனை அப்ளிகேஷன்ஸ் வந்திருக்கு டாடீ?''

''ஒன்றுகூட வரவில்லை.'' சிரித்தார் ராஜாராம். தான் போட்ட கணக்கு பிசகவில்லை என்ற பெருமை அந்தச் சிரிப்பில் கலந்திருந்தது.

★ ★ ★

''மூன்றாவது விளம்பரத்துக்கு அப்ளை செய்பவர் களைத்தான் இண்டர்வ்யூக்கு அழைப்பார்கள் என்று நினைக்கிறேன்.'' லக்ஷ்மி சொன்னாள். ''ரொம்ப சாமர்த் தியமாக கொடுத்திருக்கும் விளம்பரம் இது. விளம்பர

ஸ்டேஜ்லேயே பாதிபேரை வடிகட்டி விடுவார்களாய் இருக்கும்.''

''எது எப்படி இருந்தாலும் நான் அப்ளை செய்யப் போவதில்லை.''

''ஏன்?''

''இந்த மாதிரி வேலை இல்லாத பட்டதாரிகள் மீது பிராக்டிகல் ஜோக் செய்பவர்களுக்காக தபால் செலவு செய்வது கூட வியர்த்தம்.''

''நாமும் அவர்கள் மீது பிராக்டிகல் ஜோக் செய்வோம்.'' லக்ஷ்மி சொன்னாள்.

★ ★ ★

''முதல் இரண்டு விளம்பரங்களுக்கு மேலும் இரண்டாயிரம் அப்ளிகேஷன்ஸ் வந்திருக்கு சார்.'' குமாஸ்தா தபால் கட்டை சுமந்துகொண்டு வந்தார்.

ராஜாராம் நகைத்தார். ''மூன்றாவது விளம்பரத்திற்கு எதுவுமே வரவில்லையா?''

''வந்திருக்கு சார், ஒரே ஒரு அப்ளிகேஷன். ஆனால்...'' குமாஸ்தா முணுமுணுத்தார்.

''ஆனால் என்ன?''

''அது பேரிங் லெட்டர்! ஸ்டாம்ப் ஒட்டவில்லை. நம்மிடமிருந்தே பணத்தை வசூல் செய்துவிட்டார்கள்.''

கேட்டுக் கொண்டிருந்த ஹாரிகா பக்கென்று சிரித்து விட்டாள். தந்தை கோபமாக பார்த்ததும் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

''அந்த ஆள் அட்ரஸ் தந்திருக்கிறானா?''

''தந்திருக்கிறான் சார்.''

''இண்டர்வ்யூ கடிதம் அனுப்புங்க. அந்தத் திமிர் பிடித்தவனை நானே இண்டர்வ்யூ செய்கிறேன்.''

★ ★ ★

ஐயா,

விஷயம்: அகௌளண்டெண்ட் வேலை – உங்கள் அப்ளிகேஷன் – பாக்ஸ் நம்பர் 920.

தங்களுடைய மனுவைப் பரிசீலித்த பிறகு உங்களை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கிறோம். மார்ச் 19ம் தேதி காலை பத்து மணிக்கு, கீழே காணும் விலாசத்தில் நேர் முகத் தேர்வு நடைபெறும். தகுந்த சான்றிதழ்களுடன் ஆஜராக வேண்டும்.

''இதேதோ ஆட்டம் காட்டுவதற்காக அனுப்பப் பட்ட நேர்முகக் கடிதமாக இருக்கணும். இல்லா விட்டால் பேரிங் லெட்டர் போட்ட எனக்குப் பதில் கடிதம் வருவதாவது?'' காந்தி சொன்னான்.

''நீ சொன்னதிலும் உண்மை இருக்கலாம். அதோடு உன்னை அழைத்திருப்பதுகூட ஆபீசுக்கு இல்லை, வீட்டுக்கு. நீ ரொம்ப கவனமாக இருக்கணும். உன் மூளையை நன்றாகப் பதம் பார்த்து அனுப்புவதற்காகத் தான் அழைத்திருப்பது போல் தோன்றுகிறது.'' லக்ஷ்மி முறுவலுடன் சொன்னாள்.

''அது சரி. கம்பெனியின் பெயர் என்ன?''

''ஹாரிகா இன்வெஸ்ட்மெண்ட்ஸ்.''

காந்தி திடுக்கிட்டான்: ஹாரிகா என்றதுமே ஆறேழு மாதங்களுக்கு முன்னால் ஆஸ்பத்திரியில் தனக்குப் பணம் தேவைப்பட்டது... திவ்ய சக்தியால் அவளுடைய பிறந்த நாளைச் சொன்னது, அவள் x,y ஈக்வேஷன் உதவியுடன் கணக்கிட்டு ரகசியத்தை வெளியிட்டது எல்லாம் நினைவுக்கு வந்தது.

''என்ன? தனக்குத்தானே சிரித்துக் கொள்கிறாய்?''

''ஒன்றும் இல்லை.''

''சொல்லக் கூடாதா?''

அவனுக்கு அவளை அழவைக்கணும் போல் தோன்றியது. தன் சாமர்த்தியத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற தவிப்பும் ஏற்பட்டது.

''உன் பிறந்தநாளை பன்னிரெண்டாலும் – பிறந்த மாதத்தை முப்பத்தி ஒன்றாலும் பெருக்கி, இரண்டையும் கூட்டிச் சொல்லு'' என்றான்.

அவள் கணக்கு போட்டுவிட்டு ''நானூற்றி முப்பது'' என்றாள்.

''உன்னுடைய பிறந்த தேதி அக்டோபர் பத்து'' என்றான்.

''எப்படி கண்டுபிடித்தாய்?'' வியப்புடன் கேட்டாள்.

''ரொம்பக் கஷ்டம். x, y ஈக்வேஷனுடன் காம்பினேஷனை கண்டுபிடித்து கணக்கிட வேண்டும்.'' அவன் சொன்னது உண்மைதான். அன்று ஹாரிகா பேப்பரில்

போட்ட கணக்கை அவன் மனதிலேயே போட்டு விடையைச் சொல்லிவிட்டான். அவன் திறமையை மறுக்க முடியாது. முக்கியமாக நினைவாற்றலை. அவன் மூளை கால்குலேட்டரை விட வேகமாக செயல்படக் கூடியது.

லக்ஷ்மி ஒரு நிமிடம் ஏதோ யோசித்துவிட்டு, ''உன் பிறந்தநாளை என்னாலும் சொல்ல முடியும்னு நினைக்கிறேன்'' என்றாள்.

அவன் ஆச்சரியமடைந்து ''உண்மையாகவா?'' என்றான்.

''எங்கே சொல்லு. தேதியை பன்னிரெண்டாலும் மாதத்தை முப்பத்தி ஒன்றாலும் பெருக்கிக் கூட்டி தொகையைச் சொல்லு.''

''நாற்பத்தி மூன்று'' என்றான்.

''ஜனவரி ஒன்று'' என்றாள் அவள்.

''எப்படிக் கண்டுபிடித்தாய்?''

''விடை சரியா?''

''ஆமாம்.''

லக்ஷ்மி நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டாள். ''எனக்கும் சரியாகத் தெரியாது. முப்பத்தி ஒன்றால் பெருக்கப்பட்ட எண்ணுக்கு ஏதாவது விசேஷம் இருக்கும்னு தோன்றியது.''

''எனக்குப் புரியவில்லை.''

''நாற்பத்தி மூன்றை பன்னிரெண்டால் வகுத்தேன். மீதியை திரும்ப ஏழால் பெருக்கி மறுபடியும் பன்னிரெண்டால் வகுத்தேன். மீதி வந்த தொகை ஒன்று. அதாவது ஜனவரி மாதம்.''

அவன் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவள் சொன்னதைப் புரிந்துகொள்ள கொஞ்சம் அவகாசம் தேவைப்பட்டது. ''ஏழு என்ற எண்ணிற்கு முக்கியத்துவம் ஏன்?'' என்று கேட்டான்.

''முப்பத்தி ஒன்றை பன்னிரெண்டால் வகுத்தால் மீதி ஏழுதானே.''

தான் x,y மூலம் போட்ட கணக்கை அவள் அத்தனை சுலபமான முறையில் செய்ததற்கு அவள் திறமையை நேர்மையாகப் பாராட்டினான்.

''வெறும் புத்திசாலித்தனம் இருந்துவிட்டால் மட்டும் போதாது. கொஞ்சம் உலக ஞானமும், சமயோசிதமும் இருக்கணும்னு இப்பத்தான் எனக்கே புரியுது'' என்றான்.

''அதையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வேலையைச் சம்பாதித்துக் கொண்டு வாருங்கள் அரசே. உங்கள் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டு இந்தக் குடிசை என்ற கோட்டையும் பாத்திரங்கள் என்ற சைன்னியமும் தங்களுடைய வருகைக்காக காத்திருக்கும்'' லக்ஷ்மி கலகலவென்று நகைத்தாள்.

★ ★ ★

விசாலமான பங்களா. சுற்றிலும் உயர்ந்த சுவர். விதவிதமான பூஞ்செடிகள். நடுவில் செம்மண் பாதை. பெரிய இரும்பு கேட். பக்கத்திலேயே கூர்க்கா.

''என்ன வேணும்?'' ஹிந்தியில் கேட்டான் கூர்க்கா. இண்டர்வ்யூக்காக வந்த அழைப்பு கடிதத்தை காந்தி காண்பித்தான். கூர்க்கா பெரிய ஆபீசரைப்போல் அதை வாங்கிப் பார்த்துவிட்டு போகலாம் என்பதுபோல் தலையை அசைத்தான்.

சுமார் நூறடி தொலைவு. இருபக்கமும் செங்கல் பதித்த பாதை. காற்றில் அசைந்தாடும் பூக்கள். அகலமான படிகளை ஏறி காரிடாரை அடைந்தான். ஒரு மூலையில் நான்கு நாற்காலிகள். நடுவில் வட்ட மேஜை போடப்பட்டிருந்தன. மேஜையின் மீது பூங்குவளை வைக்கப்பட்டிருந்தது. வராண்டாவில் யாருமே இருக்கவில்லை.

அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வராண்டாவிலேயே இருப்பதா அல்லது உள்ளே போவதா? அங்கேயே ஒரு நிமிடம் நின்று பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

ஹாலுக்குள் நுழைந்ததுமே ஒரு வினாடி திக்கு முக்காடி விட்டான். இண்டீரியர் டெகரேஷன் கலையில் திறமை வாய்ந்த யாரோதான் அந்த அறையை அழகு படுத்தியிருக்க வேண்டும். கீழே இருந்த கம்பளமும், மேற்கூரையும் ஒரே நிறம். நியூஸ் பேப்பர் மீது இருந்த பேப்பர் வெயிட், அலமாரியில் அடுக்கியிருந்த புத்தகங்

களுக்கு போட்டிருந்த அட்டைகள் எல்லாமே ஒரே நிறத்தில் இருந்தன.

பணத்தின் மயக்கம் அந்த அறையில் எங்கும் பரவியிருந்தது. அந்த அறையில் தான் இருந்தது, அழகான மேஜையின் ஓரத்தில் சிலந்திப் பூச்சி இருப்பது போல் இருந்தது. தன் செருப்பிலிருந்த தூசியினால் கம்பளம் பாழாகிவிடுமோ என்று அஞ்சியவனாக ஓரடி பின்னால் நகரப் போனபொழுது பக்கத்து அறைவாசலில் கம்பீரமான குரல் ஒன்று கேட்டது.

''ஓஹோ! அந்த மகாத்மா காந்தி நீதானா?''

காந்தி திடுக்கிட்டுத் திரும்பினான். வாசலில் ராஜாராம் நின்றுகொண்டிருந்தார். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை.

''உட்கார்ந்து கொள்.''

உட்கார்ந்தான். அவர் எதிரே இருந்த சோபாவில் வந்து அமர்ந்துகொண்டார்.

''ஸ்டாம்பு ஒட்டாமல் கவரை அனுப்ப உனக்கு எவ்வளவு தைரியம்?''

அவன் பேசவில்லை.

''பிராக்டிகல் ஜோக் செய்பவர்களை எனக்குப் பிடிக்கும். ஆனால் என் மீதே பிராக்டிகல் ஜோக் செய்தால் அவர்களை ஒரு கை பார்க்கும் வரையில் எனக்குத் தூக்கமே வராது.'' ஒரு மாதிரியாகச் சிரித்தார். ''உங்க வீடு எங்கே இருக்கு?''

அவர் அந்தக் கேள்வியை ஏன் கேட்டார் என்று புரியாததால் ஒரு வினாடி தடுமாறியபின் சொன்னான்.

''இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

குத்துமதிப்பாகச் சொன்னான்.

''எப்படி வந்தாய்?''

''நடந்து.''

''திரும்பி எப்படிப் போவாய்?''

''நடந்துதான்.''

''உன் இண்டர்வ்யூ முடிந்துவிட்டது. இனி நீ போகலாம்.''

காந்தி வியப்புடன் பார்த்தான்.

ராஜாராம் பெரிதாகச் சிரித்துவிட்டு, ''டிட் ஃபர் டாட்! இவ்வளவு தூரம் நீ நடந்து வந்தது, இதற்காகவே புத்தகங்களை எல்லாம் படித்துத் தயார் செய்து கொண்டது, உன் எதிர்பார்ப்பு... எல்லாமே வியர்த்தம். இனி நீ போகலாம்.''

காந்தியின் முகம் கன்றி சிவந்துவிட்டது. சர்டி ஃபிகேட்டுகளை எடுத்துக்கொண்டான்.

''நான் உங்களை மூன்று கேள்விகள் கேட்கலாமா?''

இந்த முறை வியப்பது அவருடைய பங்காயிற்று. ''என்ன கேட்கப் போகிறாய்?''

''உங்க மாத வருமானம் எவ்வளவு?''

'உனக்கு எதற்கு?' என்று கேட்கப் போனார். ஆனால் பதில் சொல்வது தனக்கு சந்தோஷம் தரக்கூடிய விஷயம் என்பதால் ''இரண்டு மூன்று லட்சங்களுக்குள்'' என்றார் பெருமையுடன்.

''நீங்க ஓய்வு நேரத்தில் என்ன செய்வீங்க?'' இரண்டாவது கேள்வி கேட்டான்.

''ஓய்வா? என்னைப் போன்றவர்களுக்கு ஓய்வு என்பதே கிடைக்காது தம்பீ?''

''கடைசிக் கேள்வி சார்.'' பணிவுடன் கேட்டுக் கொண்டான். ''நீங்க இரவு நேரத்தில் எத்தனை மணிக்குத் தூங்கப் போவீங்க?''

இந்தக் கேள்வியால் குழம்பிய ராஜாராம் ''பத்து மணிக்கு'' என்றார்.

இந்த முறை காந்தி நகைத்தான். ''தினமும் நீங்க காலையில் ஏழு மணிக்கு எழுந்து கொள்வீங்க என்று வைத்துக் கொண்டால் ஒரு நாளுக்கு நீங்கள் வேலை பார்க்கும் சமயம் பன்னிரெண்டு மணி நேரம். அதாவது மாதத்திற்கு ஏறத்தாழ முன்னூறு மணி நேரம். மாதத் திற்கு மூன்று லட்சம் சம்பாதிக்கறீங்க. அதாவது மணிக்கு ஆயிரம் ரூபாய்.'' காந்தி நாற்காலியை விட்டு எழுந்துகொண்டான். ''என்னோடு பதினைந்து நிமிடங்கள் பேசி வீணாக்கியதற்கு நன்றி. உங்களுடைய கால்மணி நேரத்தின் மதிப்பு இருநூற்றி ஐம்பது ரூபாய்.'' அவன் பைலை கையில் எடுத்துக்கொண்டு கடைசியாகச் சொன்னான்.

''டிட் ஃபர் டாட்.''

திடீரென்று இரத்தம் வேகமாகப் பாய்ந்ததால் ராஜாராமின் முகம் சிவந்துவிட்டது. ''உன்னை... உன்னை'' ஆவேசத்தில் வார்த்தைகள் தடுமாறின. அதற்குள் கதவின் அருகில் திரைச்சீலை அசைந்த ஓசை. ''அப்பா!'' மென்மையாகக் கேட்டது பெண்ணின் குரல், ஆனால் கண்டிப்பது போல்.

ராஜாராம் காந்தியை விழுங்கிவிடுவது போல் கடு கடுப்பாக பார்த்துவிட்டு உள்ளே போனார். காந்தி தனித்து நின்றான்.

''பி.பி. ஏறிவிடும். ஆவேசப்படக்கூடாது என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன் டாடீ.''

ஹாரிகாவின் குரல் கேட்டதும் அவனுக்கு ஏனோ குற்ற உணர்வு ஏற்பட்டது. தங்களுடைய உரையாடலை அடுத்த அறையில் இருந்தவாறே அவள் கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்று உணர்ந்ததுமே அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவளுக்கு முன்னால் இரண்டாவது முறை அற்பமாக நடந்துகொண்டிருக்கிறான்.

அதற்குள் அவர் வெளியே வந்தார். அவர் முகம் அமைதியாக இருப்பதைக் கண்டு அவன் வியப்படைந்தான். அந்தச் சிறிய நிகழ்ச்சியிலிருந்தே அத்தனை சாதுவாக, அதிகம் பேசாதவளாக இருக்கும் அந்தப் பெண் எவ்வளவு கமாண்டுடன் அந்த வீட்டையும், அந்த வீட்டில் இருக்கும் நபர்களையும் கட்டுப்படுத்துகிறாள் என்று நினைக்கும்போது வியப்பு ஏற்பட்டதோடு பாராட்டவும் தோன்றியது.

''உனக்கு ஏதோ அபூர்வசக்தி இருக்கிறதாமே?'' ராஜாராம் கேட்டார்.

காந்தி திடுக்கிட்டான்.

''கட்டவுளோடு பேசி பிறந்த தேதியைச் சரியாக சொல்லி விடுவாயாமே.''

அந்தப் பெண் தந்தையிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள் போலும். தன்னை மற்றொரு முறை முட்டாளாக்கப் பார்க்கிறார். எப்படித் தப்பித்துக் கொள்வது?

''எங்கே? என் பிறந்த தேதியைச் சொல்லு பார்ப்போம்.''

காந்தியின் மூளையில் பளிச்சென்று யோசனை தோன்றியது. ஒரு பேப்பரில் முப்பத்தேழு என்ற எண்ணை எழுதி பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

''பிறந்த தேதி என்ன சார்? என் அபூர்வசக்தியால் உங்கள் மனதில் இருக்கும் எண்ணைக் கூட சொல்லி விடுவேன். மூன்று ஸ்தானங்களிலும் ஒரே எண் இருப்பது போல் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள்.''

222 என்று நினைத்துக் கொண்டார்.

''அந்த எண்களைக் கூட்டினால் வரும் தொகையை வைத்து அந்த எண்ணை வகுங்கள்.''

''வகுத்துட்டேன்.''

காந்தி ஜேபியிலிருந்து 37 என்று எழுதிய பேப்பரை எடுத்து ''இதுதான் அது'' என்றான்.

அவர் வியப்படைந்தாலும் நொடிப் பொழுதில் தேறிக் கொண்டு, ''இதில் ஏதோ டிரிக் இருக்கு'' என்றார்.

காந்தி சிரித்துவிட்டு, ''அப்படி எதுவும் இல்லை'' என்றான்.

''சரி. உனக்கு வேலை போட்டுத் தருகிறேன்.''

மகிழ்ச்சியும், வியப்பும் ஒன்றாகச் சேர காந்தி ''நிஜமாகவா சார்'' என்றான். அவன் 'சார்' என்ற சொல்லைப் பயன்படுத்தியதும் அவருக்கு சந்தோஷ மாகிவிட்டது.

''ஆமாம். உனக்கு எவ்வளவு சம்பளம் வேண்டும்?''

''ஆயிரம் ரூபாய் என்று விளம்பரத்தில் குறிப்பிட்டு இருந்தீர்களே.''

''அதைவிட அதிகமாக தரலாம்னு இருக்கேன்.''

''தாங்க்யூ சார்.''

''என்னோடு வா.'' என்று உள்ளே போனார் அவர். காந்தி அவர் பின்னாலேயே சென்றான். அவருடைய அறையில் சிறிய பெட்டி ஒன்று இருந்தது. அதன் மீது டைப்மிஷன் கீபோர்ட் போன்ற அமைப்பு இருந்தது. ஒரு வரிசையில் ஆறு பட்டன்கள் வீதம் ஒன்பது வரிசைகள் இருந்தன. மொத்தம் ஐம்பத்து நாலு பட்டன்கள்.

''உன் சம்பளம் ஐயாயிரம் ரூபாய். இந்தப் பெட்டியில் தான் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு மாதக் கடைசியிலும் வந்து வாங்கிக்கொள்.''

''தாங்க்யு சார். என் நன்றியை எப்படி தெரிவித்துக் கொள்வது என்றே தெரியவில்லை.'' மனப்பூர்வமாகச் சொன்னான்.

''ஆறு வெவ்வேறு பட்டன்களை அழுத்தினால் இந்தப் பெட்டியைத் திறக்க முடியும். அந்த பட்டன்கள் என்னவென்று நீதான் கண்டுபிடிக்கணும்'' கிண்டலாகச் சிரித்தார்.

காந்தியின் முகம் கோபத்தால் சிவந்தது. ''ஒரு பட்டனை அழுத்துவதற்கு ஒரு வினாடி ஆகும் என்று வைத்துக் கொண்டால் அந்த ஆறு பட்டன்களின் காம்பினேஷனை கண்டுபிடிப்பதற்கு எனக்கு எவ்வளவு நேரமாகும் என்று உங்களுக்குத் தெரியுமா சார்?''

அவர் அப்பாவியாக ''எவ்வளவு நேரம் பிடிக்கும்?'' என்று கேட்டார்.

''அதற்குள் கிழவனாகி விடுவேன். என் விரல்கள் தேய்ந்துவிடும். என் பேரன் பேத்திகள் முயன்றாலும் அது நடக்காது. அதைத் தெரிந்துகொள்ள 2000 வருஷங்கள் ஆகும்.''

முதல் முதலாக அவர் அவனைப் பாராட்டுவதுபோல் பார்த்தார். அதிலிருந்த சூட்சுமத்தைக் கண்டுபிடித்ததற்காக அல்ல. 54x53x52x51x50x49... என்று மனதிற்குள் அத்தனை வேகமாக கணக்கு போட்டதற்கு. இத்தனை நேரமாக காந்தி ஏதோ டிரிக் செய்வதாகத்தான் நினைத்திருந்தார். தன் முன்னால் இருந்த இளைஞன் உண்மையிலேயே கணக்கில் புலி என்று அறிந்து கொண்டார்.

''இத்தனை கெட்டிக்காரனாக இருந்துகொண்டு ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டார்.

காந்திக்குப் புரியவில்லை. ''அப்படி என்றால்?''

''வெறும் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்கு உன் திறமையை விற்க வந்திருக்கிறாயே.''

''என்னைவிட திறமைசாலிகள், சுறுசுறுப்பாக இருப்பவர்கள் எத்தனையோ பேர் இதையும்விட குறைவான சம்பளத்திற்கு வேலை பார்க்கிறாங்க நம் நாட்டில்.''

''அதான் ஏன்னு கேட்கிறேன்.''

''பின்னே என்ன செய்வது? தேவை அப்படி.''

''தேவையை உணர்ந்து உங்களையெல்லாம் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிவிடுகிறான் வியாபாரி. அவன்தான் கெட்டிக்காரன்.''

''கெட்டிக்காரத்தனத்திற்கும், விற்றுப் போவதற்கும் சம்பந்தம் இல்லை சார். இந்த நாட்டில் நான் ஒரு சராசரி இளைஞன். வாழ்க்கை சாதாரணமாக கழிந்துவிட்டால் போதும் என்று நினைப்பவன். எனக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை. வியாபார விஷயங்கள் எனக்குத் தேவையில்லை. தங்குவதற்கு ஒரு இடமும், சாப்பிட உணவும் இருந்தால் போதும். நம்பிக்கையாக வேலை செய்யணும் என்பதுதான் என்னுடைய கொள்கை. அவ்வளவு தானே தவிர என்னுடைய திறமையைப் பயன்படுத்தி யாரையும் ஏமாற்றும் எண்ணம் எனக்கு இல்லை.''

''அப்படி என்றால் நாங்கள் எல்லோரும் ஏமாற்றுப் பேர்வழிகள் என்கிறாயா?''

''பணம் சம்பாதிப்பது ஏமாற்றுவது இரண்டுமே ஒன்றோடு ஒன்று தொடர்பு இருக்கும் விஷயங்கள்.''

''அப்படி ஏமாற்றினால் நீதிமன்றம் சும்மா இருக்காது. ஜெயிலில் போட்டுவிடும்.''

''நான் சொல்வது சட்டத்திற்கு உட்பட்டு ஏமாற்று வது பற்றி. சரக்கு வாங்குவது, விலை உயரும் வரையில் காத்திருப்பது. அப்புறம் விற்று லாபம் சம்பாதிப்பது. இதற்கு எந்த நீதி மன்றத்தால் தண்டனையைத் தர முடியும்?''

அவருக்குக் கோபம் வந்தது. ''பணம் சம்பாதிப்பது என்பது சரக்கை வாங்கி விற்பது போல் அத்தனை சுலப மானதாக இருந்தால் அப்போ நீங்கள் எல்லோரும் அப்படி சம்பாதிக்காமல் இருப்பானேன்? இன்னொரு வரிடம் கைகட்டி சேவகம் செய்வானேன்?''

''நியாயத்தின் மீது நம்பிக்கை இருப்பதால், பணம் சம்பாதிப்பது மட்டுமே மனித்னின் குறிக்கோள் இல்லை என்பதால், மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து கொள்ளப் பிடிக்காததால்.''

ராஜாராம் உரத்த குரலில் சிரித்தார்.

''உங்களுடைய கையாலாகாத்தனத்தை மனச்சாட்சி யுடன் முடிச்சுப் போட்டு அழகாக ஆத்ம வஞ்சனை செய்து கொள்றீங்க. உண்மையில் உங்களால் எதுவும்

செய்ய முடியாது. அதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப் பிடிக்காமல் இப்படி பூசி மெழுகுறீங்க.''

''உண்மையிலேயே பணம் சம்பாதிப்பது மட்டும் குறிக்கோளாக இருந்தால் ஐந்து ஆண்டுகளில் ஐம்பது லட்சம் சம்பாதிப்பது ஒன்றும் பெரிய கஷ்டம் இல்லை.''

அவர் மேலும் பெரிதாக்ச் சிரித்துவிட்டு, ''அப்படி என்றால் சம்பாதித்துக் காட்டேன் பார்ப்போம். நீ மட்டும் அப்படி சம்பாதித்து விட்டால் என் மகளையே உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்'' என்றார்.

அடுத்த அறையில் இருந்த ஹாரிகா திடுக்கிட்டாள். காந்திக்கும் அதிர்ச்சியாக இருந்தது. திடீரென்று அறையில் மௌனம் சூழ்ந்துகொண்டது.

அந்த வார்த்தை சொன்னபிறகு ராஜாராம் நாக்கைக் கடித்துக் கொண்டாலும், காந்தியின் மௌனத்தைப் பார்த்துவிட்டு தன் வாதத்திற்கு பலம் கூடி விட்டதாக நினைத்தார். ''பார்த்தாயா? உன் வீரமெல்லாம் வாய்ப் பேச்சில்தான் தவிர காரியத்தில் சூனியம்.''

காந்தி பேசவில்லை. யோசித்துக் கொண்டிருந்தான். தாயின் பிணம்... மருந்துக் கடையின் முதலாளி... வெட்டியான், லக்ஷ்மியின் அண்ணன்... வரிசையாக எல்லோரும் நினைவுக்கு வந்தார்கள்.

இந்தச் சமுதாயத்தை எதிர்த்து நின்றால்? உண்மை யிலேயே பணம் சம்பாதிப்பது அவ்வளவு கஷ்டமா என்ன? திறமையைச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல்தான் இத்தனை நாளும் சும்மா இருந்தானா?

காந்தி மெதுவாக நிமிர்ந்து பார்த்தான். தெளிவான குரலில் சொன்னான். ''இந்தப் பந்தயம் எனக்குச் சம்மதம்தான்.''

''என்ன?''

''இன்னிக்கு மார்ச் பத்தொன்பது. சரியாக ஐந்து ஆண்டுகள் முடிவதற்குள் ஐம்பது லட்சம் சம்பாதித்து உங்களுக்குக் காட்டுகிறேன்.''

பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் பார்த்தார் அவனை. ''எப்படி? கொலை செய்யப் போகிறாயா? கொள்ளையடிக்கப் போகிறாயா?''

காந்தி சிரித்தான். ஏற்கனவே அவன் மனதில் ஒரு தீர்மானம் உருவாகிவிட்டது.

''என்ன செய்தாலும் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செய்வேன். நியாயத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் சம்பாதிப்பேன். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வருகிறேன் ஐம்பது லட்சங்களோடு.'' காந்தியின் குரல் திடமாக ஒலித்தது. ஏனோ அவன் பார்வை அறையின் திரைச் சீலையின் மீது படிந்து விலகியது.

திடீரென்று ராஜாராமுக்கு தான் நேரத்தை வீணாக்குவது போல் தோன்றியது. இந்த அனாமத்துப் பயலின் பிதற்றலுக்கு மதிப்பளித்து இன்னும் பேசிக் கொண்டிருப்பது வீண்தானே. ஐந்து வருடங்களில் ஐம்பது லட்சம் சம்பாதிக்கப் போகிறானாம்!

''சரி. போயிட்டு வா'' என்று எழுந்து கொண்டார்.

காந்தி நகரவில்லை. ''அக்ரிமெண்ட்!'' என்றான்.

''வாட்!'' கத்தினார் அவர்.

''யாரையும் நம்பக்கூடாது என்று இந்த நிமிடத்தி லிருந்தே முடிவு செய்துவிட்டேன். நாம் ஒரு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொள்ளணும்.''

ராஜாராம் ஒரு நிமிடம் கோபத்தினால் தடுமாறி னாலும் இந்தப் பந்தயத்தில் தானாக மாட்டிக் கொண்டு விட்டதால் வேறு வழியில்லாமல் மேஜை டிராயரி லிருந்து ஸ்டாம்ப் பேப்பரை எடுத்தார். பத்தே நிமிடங் களில் அக்ரிமெண்ட் பூர்த்தியாகிவிட்டது.

பந்தயம் : ஐம்பது லட்சங்கள் சம்பாதிப்பது.

காலக்கெடு : ஐந்து ஆண்டுகள் (இன்றுமுதல்)

பரிசு : ஹாரிகாவுடன் திருமணம்.

(இதை எழுதும் போது ராஜாராம் பற்களை நறநற வென்று கடித்தார். 'எத்தனை துணிச்சல் இவனுக்கு?' என்று நினைத்துக் கொண்டார்.)

நிபந்தனை : நியாயமான முறையில், சட்டத்திற்கு உட்பட்டு சம்பாதிக்கணும்.

இருவரும் கையெழுத்து போட்டார்கள்.

திரைச்சீலைக்குப் பின்னால் இருந்த ஹாரிகா ஹாலில் நிகழ்ந்து கொண்டிருந்தவற்றைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். முதலில் தந்தை சொன்ன வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு ஹாலுக்கு வரப் போனாள். ஆனால் அடுத்த வினாடி சமாளித்துக்

கொண்டாள். தந்தையை உள்ளே அழைத்துப் புத்தி சொல்லும் எண்ணத்தையும் மாற்றிக் கொண்டாள். தந்தையின் அவசர புத்தியைப் பற்றியும், மற்றவர்களின் இயலாமையை எள்ளி நகையாடும் குணத்தையும் அவள் நன்கு அறிவாள்.

தன் தந்தை இதையும் ஒரு விளையாட்டாக எண்ணி விட்டார் என்றும், இந்து ஆண்டுகளில் ஐம்பது லட்சம் சம்பாதிப்பது கன்வினும் நினைத்துப் பார்க்க முடியாத விஷயம் என்றும் அவளுக்குத் தெரியும். ஆனால் அந்த இளைஞன் கூட சாதாரணமானவன் இல்லை என்று அவளுடைய ஆறாவது அறிவு உணர்த்தியது. அவள் உடனே திரைச்சீலையை விலக்கி ஹாலுக்குள் எட்டிப் பார்த்தாள்.

அதே சமயம் காந்தி ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்து போட்டுக் கொண்டிருந்தான். தீட்சண்ய மான கண்கள், எடுப்பான மூக்கு, லேசாகப் படர்ந் திருந்த தாடி. அவள் திரைச்சீலையை பழையபடி விட்டு விட்டாள். ஏனோ அவள் இதழ்களில் லேசான முறுவல் படர்ந்தது.

அதே நேரத்தில் அக்ரிமெண்ட் பிரதியை சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருந்தான் காந்தி. பிறகு எழுந்து நின்று கைகுலுக்குவதற்காக கையை நீட்டினான். அவனிடம் அந்த நிமிடம் முதல் ஏற்பட்ட மாறு பாட்டைக் கண்டு வியந்தார் ராஜாராம். தன்னையும் அறியாமல் கையை நீட்டினார்.

காந்தி வெளியே வந்தான்.

ராஜாராம் ஒரு நிமிடம் சலனமற்று அப்படியே நின்றுவிட்டார். திடீரென்று அவருக்குச் சிரிப்பு வந்தது. மேஜை மீது இருந்த அக்ரிமெண்ட் காகிதத்தை கையில் எடுத்துப் பார்த்தவர் பெரிய குரலில் சிரித்துவிட்டு அதனைக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டுவிட்டு தன் அறைக்குச் சென்றார்.

அவர் போனதும் ஹாரிகா ஹாலுக்குள் நுழைந்தாள். குப்பைக் கூடையில் இருந்த காகிதத் துண்டுகளை எடுத்து ஒவ்வொன்றாகப் பரிசீலித்துப் பார்த்தாள். ஒரு நிமிடம் கழித்து அவளுக்குத் தேவையான துண்டு கிடைத்தது. அதில் காந்தியின் முகவரி இருந்தது.

3

காந்தி கோவில் படிக்களில் ஏறிக் கொண்டிருந்தான். சின்ன குன்றின் மீது கோவில் இருந்தது. படிகளுக்கு இருபுறமும் பிச்சைக்காரர்கள் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். அவன் நேராகப் போய் கோவிலுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டான். யோசித்து யோசித்து மூளை சூடாகிவிட்டதுபோல் இருந்தது. ஏதோ ஆவேசத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிட்டானே ஒழிய அவ்வளவு பணம் எப்படி சம்பாதிக்க முடியும்?

''தர்மம் போடுங்க சாமி!''

யோசனையிலிருந்து மீண்டவனாக நிமிர்ந்து பார்த்தான். கிழவியொருத்தி கைத்தடியை ஊன்றியபடி நின்று கொண்டிருந்தாள்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''நானும் உன்னைப் போன்றவன்தான் பாட்டீ'' என்றான்.

''அப்படிச் சொல்லாதே தம்பீ. கடவுள் உதவி செய்வார். நாலணா தர்மம் போடு. சாப்பிட்டு ரெண்டு நாளாச்சு.''

''நானும் சாப்பிட்டு மூணு நாளாச்சு.''

சுருக்கம் விழுந்த அவள் முகத்தில் வியப்பு எட்டிப் பார்த்தது. பிறகு அங்கிருந்து போய்விட்டாள். அவன் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான். இதெல்லாம்

தெரிந்தால் லக்ஷ்மி என்ன சொல்லுவாள்? திட்டித் தீர்ப்பாளா இல்லை விழுந்து விழுந்து சிரிப்பாளா? ஆனாலும் தான் செய்த காரியம்தான் என்ன? எந்த தைரியத்தில் அந்தப் பந்தயத்திற்கு ஒப்புக் கொண்டான்? அசல் அந்த யோசனை எப்படி வந்தது?

அவனுக்குத் திடீரென்று ஒரு விஷயம் புரிந்தது. தன் மனதின் ஆழத்தில் ஏதோ ஒரு மூலையில் பணத்தின் மீது வெறுப்பும், வியாமோகமும் இருந்திருக்க வேண்டும். பணம் இல்லாததால் தன்னை இத்தனை நாளும் அடக்கி ஆண்ட சூழ்நிலை, சுற்றிலும் இருப்பவர்கள் பணம் சம்பாதிக்கும் வழிகள், இவையெல்லாம் சேர்ந்து தன் மனதில் ஆசையைத் தூண்டிவிட்டிருக்க வேண்டும். அது எரிமலைக் குழம்பாக இன்று வெடித்து விட்டது. அவன் கண்களை மூடிக் கொண்டான். எத்தனை நேரம் அப்படி இருந்தானோ தெரியாது.

''தம்பீ'' என்ற குரலைக் கேட்டு விழித்துக் கொண்டான். சுற்றிலும் இருள் பரவியிருந்தது. 'ரொம்ப நேரம் தூங்கிவிட்டேன் போலும்' என்று நினைத்துக் கொண்டான்.

''இந்த நாலணாவை வைத்துக்கொள் தம்பீ.''

அவன் அதிர்ந்து விட்டான். கிழவி மேலும் சொன்னாள். ''நீ எதுவும் சாப்பிடவில்லை என்று பார்த்தாலே புரியுது. இந்தப் படிகளில் எத்தனை நேரம் உட்கார்ந்திருந்தாலும் ஒரு ரூபாய் கூட கிடைக்க வில்லை. தர்மம் செய்பவர்களே இந்தக் காலத்தில் குறைஞ்சுட்டாங்க.'' நடுங்கும் கரத்தை முன்னால்

நீட்டினாள். ''ஏதாவது சாப்பிடு தம்பி. ஒன்றுமே சாப்பிடாவிட்டால் மயக்கம் வரும். வேர்க்கடலை யாவது வாங்கிச் சாப்பிடு.''

அவன் விழிகளில் நீர் சுழன்றது. ஒரு பிச்சைக்காரி தன்னையும் பிச்சைக்காரனாக்கி விட்டதற்காக இல்லை. மனிதர்களின் மனதில் அந்த மட்டுமாவது இரக்கமும் கருணையும் இருப்பதற்காக.

வேண்டாம் 'என்று சொல்லாமல் பெற்றுக் கொண்டான். அப்பொழுது அவன் நினைத்தான். ''பாட்டீ! இந்த வினாடியிலிருந்து நாமிருவரும் பங்குதாரர்கள். பணம் உன்னுடையது திறமை என்னுடையது. இந்த நாலணாவையே லட்சம் லட்சமாக மாற்றுகிறேன். பாதி லாபம் உனக்குத் தருகிறேன்.'

படியிலிருந்து எழுந்து கொண்டான். அவன் கையில் நாலணா வில்லை பளபளத்துக் கொண்டிருந்தது. கண்களில் பிடிவாதம் மின்னியது.

★ ★ ★

''இதென்ன தமிழ் சினிமான்னு நினைத்து விட்டாயா? அல்லது உன்னையே அமிதாப்பச்சன் என்று எண்ணிவிட்டாயா? ஐந்து வருடங்களில் ஐம்பது லட்சம் சம்பாதிப்பதாக பந்தயம் கட்டுவதாவது? போகட்டும். அப்படியே சபதம் செய்தாலும் அதேதோ கள்ளக் கடத்தல் செய்து சம்பாதிப்பதாக இருந்தால் கொஞ்சம் த்ரில்லிங்காக இருக்கும் இல்லையா? நியாயமான முறையில் சம்பாதிப்பதா? அப்படி என்றால்?''

''சட்டத்திற்கு உட்பட்டு'' திருத்தம் சொன்னான் காந்தி.

லக்ஷ்மியின் வாக்பீரவாகம் இன்னும் நிற்கவில்லை. ''இரண்டிற்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இந்தக் கணக்கில் ஐந்து வருடங் களில் ஐயாயிரம்கூட சம்பாதிக்க முடியாது உன்னால்.''

காந்தி கைகளை ஜோடித்து, ''அம்மா... தாயே! அபசகுணமாக எதுவும் சொல்லாதே. என்னைக் கொஞ்சம் பேசவிடு'' என்றான். ''இந்த நாலணாவை அடுத்த மாதமே எட்டணாவாக மாற்றிக் காட்டுவேன். ஒவ் வொரு மாதமும் இரண்டு மடங்காவது சம்பாதிப்பேன். அந்த அளவுக்காவது என் மேல் நம்பிக்கை இருக்கு இல்லையா?'' என்றான்.

''இருந்தால் மட்டும்? ஐந்து ஆண்டுகளில் ஐம்பது லட்சம் சம்பாதித்து விட முடியுமா என்ன?''

''பார்த்துக்கிட்டே இரு. இப்பவே போய் இந்த நாலணாவை எட்டணாவாக்கி திரும்புகிறேன்.'' ரோஷத் துடன் சொன்னான் காந்தி.

லக்ஷ்மி பணிவுடன் எழுந்து நின்று, ''போய்விட்டு வாங்க ராக்பெல்லர் சார்! உலகத்தில் உள்ள முட்டாள்கள் எல்லோரும் நீ எப்போ வந்து அவர்களை முட்டாளாக்கி காசு சம்பாதிக்கப் போகிறாய் என்று காத்துக்கிட்டு இருக்காங்க'' என்று சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

காந்தியின் முகம் கோபத்தால் மேலும் சிவந்தது. ''சிரித்தது போதும். ஐம்பது லட்சம் சம்பாதித்த பிறகு வயிறு வலிக்க சிரிக்கலாம்.''

அவள் சட்டென்று சிரிப்பை அடக்கிக் கொண்டு ''ஐம்பது லட்சமாவது? கோடி ரூபாய் சம்பாதிக்கணும் நீ'' என்றாள்.

அவன் வியப்புடன் ''ஏன்?'' என்றான்.

''உனக்கு முதலீடு தந்த கிழவிக்குப் பாதி பங்கு தருவதாக சொன்னாயே. அவளுக்கு ஐம்பது லட்சம் உனக்கு ஐம்பது லட்சம். ஆக மொத்தம் ஒரு கோடி ரூபாய்.''

அவன் முகம் வாடிவிட்டது. ''அவ்வளவு தூரத்திற்கு நான் யோசிக்கவே இல்லை'' என்றான்.

''முதல் பாடம் கற்றுக்கொள். வியாபாரத்தில் எப்போதும் அவசரப்பட்டு வாக்குக் கொடுத்துவிடக் கூடாது.''

காந்தி சிரித்துவிட்டு, ''அப்படியே நடக்கட்டும் குருவே. உங்க வார்த்தையை நினைவில் வைத்துக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு நாலணாவை ஜேபியில் போட்டுக் கொண்டு குடிசையை விட்டு வெளியேறினான்.

சூரியன் மேற்கே மறைந்துவிட்டான். இரவு வாழ்க்கைக்கு உலகம் தயாராகிக் கொண்டிருந்தது. அன்று இரவு முடிவதற்குள் நாலணாவை இருமடங் காக்க வேண்டும் என்று பந்தயம் அவனுள் புதிய

உற்சாகத்தைத் தூண்டிவிட்டது. ஜெயிப்பதும் ஜெயிக்காமல் போவதும் வேறு விஷயம். பந்தயம் என்றதும் அவனுக்கு ஹாரிகா நினைவுக்கு வந்தாள். 'பரிசு' பற்றிய விஷயத்தை லக்ஷ்மியிடம் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டான். உடனே 'எதற்காக சொல்ல வேண்டும்?' என்றும் தோன்றியது. அவ்வாறு எண்ணியது பிற்காலத்தில் அவனை பெரிய ஆபத்தில் ஆழ்த்திவிட்டது.

★ ★ ★

காந்தியின் கண்கள் யதேச்சையாக அங்கே வெளியில் நின்று கொண்டிருந்த இளைஞன் மீது பட்டது.

''டேய் கிச்சா! இங்கே என்ன வேலை உனக்கு?'' கேட்டான் காந்தி.

கிச்சாவும் அவனும் ஒன்றாக கல்லூரியில் படித்தவர்கள். அப்பொழுது இருந்ததை விட சற்று பூசினாற் போல் இருந்தான். பணத்தில் மிதப்பவன்போல் தென் பட்டான்.

''பிசினெஸ் பார்த்துக் கொள்கிறேன். இந்த அம்யூஸ் மெண்ட் பார்க் என்னுடையத்துதான்.''

''என்ன பிசினெஸ்?'' காந்தி கேட்டான்.

''அம்யூஸ்மெண்ட் பார்க் என்றால் தெரியாதா?''

'என் வாழ்க்கையில் அம்யூஸ்மெண்ட் இருந்ததே இல்லை.' நினைத்துக் கொண்டான் காந்தி.

''உள்ளே போகலாம் வா.''

இருவரும் உள்ளே போனார்கள். உள்ளே பலவித மான விளையாட்டுகள் இருந்தன. ஒரு இடத்தில் கேரம் போர்ட் போன்ற பலகை இருந்தது. டேபிள் டென்னிஸ் பந்துகளை தொலைவிலிருந்து பார்வையாளர்கள் வீசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் மூன்று பந்துகள். பலகையில் ஆறு வண்ணங்களில் கட்டங்கள் இருந்தன. ஏறத்தாழ அறுபது கட்டங்கள். ஒவ்வொரு வரும் தமக்குப் பிடித்த நிறத்தின் மீது பந்தயம் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

''ஜெயிப்பதும் தோற்பதும் அதிர்ஷ்டத்தைப் பொறுத்து இருக்கும். நம்முடைய அதிர்ஷ்டம் நன்றாக இல்லை என்றால் இத்தனை பேருக்கும் பணத்தை முழு வதும் பங்கு போட்டுத் தர வேண்டியிருக்கும்.'' கிச்சா சொன்னான்.

ஜெயிப்பதற்கும், தோற்பதற்கும் சரிபாதி வாய்ப்பு என்றால் இந்த கிச்சாவின் மேனியில் சில்க் ஜிப்பாவும் இவ்வளவு பணப்புழக்கமும் எப்படி வந்திருக்கும்? இதில் ஏதோ சூட்சுமம் இருக்கணும். காந்தியின் மூளை சுறுசுறுப்பாக யோசித்தது.

தன்னிடம் ஆறு ரூபாய் இருப்பதாக வைத்துக் கொள்வோம். ஆறு நிறங்களின் மீதும் ஒவ்வொரு ரூபாய் கட்டினால் என்னவாகும்? பந்து விழுந்த மூன்று நிறங்களுக்கும் இரு மடங்கு வீதம் ஆறு ரூபாயும் தனக்குத் திரும்பக் கிடைத்து விடும்.

அவன் மறுபடியும் பலகையின் பக்கம் பார்த்தான். இந்த முறை பந்துகள் மூன்றும் சிவப்பு நிறக்கட்டத்தில் விழுந்தன. காந்தி கிச்சாவைப் பார்த்து, ''இப்போ என்ன வரும்?'' என்று கேட்டான்.

''சிவப்பு நிறத்தின் மீது பணம் கட்டியவர்களுக்கு நாலுமடங்கு பணம் தருவோம்.''

காந்திக்கு டிரிக் புரிந்துவிட்டது. ஒரே நிறத்தில் பந்துகள் விழ விழ ஆட்டத்தை நடத்துபவர்களுக்கு லாபம். அவன் அங்கே பந்தயம் கட்டிக் கொண்டிருந்த மக்களை இரக்கத்துடன் பார்த்தான். மக்கள் பிடிவாத மாக மேலும் மேலும் ஆடிக்கொண்டிருந்தார்கள். சில சமயம் ஜெயித்தாலும் பெரும்பாலும் தோற்றுப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''வாழ்த்துக்கள்'' என்றான் காந்தி. இருவரும் ஆபீஸை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

''எதுக்கு?''

''கல்லூரியில் படிக்கும்போது கணக்குப் போட வராது என்று எல்லோரும் உன்னைப் பழித்தார்கள். அவர்கள் எல்லோரும் முட்டாள்கள்.''

''அதிர்ஷ்டத்திற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை என்கிறாயா?''

''இல்லை'' என்றான் காந்தி திடமாக.

''பூவா தலையா ஆட்டத்தைப் பற்றி உன் அபிப் பிராயம் என்ன? நீதான் கணக்கில் புலியாச்சே. அதிலே யாவது சரிபாதி வாய்ப்பு என்று ஒப்புக் கொள்கிறாயா?''

காந்தி தலையை அசைத்தான். ''பத்துமுறை நாண யத்தைச் சுண்டிவிட்டால் பூ விழுவதற்கும் தலை விழு வதற்கும் வாய்ப்பு சரிபாதி என்று யார் வேண்டு மானாலும் ஒப்புக் கொள்வார்கள்.''

''உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கு?'' கிச்சா கேட்டான்.

''நாலணா.''

''ஒவ்வொரு ஐந்து பைசாவாக வைத்து நாமிரு வரும் பூவா தலையா விளையாடுவோமா?''

''வெறும் நாலணாவை வைத்துக் கொண்டா?'' காந்தி வியப்புடன் கேட்டான்.

''என்னோட இந்த வரும்படியெல்லாம் அதிர்ஷ்டத் தினால் வந்ததுன்னு நான் நினைக்கிறேன். நீயோ ஏதேதோ கதைகளைச் சொல்லி அது அதிர்ஷ்டம் இல்லை ஏதோ டிரிக் இருக்குன்னு சொல்கிறாய். உன் கணக்குப் படி பூவா தலையா ஆட்டத்தில் எந்த டிரிக்கும் இருக்காது இல்லையா. நானோ கணக்குப் பாடத்தில் ரொம்ப வீக். என்னுடைய முட்டாள்தனத்தை மற்றொரு முறை நிரூபிக்கலாம்னு நினைக்கிறேன்.''

காந்தியின் மனம் சாயப்பட்டது. கோபமும் ரோஷமும் நிறைந்த குரலில் ''அப்படியே ஆகட்டும்.'' என்றான்.

இருவரும் ஆடத்தொடங்கினார்கள். முதலில் கிச்சா நாணயத்தைச் சுண்டினான். ''பூ'' என்றான் காந்தி.

நாணயம் காற்றில் பறந்து கீழே விழத் தொடங்கியது. மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டு பார்த்தான் காந்தி.

பூ!

காந்தி நிம்மதியாக மூச்சு விட்டுக்கொண்டான். கிச்சா காந்திக்கு ஐந்து பைசா தந்தான். அதுபோலவே தொடர்ந்து வரிசையாக ஐந்து தடவை தந்துகொண்டே இருந்தான். சில வெற்றி தோல்விகளுக்குப் பிறகு அரை மணி நேரத்தில் கிச்சாவிடம் பணம் தீர்ந்துவிட்டது. மேனேஜரிடம் கேட்டு மேலும் பணம் வாங்கிக் கொண்டான். இந்த முறை வெற்றித்திருமகள் அவன் பக்கம் சாய்ந்தாள். ஒரு மணி நேரத்தில் காந்தியின் சட்டைப்பை காலியாகி விட்டது. தன்னிடமிருந்த கடைசி ஐந்து பைசாவையும் தந்துவிட்டு, ''நான் நிறுத்திக் கொள்கிறேன்'' என்றான்.

''ஏன்?''

''என்னிடம் இனி பணம் இல்லை'' என்று எழுந்து கொண்டான். ஐந்து ஆண்டுகளில் நாலணாவை ஐம்பது லட்சமாக்கி விடவேண்டும் என்று நினைத்தான். முதல் நாளே அந்த நாணயத்தையும் இழந்துவிட்டான்.

மெயின் கேட் வரையில் வந்து கிச்சா விடை கொடுத்தான். ''போய் வருகிறேன்'' என்றான் காந்தி. கிச்சா தலையை அசைத்தான். காந்தி கிளம்ப முற்பட்ட போது கிச்சா ''காந்தீ!'' என்று அழைத்தான். காந்தி திரும்பிப் பார்த்தான்.

''பிசினெஸ்க்கு ரொம்ப புத்திசாலித்தனம் தேவையில்லை. அதிபுத்திசாலியாக இருந்தாலும் ஆபத்துதான். எல்லாவற்றையும்விட முக்கியம் அதிர்ஷ்டம் நம்பக்கம் இருப்பது.''

''நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.'' காந்தி நினைத்துக் கொண்டான். வெளிப்படையாக சொல்ல இது தருணம் இல்லை. தோல்வியின் பக்கம் இருந்தான் அவன். தலைகுனிந்தபடி நிதானமாக இருட்டில் நடக்கத் தொடங்கினான்.

ஆளரவமற்ற தெருவைக் கடந்து பிரதான சாலைக்கு வந்தான். நன்றாக இருட்டிவிட்டது. கையில் இருந்த காசும் போய்விட்டது என்று தெரிந்தால் லக்ஷ்மி கடிந்து கொள்வதோடு ஏளனமும் செய்யக் கூடும். அதை நினைத்து வீட்டுக்குப் போக பயந்துகொண்டிருந்தான். புத்தகக் கடை வழியே வந்துகொண்டிருந்தபொழுது ஹாரிகா கையில் பாக்கெட்டுடன் வெளியே வந்து கொண்டிருந்தாள். காந்தி அவள் கண்ணில் பட்டு விடாமல் இருப்பதற்காகச் சட்டென்று காரின் பின்னால் மறைந்துகொள்ளப் போனான். ஆனால் அதற்குள் அவள் அவனைப் பார்த்துவிட்டு, ''ஹலோ!'' என்றாள். ஏனோ தெரியவில்லை. காந்தி சற்றே வெட்கமடைந்தவனாக ''ஹலோ!'' என்றான்.

''எங்கே போறீங்க?''

''வீட்டுக்கு.''

''வாங்க, டீ குடித்துவிட்டுப் போகலாம்.''

அவன் வியப்போடு நிமிர்ந்து பார்த்தான். அவள் அதை மிகச் சாதாரணமாக சொன்னாள் என்றும் அவள் வாழும் சமுதாயத்தில் அது இயல்பான விஷயம் என்றும் உணர்ந்து, ''வேண்டாம் போய் வருகிறேன்'' என்றான்.

''பரவாயில்லை. வாங்க'' என்று காரின் கதவைத் திறந்தாள்.

டிரைவர் காரைக் கிளப்பினான். பத்து நிமிடங்கள் கழித்து விலை உயர்ந்த ஹோட்டலில் அவர்கள் அமர்ந் திருந்தார்கள்.

''எவ்வளவு தூரம் வந்திருக்கு உங்க பந்தயம்?'' ஹாரிகா கேட்டாள். காந்தி நிமிர்ந்து பார்த்தான். அவள் சொன்னாள். ''அன்னிக்கு இண்டர்வ்யுவுக்கு வந்தபோது பந்தயம் கட்டினீங்க இல்லையா, எங்க அப்பாவிடம். எனக்கு வேலை எதுக்கு? ஐந்து ஆண்டுகளில் ஐம்பது லட்சம் சம்பாதிப்பேன் என்று.''

அப்படி என்றால் அந்தக் கிழவர் மகளுக்குப் பந்த யத்தைப் பற்றி முழுவதும் தெரிவிக்கவில்லை போலும். அது புரிந்ததும் அவனுக்கு நிம்மதியாக இருந்தது. அது வரையிலும் இருந்த கூச்சம் விலகிவிட்டது. எந்தத் தந்தைதான் 'உன்னை ஐம்பது லட்சத்திற்குப் பந்தயம் வைத்திருக்கிறேன்' என்று மகளிடம் சொல்லுவார்?

ஒருகால் அதிர்ஷ்டம் கைகூடி தான் அந்தப் பணத்தைச் சம்பாதித்து விட்டால் அன்று அவர் முகம் எப்படி இருக்குமோ பார்க்க வேண்டும். மகளிடம் என்னவென்று சொல்லுவார்? இந்தப் பெண் சம்மதிப்

பாளா? அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஐம்பது லட்சம் தான் சம்பாதிக்க வேண்டுமே ஒழிய பிறகு சம்மதிப்பதும் சம்மதிக்காமல் இருப்பதும் வேறு விஷயம்.

மேலே இருந்து விழும் விளக்கு வெளிச்சத்தில் அவள் சிவந்த இதழ்கள் மேலும் சிவப்பாக தென்பட்டன. அவள் முகத்தில் அழகைவிட அடக்கத்தோடு கூடிய கம்பீரம் குடிகொண்டிருந்தது. அவள் இதழ்களில் குறுநகை படர்ந்ததைக் கவனித்து, ''என்ன விஷயம்? ஏன் சிரிக்கிறீங்க?'' என்று கேட்டான்.

''ஒன்றும் இல்லை. உங்க பந்தயம் எதுவரைக்கும் வந்திருக்கு?'' மறுபடியும் கேட்டாள்.

''நானும் என் பார்ட்னரும் சேர்ந்து ஆளுக்கு பாதி நஷ்டப்பட்டு விட்டோம். எந்த வியாபாரத்திலும் முதல் முதலில் நஷ்டம்தான் வரும் என்று நினைக்கிறேன்.'' விட்டுக் கொடுக்காமல் சொன்னான்.

''உங்க பார்ட்னர் யாரு?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''ஒரு பிச்சைக்காரி. கோவில் படியில் உட்கார்ந் திருப்பாள். நாலணா முதலீடு அவளுடையதுதான்.''

''ரொம்ப சுவாரசியமான ஆள்தான் நீங்க'' என்றாள் அவள்.

அவன் பதில் சொல்லவில்லை.

''அந்த நாலணாவை எப்படித் தோற்றீங்க?'' அவள் கேட்டாள்.

அவன் விவரமாகச் சொன்னான். ''வியாபாரத்தில் எல்லாமே அதிர்ஷ்டம்தானாம். புத்திசாலித்தனத்திற்குப் பங்கே இல்லையாம். இதை மட்டும் என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. இன்று அவன் ஜெயித்திருக்கலாம். அது வேறு விஷயம்.''

''ஒரு நாணயத்தை பத்து முறை சுண்டினால் ஐந்து முறை பூவும் ஐந்துமுறை தலையும் விழும் என்று தியரி ஆஃப் ப்ரொபபிலிடீ சொல்லுது இல்லையா.''

ஆமாம் என்பதுபோல் பார்த்தான் காந்தி.

''ஆனால் முதல்தடவை பூ இரண்டாவது தடவை தலை இப்படி வரிசையாக மாறி மாறி விழவேண்டும் என்பது இல்லையே. அந்த தியரியின்படி பூ விழுவதற்கும் தலை விழுவதற்கும் சரி பாதி வாய்ப்பு இருக்கு அவ்வளவுதான்.''

அதற்கும் தலையை அசைத்தான் அவன்.

''வரிசையாக பூ விழுந்து நீங்க ஜெயித்துக் கொண்டு இருந்தபோது அவன் மேனேஜரிடமிருந்து பணம் வர வழைத்தான். ஆனால் அவன் ஜெயிக்கத் தொடங்கிய போது முதலீடு செய்ய உங்களிடம் பணம் இல்லை. அம்யூஸ்மெண்ட் பார்க்கின் தியரியே அதுதான். எந்த ஸ்டேஜ்லும் நீங்கதான் ஆட்டத்தை விட்டு வெளியேற வேண்டுமே தவிர பார்க் மேனேஜ்மெண்ட் ஆட்டத்தைத் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். நீங்க எப்பொழுது வெளியேறுவீங்க? முற்றிலும் பணத்தை இழந்தபிறகு.'' அவள் சிரித்தாள். ''அந்த ஸ்டேஜ் எப்பொழுதாவது

வராமல் போகாது. அதுவரை அவன் ஆடிக்கொண்டே இருப்பான்.'' ஹாரிகா பில்லுக்கு உரிய பணத்தை ட்ரேயில் போட்டுவிட்டுச் சொன்னாள். ''அதனால்தான் அம்யூஸ்மெண்ட் பார்க்கில் எல்லோரும் பணத்தை இழந்துகொண்டு இருக்காங்க. நீங்களும் போய் அதே வலையில் விழுந்திருக்கீங்க.''

அவன் வாயடைத்துப் போனவனாக பார்த்தான். அவள் எழுந்துகொண்டே சொன்னாள். ''வியாபாரத்தில் எதிராளியின் பலத்தை, திறமையை எப்போதும் குறைவாக மதிப்பிடக் கூடாது.''

''அது மட்டும் இல்லை. தன்னைவிட பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்தவனைக் கூட வியாபாரத்தில் எதிர்த்து நிற்கக் கூடாது.'' மனதில் நினைத்துக் கொண்டான் காந்தி.

இருவரும் வெளியே வந்தார்கள்.

''உங்க வீடு எங்கே?''

அவன் கலவரமடைந்தான். ''இங்கேதான், ரொம்ப அருகில். நடந்தே போகிறேன்'' என்றான். வீட்டின் அருகில் கார் போகாது. ஒரே சேறு.

அவள் காரில் ஏறி அமர்ந்துகொண்டாள். ''நீங்க உங்க முதலீட்டை மறுபடியும் எப்படி சம்பாதிக்கப் போறீங்க?'' என்று கேட்டாள்.

''ஆமாம். எப்படி சம்பாதிப்பது?''

''என்னையே கேட்கிறீங்களா?'' என்றாள் அவள் கலகலவென்று சிரித்துக்கொண்டே, ''ஐம்பது லட்சம்

சம்பாதிக்க வேண்டிய ஆள் கேட்க வேண்டிய கேள்வியா இது?'' என்றவள் அவன் முகம் சிவந்ததைப் பார்த்து விட்டு மன்னிப்பு கேட்கும் தோரணையில் ''சாரி'' என்றாள்.

''இட்ஸால் ரைட்.''

''யோசனை கூற என்னால் முடியாதே தவிர ஒரு ஆங்கில பழமொழி நினைவுக்கு வருகிறது.''

''என்ன?''

டிரைவர் காரைக் கிளப்பிக் கொண்டிருக்கும்போது அவள் சொன்னாள். ''இழந்த இடத்திலேயே பணத்தைத் தேடிக் கொள்ளணும்.''

அவன் அப்படியே சலனமற்று நின்றிருந்தான். கார் இருளில் மறைந்துவிட்டது.

★ ★ ★

காந்தி மறுபடியும் அம்யூஸ்மெண்ட் பார்க்கிற்குப் போனபொழுது ஒன்பதரை மணி ஆகியிருந்தது. கடைகளை மூடிக்கொண்டிருந்தார்கள். கிச்சா அவனைப் பார்த்து வியப்புடன் ''என்ன? இப்போ வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''உன்னிடம் தோற்றுப் போனபிறகு என் மூளை முன்போல் வேலை செய்யவில்லையோ என்ற சந்தேகம் வந்துவிட்டது. பழையபடி கணக்குப் போடமுடியுமா முடியாதா என்று சோதித்துக் கொள்ள வந்தேன். நீ ஒரு எண்ணை மனதில் நினைத்துக்கொள்'' என்றான்.

''நினைத்துக் கொண்டேன்.'' அவன் ஐந்து என்ற எண்ணை நினைத்துக் கொண்டான்.

''அதை இரண்டால் பெருக்கு.''

''பெருக்கிட்டேன்.''

''அத்துடன் இரண்டைக் கூட்டு.''

''கூட்டினேன்.''

''எத்தனை?''

''பன்னிரெண்டு.''

''நீ நினைத்த எண் ஐந்து.''

''இதுதான் உன் புத்தியைச் சோதித்துக் கொள்வதா? கணக்குப் போடத் தெரியாத முட்டாள் என்று என்னை சொல்வீங்களே. என்னாலேயே இந்தக் கணக்கை போட முடியும்.''

''என்னை மாதிரி போடமுடியாதுன்னு நினைக்கிறேன். அதற்கு ரொம்ப புத்திசாலித்தனம் தேவை'' என்றான் காந்தி.

''பந்தயம்!''

''எவ்வளவு?''

''ஒரு ரூபாய்.''

''சரி.''

''நீ ஒரு எண்ணை நினைத்துக் கொள்.'' என்றான் கிச்சா. ''அதனை இரண்டால் பெருக்கி அத்துடன் இரண்டைக் கூட்டு. எவ்வளவு என்று சொல்லு.''

''ஒரு கோடியே பதினாலு லட்சத்து நாலாயிரத்து முப்பத்தி இரண்டு.''

கிச்சாவின் முகம் வெளிறிவிட்டது. ''இத்தனை பெரிய எண்ணா?'' என்று பேப்பரையும் பேனாவையும் எடுக்கப் போனான். காந்தி ஆட்சேபணை தெரிவித்து விட்டு ''என்னைப் போல் வாயாலேயே கணக்குப் போட்டு விடை சொல்லணும். அதுதான் பந்தயம்'' என்றான்.

கொஞ்ச நேரம் விவாதம் புரிந்த பிறகு கிச்சா தோல்வியை ஒப்புக்கொண்டு ஒரு ரூபாயைத் தந்துவிட்டான்.

''இப்போ பூவா தலையா விளையாடலாமா?'' காந்தி கேட்டான்.

''மறுபடியுமா?'' கிச்சா சிரித்தான்.

''ஆமாம்.''

''சரி.''

''இந்த முறை வேறு மாதிரி ஆடலாம். எல்லா தடவையும் நீயே நாணயத்தை வீசு. நான் பூவா தலையா சொல்லுவேன். சரியாக அரைமணி நேரம் ஆடணும். அதற்கு முன்னாடி நிறுத்தவும் கூடாது. அதிக நேரமும் ஆடக்கூடாது. ஓ.கேவா?'' காந்தி கேட்டான்.

''ஓ.கே.''

கிச்சா நாணயத்தை உயரே தூக்கிப் போட்டான். பூ விழுந்தது. காந்திக்கு ஐந்து பைசா நஷ்டம். மறுபடியும் நாணயம் சுண்டப்பட்டது. இந்தமுறை காந்திக்கு பத்து

பைசா இழப்பு. மூன்றாவது முறை காந்தி இருபது பைசாவை பந்தயமாக வைத்துவிட்டு ''பூ'' என்றான்.

பூ விழுந்தது. கிச்சா காந்திக்கு நாற்பது காசுகளைத் தந்தான். அதுவரையில் முதலீடு முப்பத்தி ஐந்து காசுகள் போக காந்திக்கு ஐந்து பைசா லாபம் வந்தது.

காந்தியின் தந்திரம் கிச்சாவுக்கு பத்து நிமிடங் களுக்குப் பிறகுதான் புரிந்தது. அதற்குள் காந்தி ஐந்து ரூபாய் ஜெயித்து விட்டிருந்தான். சரியாக அரைமணி நேரம் ஆனபிறகு நூறு ரூபாய் லாபம் வந்தது. கிச்சாவின் முகம் விளக்கெண்ணை குடித்தவன் போல் மாறியது.

காந்தி பணத்துடன் எழுந்துகொண்டே சொன்னான். ''வியாபாரத்தில் அதிர்ஷ்டம்தான் முக்கியம்னு நினைக் காதே. திறமையும் வேண்டும்.''

இரவு பதினோரு மணி ஆகும்போது காந்தி அந்த இடத்தை விட்டு வெளியே வந்தான். அவன் கையில் நூறு ரூபாய் நோட்டு பளபளத்துக் கொண்டிருந்தது.

★ ★ ★

அவன் எதிர்பாத்த அளவுக்கு லக்ஷ்மியின் முகத்தில் மகிழ்ச்சி தென்படவில்லை. ''வாழ்த்துக்கள்.'' ஒரே வார்த்தை சொல்லிவிட்டு பேசாமல் இருந்தாள். காந்தி வியப்புடன் ''நாலணாவை எட்டணாவாக மாற்றுவதாக சொல்லிவிட்டுப் போன நான் நூறு ரூபாயுடன் திரும்பி வந்தால் ரொம்ப சாதாரணமாக வாழ்த்துக்களைச் சொல் கிறாயே?'' என்றான்.

அவள் மௌனமாக இருந்தாள்.

''உனக்கு சந்தோஷமாக இல்லையா? இது நம் முதல் வெற்றி.''

அவள் மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ''இதை வெற்றி என்றா சொல்கிறாய்?''

அதிர்ச்சி அடைந்தவன் போல் பார்த்துவிட்டு ''பின்னே இல்லையா?'' என்றான். உண்மையிலேயே அவள் கேள்வி அவனுக்குப் புரியவில்லை.

அவள் கேட்டாள். ''உன்னை விட முட்டாளை உன் புத்திசாலித்தனத்தால் ஏமாற்றுவதுதான் வெற்றியா?''

''இதில் ஏமாற்றுவேலை என்ன இருக்கு? இருவருமாக ஆடினோம். அவன் தோற்றுவிட்டான்.''

''ஆனால் நியாயத்திற்கு உட்பட்டு பணம் சம்பாதிக்கப் போவதாக சொன்னாய்.''

''அப்படித்தான் சம்பாதித்தேன். நான் ஒன்றும் கொலையோ கொள்ளையோ செய்யவில்லையே?''

''நாணயத்தைச் சுண்டிவிட்டு பூவா தலையா என்று பந்தயம் கட்டுவது நியாய விரோதம்.''

''இது நியாயத்திற்கு உட்பட்டதுதான். இல்லை என்று எப்படிச் சொல்கிறாய்?''

அவளுடைய கோபம் கட்டுக்குள் அடங்காமல் போயிற்று. ''காண்ட்ராக்ட் ஆக்ட் பற்றி தெரியாதது போல் நடிக்காதே காந்தி. Sec. 30 of the CONTRACT ACT lays down that all agreement by way of WAGER ARE VOID."

காந்தி முறுவலித்தான். அவள் கோபத்தைப் பார்க்கும் போது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. ''நீதான் சட்டம் படிக்கவில்லையே, உனக்கு எப்படி இந்த விஷயம் தெரிந்தது?''

''என் கேள்விக்கு பதில் இது இல்லை.''

''சொல்கிறேன் கேட்டுக் கொள். இந்தியாவில் வேகரிங் காண்ட்ராக்ட் சட்டத்திற்கு புறம்பானது அல்ல. செக்ஷன் 294A பீனஸ் கோட் பிரகாரம் சிலது மட்டுமே தண்டனைக்கு உரியவை. டாஸ் போட்டு பந்தயம் கட்டுவது சட்ட விரோதமில்லை. Illegal is different from immoral. இதில் ஏமாற்று வேலை எதுவும் இல்லை.''

லக்ஷ்மி மேற்கொண்டு வாதம் புரியவில்லை. மனதில் மட்டும் நினைத்துக் கொண்டாள். ''காந்தி! உண்மையிலேயே நீ உன் மனச்சாட்சியை ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய்.''

4

மறுநாள் மாலை அவன் பத்திரிகை அலுவலகத்திற்குப் போய் விளம்பர மேனேஜரைச் சந்தித்தான். ''நான் ஒரு விளம்பரம் தர விரும்புகிறேன், முதல் பக்கத்தில்.''

''எவ்வளவு இடம் தேவை?''

''ஆறு செ.மீ. டபிள்காலம்.''

''எத்தனை நாள்?''

''தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு.''

மேனேஜர் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு எவ்வளவு ஆகும் என்று சொன்னார்.

''என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. நூறு ரூபாய்க்கு எவ்வளவு இடம் ஒதுக்க முடியுமோ போடுங்கள் போதும்.''

''சரி. மேட்டரை எழுதிக் கொடுங்கள்.''

காந்தி எழுதினான். நாலே வரிகள். சிறிய தலைப்பு எழுதி மேனேஜர் முன்னால் நீட்டினான். மேனேஜர் அதை வாங்கிப் படித்தார். படித்து முடித்ததும் அவர் முகத்தில் மாறுதல் தென்பட்டது. ஆர்வத்துடன் காந்தியைப் பார்த்தார்.

''என்ன இது?''

''விளம்பரம்.''

''அது இல்லை நான் கேட்டது. இதன் விளக்கம்.''

''பத்திரிகையில் விளம்பரம் தரும்போது அதற்கு விளக்கமும் சொல்லணுமோ?''

''தேவையில்லை. வித்தியாசமாக இருந்ததால் கேட்டேன்.''

காந்தி பணத்தைக் கட்டிவிட்டு ரசீது பெற்றுக் கொண்டு எழுந்து வரும்போது மேனேஜர் மறுபடியும் அழைத்தார். ''நீங்க ஒப்புக் கொண்டால் நானும் உங்களோடு சேருகிறேன்.''

காந்திக்குப் புரியவில்லை. ''எப்படி?''

''நீங்க ஐந்து நாட்கள் தொடர்ந்து இந்த விளம்பரம் கொடுங்கள். குறையும் தொகையை நான் கடனாக தருகிறேன். இந்த விளம்பரம் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் ஆதாயத்தில் எனக்கு பத்து பர்சண்ட் கமிஷன் கொடுங்கள்'' என்றார்.

இவ்வளவு நல்ல வாய்ப்பு கிடைக்கும் என்று காந்தி எதிர்பார்க்கவில்லை. மகிழ்ச்சியுடன் உடனே சரியென்று சொல்லப்போனான். அதற்குள் லக்ஷ்மி சொன்னது நினைவுக்கு வந்தது. 'அவசரப்பட்டு பிசினெஸில் யாருக்கும் வாக்குக் கொடுத்துவிடாதே.'

''பார்ப்போம். முதலில் இந்த விளம்பரத்திற்கு வரும் ரெஸ்பான்ஸை பார்த்துவிட்டு பிறகு யோசிப்போம்.'' என்று நகர்ந்தான்.

அடுத்தநாள் நாளேட்டில் வலது பக்க மூலையில் சிறிய எழுத்துகளில் அந்த விளம்பரம் வெளியாகி யிருந்தது.

'பணம் சம்பாதிப்பது உங்கள் நோக்கமா?'

மிகக் குறைந்த அளவு முதலீடு செய்து, முதலீடு செய்யாமல் கூட லட்சம் லட்சமாக சம்பாதிக்கலாம். கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்தால் போதும். உங்களுக்கு உதவி செய்யவே நாங்கள் இருக்கிறோம். உடனே தொடர்பு கொள்ளுங்கள். பாக்ஸ் நம்பர் 1806.

★ ★ ★

இந்த விளம்பரம் வந்த அன்று மாலையே காந்தியின் குடிசை வாசலில் போலீஸ் வேன் வந்து நின்றது.

நாட்டில் மிகத் திறமையாக, சகலவிதமான பந்தோ பஸ்துடன் இயங்கி வந்த ஒரு ரவுடி கும்பலின் தலைவன் ராம்தீர்த். ஒரு காலத்தில் இன்ஜினியரிங் பட்டதாரி. வேலையில்லாத பட்டதாரியாக பல வருடங்கள் இருந் ததில் விரக்தி அடைந்துவிட்டான். சின்னச் சின்ன மோசடி வேலைகள் செய்து வந்தான். விரைவில் அவனைச் சுற்றி ஒரு கும்பல் சேர்ந்து விட்டது. திறமை சாலிகள் மட்டுமே அவனுடைய கும்பலில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். வழக்கமான திருட்டு, கொள்ளை என்று இல்லாமல் சாமர்த்தியமாக மக்களை ஏமாற்று வது அவனுக்குக் கைவந்த கலை. அரபு நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பல லட்சங்களை சுருட்டிக் கொண்டான். போலீஸார் வலை வீசி தேடியும்

அவனைப் பிடிக்க முடியவில்லை. இன்ஸ்பெக்டர் அவினாஷிடம் அந்த கேஸ் ஒப்படைக்கப்பட்டது.

வீட்டிற்கு முன்னால் வந்து நின்றதை முதலில் பார்த்தவள் லக்ஷ்மிதான். அவள் கல்லாகச் சமைந்து விட்டாள். அதற்குள் காந்தியும் வெளியே வந்துவிட்டான். வேனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர் லத்தீஃப் இறங்கினார். ''இங்கே காந்தி என்பவர் யாரு?'' என்று கேட்டார்.

''நான்தான்.''

''வேனில் ஏறு.''

காந்தி வியப்புடன் ''ஏன்'' என்று கேட்டான்.

''பணம் சம்பாதிக்க வழி சொல்லித் தருவதாக பேப்பரில் விளம்பரம் கொடுத்தது நீதானே?''

''ஆமாம்'' என்றான் காந்தி. அதற்குள் லக்ஷ்மி ஏதோ சொல்ல வந்தாள். காந்தி அவளைத் தடுத்துவிட்டு ''பேப்பரில் விளம்பரம் தருவது சட்ட விரோதம் இல்லையே'' என்றான்.

சப் இன்ஸ்பெக்டர் அவன் தோள்களைப் பற்றி ''எது சட்டம்? எது சட்ட விரோதம் என்று எங்களுக்கே சொல்ல வந்துவிட்டாயா ராஸ்கெல்!'' என்று தள்ளினார்.

''ஐயோ!'' என்றபடி காந்தி முன்னால் விழுந்தான்.

லக்ஷ்மி ஓடி வந்தாள். அதற்குள் அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களும், அக்கம் பக்கத்துக் குடிசைக்காரர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள்.

காந்தி வேனில் ஏறினான். ''நானும் வருகிறேன். என்னையும் அழைத்துப போங்கள்'' என்றாள் லக்ஷ்மி. காந்தி திடுக்கிட்டு ''வேண்டாம்... வேண்டாம்'' என்றான். அதற்குள் டிரைவர் ஸ்டார்ட் செய்துவிட்டதால் வேன் புறப்பட்டது.

சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான் காந்தி. வண்டியின் குலுக்கலுக்கு அவன் உடல் தூக்கிப் போட்டது. அப்படியே யோசனையில் ஆழ்ந்தான்.

என்ன வேடிக்கை! நியாயத்திற்கு உட்பட்டு பணம் சம்பாதிப்பதாக பந்தயம் கட்டிவிட்டு முதல் முயற்சியிலேயே காவல் நிலையத்திற்குப் போகிறான். அவனை அறியாமலேயே சிரிப்பு வந்தது. கண்களை மூடி தனக்குள் சிரித்துக் கொண்டான். கண்களை மூடிக் கொள்ளாமல் இருந்திருந்தால் அந்தக் குறுகலான சந்துக்கு வெளியே நின்றுகொண்டிருந்த ஹாரிகாவின் கார் அவன் பார்வையில் பட்டிருக்கும்.

★ ★ ★

''அங்கே யாருமில்லையாம் சின்னம்மா.'' டிரைவர் போய் தேடிவிட்டு கார் அருகில் திரும்பி வந்தார். ''இதுக்கு மேல் கார் முன்னால் போகாது.''

ஹாரிகா அட்ரெஸ் இருந்த காகிதத்தைப் பிடித்தபடி இறங்கினாள். காந்தி மறுபடியும் தன் பணத்தை எப்படி சம்பாதிப்பான் என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் இவ்வளவு தூரம் வந்தாள். அவன் கண்டிப்பாக ஏதோ

ஒரு விதத்தில் அந்தப் பணத்தைத் திரும்பவும் ஜெயிப்பான் என்று அவள் உள்மனம் உணர்த்தியது.

புடவையின் கரை சேற்றில் புரண்டது. காந்தியைத் தேடிக்கொண்டே சென்றாள். பணக்காரப் பெண் ஒருத்தி தங்கள் இருப்பிடத்திற்கு வந்ததைக் கண்டு சேரி மக்கள் வினோதமாகப் பார்த்தார்கள்.

வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தவள் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் சொன்னதைக் கேட்டு அப்படியே நின்றுவிட்டாள்.

''போலீஸ் வேன் வந்து அவனைப் பிடிச்சுக் கொண்டு போயிடுச்சு. எதுக்கு எதுக்குன்னு அவன் அலற அலற கேட்காமல் அவங்க கொண்டு போயிட்டாங்க. பின்னாலேயே லக்ஷ்மியும் போயிட்டா.''

அவள் முழுவதும் கேட்டுக்கொள்ளவில்லை. விடு விடு என்று காரில் ஏறிக்கொண்டு வீட்டுக்கு ஓட்டச் சொன்னாள். அவள் மனதில் பலவிதமான எண்ணங்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. சந்தேகத்தின் பெயரில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படும் நபருக்கு அங்கே எந்தவிதமான ட்ரீட்மெண்ட் கிடைக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

அவள் நினைத்தது போலவே லத்தீஃப் காந்தியின் மீது தர்ட்டி த்ரி பயன்படுத்தத் தயாராக இருந்தார்.

''சொல்லு. ராம்தீர்த்துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''ராம்தீர்த் யாரு? அதை முதலில் சொல்லுங்க.'' லாட்டி காந்தியின் முகத்தின் மீது பட்டது. பற்களை கடித்துக் கொண்டு வலியைப் பொறுத்துக் கொண்டான்.

★ ★ ★

கார் வீட்டை நெருங்கியதுமே ஹாரிகா இறங்கி வேகமாக உள்ளே நுழைந்தாள். இரண்டே நிமிடங்களில் தன்னுடைய டைரியைத் தேடி எடுத்தாள்.

அங்கே லத்தீஃப் காந்தியின் பிடரியை பிடித்துக் கொண்டு மேலே தூக்கி விசாரித்தார். ''லட்சம் லட்சமாக சம்பாதிப்பது எப்படி? அதுவும் சுலபமாக சம்பாதிப்பது எப்படி? சொல்லு'' அவர் கைவிரல்கள் காந்தியின் தோளில் அழுத்தமாக படிந்தன.

ஹாரிகாவுக்குத் தேவையான நம்பர் கிடைத்தது. டயலைச் சுழற்றினாள். அரை நிமிடத்திற்குப் பிறகு மறு முனையில் ரிசீவரை எடுத்த ஓசை. ''ஹலோ!'' என்று குரல் கேட்டது.

''சீனிவாசன் சார் இருக்காரா?'' என்று கேட்டாள். சீனிவாசன் ஹோம் மினிஸ்டரின் பெயர்.

ஹோம் மினிஸ்டரின் பி.ஏ. மறு முனையில் ''மினிஸ்டர் ஊரில் இல்லை. நீங்க யாரு?'' என்று கேட்டார்.

''ஹாரிகா, ராஜாராமின் மகள்.''

''குட் ஈவினிங் மேடம். மினிஸ்டர் ஊரில் இல்லை.'' பி.ஏ. சொன்னார்.

ஹாரிகா அமைச்சருக்கு வளர்ப்பு மகள் போன்றவள் என்று அவருக்குத் தெரியும். எனவே அவர் குரலில் தேவையான பணிவும், மரியாதையும் வெளிப்பட்டன.

''எனக்கு அவசரமாக ஒரு காரியத்தை முடித்துத் தரணும்.''

''சொல்லுங்க மேடம்.''

''ஐந்து நிமிடங்களுக்கு முன்னாஸ் காந்தி என்ற இளைஞனை போலீசார் பிடித்துச் சென்று இருக்கிறார்கள். எந்த போலீஸ் ஸ்டேஷன் என்று தெரியாது. பிடித்துச் சென்ற காரணமும் தெரியாது. அவரை எதற்காகப் பிடித்துக் கொண்டு போனார்கள்? இப்போ எங்கே இருக்கிறார் என்று எனக்கு உடனே தெரிய வேண்டும். அவர் மீது தர்ட்டித்ரி பயன்படுத்தாமல் பார்த்துக் கொள்ளணும்.'' அவள் என்னதான் நிதானமாக சொல்ல முயன்றாலும் குரலில் அவசரம் தெரிந்தது.

மறுமுனையில் பி.ஏ. கொஞ்சம் தடுமாறினார். ''எந்த காவல் நிலையம் என்று தெரியாமல்....'' மேற் கொண்டு சொல்லப்போனவரை இடைமறித்தாள். ''அது தெரியாமல் தானே உங்களுக்கு போன் செய்தேன். தெரிந்திருந்தால் அந்த போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ் பெக்டருக்கு நேராக போன் செய்திருப்பேனே'' என்றாள்.

''சரி மேடம்! மறுபடியும் போன் செய்கிறேன்.'' பி.ஏ. ரிசிவரை வைத்துவிட்டார்.

ஹாரிகா நாற்காலியில் சரிந்தபடி உட்கார்ந்திருந் தாள்.

அதேநேரம் லக்ஷ்மி காவல் நிலையத்தில் அவினாஷுடன் வாதம் புரிந்துகொண்டிருந்தாள். ''அவன் அப்படிப்பட்ட ஆள் இல்லை சார். எனக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமானால் நான் ஜாமீன் தருகிறேன்.''

அவினாஷுக்குச் சிரிப்பு வந்தது. கிழிசல் ஆடையுடன் இருக்கும் இந்தப் பெண் ஜாமீன் தருவதாகச் சொல்கிறாளே? அவர் உள்ளே எட்டிப் பார்த்தார். லத்தீஃப் காந்தியை வற்புறுத்திக் கொண்டிருந்தார். காந்தியின் முகத்தில் துன்பத்தின் சாயல் தெரிந்தது.

அவினாஷ் லக்ஷ்மியின் பக்கம் திரும்பினார். ''பத்திரிகையில் வெளியாகியிருக்கிறதே ஒரு விளம்பரம் அதற்கு என்ன அர்த்தம்? அதைச் சொன்னால் போதும் விட்டுவிடுகிறேன்'' என்றார்.

''எனக்கும் தெரியாது. ஆனால் ஒன்று மட்டுமே நிச்சயம். காந்தி சட்டத்திற்குப் புறம்பாக எதையும் செய்யமாட்டான். அது மட்டும் உண்மை. சட்டத்தையும் அதன் கோட்பாடுகளையும் நாங்கள் இருவரும் நம்புகிறோம்.''

அவள் பேசும் தோரணையைக் கண்டு வியப்படைந்த இன்ஸ்பெக்டர், ''என்ன படித்திருக்கிறாய்?'' என்று கேட்டார்.

லக்ஷ்மி தலைகுனிந்தபடி, ''படிப்புக்கும், எங்கள் நிலைமைக்கும் சம்பந்தம் இல்லை இன்ஸ்பெக்டர் சார். நாங்க இருவருமே பட்டதாரிகள்'' என்றாள்.

அவர் அவளை ஒருமுறை கூர்ந்து பார்த்துவிட்டு, ''உன்னை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன்'' என்றார்.

இந்த முறை அவள் வெட்கப்படவில்லை. தலை குனிந்தபடியே, ''நான் உங்கள் வீட்டில் துணி தோய்க்கும் வேலைக்காரி'' என்றாள்.

ஒரு வினாடி அதிர்ச்சியடைந்தவர் அப்படியே நின்றுவிட்டார்.

அதற்குள் உள்ளே இருந்து காந்தியின் குரல் ''அம்மா!'' என்று இதயத்தைக் கசக்கிப் பிழியும் விதமாக கேட்கவே அவினாஷ் சட்டென்று உள்ளே எட்டிப் பார்த்து, ''ஸ்டாப் இட்!'' என்றார்.

அதே சமயம் ஹோம் மினிஸ்டரின் பி.ஏ.விடமிருந்து ஹாரிகாவுக்கு போன் வந்தது. ''நிறைய ஸ்டேஷன்களில் விசாரித்து விட்டோம் மேடம். எங்கேயும் கிடைக்கவில்லை. மேலும் விசாரித்துக் கொண்டிருக்கிறோம்'' என்றார்.

அவள் கலவரத்துடன், ''சீக்கிரமாக கண்டுபிடியுங்கள்'' என்றாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவளுக்கு மறுபடியும் போன் வந்தது. அவள் பரபரப்புடன் ரிசீவரை எடுத்து ''தகவல் கிடைத்ததா? எந்த ஸ்டேஷன்?'' என்று கேட்டாள்.

''கிடைத்துவிட்டது. ஆனால்...''

''ஊம் ஆனால்?'' ஹாரிகாவின் குரல் பரபரப்புடன் ஒலித்தது.

''அவங்களை விட்டுவிட்டார்களாம்.''

★ ★ ★

காந்தி கொடுத்த விளம்பரத்திற்கு நான்கு கடிதங்கள் வந்தன. அதைவிட அதிகமாக வருமென்று அவனும் எதிர்பார்க்கவில்லை.

''என்ன பிளான் செய்ல்லப் போகிறாய் அவர் களுக்கு?'' லக்ஷ்மி கேட்டாள்.

காந்தி முறுவலித்தான். ''எனக்கும் தெரியாது. அவர் களுடைய புத்திசாலித்தனம், அவர்களிடம் இருக்கும் பணம், அதைப் பொறுத்துத்தான் நான் சொல்லப் போகிற திட்டமும் இருக்கும்'' என்றான்.

''பணமே இல்லாமல் வெறும் புத்திசாலித்தனம் மட்டுமே இருக்கிறவன், இந்த நால்வருக்குள் ஒருவனாக இருந்தால் அவனுக்கு என்ன சொல்லப் போகிறாய்?''

காந்தி கூர்மையாகப் பார்த்தான். ''இந்தக் கேள்வியை ஏன் கேட்கிறாய் என்று புரிகிறது. அவனுக்குச் சொல்லப் போகிற பிளான் என்னவோ நீயே பயன்படுத்தி அந்தப் பணத்தை நீயே சம்பாதித்துக் கொள்ளலாம் இல்லையா என்றுதானே கேட்கிறாய்?''

லக்ஷ்மி முறுவலுடன் ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள்.

''நான் நியாயத்திற்குட்பட்டு சம்பாதிக்கும் திட்டங் களைச் சொல்லப் போவதில்லை. நியாயத்திற்குப் புறம் பாக ஒரு வேலையைச் செய்யச் சொல்லி யோசனை வழங்குவது நியாயவிரோதமாகாது'' என்றான்.

அவள் வியந்துபோய் அவனை நோக்கினாள்.

''ஆமாம். நான் சொல்லப்போகிற திட்டங்களால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு நான் பொறுப்பாளி யில்லைன்னு அவர்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை தந்துவிட்டு அதற்குப் பிறகுதான் அந்தத் திட்டங்களைச் சொல்லுவேன்.''

''இது அநியாயம்'' என்றள் லக்ஷ்மி.

அவன் திடீரென்று ஆவேசம் கலந்த குரலில் ''நியா யத்துக்கும் அநியாயத்துக்கும் வித்தியாசம் ஒரே ஒரு எழுத்துத்தான். உண்மையில் நியாயம் என்றால் எது? சமத்துவம் ஏற்படுத்துகிறோம் என்ற பெயரில் அரசாங் கமே லாட்டரிச் சீட்டை நடத்துவது நியாயமா? வயிற்றுப் பிழைப்புக்காக விபச்சாரம் செய்தால் ஜெயிலில் போடும் சட்டம், பணக்காரன் கேளிக்கை விடுதிகளை நடத் தினால் லைசென்ஸ் வழங்குவது நியாயமா? எது நியாயம் எது அநியாயம்னு இந்த அரசாங்கத்திற்கே தெரியவில்லை. அப்படி இருக்கும்போது நான் எந்த மூலை?''

லக்ஷ்மி அவனை வியப்புடன் பார்த்தாள். ''உனக்குக் கூட இத்தனை ஆவேசம் வருமென்று இப்பொழுதுதான் தெரிகிறது'' என்றாள்.

''முன்பு இல்லை. இப்பொழுதுதான் ஏற்பட்டு இருக்கிறது'' என்றான். ''ராஜாராம் ஒரு தவறு செய்து விட்டார். பந்தயம் ஜெயித்தால் எனக்குக் கிடைக்கப் போகும் பரிசு பற்றிச் சொன்னாரே தவிர தோற்றுப் போனால் என்ன தண்டனை என்று சொல்லவில்லை.''

''ஆமாம். அதைப்பற்றி கேட்கவே மறந்துவிட்டேன். அதென்ன பரிசு?'' லக்ஷ்மி கேட்டாள்.

காந்தி ஒரு நிமிடம் மௌனமாக யோசித்தான். எதுக்காக மறைத்து வைக்கணும்? அவன் நிமிர்ந்து ''ராஜாராமின் மகள்'' என்று ஏதோ சொல்லப் போனவன் வாசலில் சந்தடி கேட்டுத் திரும்பினான்.

ஆஸ்பத்திரி வார்ட்பாய் உள்ளே வந்துகொண்டே, ''குட்மார்னிங் சார். இங்கேதான் இருக்கீங்களா? எங்க வீடும் இங்கேயே பின்னால்தான் இருக்கு. நேற்று மாலையில் உங்களைப் பார்த்தேன்'' என்றான்.

★ ★ ★

அன்று மாலை காந்தி தன்னுடைய பழைய நண்பன் ராகவனை பார்க்கப் போனான். ராகவன் கல்லூரியில் அவனுக்கு சீனியர். பிறகு சி.ஏ. முடித்துவிட்டு பிராக்டீஸ் செய்துவந்தான்.

பரஸ்பரம் குசலம் விசாரித்த பிறகு காந்தி தான் வந்த காரியத்தைச் சொன்னான். ''ஐந்து வருடங்களில் ஒரு கோடி ரூபாய் சம்பாதிக்கணும். அதுக்கு டாக்ஸ் எவ்வளவு வருமோ சொல்லு.''

ராகவன் சிரித்துவிட்டு, ''இதென்ன கேள்வி? அம்புலி மாமாவுக்கு ஏதாவது கதை எழுதுகிறாயா என்ன?'' என்றான்.

''இல்லை. சீரியஸாகத்தான் கேட்கிறேன். சொல்லு'' என்று பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டான்.

''இப்படி மொட்டையாக கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியாது. என்ன பிசினெஸ்? எவ்வளவு பேர் பார்ட்னர்ஸ்? ஆண்டு வருமானம் எவ்வளவு? முதலீடு எவ்வளவு?''

''முதலீடு நாலணா'' காந்தி சொன்னான்.

''வாட்!''

''ஆமாம், வெறும் நாலணா. இரண்டு பார்ட்னர்கள். ஆனால் எல்லாம் என் ஒருத்தனின் பெயரில்தான் இருக்கும். முதல் வருடம் பதினெட்டு லட்சம், இரண்டாவது ஆண்டு இருபத்திநாலு லட்சம்'' என்று காந்தி சொல்லச் சொல்ல ராகவன் எழுதிக் கொண்டான். அவன் சொல்லி முடித்த பிறகு ராகவன் ரொம்ப நேரம் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு, ''ஐந்து ஆண்டுகள் முடியும்போது உன்னிடம் ஒரு கோடி ரூபாய் இருக்க வேண்டும் என்றால் சுமார் மூன்று கோடியே முப்பது லட்சம் நீ சம்பாதிக்கணும்'' என்றான்.

காந்திக்கு புரையேறியது. ''தண்ணீர்'' என்றான்.

ராகவன் கொண்டு வந்து தந்தான். காந்தி தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கும்போது, ''கணக்கில் சின்ன தவறு நேர்ந்துவிட்டது. உனக்கு வருமான வரியை மட்டும்தான் சொன்னேன். சொத்து வரி பற்றியெல்லாம் சொல்லவில்லையே'' என்று மறுபடியும் கணக்குப் போட்டு ''அதற்காக நாலு லட்சம் மேலும் சேர்த்துக் கொள்'' என்றான்.

காந்தி எழுந்துகொண்டு கைகுலுக்கிவிட்டு ''போய் வருகிறேன் பிரதர்'' என்றான்.

காந்தி அறையைவிட்டு வெளியேறும்போது ''உண்மையிலேயே அவ்வளவு பணம் சம்பாதிக்கப் போகிறாயா என்ன? சம்பாதித்தால் என்னை நினைவில் வைத்துக் கொள். நான்தான் உனக்கு ஆடிட்டர்'' என்று ராகவன் பின்னாலிருந்து கத்தினான்.

★ ★ ★

''இங்கே உட்காருவோமா?'' காந்தி கேட்டான். அவன் தலையை அசைத்தான். இருவரும் பார்க்கில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டார்கள். அவனுடைய விளம்பரத்துக்கு வந்திருந்த கடிதங்களில் அந்த நபரின் கடிதமும் ஒன்று. வேட்டியும் சட்டையும் உடுத்தியிருந்தான். வாய் நிறைய வெற்றிலை.

''பணம் சம்பாதிக்க ஏதோ வழியைச் சொல்வதாக விளம்பரப்படுத்தியது நீதானே?'' என்று கேட்டான்.

காந்திக்கு முதல் பார்வையிலேயே அவனைப் பிடிக்கவில்லை. வியாபாரத்தில் புறத்தோற்றத்திற்கு முக்கியத்துவம் இல்லை என்று அவனுக்குத் தெரியும். அதனால் முறுவலுடன் ''ஆமாம் நான்தான்'' என்றான்.

அவன் பெயர் சோமசுந்தரம். ''சொல்லு. என்ன வழி?'' என்றான் வெற்றிலைச் சாறை உமிழ்ந்துவிட்டு.

காந்தி முறுவல் மாறாமலேயே, ''சொல்லுன்னு வெறுமே கேட்டுவிட்டால் போதுமா? நீங்க எந்த அளவுக்கு முதலீடு செய்யப் போறீங்க? போலீஸ்காரர்

களிடம் விவகாரம் வைத்துக் கொள்ளலாமா கூடாதா? இதெல்லாம் எனக்குத் தெரியவேண்டும்'' என்றான்.

''உன்னிடமுள்ள எல்லா பிளான்களையும் சொல்லி விடு. எனக்குப் பிடித்ததை வாங்கிக் கொள்கிறேன்'' என்றான் சோமசுந்தரம்.

காந்தி மறுப்பதுபோல் தலையை அசைத்துவிட்டு, ''என்னுடைய பிளான்களுக்குக் காபிரைட் கிடையாது. அதனால் முன்கூட்டியே சொல்லமுடியாது. ரேட்டைச் சொல்கிறேன். அதில் பாதியை இப்பொழுதும் மீதியைத் திட்டத்தைச் செயல்படுத்தி பணம் சம்பாதித்த பிறகும் கொடுங்க. இது நம் இவருக்கும் ஒத்து வருமென்று நினைக்கிறேன்'' நேர்மையான குரலில் சொன்னான்.

சோமசுந்தரம் சந்தேகத்துடன் அவனைப் பார்த்தான். ''உன் பிளான் எனக்குப் பிடிக்கவில்லை என்றால்?''

''அது போன்ற ரிஸ்க் எங்கேயும் இருக்கும்.''

''நீ யாரோ உன் பிளான் என்னவோ எனக்குத் தெரியாது. உன்னை நம்பி அட்வான்ஸ் தரமுடியாது'' என்று எழுந்து போகத் தயாரானான்.

காந்திக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கைக்கு வந்த வாய்ப்பை நழுவவிடாமல், ''சரி போகட்டும். பிளானைச் சொல்கிறேன். என் ஃபீஸை இப்பொழுதே கொடுத்து விடுங்கள்'' என்றான். காந்திக்குத் தன் பிளான் குறி தப்பாமல் வெற்றி பெறும் என்று தெரியும். ஆனால் காந்தியின் பரபரப்பை வேறு விதமாக புரிந்துகொண்ட சோமசுந்தரம், ''நூறோ

இருநூறோ முதலீடு செய்கிறேன். போலீசோடு ஏதாவது பிரச்னை என்றால் நீதான் பார்த்துக் கொள்ளணும். லாபத்தில் ஆளுக்குப் பாதி பாதி. சம்மதமா?'' என்றான்.

காந்தியின் முகம் சிவந்தது. நூறோ இருநூறோ முதலீடு செய்வானாம். அது தன்னால் முடியாதா? சரிதான் போய்யா'' என்று எழுந்து கொண்டான்.

மறுநாள் வந்தவன் ஒரு இளைஞன். அவன் தந்தை ஜவுளி வியாபாரி. பத்துமுதல் பதினைந்தாயிரம் வரையில் முதலீடு செய்ய முடியும் என்றான்.

காந்தி சற்று யோசித்துவிட்டு ''ரிஸ்க் இருக்கும். பரவாயில்லையா?'' என்றான்.

''எந்த மாதிரி ரிஸ்க்?''

''ஒருகால் போலீஸ் தடை விதிக்கலாம். அப்படிச் செய்தால் சரக்கை மறுபடியும் உற்பத்தி செய்ய வேண்டியிருக்கும். ஆனால் போலீஸார் இதை கண்டுபிடித்து விற்பனையை நிறுத்தச் சொல்லி தடைபோடுவதற்குள் பாதி சரக்கு விற்றுப் போய்விடும். தடைபோட்ட பிறகு விற்பனையை நிறுத்துவதா இல்லை மறைமுகமாக விற்பதா என்று முடிவு செய்வது உங்கள் விருப்பத்தைப் பொறுத்து இருக்கும்.''

''அது சரி. நாம் செய்ய வேண்டியது என்ன?'' ரகசியமாக கேட்பதுபோல் தாழ்ந்த குரலில் கேட்டான்.

''நீங்க தயாரிக்கும் ஆடைகளில் பெட்ஷீட்டுகள் கூட இருக்கு இல்லையா? வெள்ளைநிற ஷீட்டில்

ஆளுயர படங்கள் சினிமா நடிகைகளுடையது பிரிண்ட் செய்து விற்கணும்'' என்றான் காந்தி.

அந்த இளைஞனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. ''ரேகா, ஹேமமாலினி போன்ற நடிகைகளின் முழு உருவப் படங்கள்'' என்று காந்தி சொன்னதும் அந்த இளைஞன் முகத்தில் திடீரென்று களை கூடியது.

''சோபியா லாரென்ஸ், ரிடாஹெவர்த் போன்ற ஹாலிவுட் நடிகைகளின் படங்களையும் போட்டால்?'' என்றான்.

காந்தி முறுவலித்தான். 'இந்த அளவுக்கு சூட்டிகையாக இருந்தால் போதும். வியாபாரத்தில் முன்னேறி விடலாம்' என்று நினைத்துக் கொண்டான்.

காந்தி சொன்ன யோசனைக்கு மகிழ்ச்சி அடைந்த இளைஞன் உடனே கையோடு ஐநூறு ரூபாய் எடுத்துக் கொடுத்துவிட்டான்.

அன்று வீட்டுக்குப் போனபிறகு லக்ஷ்மியிடம் சொன்னான், தான் ஒரு பிளானை விற்று ஐநூறு ரூபாய் சம்பாதித்ததாக. ஆனால் அந்தப் பிளான் என்னவென்று மட்டும் சொல்லவில்லை. சொன்னால் அவள் தன்னைத் திட்டுவாள் என்று பயந்தான்.

சிறிய பிளான் என்று அவன் நினைத்தது எதிர் பார்க்காத அளவுக்கு லாபத்தை ஈட்டித் தந்தது. ஐநூறு ரூபாய் கொடுத்துவிட்டு அந்தத் திட்டத்தை வாங்கிக் கொண்ட ஜவுளிக்கடை இளைஞன் முதலில் சிறிய அளவில் சரக்கை மார்க்கெட்டில் ரிலீஸ் செய்தான்.

முதலில் அதற்கு அத்தனை வரவேற்பு கிடைக்கவில்லை. ஆனால் நட்சத்திர ஹோட்டல் ஒன்று அதனை உபயோகிக்க ஆரம்பித்ததும் திடீரென்று விற்பனை பெருகிவிட்டது. சாதாரண லாட்ஜ்களிலும் அவற்றை பயன்படுத்தத் தொடங்கினார்கள். கல்லூரி ஹாஸ்டலில் தங்கியிருக்கும் இளைஞர்கள் கூட ஆர்வம் காட்டத் தொடங்கியதும் விற்பனை லட்சக்கணக்கில் பெருகியது. போலீஸாரின் கவனத்திற்கு இந்த விஷயம் வந்து தடை விதிக்க முற்பட்டபோது இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன. அதற்குள் சின்னச் சின்ன வியாபாரிகள் கூட இந்த வியாபாரத்தில் இறங்கியிருந்தார்கள். போலீஸார் தடை விதித்த பிறகும் பிளாக் மார்க்கெட்டில் விற்றுக் கொண்டிருந்தார்கள். காந்தியிடம் பிளானை பெற்றுக் கொண்ட இளைஞன் ஏறத்தாழ இருபது லட்சம் வரையிலும் லாபம் சம்பாதித்து விட்டான். பிற்பாடு எப்பொழுதோ ஒரு முறை வந்து பத்தாயிரம் ரூபாய் காந்திக்குத் தரப்போனான். ஆனால் காந்தி ஒப்புக் கொள்ளவில்லை. ''நான் என் பிளானை ஐநூறுக்கு விற்றுவிட்டேன். அதுவே போதும்'' என்று கூறி மறுத்து விட்டான். அது வேறு விஷயம்.

மூன்றாவதுநாள் காந்தியைச் சந்தித்தவர் ஒரு கிழவர். அவருக்கு நான்கு மகள்கள். வாத்தியாராக வேலை பார்த்து ஓய்வு பெற்றவர். டுடோரியல் காலேஜ் தொடங்கினால் நல்ல லாபம் வரும் என்று யாரோ சொன்னதைக் கேட்டுக் கொண்டு பெரிய மகள் கல்யாணத்திற்காக சேமித்து வைத்திருந்த கொஞ்ச நஞ்ச பணத்தைப் போட்டு

காலேஜ் ஆரம்பித்தார். ஆறு மாதங்களில் பணம் கரைந்து விட்டது. இப்பொழுது காந்தியைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்.

காந்தி அவரைப் பார்த்துக் கேட்டான். ''உங்களால் இந்த வயதில் என்ன சார் செய்யமுடியும்? உங்களால் என்ன ரிஸ்க் எடுத்துக் கொள்ள முடியும்?''

''அப்படிச் சொல்லாதே தம்பி. ஐந்து பேரும் அரளி விதையை அரைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நேரத்தில்தான் இந்த விளம்பரத்தைப் பார்த்தோம். கடவுளாக பார்த்து இந்த வாய்ப்பை அளித்திருக்கிறார் என்று நம்பினோம். சாகவும் துணிந்துவிட்டேன். எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். என்ன செய்ய வேண்டுமோ சொல்லு'' என்றார் கிழவர்.

காந்தி கொஞ்ச நேரம் யோசித்தான். ''பத்திரிகையில் விளம்பரம் ஒன்று கொடுங்கள்'' என்றான். தன்னிடம் பணம் இல்லை என்று கிழவர் சொன்னதும் காந்தி தான் சம்பாதித்த பணத்திலிருந்து இருநூறு ரூபாய் செல வழித்து விளம்பரம் கொடுக்கச் செய்தான். விளம்பரம் இவ்வாறு இருந்தது.

நியூ வேல்டு டுடோரியல் காலேஜ்

இளம்பெண்களுக்கு, இளைஞர்களுக்கு மகத்தான வாய்ப்பு. பி.ஏ., பி.காம்., பரீட்சைகளுக்கு தயார் செய்து அனுப்புவோம். எங்கள் கல்லூரியின் சிறப்பு அம்சம், அரசு அனுமதியுடன் செக்ஸ் சம்பந்தப்பட்ட பாடங் களையும் பாடத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் போகி

றோம். குறைந்த சீட்டுகளே உள்ளன. பிராஸ்பெக்டஸ் பெற ஐம்பது ரூபாய் மணியார்டர் அனுப்பவும்.

இந்த விளம்பரம் கொடுத்த கையோடு ஆசிரியரை விட்டு தங்கள் பாடத் திட்டத்தில் செக்ஸ் கல்வி பாடத் தையும் சேர்த்துக் கொள்ள அனுமதி வேண்டி அரசாங் கத்திற்கு மனு போடச் செய்தான். எதிர்பார்த்தது போலவே அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

ஆனால் பேப்பரில் வந்த விளம்பரத்தைப் பார்த்து விட்டு முதல் நாள் பத்து, இரண்டாவது நாள் ஐநூறு, மூன்றாவது நாள் ஆயிரம் என்று மனுக்கள் வந்து சேர்ந்தன. ஒருமாதம் போவதற்குள் ஐயாயிரம் மனுக்கள் வந்து சேர்ந்தன. விண்ணப்பம் அனுப்பியவர்களுக்கு பிராஸ்பெக்டஸுடன் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. செக்ஸ் கல்வி பாடத் திட்டத்திற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காததால் அந்தப் பாடம் நீக்கப்பட்டு விட்டதாக கடிதத்தில் குறிப்பிடச் சொல்லி காந்தி சொன்னான். ஒரே ஒரு நபர் மட்டும் இது ஏமாற்று வேலை என்று கேஸ் போட்டார். ஆனால் விளம்பரத் திலேயே அரசாங்கத்தின் அனுமதியுடன் என்று குறிப் பிட்டு இருந்ததால் அது மோசடி இல்லை என்று தீர்வு வழங்கி கேஸ் தள்ளுபடி ஆகிவிட்டது. ஆக மொத்தம் அந்த ஸ்கூல் வாத்தியார் இரண்டு லட்சம் வரையிலும் சம்பாதித்து விட்டார். ஆனால் காந்திக்குத் தரவேண்டிய ஃபீஸையும் தரவில்லை. அவன் கடனாக தந்த இருநூறு ரூபாயையும் திருப்பித் தரவில்லை.

இதையெல்லாம் பார்த்த பிறகு லக்ஷ்மியிடம் சொன்னான் காந்தி. ''பார்த்தாயா? சாதாரணமாக ரிடையர் ஆன ஸ்கூல் வாத்தியார், நான்கு மகள்களுக்குத் தந்தை என்றதுமே கருணை காட்டப்பட வேண்டிய நபராக கதைகளில் உருவகப்படுத்துவார்கள். ஆனால் நிஜ வாழ்க்கையில் எப்படி நடந்துகொள்கிறார்களோ பாரு.''

''பணம் எது வேண்டுமானாலும் செய்யும். வில்லனை ஹீரோவாக மாற்றும். ஹீரோவை வில்லனாக மாற்றும்.''

''என்னைக் குத்திக் காட்டுகிறாயா?'' என்றான் கோபமாக.

''அப்படி எதுவும் இல்லை. ஆனால் இந்த அனுபவத்தை நீ வாழ்நாள் முழுவதும் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். வியாபாரத்தில் தாலிகட்டிய மனைவியைக் கூட நம்பக் கூடாது.''

5

நான்காவதாக வரவேண்டிய நபர் வரவே இல்லை. பார்க்கில் ரொம்ப நேரம் காத்திருந்துவிட்டு காந்தி ஏமாற்றத்தோடு வீடு திரும்பினான்.

ஆனால் எதிர்பாராத விதமாக இரண்டு நாட்கள் கழித்து ஒரு ஆள் வந்து காந்தியைக் காரில் ஒரு பங்களாவுக்கு அழைத்துச் சென்றான்.

அந்த பங்களா ரொம்ப நிசப்தமாக இருந்தது. அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு அறையில் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் அமர்ந்திருந்தான். காந்தியைப் பார்த்து முறுவலுடன், ''வெல்கம்'' என்றான். ''மன்னித்து விடு. நீ சொன்னதுபோல் பார்க்கில் வந்து சந்திக்க முடியவில்லை. உன்னையே இந்த இடத்திற்கு வர வழைத்தேன்.''

காந்தி வியப்புடன் சுற்றிலும் பார்த்தான். ரொம்ப விலை உயர்ந்த பங்களா அது. தான் கொடுத்த விளம்பரம் ஒரு பணக்காரனைக்கூட கவர்ந்திழுக்கும் என்று அவன் நினைக்கவில்லை. காந்தி வியப்பிலிருந்து மீளும் முன்பே, ''சொல்லு. உன் பிளான் என்ன? என்ன விலைக்கு விற்பதாக இருக்கிறாய்?'' என்றான்.

காந்தி வழக்கமாக தான் கேட்கும் கேள்விகளைக் கேட்டான். அவன் சிரித்தான். ''பத்து லட்சம் முதலீடு செய்கிறேன். நியாயமானதாக இருந்தாலும் நியாய

விரோதமாக இருந்தாலும் பரவாயில்லை. சொல்லு உன் திட்டம் என்ன?'' என்று கேட்டான்.

காந்தி அதிர்ச்சி அடைந்தவனாக பார்த்துவிட்டு ''அத்தனை பெரிய பிளானை நான் யோசிக்கவில்லை. விளம்பரத்தைப் பார்த்துவிட்டு ஏதோ சின்ன லெவலில் வருவாங்கன்னு நினைத்தேன்'' என்றான்.

''பரவாயில்லை. இப்போ நான் சொல்கிறேன் இல்லையா. யோசித்துச் சொல்லு. சொல்ல முடியும் இல்லையா.''

''முடியும்.'' உறுதியான குரலில் சொன்னான் காந்தி.

''நல்ல திட்டமாக சொல்லு. உனக்கு லாபத்தில் கால் பங்கு கமிஷன் தருகிறேன்.''

''மன்னித்துக் கொள்ளுங்கள். கமிஷன் முறையில் என் பிளானை விற்கமாட்டேன்.''

''இது வரையில் உன் பிளானை எத்தனை ரூபாய்க்கு விற்று இருக்கிறாய்?''

''ஐநூறு ரூபாய்க்கு.''

''அப்படி என்றால் சரி. உன் திட்டத்தை ஐயாயிரத் திற்கு நான் வாங்கிக் கொள்கிறேன். அத்துடன் 5% கமிஷன். உன் பிளான் மூலம் எனக்கு எத்தனை லாபம் வருகிறதோ அதில் நூற்றுக்கு ஐந்து பர்சென்ட். சரி தானே?''

''சரி'' என்றான் காந்தி.

''இரண்டு நாள் நன்றாக யோசித்து வை. நானே உன்னை எப்படியாவது சந்திக்கிறேன்.''

''பார்க்கில் சந்திக்கலாமே.''

''பெரிய பெரிய பிளான்களை யோசித்துச் சொல்வ தாகச் சொல்கிறாய். இத்தனை சின்ன விஷயம் கூடவா உனக்குத் தெரியவில்லை? உன் மீது போலீசாரின் கண் காணிப்பு இருக்கு'' என்றான் அவன்.

காந்தி திடுக்கிட்டான். பந்தயத்தின்படி தான் ஐம்பது லட்சம் சம்பாதித்தாலும் சம்பாதிக்காவிட்டாலும் போலீ ஸாரின் பார்வை தன் மீது இருக்கக் கூடாது. நியாயமான முறையில் சம்பாதிப்பதுதான் தன் லட்சியம்.

''இன்ஸ்பெக்டர் அவினாஷ் உன்னை அத்தனை சுலபமாக விட்டுவிடக் காரணம் என்ன? உன் திட்டம் என்னவென்று தெரிந்து கொள்ளத்தான் உன்னை விட்டு விட்டதாக நடித்தார். நேற்றும் அதற்கு முதல்நாளும் பார்க்கில் நீ பேசிக்கொண்டு இருந்ததை போலீஸார் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள். அதிர்ஷ்ட வசமாக என்னுடைய ஆட்கள் உன்னைச் சந்திக்காமல் போனதுதான் உன்னைக் காப்பாற்றியது. நீ என்னதான் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு சம்பாதிக்க நினைத்தாலும் போலீஸார் உன்னை ஏதாவது கேஸில் உள்ளே தள்ள நினைத்தால் அதைத் தடுக்க யார்ராலும் முடியாது. அதே போல் நீ நியாயமற்ற முறையில் சம்பாதித்து, சமுதாயத்தில் பெரிய மனிதனாக மதிக்கப்படலாம். அதனால் 'நியாயம்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் கிடையாது. அவினாஷ் உன்னை விட்டுவிடுவதுபோல்

நடித்து உன் மூலமாக என்னைக் கண்டுபிடிக்கணும்னு திட்டம் போட்டிருந்தார். ஆனால் அவரை விட நாம் புத்திசாலிகள்.''

''நீங்க யாரு?''

அவன் முகத்தில் சிரிப்பு மறைந்தது. ''ஒரு காலத்தில் உன்னைப் போல்தான் இருந்தேன். இன்ஜினியரிங் முடித்துவிட்டு படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காமல், ஏழ்மையை கையாலாகாத்தனமாக பாவிக்கும் இந்த சமுதாயத்தின்பால் விரக்தியடைந்து மனிதர்களின் பலவீனங்களைச் சாதகமாக்கிக் கொண்டு லட்சக் கணக்கில் சம்பாதித்துவிட்டேன். என் பெயர் ராம்தீர்த்.''

★ ★ ★

காந்தி வீடு திரும்பிய போது அவனிடம் ஒரு கவரைத் தந்தாள் லக்ஷ்மி.

''என்ன இது?'' கவரைப் பிரித்துக் கொண்டே கேட்டான் காந்தி.

''தெரியாது. சின்னப் பையன் ஒருவன் கொண்டு வந்து கொடுத்தான்.''

காந்தி கவரில் இருந்த கடிதத்தை எடுத்துப் படித் தான்.

இன்றைக்கு எங்கள் வீட்டில் சிறிய விழா நடக்கப் போகிறது. மாலை நாலரை மணிக்கு கட்டாயம் வர வேண்டும். – ஹாரிகா.

''யாருடைய கடிதம்?'' லக்ஷ்மி கேட்டாள்.

''ராஜாராம் சம்பந்தப்பட்டது.'' காகிதத்தைக் கசக்கி மூலையில் விட்டெறிந்து கொண்டே, ''மணி என்ன?'' என்று கேட்டான்.

லக்ஷ்மி குடிசை கூரையின் ஓட்டையிலிருந்து சூரிய வெளிச்சம் எங்கே விழுகிறதோ பார்த்துவிட்டு ''நாலே கால்'' என்றாள்.

''அடடா! நேரமாகிவிட்டது.'' காந்தி வேகமாக வெளியேறினான்.

அவன் போய்ச் சேரும்போது மணி நாலரையாகி விட்டிருந்தது. வழக்கம்போல் கேட் அருகில் கூர்க்கா நிறுத்தினான். ஹாரிகாவின் பெயரைச் சொன்னதும் உள்ளே விட்டான். ஹாரிகா தன்னை விழாவுக்கு வரச் சொல்லி அழைத்தது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவனுக்கு ஏனோ ராஜாராமை இத்தனை சீக்கிரத்தில் மறுபடியும் சந்திப்பதில் விருப்பம் இல்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ராஜாராம் வராண்டாவிலேயே தென் பட்டார். ரொம்ப பரபரப்பாக இருந்தார். அவனைப் பார்த்ததும் நெற்றியைச் சுளித்து, ''நீயா? இப்போ எதுக் காக வந்தாய்?'' என்று கேட்டார்.

காந்தி ஏதோ சொல்லப் போனான். அதற்குள் விலை உயர்ந்த கார் ஒன்று பங்களாவுக்குள் வேகமாக நுழைந்தது. அதிலிருந்து வ்யதான ஒருவரும், கோட் சூட் அணிந்த இளைஞனும் இறங்கினார்கள்.

அவர்களைப் பார்த்ததும் ராஜாராமின் முகம் மலர்ந்தது. ''வாங்க...வாங்க. உங்களைத்தான் எதிர்

பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று வரவேற்றார். எல்லோரும் உள்ளே போக முற்பட்ட போது காரில் வந்த பெரியவர் அங்கேயே இருந்த காந்தியைப் பார்த்து ''இவன்?'' என்று ஏதோ சொல்ல வந்து தயங்கினார்.

மிகச் சாதாரண உடையில் தன் பக்கத்திலேயே நின்றிருந்த காந்தியைப் பார்க்கும் போது ராஜாராமுக்கு கோபமும் எரிச்சலும் ஏற்பட்டன. வினாடியில் சுதாரித்துக் கொண்டு ''எங்களுக்குத் தெரிந்த பையன்தான். என்ன வேண்டுமோ சொல்லுங்கள்'' என்றார்.

கிழவர் காந்தியிடம் ''எங்க டிரைவரிடம் எங்கேயும் போய்வீட வேண்டாம்னு சொல்லு. கொஞ்சம் ஓய்வு கிடைத்தாலும் டீ குடிக்கப் போய்விடுவான்'' என்று சொன்னார். பிறகு ராஜாராமுடன் உள்ளே போய்க் கொண்டே, ''இந்த வேலைக்காரர்களுக்குக் கொஞ்சம் கூட மூளையே இருக்காது. நல்ல வேலைக்காரன் கிடைப்பது இந்தக் காலத்தில் குதிரைக் கொம்பாகி விட்டது'' என்றார்.

அந்த வார்த்தைகள் காந்தியின் இதயத்தில் அம்பாய் பாய்ந்தன. தன்னைத் தாண்டிக் கொண்டு வேலைக்காரன் ஒருவன் போவதைப் பார்த்துவிட்டு, ''ஹாரிகா இருக் காங்களா?'' என்று கேட்டான். அந்த வயதான வேலைக் காரன் அவனை அதிசயமாகப் பார்த்துவிட்டு, ''உள்ளே இருக்காங்க. இன்னிக்கு பெண் பார்க்க வந்திருக்காங்க இல்லையா'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டான்.

காந்தி சிலையாகிவிட்டான். பெண்பார்க்க வந்தவர் களிடம் தன்னை ஒரு வேலைக்காரனாய் அறிமுகப் படுத்தியதற்கு அவன் வருத்தப்படவில்லை. தன்னுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு அதன் காலக்கெடு முடி வடைவதற்குள் அவர் அதை மீறி நடந்துகொண்டதற்கு மிகவும் வேதனைப்பட்டான்.

அவன் கதவை ஆவேசமாக திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். உள்ளே எல்லோரும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். பெரிய சோபாவில் பெண் பார்க்க வந்த இளைஞனும் அவன் தந்தையும், எதிரே இருந்த சோபாவில் ராஜாராமும் அவருக்கு அருகில் ஹாரிகாவும் உட்கார்ந்திருந்தார்கள். கதவு திறக்கும் சத்தம் கேட்டு எல் லோருமே திரும்பிப் பார்த்தார்கள். ராஜாராம் சட் டென்று எழுந்து நின்றார்.

''இது அநியாயம்! என்னோடு ஒப்பந்தம் முடிவடை வதற்குள் உங்கள் மகளை வேறொருவனுக்கு மணம் முடிக்க முயற்சிப்பது.'' பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னான்.

ஹாலில் திடீரென்று நிசப்தம் சூழ்ந்துகொண்டது. இந்த திடீர் தாக்குதலினால் வியப்படைந்தாலும் உடனே சுதாரித்துக் கொண்ட ராஜாராம் அடுத்தபடி என்ன நடக்கும் என்பதை தன் அனுபவத்தால் உணர்ந்துகொண்டு விட்டார். காந்தி மேலும் ஆவேசப்படுவதற்கு முன்பே ''ராம்சிங்!'' என்று குரல் கொடுத்தார். உயரமாக பயில் வான் போல் காட்சி தந்த ஒருவன் உள்ளே வந்தான். ''இவன் விஷயம் என்னவென்று கொஞ்சம் வெளியில்

அழைத்துப் போய்ப் பேசு'' என்று ஜாடை காட்டினார். அவன் வந்து தன்னை இழுத்துச் செல்வதற்கு முன்பே காந்தி கத்தினான். ''ஐந்து வருஷம் எனக்கு கெடு வைத்து விட்டு அதற்கு முன்பே உங்க மகளை இன்னொருவனுக்குத் தருவது அநியாயம். இதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போவதற்கு என்னிடம் பணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால்...'' அவன் மேலும் பேசிக்கொண்டே போன பொழுது ராம்சிங் அவன் வாயைப் பொத்தி வெளியே இழுத்துச் சென்றான்.

ஹாரிகாவைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றோ, ராஜாராமுக்கு மருமகனாக வேண்டும் என்றோ அவனுக்குக் கொஞ்சம் கூட ஆசையில்லை. இருந்தாலும் அவர் பந்தயத்தை அலட்சியப்படுத்தியதுதான் அவனுக்கு ரோஷத்தை ஏற்படுத்தியது, ராம்சிங்கின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவன் போராடிக் கொண்டிருந்தபோர்து திடீரென்று கதவு திறந்து கொண்டது. தந்தையும் மகனும் வெளியே வந்தார்கள். பின்னாலேயே வந்துகொண்டிருந்த ராஜாராமின் வார்த்தைகளை காதில் போட்டுக் கொள்ளாமலேயே அவர்கள் கார் அருகில் சென்றதும், கார் கிளம்பிப் போனதும் அடுத்தடுத்து நடந்து முடிந்துவிட்டது. ராம் சிங் பிடியைத் தளர்த்தினான். வேலைக்காரர்கள், மற்ற குமாஸ்தாக்கள் எல்லோரும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜாராம் மெதுவாக நெருங்கி வந்தார். நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் அவர் கை நீண்டு காந்தியின்

கன்னத்தில் பதிந்தது. சுளீர் என்ற சத்தம். காந்தி தூணுக்கு அருகில் போய் விழுந்தான். விழுந்தவன் சமாளித்துக் கொள்ள முடியாமல் படிகளில் இருந்த க்ரோடன்ஸ் தொட்டிகள் மீது விழுந்தான்.

காந்தி உடனே எழுந்து கொள்ளவில்லை. உடைகளில் படிந்த மண்ணைத் தட்டிக் கொள்ளும் முயற்சியும் செய்யவில்லை. நிமிர்ந்து பார்த்தான். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

''இன்று நீங்க செய்த அவமானத்திற்குப் பழிதீர்த்துக் கொள்ளத்தான் போகிறேன். இதுவரையில் எனக்கு எதிரிகள் என்று யாருமே கிடையாது. என் முதல் எதிரி நீங்களேதான்.''

காந்தி மெதுவாக எழுந்து மண்ணைத் தட்டிக் கொண்டு கேட்டைத் தாண்டி போய்க்கொண்டிருந்தான். அவன் தன் பார்வையிலிருந்து மறையும் வரையில் ராஜாராம் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். பிறகு பி.ஏ.வை அருகில் வரச்சொல்லி கண்ணாலேயே கட்டளையிட்டார். பி.ஏ. ஓடிவந்தான். ''அவன் எங்கே இருக்கிறான்? என்ன செய்கிறான்? அவனோடு இன்னும் யாரெல்லாம் இருக்காங்க? இந்த விவரமெல்லாம் எனக்கு உடனே வேண்டும். அது மட்டுமே இல்லை. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அவன் நடவடிக்கையைப் பற்றி ரிப்போர்ட் தரணும்.'' பி.ஏ. தலையை அசைத்துவிட்டு காந்தி போன திசையில் ஓட்டமெடுத்தான்.

ராஜாராம் பக்கா வியாபாரி. எதிராளியின் முகபாவங்களைக் கண்டு கொள்வது அவருக்கு கைவந்த

கலை. காந்தியின் கண்களில் வெறுப்புடன் கலந்த பகை உணர்ச்சி தென்பட்டதை அவர் கவனித்தார். முதல் முறையாக அவருக்குத் தான் பந்தயம் கட்டி தவறு செய்துவிட்டோமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. உடனே தேறிக்கொண்டார். பணம் சம்பாதிப்பதுதான் கஷ்டம். ஆனால் சம்பாதிப்பவனைத் தடுப்பது அப்படி ஒன்றும் கஷ்டமான விஷயம் இல்லை. அதுவும் ஐம்பது லட்சங்கள்! அவர் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.

வெளியே நடந்துகொண்டிருந்த இந்த ரகளையை உள்ளே இருந்தபடியே ஹாரிகா கவனித்துக் கொண்டு தான் இருந்தாள். ஆனாலும் அவள் இடத்தைவிட்டு எழுந்துகொள்ளவில்லை. முழங்கால்களுக்கு இடையில் முகம் புதைத்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள். முதல் முதலில் ஹாலுக்குள் காந்தி நுழைந்தவுடன் அவள் முகத்தில் குறும்பு கலந்த முறுவல் படர்ந்தது. அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சியால் அவள் நிலைகுலைந்து விட்டாள். கடைக்கண் ஓரத்தில் வந்து தேங்கிய கண்ணீர்த் துளியை தலைகுனிந்தவாறு அடக்கிக் கொண்டாள். ரொம்ப நேரம் சலனமின்றி அப்படியே அமர்ந்திருந்தாள்.

★ ★ ★

கடந்த சில நாட்களாக காந்தி ஒரு மாதிரியாக இருப்பதை லக்ஷ்மி கவனித்தாள். ஆனால் உடனே அவள் காரணத்தைக் கேட்கவில்லை. அவனே சொல்லுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் சொல்லாததால் விசாரிக்க முற்பட்டாள்.

''என்ன ஆச்சு உனக்கு? என்னவோ போல் இருக் கிறாயே?''.

காந்தி தடுமாறிவிட்டு, ''அதெல்லாம் ஒன்றும் இல்லை'' என்றான்.

அவள் ஒரு வினாடி மௌனமாக இருந்தாள். ''உனக்கு எடுத்துச் சொல்லும் அளவுக்கு நான் பெரிய மனுஷி இல்லை. உன் கஷ்டம் என்னவென்று கூட கேட்கப் போவதில்லை. ஆனால் அதைப்பற்றியே யோசித்துக் குழம்பாதே என்று சொல்லக் கூடிய உரிமை யாவது எனக்கு இருக்குன்னு நினைக்கிறேன். மனச் சோர்விலேயே காலத்தைக் கழித்தால் அது மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கும். அதிலிருந்து மீண்டு வா. எனக்கு சைக்காலஜி அதிகமாக தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லுகிறேன். எல்லாக் கஷ்டங் களையும் விட பெரிய கஷ்டம் என்ன தெரியுமா? உயிர் போவது! அதைவிட பெரிய கஷ்டம் இருக்கப் போவ தில்லை. அதை ஒப்பிட்டுப் பார்த்தால் உன் பிரச்னை ரொம்ப சின்னது. ஐம்பது லட்சம் சம்பாதிக்க முடிய வில்லையே என்பதுதானே உன் கவலை? அதனால் நஷ்டம் ஒன்றுமில்லையே? பந்தயத்தில் தோற்றுப் போவாய். அவ்வளவுதானே? ஒருவேளை உன் பிரச்னை அது இல்லை என்றால் அந்தப் பிரச்னை உன்னை எந்த திசையை நோக்கி அழைத்துச் செல்கிறது? அதனால் உனக்கு வரக்கூடிய நஷ்டம் என்ன? அதற்குக் காரணம் யாரு? இதையெல்லாம் யோசித்துப் பாரு. பனி விலகியது போல் எந்தப் பிரச்னையும் விலகிப் போய்

விடும். கஷ்டத்தில் இருப்பதைவிட கஷ்டத்தில் ஆழ்ந் திருக்கிறோமே என்ற சுய இரக்கம்தான் நம்மை அதிக மாக வருந்தச் செய்கிறது. சரிதானே.''

காந்தி அவளைக் கண் இமைக்காமல் பார்த்தான். இந்தப் பெண் எவ்வளவு புத்திசாலி? எத்தனை நுட்பமாக, திடமாக எடுத்துச் சொல்கிறாள்? அவள் வார்த்தைகள் அவன் மனதில் ஆழமாக பதிந்து விட்டன. அதற்குப் பிறகு அவன் எத்தனையோ முறை பெரிய பெரிய பிரச்னைகளை எதிர்கொள்ள நேர்ந்தது. உண்மை யிலேயே மிகப்பெரிய பிரச்னைகள். மனிதனை ஒரே திரியாக அடிமட்டத்திற்கு தள்ளிவிடக் கூடியவை. அப்பொழுதெல்லாம் லக்ஷ்மியின் வார்த்தைகளைத்தான் நினைவு கூறுவான். அந்தச் சொற்கள் போதிய பலத்தை, போராடுவதற்குத் தேவையான சக்தியைத் தந்தன.

உண்மையில் நடந்தது என்ன? அந்த வீட்டின் வேலைக்காரர்களுக்கு முன்னால் அவமானம்! அது அவமானம்தானா? தவறு செய்தவர் அவர்தானே? இருந் தாலும் தான் அப்படிச் செய்திருக்கக் கூடாது. பெரிய ஹீரோவைப் போல் தடால் என்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய்விட்டான். அத்தனை வேதனை யிலும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அங்கே எதற்காக போனான்? ஹாரிகா கடிதம் எழுதியிருந்ததால். அவள் ஏன் எழுதினாள்? பெண்பார்க்கும் நிகழ்ச்சி என்பது பெரிய விழா ஒன்றும் இல்லையே. பின்னே வரச் சொல்லி ஏன் எழுதினாள்?

சட்டென்று ஏதோ புரிவதுபோல் இருந்தது. பெண் பார்க்கும் சமயத்தில் தான் வந்தால் எல்லாம் தாறு மாறாகி விடும் என்று தெரிந்துதான் அவள் தன்னை வரச் சொல்லியிருக்கிறாள். அப்படி என்றால் அந்த நிக்ழ்ச்சி தடைப்பட வேண்டும் என்று அவள் விரும்புகிறாள் என்றுதானே அர்த்தம்? அப்படி என்றால் அவளுக்கு பந்தயம் பற்றியும், பரிசு பற்றியும் தெரிந்திருக்கும்.

காந்தியின் முகத்தில் இருந்த வேதனை மாயமாக மறைந்துவிட்டது. கல்லூரியில் படிக்கும் நாட்களில் உற்சாகம் ஏற்பட்டால் விசில் அடிப்பான். மறுபடியும் இப்பொழுது விசில் அடித்தான்.

★ ★ ★

ராம்தீர்த்துக்கு வேண்டிய பிளான் எதுவுமே காந்தி மனதில் உதயமாகவில்லை. அதைப்பற்றிய யோசனை யிலேயே மூழ்கியிருந்தான். தன்னைப் போலீஸார் கண் காணித்து வருகிறார்கள் என்று அவனுக்குத் தெரியும். அதற்கு அவன் பயப்படவில்லை. சட்டத்தைப் பொறுத்த வரையில் தான் எந்த தவறும் செய்யப் போவதில்லை. ஆனால் அவனுக்குத் தெரியாத விஷயம் வேறு ஒன்று இருந்தது. ராஜாராமின் ஆட்கள் தன்னைக் கவனித்து வருகிறார்கள் என்றும், உடனுக்குடன் அவருக்கு ரிப்போர்ட் அனுப்பி வைக்கிறார்கள் என்ற விஷயம் அவனுக்குத் தெரியாது. ஆனால் அந்த ரிப்போர்டுகளில் காந்தி எதுவுமே செய்யவில்லை என்றும் ஐம்பது லட்சம் சம்பாதிக்கும் எண்ணம் இருப்பதாக தெரியவில்லை என்றும் எழுதியிருந்தார்கள்.

ஆனால் அவர்களுக்குத் தெரியாது, காந்தி எவ்வளவு தீவிரமாக யோசித்து வருகிறான் என்று. அவனுடைய மௌனத்தை அவர்கள் தோல்வியாக எடுத்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு அவனைக் கண்காணிப்பதையும் விட்டுவிட்டார்கள்.

ஒரு நாள் லக்ஷ்மி தான் வேலை செய்யும் வீட்டிலிருந்து ஒரு பேப்பரை எடுத்துக் கொண்டு வந்தாள். அதில் இவ்வாறு இருந்தது.

'ஆர்ச் பிஷப் அருளப்பர் என்பவரை கணேசன் என்பவன் ஐந்து வருடங்களாக தொடர்ந்து மோசடி செய்த விவகாரம்'

காந்தி ஆர்வத்துடன் அதைப் படிக்கத் தொடங்கினான்.

கணேசன் தான் ஒரு புரொபசர் என்றும் கிருஸ்துவ மதம் முதல் முதலில் இந்தியாவில்தான் பிறந்தது என்ற உண்மையை நிரூபிக்கும் ஓலைச் சுவடிகள் தன்னிடம் இருப்பதாகவும் ஆர்ச் பிஷப்பை நம்ப வைத்தான். (பிறகு போலீஸ் விசாரணையில் கணேசன் எட்டாம் வகுப்பு வரையிலும் படித்தவன் என்று தெரிந்தது.)

இந்தியாவில் உள்ள சில கோவில்கள் முன்பு சர்ச்சுகளாக இருந்தவை என்றும், திருவள்ளுவர் கூட கிருஸ்துவர் என்றும் நம்பச் செய்தான். காசிகூட கிருஸ்துவர்களுடையதுதான் என்று நிரூபிப்பதாக காசிக்குப் போனான். கணேசன் தன் ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக ஜர்மனி, பிரான்ஸுக்கு போவதற்கு சர்ச் சார்பில் ஆர்ச்

பிஷப் ஏற்பாடு செய்தார். கணேசன் வாடிகன் சிட்டியில் போப் ஆண்டவரைக் கூட சந்தித்தான்.

இந்த விவகாரங்களைக் கண்டு எரிச்சல் அடைந்த மற்ற சர்ச் மெம்பர்கள் புகார் கொடுத்ததால் எல்லா விஷயங்களும் வெளிச்சத்திற்கு வந்தன. அதற்குள் கணேசன் ஐந்து லட்ச ரூபாய் சுருட்டிக் கொண்டு விட்டதாக தெரிய வந்தது.

''இத்தனை முட்டாள்தனமாக அந்த பிஷப் எப்படி நடந்துகொண்டார்?'' செய்தித்தாளை மடித்து வைத்துக் கொண்டே கேட்டான் காந்தி.

லக்ஷ்மி சிரித்துவிட்டு, ''கிருஸ்து இந்தியாவில்தான் பிறந்தார் என்ற அரிய ரகசியத்தை வெளியில் கொண்டு வந்தால் வரலாற்றில் தன்னுடைய பெயர் பொன்னெழுத் துக்களில் பொறிக்கப்படும் என்று ஆசைப்பட்டிருப் பார்'' என்றாள்.

''இவ்வளவு முட்டாள்தனமாகவா?''

''இதைவிட மக்கள் இன்னும் மோசம். உதாரண மாக டிபாசிட்டுகளையே எடுத்துக் கொள். நூற்றுக்கு பன்னிரெண்டு பர்செண்ட் வட்டி என்றால் யாரும் போட மாட்டார்கள். எட்டு ஆண்டுகளில் உங்கள் முதலீடு இரு மடங்காகும் என்றால் பாய்ந்து வருவார்கள்'' என்றாள்.

காந்தியின் மூளையில் பளிச்சென்று ஏதோ மின்னியது. அவள் பேச்சிலிருந்து அவன் எண்ணங் களுக்கு ஒரு உருவகம் ஏற்பட்டுவிட்டது.

அன்று மாலையே அவன் ராம்தீர்த்தைச் சந்தித்தான்.

★ ★ ★

''சொல்லு. ஏதாவது யோசித்தாயா?'' ராம்தீர்த் கேட்டான். ஏ.சி. செய்யப்பட்ட அறையில் எதிரே இருந்த நாற்காலியில் காந்தி அமர்ந்திருந்தான்.

காந்தி உடனே பதில் சொல்லவில்லை கொஞ்ச நேரம் மௌனமாக இருந்துவிட்டுச் சொன்னான். ''பதினைந்து இளைஞர்கள் பட்டப்படிப்பு படித்தவர்கள் தேவை. நமக்கும் அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இருக்கக் கூடாது. அதாவது பேப்பரில் விளம்பரம் கொடுத்து ஆட்களை தேர்வு செய்யணும். இந்த 'ஆபரேஷன்' மொத்தம் ஒரு வாரம்தான் நடக்கும். அதற்குப் பிறகு அந்த ஏழு நாட்கள் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு அவர்களை அனுப்பிவிடணும்.''

''நாம் என்ன செய்யப்போகிறோம்?'' புரியாமல் கேட்டான் ராம்தீர்த்.

''ஸ்டேட் பாங்க் ஆஃப் பெங்களூர் பிராஞ்ச் ஒன்றை நாம் காந்திநகரில் திறக்கப் போகிறோம். நம் ஊர் எம்.எல்.ஏ. அதைத் தொடங்கி வைப்பார்.''

பக்கத்தில் குண்டு வெடித்ததுபோல் ராம்தீர்த் திடுக்கிட்டான். ''நாம் பாங்க் தொடங்கப் போகிறோமா?''

''ஆமாம். பாங்க் ஆஃப் பெங்களூர். இதில் பணம் டிபாசிட் செய்தால் ஆறு வருடங்களில் இரு மடங்காகும். டெல்லர் சிஸ்டம் மூலமாக செக்குகள் இரண்டே நிமிடங்களில் கேஷ் செய்யப்படும். டிராஃப்ட் வாங்க செலுத்த வேண்டிய கமிஷனில் சலுகை தரப்படும். நலிந்த வர்க்கத்தினருக்காக எங்க பாங்க் சேவை செய்

கிறது. எங்கள் வங்கியில் கணக்கைத் தொடங்கியவர் களுக்கு நிம்மதியான தூக்கம் உறுதி. முதல் வாரம் கஸ்ட மர்களின் வாரம். இந்த வாரத்தில் டிபாசிட் செய்தவர் களுக்கு லாட்டரியில் நல்ல பரிசு உண்டு. உங்களுக்கு சேவை செய்ய எங்களுக்கு வாய்ப்பு அளியுங்கள். பாங்க் ஆஃப் பெங்களூர்.''

விளம்பரம்போல் காந்தி மளமளவென்று சொல்லிக் கொண்டே போனான். ராம்தீர்த் முகத்தில் முறுவல் பிறந்தது. ''புரிந்துவிட்டது. ஆனால் ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர் இருக்கே ஒழிய பெங்களூர் இல்லையே?''

''அந்த விஷயம் எத்தனை பேருக்குத் தெரியும்?'' காந்தி சொன்னான். ''ஏற்கனவே இருக்கும் வங்கியின் பெயரைப் பயன்படுத்துவதைவிட புதிய பெயரை உருவாக்குவதுதான் நல்லது.''

''காந்தி நகர் எதுக்கு? மெயின் ரோட்டிலேயே தொடங்குவோமே?'' உற்சாகத்துடன் சொன்னான் ராம் தீர்த்.

''காந்தி நகரில் கன்னடர்கள் அதிகம்.''

★ ★ ★

அதற்குப் பிறகு வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன. விளம்பரம் தந்து கிளார்க் வேலைக்காக பத்து இளை ஞர்கள் தேர்ந்தெடுத்தார்கள். வீடு ஒன்று வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கௌண்டர்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கட்டிடத்திற்கு டிஸ்டெம்பர் அடிக்கப் பட்டது. 'பாங்க் ஓபனிங் ஷார்ட்லி' என்ற பானர் கட்டப்

பட்டது. 'பாங்க் ஆஃப் பெங்களூர்' என்ற பெயரில் 'செக்' புத்தகங்கள் நாசிக்கில் பிரிண்ட் செய்யப்பட்டு வந்தன. பிக்ஸட் டிபாசிட் ரசீதுகள், டிராஃப்டுகள், ஃபர்னிச்சர் எல்லாம் தயார் செய்யப்பட்டன.

திறப்பு விழாவில் எம்.எல்.ஏ. ஆவேசமான உரை யாற்றினார். நாட்டின் முன்னேற்றத்திற்கு வங்கிகள்தான் ஏணிப்படிகள். ஒவ்வொரு தெருவிலும் ஒரு வங்கி இருக்க வேண்டும். அதனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கிவிடும் என்ற உண்மையை எடுத் துரைத்தார்.

பிறகு வங்கி மேனேஜர் பேசினார். அவர் பெங்க ளூரைச் சேர்ந்தவர். வேறொரு வங்கியில் பத்து வருடங்கள் வேலை செய்து சீட்டாட்டம், ரேசுக்குப் போவது போன்ற பழக்கங்களால் வங்கி பணத்தை கையாடிவிட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டவர். கஸ்டமர் களுக்கு தரப்போகும் சலுகைகளைப்பற்றி விலாவாரி யாக சொன்னார்.

அதற்குப் பிறகு காந்திநகர் லேடீஸ் கிளப் பிரசி டெண்ட் திருமதி லக்ஷ்மி பத்தாயிரம் ரூபாய் ஃபிக்ஸட் டிபாசிட் செலுத்தி வங்கியின் தினசரி வேலைகளை தொடங்கி வைத்தாள். கரெண்ட் அக்கௌண்ட், சேவிங்ஸ் அக்கௌண்ட் தொடங்குவதற்காக வந்தவர்கள், முதல் நாளே கடனுக்காக வந்து மரியாதையாக மறுக்கப்பட்ட வர்கள், வேடிக்கை பார்க்க வந்தவர்கள்... இப்படி பலதரப்பட்ட மக்களுடன் வங்கி வளாகம் சந்தடியாக இருந்தது.

காந்தியும் ராம்தீர்த்தும் தெருமுனையில் காரிலேயே அமர்ந்திருந்தார்கள். காலையில் மீட்டிங் தொடங்கியது முதல் அவர்கள் அங்கேயேதான் இருந்தார்கள். வங்கியின் முன்னால் போட்டிருந்த ஷாமியானா இடுக்கிலிருந்து எம்.எல்.ஏ. பேசியதை பார்த்தார்கள். வங்கி மேனேஜராக இருப்பவருக்கு ராம்தீர்த்தைத் தெரியாது. ஆனால் வங்கியிலிருந்த ஒரு ஆபீசரும், காஷியரும் மட்டும் ராம் தீர்த்தின் ஆட்கள்.

போலீசார் பிடிக்க நேர்ந்தால் முதலில் மேனேஜரைத் தான் பிடித்து விசாரணை நடத்துவார்கள். அதனால் எந்தச் சூழ்நிலையிலும் தன்னுடைய ஆளை மேனேஜராக போடக்கூடாது என்று காந்தி அறிவுரை வழங்கியிருந்தான். ஆபீசரும், காஷியரும் சேர்ந்து மாலையில் பணத்தை ரிசர்வ் வங்கிக்கு அனுப்புவார்கள். அது ராம் தீர்த்துக்குப் போய்ச் சேர்ந்துவிடும். அதுதான் ஏற்பாடு.

எல்லாம் நன்றாக இருந்தபோதிலும் காந்தியின் மனதில் ஒரு மூலையில் பயம் இருந்துகொண்டே இருந்தது. பத்து வருடங்கள் வேலை பார்த்து வங்கி மேனேஜருக்கு ஸ்டேட் பாங்க் ஆஃப் பெங்களூர் என்பதே இல்லை என்ற சந்தேகம் வராமல் இருக்கலாம். ஆனால் ஊரில் யாருக்காவது சந்தேகம் வந்து போலீஸில் புகார் கொடுத்தால் திறப்புவிழா நடந்த அன்றே அரெஸ்ட் ஆகிவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது. அதனால்தான் அந்த எல்லைக்குள் போகாமல் காரில் இருந்தபடியே எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் பயந்தாற்போல் எதுவும் நடக்கவில்லை.

மாலை ஐந்துமணி வரையில் மற்ற எல்லா வங்கிகளை போலவே அதுவும் செயல்பட்டது.

மாலையில் கேஷ் வெளியே வந்தது. பத்தாயிரத்துச் சில்லரை. ஒப்பந்தத்தின்படி ராம்தீர்த் காந்திக்கு ஐயாயிரம் கொடுத்துவிட்டான்.

காந்தியின் பந்தயக்கெடு ஐந்து ஆண்டுகளில் அன்றோடு மூன்று மாதங்கள் முடிந்து விட்டன.

★ ★ ★

"மூன்று மாதங்களில் ஐயாயிரத்து முன்னூறு சம்பாதித்து இருக்கிறோம். லட்சியத்திலிருந்து நாம் ரொம்ப பின்தங்கியிருக்கிறோம்." காந்தி சொன்னான்.

"ஐயாயிரத்தி முன்னூறில் பாதி உன் பார்ட்னருக்குப் போய்விடும்." லக்ஷ்மி சொன்னாள்.

வெளியே இருள் அடர்த்தியாக இருந்தது. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது, மழை வரப்போவதற்கு அறிகுறியாக.

"நான் அந்தப் பிச்சைக்காரியின் பணம் இரண்டாயிரத்து அறுநூற்றி ஐம்பதை கையோடு கொடுத்து விடலாம் என்று நினைக்கிறேன்." காந்தி யோசித்துக் கொண்டே சொன்னான்.

"எதுக்கு?"

"வந்த லாபத்தில் பாதியை அவளுக்கு தரவேண்டும் இல்லையா?"

''இப்பொழுதே தரவேண்டிய அவசியம் என்ன? இன்னும் பிசினெஸ் இருக்கே?''

''அவள் பணத்தை அவளுக்குத் தந்துவிட்டால் கணக்கு தீர்ந்து விடும்.''

லக்ஷ்மி அதிர்ச்சியுடைந்தவள்போல் பார்த்தாள். ''நீ அவளுடன் பார்ட்னர்ஷிப்பை ரத்து செய்து கொள்ளப் போகிறாயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். அதில் தவறு என்ன இருக்கு? இந்தியன் பார்ட்னர்ஷிப் ஆக்ட்படி பங்குதாரர் எப்பொழுது வேண்டுமானாலும் விலகிக் கொள்ளலாம். இரண்டுபேர் பங்குதாரர்களாக இருக்கும் ஒரு கம்பெனியில் ஒருவர் விலகிக் கொண்டால் உடனே அந்த கம்பெனி 'டிஸ்ஸால்வ்' ஆகிவிடும்.'' சொல்லிக் கொண்டே போனவன் லக்ஷ்மியிடமிருந்து பதில் வராததால் தலையைத் திருப்பிப் பார்த்தான்.

லக்ஷ்மி உடனே பதில் சொல்லவில்லை. பிறகு ''பசியோடு இருக்கிறாயே என்று கருணையோடு நாலணா தந்த பிச்சைக்காரியிடம் இண்டியன் பார்ட்னர்ஷிப் ஆக்ட் பேசக்கூடிய உனக்கு என்னுடைய பாராட்டுகள்'' என்று ஏளனமாக சொல்லிவிட்டு சுவற்றுப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

காந்தி எழுந்து உட்கார்ந்து கொண்டு ''என் உத்தேசம் அது இல்லை'' என்று மேலும் ஏதோ சொல்லப் போனான்.

அவளும் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள். ''உன் உத்தேசம் எனக்குப் புரிந்துவிட்டது. மூன்று கோடி சம்பாதிப்பதைவிட அந்தப் பிச்சைக் காரியை இப்பொழுதே விலக்கிவிட்டால் இரண்டாயிரத்தோடு கணக்குத் தீர்ந்துவிடும். நேர்மை என்ற போர்வையில் அவளை விலக்கிவிடப் பார்க்கிறாய். அவள் எந்த சட்டத்தைப் பார்த்து உனக்குப் பணம் கொடுத்தாள்? அப்படியே அவள் தந்திருந்தாலும் அதை ஒரு தானமாக எடுத்துக் கொள்ளாமல் அவளை உன் பார்ட்னர் என்று ஏன் சொன்னாய்? இப்பொழுது உன்மீது உனக்கு நம்பிக்கை ஏற்படத் தொடங்கியதுமே உன் பங்காளியை விலக்கிவிட வேண்டுமென்று தோன்றுகிறதா? யோசித்துப் பாரு காந்தி! மனிதனின் வாழ்க்கையில் 'சட்டம்' மட்டுமே இல்லை. மனச்சாட்சின்னு ஒண்ணு இருக்கு.''

காந்தி ரொம்ப நேரம் யோசித்தான். வந்த லாபத்தில் சரிபாதியை பிச்சைக்காரிக்குத் தருவது தன் நேர்மைக்கு எடுத்துக்காட்டு என்று நினைத்தான். ஆனால் லக்ஷ்மி சொன்னதைக் கேட்டபிறகு அவள் வாதம்தான் சரியானது என்று தோன்றியது. சுமார் அரைமணி நேரம் கழித்து அவன் ஒரு முடிவுக்கு வந்தான். அந்த முடிவுக்கு வந்தபிறகு அவன் மனம் இலேசாகிவிட்டது போல் இருந்தது.

லக்ஷ்மியின் அருகில் அமர்ந்துகொண்டு ''நான்... நான், ஐயாம் சாரி'' என்று ஏதோ சொல்ல நினைத்து வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறி, ''நாம்ப... அதாவது நான்... நம்ப பார்ட்னரை நம்முடனே வைத்துக் கொண்டால்? நான் சொல்ல வந்தது'' என்று நிமிர்ந்தான்.

அவன் சொல்ல வந்தது அவளுக்குப் புரிந்தது. நட்பு கலந்த முறுவலுடன் அவன் கை மீது கைவைத்து ''கண்டிப்பாக நம்முடனே வைத்துக் கொள்வோம். நாளைக்கே அழைத்துக் கொண்டு வா'' என்றாள்.

அதற்குப் பிறகு அவனுக்கு நிம்மதியாக உறக்கம் வந்தது.

★ ★ ★

காலை ஆறுமணி. சூரியன் மேகத்திரையை சற்றே விலக்கிக் கொண்டு வெளியே வந்தான். முதல்நாள் இரவு பெய்த மழையின் தண்ணீர் இன்னும் தேங்கியிருந்தது. கோவிலுக்கு முன்னால் பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவராக வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள்.

காந்தி கீழ்ப்படியில் நின்றபடி அங்கே கூடியிருந்த பிச்சைக்காரர்களை கவனமாக பரிசீலித்துக் கொண்டிருந்தான். பிச்சைக்காரி வரவில்லை.

மணி ஆறரையாகிவிட்டது. பக்தர்கள் வரத் தொடங்கினார்கள். கூட்டம் அதிகரித்தது. சூரியன் நன்றாக மேலே வந்துவிட்டான். காந்தி கலவரமடைந்தான். ஒவ்வொரு படியிலும் பார்த்துக் கொண்டே மேலே ஏறினான். கோவிலுக்குப் பின்னாலும், குளத்தங்கரையிலும் தேடினான். எங்கேயும் காணவில்லை. மற்ற பிச்சைக்காரர்களிடம் விசாரித்தான் தெரியாது என்றார்கள்.

அடையாளம் கேட்டுவிட்டு ஒரு பிச்சைக்காரன் மட்டும் சிறிய தகவல் கொடுத்தான். இரவு நேரத்தில் அந்தக் கிழவி சத்திரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் அரச மரத்தடியில்தான் படுத்திருப்பாளாம்.

காந்தி நேராக அங்கே போனான். அதிகநேரம் தேட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அரச மரத்தடியில் முனிசிபாலிடி வண்டி நின்றுகொண்டிருந்தது. கிழவியின் உயிரற்ற உடல் மரத்தடியில் கிடந்தது. பிணத்தை வண்டியில் ஏற்றுவதற்காக முனிசிபாலிடி ஊழியர்கள் வந்திருந்தார்கள்.

காந்தி சிலையாக நின்றுவிட்டான். இரவு பெய்த மழை அந்தக் கிழவியை எந்த அளவுக்கு துன்புறுத்தி யதோ? கடுங்குளிர் தளர்ந்த அந்த உடலை எப்படி யெல்லாம் நடுநடுங்க வைத்ததோ? உயிர் துடியாய்த் துடித்து அடங்கிவிட்டது போலும். கிழவி அன்று தன்னிடம் பேசியது போலவே இன்று தன் முன்னால் நின்று பேசுவது போல் தோன்றியது.

'இரண்டு நாளாக ஒன்றுமே சாப்பிடவில்லை போலிருக்கு. இந்த நாலணா எடுத்துக் கொள் தம்பீ. எதுவும் சாப்பிடவில்லை என்றால் மயக்கம் வரும். வேர்க்கடலையாவது வாங்கிச் சாப்பிடு.'

ஒரு வார்த்தை... நட்பு கலந்த ஆறுதல்! மனிதர் களுக்கு இடையே அன்பும், ஆதரவும் இருந்துவிட்டால் அதைவிட வேறு என்ன வேண்டும்?

முனிசிபாலிடி ஊழியர்கள் பிணத்தைத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். காந்தி அவர்களிடம் சென்று ''கிழவியின் பிணத்தை நான் அடக்கம் செய்கிறேன்.'' என்றான். அவர்கள் அவனை வியப்போடும், சந்தேகத் துடனும் பார்த்தார்கள். அவர்களுக்கு விளக்கம் சொல்லி ஐம்பது ரூபாய் தந்தான். அவர்கள் போய்விட்டார்கள்.

லக்ஷ்மி வந்து சேர்ந்தாள். இருவரும் அதிகமாக பேசிக் கொள்ளவில்லை. பகிர்ந்துகொண்டால் குறைவது வேதனை ஒன்றுதான். பரஸ்பரம் உணர்ந்துகொண்டால் வாய்வார்த்தைகூட தேவையில்லை. துணையாய் இருந்தால் போதும்.

மதியம் தகனகாரியங்கள் முடிந்தன. மயானத்தின் நடுவில் கைகளை கட்டியபடி நின்றுகொண்டிருந்த காந்தியிடம் வெட்டியான் வந்து கையை நீட்டினான். ''இனாம் சார்.''

காந்தி நிமிர்ந்து பார்த்தான்.

''பிணத்தைத் திருப்பிப் போடணும். அப்பத்தான் முழுவதும் எரியும். இல்லாவிட்டால் நரிகள் வந்து பிடுங்கிக் கொண்டு போய்விடும். பத்தோ ஐந்தோ தாங்க. சாம்பலாக்கிடறேன்.''

காந்தி அவனைப் பார்த்து, ''ஒரு நாளைக்கு எத்தனை பிணங்களை எரிப்பாய்?'' என்று கேட்டான்.

அந்தக் கேள்விக்கு வியப்படைந்த வெட்டியான், ''ஒன்றிரண்டுதான் சார். ஏன் கேட்கிறீங்க?'' என்றான்.

''உன் பெயரில் இன்னிக்கே ஐயாயிரம் வங்கியில் போடுகிறேன். நாளொன்றுக்கு பத்து ரூபாய் வீதம் உனக்குக் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்கிறேன். இன்று முதல் மயானத்தில் எந்தப் பிணமும் சரியாக எரியாமல் இருக்கக்கூடாது. உனக்குப் பணம் தரமுடியாமல், சொந்தக்காரர்கள் இறந்த துக்கம் ஒருபக்கம், அவர்களை மேலுலகத்திற்கு சரியாக அனுப்பி வைக்க

முடியாமல் போய்விட்டோமே என்ற தவிப்பு மற்றொரு பக்கம் யாருக்குமே இது போன்ற வேதனை ஏற்படக் கூடாது. இந்த ஐயாயிரம் வட்டியுடன் தீர்ந்து போகும் வரையிலாவது நேர்மையுடன் இரு.''

திறந்தவாய் மூடாமல் வியப்புடன் பார்த்துக் கொண் டிருந்த வெட்டியானைப் பொருட்படுத்தாமல் மௌன மாக வீடு நோக்கி நடந்தான். போகும்போது மனதில் நினைத்துக் கொண்டான்.

'இதைவிட பெரிய காரியம் என்னால் செய்யமுடிய வில்லை பாட்டீ! என்னால் இயன்ற அளவில் செய் தேன். நான் செய்த இந்த காரியம் உன் ஆன்மாவுக்கு அமைதியைத் தரட்டும்.'

தன்னிடமிருந்த ஐயாயிரத்தையும் அவ்வாறு செலவு செய்துவிட்டதால் முதல்நாளன்று எந்த நிலையில் இருந் தானோ இன்றும் அதேபோல் கையில் கால்ரூபாய்கூட இல்லாதவனாக எஞ்சி நின்றான்.

ஆனால் மனம் முழுவதும் இனம் தெரியாத திருப்தி பரவியிருந்தது. பணத்தால் பெறமுடியாத நிம்மதி அது. அன்று இரவு அவன் நிம்மதியாக உறங்கினான். அன்று வரையில் சம்பாதித்த பணம் முழுவதும் போய்விட்டது. ஆனாலும் வேதனையில்லை. லக்ஷ்மியின் கண்களில் தென்பட்ட பாராட்டு ஒன்றே போதும்.

6

அன்று இரவு பதினொரு மணி ஆகும்போது ராம் தீர்த்தின் ஆள் வந்து எழுப்பினான். ''உங்களை அவசர மாக வரச்சொன்னார்'' என்றான்.

அவன் போனபொழுது ராம்தீர்த் கவலையுடன் தென்பட்டான். வங்கி ஆரம்பித்து இரண்டு நாட்கள் ஆகியிருந்தது.

''என்ன விசேஷம்?'' காந்தி கேட்டான்.

ராம்தீர்த் சொன்னான். ''இன்று டிபாசிட் ஐயாயிரம் கூட வரவில்லை. நாம் நினைத்ததுபோல் இந்தத் திட்டம் போகவில்லை. ஒருகால் நாம் தவறு செய்துவிட்டோமோ என்னவோ. ஸ்டேட் பாங்க் ஆஃப் பெங்களூர்னு வைக் காமல் வேறு ஏதாவது பெயர் வைத்திருக்கணும்.''

''அது இன்னும் ரிஸ்க்'' என்றான் காந்தி.

ராம்தீர்த் மேலும் சொன்னான். ''நாம் கொடுத்த விளம்பரம், கட்டிடத்து வாடகை எல்லா செலவுகளும் போக நமக்கு எதுவுமே மீறாது என்று தோன்றுகிறது.''

காந்தி பதில் பேசவில்லை. தோல்வியை ஒப்புக் கொள்வதுபோல் எழுந்துகொண்டான்.

''போகட்டும். வங்கியை இன்னும் ஒருமாதம் இரண்டுமாதம் நடத்தினால் என்ன? யாருக்கும் சந்தேகம் வரவில்லையே?'' ராம்தீர்த் சொன்னான்.

''வேண்டாம் வேண்டாம். நம் செக்கை இன்னொரு வங்கியில் கொடுத்தவங்க அது கேஷ் ஆகாவிட்டால் நம்மைப் பற்றி விசாரணை தொடங்குவதற்கு ஒரு வாரத் திற்கு மேல் ஆகாது.''

''பின்னே என்ன செய்வது?''

''யோசித்து நாளை சொல்கிறேன்.'' சொல்லிவிட்டு சோர்வுடன் திரும்பினான் காந்தி.

மறுநாள் ராம்தீர்த்தைச் சந்தித்து தன் பிளானை சொன்னான். அதைக் கேட்ட ராம்தீர்த் ஆச்சரியமடைந் தான். ''இது நடக்கிற காரியம்தானா?'' சந்தேகமாக கேட்டான். காந்தி ஏடுத்துச் சொன்னபிறகு ராம் த் அதற்குமேல் தாமதம் செய்யவில்லை. அதன்படி பாம்ப் லெட்டுகள் அச்சிடப்பட்டன. போஸ்டர்கள் ஒட்டப் பட்டன.

சரியாக பத்தரைமணி ஆகும்போது காந்தி வங்கி இருக்கும் தெருவுக்குள் நுழைந்தான். தன் கண்களையே நம்பமுடியாதவன் போல் அப்படியே நின்றுவிட்டான். மக்கள் க்யூவில் நின்றுகொண்டிருந்தார்கள். தெருவே ரொம்ப சந்தடியாக இருந்தது.

தோள்மீது கை படிந்ததும் திரும்பிப் பார்த்தான். ''வாழ்த்துக்கள்! நாம் பிரிண்ட் செய்த பாம்ப்லெட்டுகள் பிரம்மாஸ்திரமாக செயல்பட்டிருக்கு'' என்று சொல்லி விட்டு காலனியில் வினியோகம் செய்த விளம்பரத் துண்டை கொடுத்தான்.

''ஸ்டேட் பாங்க் ஆஃப் பெங்களூர் கஸ்டமர் களுக்கு மகத்தான வாய்ப்பு.

எங்கள் வங்கியில் இன்றே கணக்கைத் தொடங்குங்கள். ஐநூறு ரூபாய் ஃபிக்ஸ்ட் டிபாசிட் போட்டவர்களுக்கு ஏழுமலையானின் அனுக்கிரஹம் பெறும் பாக்கியம்! ஃபிக்ஸ்ட் டிபாசிட் செய்தவர்களுக்கு வங்கி செலவி லேயே மொட்டையடித்து அந்த முடியை அதேநாளில் ஸ்பெஷலாக பார்சல் செய்து திருப்பதிக்கு அனுப்பி வைப்போம். பக்தர்களின் சேவைக்காகவே என்றும் பாடுபடும் வங்கி ஸ்டேட் பாங்க் ஆஃப் பெங்களூர்.''

ஐந்து நாட்கள் கழிந்துவிட்டன. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். இரண்டு கிளார்க்குகளை நீக்கி விட்டு இன்னும் பத்து நாவிதர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டான் ராம்தீர்த். கௌண்டர்களை சற்று பின்னால் நகர்த்தி அங்கேயே மொட்டையடிக்கும் வேலை தொடங்கப்பட்டது. தலைமுடி தனித்தனியாக பாலிதின் பைகளில் பத்திரப்படுத்தினார்கள். மக்கள் வரிசையில் நின்று மொட்டையடித்துக் கொண்டார்கள்.

சனிக்கிழமை மதியம் வந்து குவிந்த டிபாசிட்டு களைப் பார்த்து தலைகால் புரியாத அளவுக்கு இருவரும் வியப்பில் ஆழ்ந்துவிட்டார்கள். அன்று வசூலான பணம் இருபத்திஎட்டு லட்சத்திற்கு மேல்.

''உன் பங்காக ஒரு லட்சத்து நாற்பதாயிரம் எடுத்துக் கொள்.'' ராம்தீர்த் சொன்னான்.

மறுப்பது போல் தலையை அசைத்தான் காந்தி. ''எனக்கு சேரவேண்டிய ஐயாயிரத்தை ஏற்கனவே பெற்றுக்கொண்டுவிட்டேன். மற்றதில் நான் பங்குதாரன் இல்லை. எனக்கு பங்கு தேவையில்லை. எது சம்பாதித்தாலும் நியாயமாக சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம்'' என்றான்.

''சரி. உனக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் வந்து கேளு.'' ராம்தீர்த் சொன்னான்.

பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. ஏதோ வேலையாக அந்தத் தெருப்பக்கம் போன காந்தி வங்கி இன்னும் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு திகைத்துப் போய் ராம்தீர்த்தைச் சந்தித்தான்.

ராம்தீர்த் முறுவலுடன், ''போலீஸாரின் பயமும் இல்லை. லாபமும் எக்கச்சக்கமாக வந்து குவிகிறது. வங்கியை எதுக்காக மூடணும்? ஒருகால் போலீஸார் வந்து சோதனை போட்டாலும் வங்கியில் ஒன்றும் கிடைக்காது.''

காந்திக்கு உள்ளூற பயமாக இருந்தது. அத்தனை நாள் வங்கியை தொடருவது நல்லது இல்லை. ஆனால் அவன் எந்த யோசனையும் சொல்லவில்லை. ராம்தீர்த்துக்கு அறிவுரை வழங்கும் அளவுக்கு தான் பெரிய ஆள் இல்லை என்று நினைத்தான்.

அவன் பயந்தது உண்மையாகிவிட்டது. பாங்க் ஆஃப் பெங்களூரின் செக்கை வேறு ஊரில் மாற்றினார் ஒரு கஸ்டமர். அந்த பாங்க் இந்த ஊருக்கு கிளியரிங்கிற்

காக அனுப்பியது. கிளியரிங் ஹவுஸில் அந்த மாதிரி ஒரு வங்கி எதுவுமே இல்லை என்று தெரியவந்தது. உடனே போலீசுக்கு ரிப்போர்ட் தரப்பட்டது.

இன்ஸ்பெக்டர் அவினாஷ் உடனே படையெடுத்து வரவில்லை. இத்தனை திறமையுடன் திட்டம் போடக் கூடியவன் ராம்தீர்த் ஒருவன்தான் என்று ஊகித்தார். அவருடைய ஊகம் உண்மையாகி விட்டது. அன்று மாலை பணத்தை எடுத்துக்கொண்டு போன கேஷியரை போலீஸார் ரகசியமாக பின்தொடர்ந்து ராம்தீர்த்தைப் பிடித்துவிட்டார்கள்.

எந்தவிதமான போராட்டமும் இன்றி ராம்தீர்த் சரணடைந்துவிட்டான்.

★ ★ ★

சில நாட்கள் கழித்து ராம்தீர்த்தை ஜெயிலில் சந்தித்தான் காந்தி. முன்பு எப்படி இருந்தானோ இன்றும் அதேபோல் உற்சாகத்துடன் சிரித்த முகத்துடன் தென்பட்டான் ராம்தீர்த்.

''பார்த்தாயா. நீ சொன்னதுபோல் நடந்து கொள்ளவில்லை. அனுபவிக்கிறேன்'' என்றான் முறுவலுடன்.

காந்தி சிரிக்கவில்லை. ''இப்போ என்னவாகும்?'' என்று கேட்டான். எத்தனையோ வருடங்களாக போலீஸாரின் கையில் பிடிபடாமல் இருந்த ராம்தீர்த் இன்று ஜெயிலில் இருந்தது அவனுக்கு வேதனையாக இருந்தது. போலீஸார் அவனை துன்புறுத்தியது போல் உடல் ஆங்காங்கே கன்றியிருந்தது.

''பணம் முழுவதும் போலீஸாரிடம் ஒப்படைத்து விட்டேன். முப்பது லட்சங்களுக்கு மேல்.''

''அப்படி என்றால் விட்டுவிடுவார்களா?''

ராம்தீர்த் உரத்தக் குரலில் சிரித்துவிட்டு, ''விட்டு விடுவதாவது? என்மீது போலீசார் போட்டிருக்கும் எல்லா கேஸுகளையும் சேர்த்து தொண்ணூற்றி ஒன்பது வருடங்களுக்கு மேலே தண்டனை கிடைக்கலாம்'' என்றான்.

மறுநாள் பேப்பர்களில் ராம்தீர்த் தற்கொலை செய்துகொண்டுவிட்டதாகச் செய்தி வந்தது. ராம்தீர்த் தின் மரணம் காந்தியின் மனதை ரொம்பவும் பாதித்து விட்டது.

ஒருநாள் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு ஆள் காந்தியைத் தேடி வந்தான். அவன் ராம்தீர்த்தின் ஆள். ராம்தீர்த் இறந்துபோன பிறகு அந்த இடத்திற்கு வந்தவன். ''உங்களுக்குச் சேரவேண்டிய பணம் சுமார் ஒரு லட்சம் வரையிலும் எங்களிடம் இருக்கு'' என்றான் அவன்.

''நான் கமிஷன் பெற்றுக் கொள்ளமாட்டேன்.'' காந்தி மறுத்துவிட்டான்.

''பின்னே உங்களுடைய ஐந்து பர்சென்ட் பங்கு பணத்தை என்ன செய்யச் சொல்றீங்க?''

''உங்களிடம் எத்தனைபேர் இன்ஜினியர்கள்?''

''சுமார் இருபதுபேர்.''

காந்தியின் மனதில் அற்புதமான ஒரு திட்டம் உருவாகிவிட்டது. சாதாரண மனிதர்கள் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத திட்டம் அது. நியாயத் திற்கு உட்பட்டது.

அன்று மாலை லக்ஷ்மி வேலையிலிருந்து வந்த பிறகு அவளிடம் பேசினான். ''உனக்கு எவ்வளவு கிடைக்கும் லக்ஷ்மி?'' என்று கேட்டான்.

''உன்னைப்போல் ஒரே நாளில் ஐயாயிரம் சம்பாதிப் பது அடுத்த நாளே இழப்பது இப்படி எல்லாம் நடக் காது. மாதத்திற்கு நானூறு முதல் ஐநூறு கிடைக்கும்.''

''அந்த வேலையை விட்டுவிடு.''

''நானும் வேலையை விட்டுவிட்டால் வாழ்க்கை எப்படி நடக்கும்?''

''எனக்கு பர்சனல் செகரெட்டரியாக இரு. நானே உனக்குச் சம்பளம் தருகிறேன்.''

''அப்படியென்றால் சரி. ஆனால் எனக்கு இரண்டு கண்டிஷன்கள் இருக்கு.''

''என்ன?''

''ஒவ்வொரு மாதமும் முதல்தேதி அன்று சம்பளம் கொடுத்துவிட வேண்டும். வியாபாரத்தில் நஷ்டம் அது இது என்று சாக்கு போக்கு சொல்லக் கூடாது.''

''இரண்டாவது நிபந்தனை என்ன?''

''வேலையிலிருந்து எப்பொழுது வேண்டுமானாலும் விலகிக் கொள்ளும் உரிமை எனக்கு இருக்கணும். முன்

கூட்டி சொல்வது, நோட்டீஸ் கொடுப்பது இதெல்லாம் இருக்கக் கூடாது.''

சரி என்றான் அவன். இருவருக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அவள் செய்ய வேண்டிய வேலை களை விவரமாகச் சொன்னான்.

''இதென்ன வேலை?'' என்று கேட்டாள் வியப் புடன்.

''பின்னே பர்சனல் செகரெட்டரி என்றால் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கும்'' என்றான்.

சரி என்பதுபோல் தலையை அசைத்துவிட்டு ''இன்னொரு கண்டிஷனையும் சேர்த்துக் கொள். நீ செய்யும் வேலைகள் நியாயமற்றதாக எனக்குத் தோன்றினால் உடனே வேலையைவிட்டு விலகிவிடு வேன். சட்டத்திற்கு உட்பட்டதா இல்லையா என்ற வாத விவாதங்கள் எனக்குத் தேவையில்லை'' தீர்மானமாக சொன்னாள்.

காந்தி அதற்கும் சம்மதித்தான். அவன் கேட்டுக் கொண்டது போல் லஷ்மி இரண்டு நபர்களைப் பற்றி தகவல்களை சேகரித்தாள். ஒருவர் அமைச்சர் சீனி வாசன். மற்றொருவர் சம்பத்குமார். பிரபல கடன் வழங்கும் நிறுவனத்தின் தலைவர்.

காந்தி சம்பத்குமாரை அவருடைய ஆபீசிலேயே சந்தித்தான். அறிமுகப்படலம் முடிந்தபிறகு சொன்னான்.

''வேலையில்லாத இன்ஜினியர்கள் என்னிடம் இருபது பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதி

நான்தான். எல்லோருமாக சேர்ந்து பலவிதமான தொழில்கள் நிறுவ வேண்டும் என்று நினைக்கிறோம். அதற்கு உங்கள் நிறுவனத்திலிருந்து கடன் உதவி பெற எண்ணியிருக்கிறோம்.''

சம்பத்குமார் ஆர்வத்துடன், ''இருபது இன்ஜினியர்களா?'' என்றார்.

''ஆமாம் சார்! எல்லோருமே வேலை இல்லாதவர்கள்.''

''என்ன தொழில் செய்வதாக உத்தேசம்?''

''அந்த ரிப்போர்ட்டுகளை எல்லாம் தயாரித்து வைத்திருக்கிறோம். ஒவ்வொரு தொழிலகம் நிறுவுவதற்கு இரண்டு லட்சம் முதல் ஐந்து லட்சம் வரையிலும் ஆகும். அதில் 80% நீங்க கடனாக தந்தால், அரசாங்கம் 10% சப்ஸிடி தரும். மீதியை நாங்க போட்டுக் கொள்கிறோம்.''

''இத்தனைபேர் இன்ஜினியர்கள் வேலைக்காக அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் தாமே தொழிலகங்களை நிறுவ முன்னுக்கு வருவது ரொம்ப சந்தோஷமான விஷயம். எங்க நிறுவனத்திலிருந்து உதவி செய்கிறோம். மனு போடுங்கள்'' என்றார் சம்பத்குமார்.

ஒரே மாதத்தில் கடன் அனுமதிக்கப்பட்டது. அடுத்த பத்து நாட்களில் ஊருக்கு பதினைந்து மைல் தொலைவில் மலைக்கு அப்பால் பத்து ஏக்கர் நிலம் அந்த இன்ஜினியர்கள் பெயரில் வழங்கப்பட்டது. ஏக்கருக்கு முப்பதாயிரம் வீதம் மூன்று லட்சங்களுக்கு.

ராம்தீர்த் கொடுப்பதாக சொல்லியிருந்த ஒரு லட்சத்து இருபதாயிரத்தை காந்தி நிலம் வாங்குவதற்காக செலவு செய்தான். மீதியை நிறுவனம் கடனாக தந்தது. இன்ஜினியர்களின் பெயரில் இடம் பதிவு செய்யப் பட்டதும் அடிக்கல் நாட்டு விழா நடந்தது. விழாவுக்கு தொழில் அமைச்சரும், சம்பத்குமாரும் வந்தார்கள். அன்று மாலை மீட்டிங் நடந்தது. அமைச்சரும், சம்பத் குமாரும் இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் உரையாற்றினார்கள்.

காந்தி தன்னுடைய உரையின்போது ஃபாக்டரிக்கு போகணும் என்றால் மலையைச் சுற்றிக் கொண்டு வர வேண்டியிருக்கும் என்றும், அரசாங்கமே மலையைத் துளைத்து பாதையை ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்குமென்றும் வேண்டுகோள் விடுத்தான். கடைசி யாக பேசிய அமைச்சர் காந்தியின் வேண்டுகோளை பரிசீலிப்பதாக வாக்குத் தந்தார்.

அமைச்சர்கள் கிளம்பிப் போனபிறகு ஒவ்வொருவ ராக விடைபெற்றுக் கொண்டிருந்தார்கள். மீட்டிங் தொடங்கியது முதல் லக்ஷ்மி பரபரப்பாக சுழன்று வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''இன்னும் ஏதாவது வேலை பாக்கியிருக்கா?'' காந்தியிடம் வந்து கேட்டாள் லக்ஷ்மி. அவள் முகத்தில் களைப்பு வெளிப்படையாகத் தென்பட்டது.

''ஐயாம் சாரி'' என்றான்.

''எதுக்கு?''

''உனக்கு அதிகமாக சிரமம் கொடுத்துவிட்டேன்.'' அன்பு கலந்த குரலில் பாராட்டுவதுபோல் சொன்னான்.

காலைமுதல் அலைந்த அலைச்சல் அந்த நட்பு கலந்த பாராட்டில் மாயமாக மறைந்துவிட்டது. முறுவலுடன் ''சீக்கிரமாக வீட்டுக்குப் போகலாம். தூக்கம் வருகிறது'' என்றாள்.

''எனக்கும் களைப்பாக இருக்கு. கிளம்புவோம்'' என்றான். பனிக்காலம் என்பதால் இரவு எட்டுமணிக்கே குளிரத் தொடங்கியது.

இருவரும் கிளம்ப முற்பட்டபோது, ''வாழ்த்துக்கள்'' என்ற குரல் இனிமையாகக் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

ஹாரிகா!

தன்னையும் அறியாமல் ''தாங்க்ஸ்'' என்றான். அவளை அந்த நேரத்தில் அவன் எதிர்பார்க்கவில்லை. அவள் விழாவுக்கு வந்தது, தன்னுடைய வெற்றியைக் கண்டது சந்தோஷமாக இருந்தது. லக்ஷ்மியின் பக்கம் திரும்பி ''மிஸ் ஹாரிகா, ராஜாராமின் மகள்'' என்றான்.

''வணக்கம்'' என்று கைகளைக் கூப்பிய லக்ஷ்மி ஹாரிகாவைக் கூர்ந்து கவனித்தாள். தந்தச் சிலையாக விளங்கினாள் ஹாரிகா. வெள்ளைநிறப் புடவை. மேலே போர்த்தியிருந்த பச்சைநிற உல்லன் சால்வை. அவள் கண்களிலேயே ஒருவிதமான தேஜஸ் இருந்தது.

''இரண்டு அமைச்சர்களை விழாவுக்கு வரவழைச்சுட்டீங்களே. இந்த மாதிரி விழாக்களுக்கு எத்தனை பேர்

பிரபலங்கள் வந்தால் அவ்வளவு நல்லது. நல்ல விளம் பரமும் கிடைக்கும்.''

''அது மட்டுமே இல்லை. எப்பொழுதாவது தேவைப்பட்டால் அவர்களிடம் போய் நமக்கு வேண்டிய காரியத்தை முடித்துக் கொள்ளலாம்'' என்றான் காந்தி.

லக்ஷ்மி இருவரின் உரையாடலையும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

''நீங்க என்னிடம் சொல்லியிருந்தால் மேலும் இரண்டு அமைச்சர்களை கூட இந்த விழாவுக்கு வர வழைத்திருப்பேன்.'' ஹாரிகா சொன்னாள். ''அமைச்சர் பிரகாசம் எங்க அப்பாவுக்கு நெருங்கியவர். அமைச்சர் சீனிவாசனை எனக்கே நன்றாகத் தெரியும்.''

அமைச்சர் சீனிவாசன்!

காந்தி உத்வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டே ''உங்களுக்கு அவரை நன்றாகத் தெரியுமா?'' என்று கேட்டான். மேலும் விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று தவிப்பாக இருந்தாலும், எல்லோரும் இருந்ததால் அடக்கிக்கொண்டான். அவனுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டவள் போல் ''வாங்க. காரில் போவோம்'' என்றாள்.

காந்தி லக்ஷ்மியின் பக்கம் பார்த்துவிட்டு ''கிளம்பு'' என்றான்.

''வேண்டாம். வேனில் போய்க்கொள்ளலாம்'' என்றாள் லக்ஷ்மி.

''பரவாயில்லை வாங்க. இறக்கிவிட்டுப் போகி றேன்'' ஹாரிகா சொன்னாள்.

நீளமான செவர்லெட் கார் நிலா வெளிச்சத்தில் பள பளத்துக் கொண்டிருந்தது. லக்ஷ்மி காரை ஒருமுறை பார்த்துவிட்டு பார்வையத் திருப்பிக் கொண்டாள். ''எனக்குக் கொஞ்சம வேலை பாக்கியிருக்கு. நீங்க போய்க் கொள்ளுங்கள். எனக்கு வேன் இருக்கே.'' என்றாள். காந்தி தயங்குவதைப் பார்த்துவிட்டு ''நீ போய்க் கொள் காந்தி. நான் இங்கே பார்த்துக் கொள் கிறேன்'' என்றாள்.

ஹாரிகா மறுபடியும் அழைத்ததும் காந்தி அவளுடன் காரில் ஏறிக்கொண்டான். சின்ன சத்தத்துடன் கார் முன்னால் நகர்ந்தது. கார் கிளம்பியபோது உயரே கிளம்பிய தூசி பின்னால் நின்றிருந்த லக்ஷ்மியின் முகத்தில் திரையாக படிந்தது.

அவள் அப்படியே நின்றிருந்தாள்...சலனமில்லாமல்.

★ ★ ★

அதே நேரத்தில்...

ராஜாராம் தன் ஆபீஸ் சேம்பரில் உட்கார்ந்தபடி வரப்போகும் நபருக்காக காத்திருந்தார். எட்டரையாகி யிருந்தது. ஐந்து நிமிடங்கள் கழித்து அறைக்கதவு திறந்து கொண்டது. ராஜாராம் நிமிர்ந்து பார்த்தார். செகரெட்ரி உள்ளே வந்தான்.

''விழா எப்படி நடந்தது?''

''நன்றாக நடந்தது சார்'' என்றான் செகரெட்ரி. ''ஏறத்தாழ நாற்பது லட்சம் ரூபாய் திட்டம். இருபது இன்ஜினியர்கள் சேர்ந்து நிறுவும் இந்தத் தொழிலகத்

திற்குப் பின்னால் இருந்து ஊக்குவிப்பவன் காந்தி என்று நிச்சயமாகத் தெரிகிறது. அந்த இருபது பேரும் சுமார் பத்துலட்சம் முன்பணம் போடவேண்டும். ஆனால் அவ்வளவு பணம் அவர்களிடம் இல்லை என்று எல்லோருக்குமே தெரியும். கடன் கொடுத்த நிறுவனத்தை ஏமாற்றும் எண்ணம் காந்திக்கு இல்லை. ஏன் என்றால் தகுந்த கியாரண்டியின் பெயரில்தான் கடன் வழங்கப் பட்டிருக்கிறது. பின்னே எப்படி இந்த பிராஜெக்டை முடிப்பதாக இருக்கிறார்களோ தெரியவில்லை.''

சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்த ராஜாராம் செகரரெட்ரியை பார்த்து, ''சரி நீ போகலாம்'' என்றார். அவன் போனதும் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தார்.

★ ★ ★

இரவு எட்டரை மணி. விழாவிலிருந்து வந்த காந்தியும், ஹாரிகாவும் ஹோட்டலில் அமர்ந்திருந் தார்கள். அன்றே ஹாரிகாவிடம் சீனிவாசனைப் பற்றிப் பேசிவிடவேண்டும் என்று நினைத்தான். பொதுவாக பேசியபிறகு அமைச்சரைப் பற்றி பேச்செடுத்தான். ''அமைச்சர் சீனிவாசனை உங்களுக்குத் தெரியுமா?''

''அவருடைய மகள் என்னுடைய கல்லூரி சினேகிதி, நெருங்கிய தோழி. அடிக்கடி அவளுடைய வீட்டுக்குப் போவேன்.''

''அவரை நான் சந்திக்க வேண்டும். ஒரு அறிமுகக் கடிதம் தேவைப்படுகிறது.''

''நானே நேரில் வந்து அறிமுகப்படுத்தட்டுமா?''

''வேண்டாம் வேண்டாம். நானே போய்க்கொள் கிறேன்'' என்றான்.

அவனுடைய பதட்டத்தைப் பார்த்துச் சிரித்தாள் அவள். ''சரி அப்படி என்றால் கடிதம் எழுதித் தருகிறேன்.'' என்று அவனிடம் இருந்த பைலை வாங்கிக் கொண்டு பேப்பரில் கடிதம் எழுதித் தந்தாள்.

''உங்களுடைய பணம் சம்பாதிக்கும் வேலை எவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கு?'' என்று கேட்டாள்.

''சம்பாதிப்பதா? சரியாக சொல்லணும் என்றால் சுமார் லட்ச ரூபாய் கடனில் இருக்கிறேன்.''

''அப்படி என்றால் இன்னும் நான்குவருடங்களில் ஐம்பத்தோரு லட்சம் சம்பாதிக்கணும்னு சொல்லுங்கள்'' என்றவள் அவன் முகத்தில் தோன்றிய மாறுதலைக் கவனித்து பேச்சை மாற்றினாள். ''போகட்டும் இந்த ஒரு வருடத்தில் வியாபாரத்தில் சுளிவு நெளிவுகள் ஏதாவது கற்றுக் கொண்டீர்களா?''

''ஊம். கற்றுக் கொண்டேன்.''

''என்ன?''

''வியாபாரத்தில் அவசரப்பட்டு வாக்குக் கொடுத்து விடக்கூடாது. கட்டிய மனைவியாக இருந்தாலும் சரி நம்பக்கூடாது.''

''பரவாயில்லையே. ஐம்பது லட்சங்களைவிட மேலான விஷயத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களே'' என்றாள்.

காந்தியின் முகம் சிவந்தது. பதில் பேசவில்லை.

ஹாரிகா காபியைக் கோப்பைகளில் ஊற்றிக் கொண்டே ''நான் ஒன்று சொல்கிறேன். அதன்படி செய்வீர்களா?'' என்று கேட்டாள்.

''என்ன?''

''நிச்சயமாக செய்வீர்களா?''

''கட்டாயம்.'' நேர்மையாகச் சொன்னான்.

அவள் ஒரு வெள்ளை பேப்பரை எடுத்து அவனிடம் நீட்டினாள். ''இதில் கையெழுத்துப் போட்டுக் கொடுங்க'' என்றாள்.

அவன் வியப்படைந்து ''எதற்கு?'' என்று கேட்கப் போனவன் அவள் மீது தனக்கிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொள்வதற்காக பரபரப்புடன் கையெழுத்து போட்டு அவள் முன்னால் தள்ளினான்.

''விஷயங்களைத் தெரிந்து கொள்வதோடு சரி. அவற்றைப் பின்பற்ற மாட்டீங்க போலிருக்கு'' என்று சொல்லிக்கொண்டே அந்தப் பேப்பரை வாங்கிக் கொண்டாள்.

''அப்படி என்றால்?''

''அவசரப்பட்டு யாருக்கும் வாக்குக் கொடுத்து விடக் கூடாதுன்னு சொன்னீங்க. கட்டிய மனைவியைக் கூட நம்பக்கூடாதுன்னு சொன்னீங்க. ஆனால் என்னை நம்பி வெள்ளைத் தாளில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துட்டீங்களே?''

அவன் அடியுண்டவனாய் அவளை நோக்கினான். எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக இவள் தன்னை வலையில் வீழ்த்திவிட்டாள்! அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு சற்றுநேரம் பிடித்தது. பிறகு ''நீங்க வேறு'' என்றான்.

''ஏன் வேறு? கட்டிய மனைவியாக இருந்தாலும் நம்பக்கூடாது என்று சொன்னீங்களே.''

''நீங்க அதை விட அதிகம்'' என்றவன் சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டான். உண்மையில் அவனுடைய எண்ணம் அவளுக்கு எந்த பேப்பரில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாலும் பரவாயில்லை என்பதுதான். ஆனால் அவனுடைய வார்த்தைகள் அவனுக்கே வேறுவிதமாக ஒலித்தன.

மேஜை மீது இருந்த தண்ணீர்த் துளியில் நீர்க் கோலம் போட்டபடி அமர்ந்திருந்தாள் அவள். விளக்கு வெளிச்சம் அவள் சிவந்த கன்னங்களில் பட்டு பிரதிபலித்துக் கொண்டிருந்தது. பியானோ ஓசை ஸ்பீக்கரில் நின்றுவிட்டது. அறையில் மௌனம் பரவியது. ''கிளம்புவோமா?'' என்றபடி நாற்காலியை விட்டு எழுந்து கொண்டாள் ஹாரிகா.

★ ★ ★

அவன் வீடு திரும்பும்போது இரவு பதினொரு மணி. அறையின் நடுவில் ஹரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் தரையில் அமர்ந்தபடி லக்ஷ்மி ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அவன் அவளைப் பார்த்து வியப்

புடன், ''இத்தனை நேரமாக தூங்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய் லக்ஷ்மி?'' என்று கேட்டான்.

''இன்றைய கணக்கை எழுதிக் கொண்டிருக்கிறேன். ஒரு ரூபாய் வித்தியாசம் வருகிறது. எங்கே விட்டேன் என்று தெரியவில்லை'' என்றாள்.

காந்தி அவள் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டு, ''ஒரு ரூபாய்க்காக இவ்வளவு சிரமப்படுவானேன்?'' என்றான்.

அவள் ரசீதுகளை எல்லாம் புரட்டிப் பார்த்து, மறு படியும் கூட்டினாள். ''கூட்டலில் தவறு செய்துவிட்டேன். சரியாகிவிட்டது'' என்று சொல்லிவிட்டு திருத்தினாள். ''இதோ செலவு கணக்கும், மீதி பணமும்'' என்று நீட்டினாள்.

இரவு எவ்வளவு நேரமானாலும் அன்றைய வரவு செலவு கணக்கைப் பார்த்துவிட்டுத்தான் படுப்பான் அவன். அதனால்தான் அவள் இரவோடு இரவாக அதை முடித்திருக்கிறாள் என்று புரிந்துகொண்டான் அவன். உடைகளை மாற்றிக் கொண்டு அவள் பக்கத்திலேயே அமர்ந்தபடி கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருந்தான். எதிர்பார்த்ததைவிட குறைந்த செலவில் விழா சிறப்பாக நடந்து முடிந்தது என்றால் அதற்கு லக்ஷ்மிதான் காரணம்.

''வேன்காரனுக்குக் கொடுத்த பணம் கணக்கு எழுத வில்லையே?''

ஏற்கனவே கண்களை மூடி உறங்க முற்பட்ட லக்ஷ்மி அந்தக் கேள்விக்கு கண்களைத் திறந்தாள். ''என்னிடம்

சில்லறை இல்லாமல் போய்விட்டது. அவனோ போக வேண்டும் என்று அவசரப்பட்டான் நாளைக்கு வந்து வாங்கிக் கொள்கிறேன்னு முன்னாடியே கிளம்பி விட்டான்.''

''வேன்காரன் முன்னாடியே போய்விட்டால் நீ எப்படி வந்தாய்?''

கண்களைத் திறக்காமலேயே ''நடந்து'' என்றாள்.

அவன் அதிர்ச்சி அடைந்தவனாக ''என்ன? அத்தனை தூரத்திலிருந்து, நள்ளிரவு வேளையில் தனியாக நடந்து வந்தாயா?'' என்றான்.

இந்தப் பக்கம் திரும்பியவள் ''அகோரி என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? மயானத்தில் பிணங்களைப் பிடுங்கித் தின்பவர்கள். என்னைப் பார்த்து அப்படி நினைத்து எல்லோரும் பயந்திருப்பார்களாய் இருக்கும்'' என்று மறுபடியும் திரும்பிப் படுத்தாள்.

அவள் தன்னைத் திட்டினாலும் நன்றாக இருந்திருக்கும். குறைந்தது கண்ணீர் வடித்து ரோஷமாக ஏதாவது சொன்னாலாவது தேவலை. ஆனால் பற்று இல்லாத குரலில் இப்படிப் பேசியதுதான் அவனுக்கு வேதனையாக இருந்தது.

அவன் ரொம்ப நேரம் அப்படியே இருந்தான். அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். சுமார் ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். அவளிடம் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்க நினைத்தான். அமைச்சர் சீனிவாசனை பற்றித் தன்னுடைய திட்டத்தைப் பற்றி, தான் திடீரென்று

ஹாரிகாவுடன் அத்தனை அவசரமாக ஏன் போக வேண்டி வந்தது என்பதையும் சொல்லிவிடத் துடித்தான். அவளை நெருங்கி தொட்டவன் ''லக்ஷ்மீ!'' என்றான். ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

எப்படித் தொடங்குவது என்று புரியாமல் ''நான்... நான்'' என்று மேலும் சொல்ல வந்தான்.

தன் கைமீது பதிந்திருந்த அவனுடைய கையைப் பார்த்துவிட்டு நிதானமாக ''காந்தி!'' என்று அழைத்தாள்.

ரொம்பநாள் கழித்து அவள் தன்னைப் பெயர் சொல்லி அழைப்பதை உணர்ந்தான் அவன். லக்ஷ்மி நிதானமான ஆனால் உறுதியான குரலில் ''வேறு வீடு பார் காந்தீ! இரண்டு அறைகள் இருக்கும் வீடு'' என்றாள். சொல்லிவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவனுக்கு அந்த வார்த்தைகளின் முழு அர்த்தம் புரிவதற்கு ஒரு நிமிடம் பிடித்தது. ரொம்ப நுட்பமான இடத்தில் அம்பு பாய்ந்தாற்போல் துடிதுடித்து விட்டான். ரொம்ப முயற்சி செய்து வாசல்வரை சென்றவன் சோர்வு ஆட்கொண்டதால் அப்படியே சரிந்துவிட்டான். வெளியில் நிலவின் வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது.

அவன் எழுந்து போனது அவளுக்குத் தெரியாமல் இல்லை. கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். கதவு அருகில் சாய்ந்த நிலையில் கவலை யுடன் உட்கார்ந்திருந்தவனை பார்க்கும்போது அவளுக்கு இரக்கமாக இருந்தது. எழுந்துபோய் மன்னிப்பு கேட்

போமா என்றுகூட நினைத்தாள். ஆனால் உடனே 'அவன் மட்டும் என் மனதைக் காயப்படுத்தவில்லையா? இந்த அளவுக்காவது தண்டனை, கொடுப்பது நியாயம் தான்' என்று சிறுகுழந்தைபோல் நினைத்தாள்.

ஆனால் மறுநாள் உண்மையாகவே அவன் வேறு வீடு பார்த்திருப்பதாகச் சொன்னதும் திகைத்துப் போனாள்.

''நீ சொன்னதற்காக இல்லை. நாம் இன்னும் கொஞ்சம் பெரிய வீட்டுக்கு மாறவேண்டிய நேரம் வந்து விட்டது என்று எனக்குத் தோன்றியது'' என்றான்.

''எப்படி? நமக்குப் புதையல் ஒன்றும் கிடைக்க வில்லையே?'' என்றாள்.

காந்தி பதில் சொல்லவில்லை. சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்தான்.

7

அமைச்சர் சீனிவாசனுடைய பேட்டி சுலபமாக கிடைத்துவிட்டது. ஹாரிகா கொடுத்த கடிதத்தைப் பார்த்துவிட்டு ''உட்காரு. உனக்கு இந்தப் பெண்ணை எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

''என் தங்கையின் சினேகிதி'' என்று பொய்யைச் சொன்னான்.

''சொல்லு. உனக்கு என்ன வேண்டும்?''

காந்தி சொல்லத் தொடங்கினான். முதலில் அவன் சொன்னதைக் கேட்டுவிட்டு ''நோ...நோ'' என்றார். காந்தி கையோடு கொண்டு போயிருந்த பிளானை எடுத்துக் காண்பித்தான். பிறகு நயமாக எடுத்துச் சொன்னான். உண்மையில் காந்தி கேட்டது சட்டத்திற்கு விரோதமான விஷயம் இல்லை. இருந்தாலும் கஷ்டமான விஷயம் என்று அவன் நினைத்துக் கொள்ள வேண்டும் என்பது அமைச்சரின் எண்ணம்.

பத்து நிமிடங்கள் பேசிய பிறகு காந்தி எழுந்து கொண்டான். ஜிப் பேக்கைத் திறந்து முதலமைச்சரின் நிதிக்கு பத்தாயிரம் நன்கொடையாகத் தந்தான்.

''ரசீது வேண்டுமா?'' அமைச்சர் கேட்டார்.

''தேவையில்லை.''

ரசீது தந்தால் அது உதவிநிதியில் சேர்க்கப்படும். ரசீது கிடைக்கவில்லை என்றால் பார்ட்டியின் ஃபண்டில் வரவு வைக்கப்படும். பார்ட்டி நிதிக்கு யார் எவ்வளவு அதிகமாக வசூல் செய்து தருகிறார்களோ அவர்களுக்கு மேலிடத்தில் செல்வாக்கு அதிகமாக இருக்கும். செல்வாக்கு அதிகரிக்க அதிகாரம் பெருகும். அதிகாரம் பெருக வருமானம் உயரும்.

மேலும் ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு அமைச்சருடன் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். வீடு திரும்பியதும் லக்ஷ்மியிடம் நடந்ததையெல்லாம் சொன்னான்.

''உன் திட்டம்தான் என்ன? எனக்குப் புரியவில்லை'' லக்ஷ்மி சொன்னாள்.

அவன் முகத்தில் அதே புன்னகை. பதில் சொல்லவில்லை.

''ஆனால் நீ பந்தயத்தில் தோற்றுவிட்டாய் என்று நினைக்கிறேன்'' லக்ஷ்மி சொன்னாள்.

''எப்படி?''

''லஞ்சம் தருவது சட்டப்படி குற்றம். அமைச்சருக்கு நீ லஞ்சம் கொடுத்திருக்கிறாய்.''

''அது லஞ்சம் இல்லை. முதலமைச்சரின் நிதிக்கு நன்கொடை தந்தேன். அது சட்டத்திற்கு உட்பட்டது. ரசீது வாங்கியிருந்தால் இன்கம்டாக்ஸ் சலுகையும் கிடைத்திருக்கும்.''

''உனக்கு ஒரு வேலையை முடித்துத் தருவதற்கு பணம் கொடுத்தால் அது லஞ்சம். அதுவே டிரஸ்டுக்கு நன்கொடை கொடுத்தால் அதற்கு வரிவிலக்குச் சலுகை. இது என்ன நியாயம்?'' லக்ஷ்மி கேட்டாள்.

''அதைப்பற்றி யோசிக்க வேண்டியது நாம் இல்லை. நம் அரசாங்கம்.''

''அந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தது நாம்தானே.''

''வேறு வழியில்லை. வேறு அரசாங்கம் வந்தாலும் இதேபோலத்தான் செயல்படும். சமுதாயம், நிர்வாகம் எல்லாமே மாறவேண்டும். அந்த மாற்றத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் அப்படி மாறாத வரையில் அதில் இருக்கும் ஓட்டைகளை பயன் படுத்திக் கொண்டு பணம் சம்பாதிப்பேன்.''

இது நிகழ்ந்த ஒரே மாதத்தில் மலையைக் குடைந்து டன்னல் போடும் வேலை தொடங்கப்பட்டது.

★ ★ ★

ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் என்று அழைக்கப்படும் பங்கு மார்க்கெட்டில் பலவேறு நிறுவனங்களின் பங்குகளை வாங்கியும் விற்றும் பணம் சம்பாதிப்பவர்களைப் பற்றி காந்தி கேள்விப்பட்டிருக்கிறான். அந்த உலகத்தில் அடி யெடுத்து வைக்க முடிவு செய்தான். ஆனால் அவன் உடனே அதை செயல்படுத்தவில்லை. ஆறு மாதங்கள் பங்கு மார்க்கெட் சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படித் தான். புரோக்கர்களையும், ஷேர்களின் விலையையும் பரிசீலித்து வந்தான்.

பிறகு தன்னிடமிருந்த் பத்தாயிரம் ரூபாயைப் போட்டு ஒரு கம்பெனியின் ஷேர்களை வாங்கினான். அடுத்த மாதமே அந்த ஷேர்களின் விலை உயரவே ஒரே மாதத்தில் இரண்டாயிரம் லாபம் கிடைத்தது. காந்திக்குத் தன்னம்பிக்கை பிறந்தது.

இங்கே காந்தி ஸ்டாக் மார்க்கெட்டில் மூழ்கியிருந்த போது, அங்கே காந்திக்குக் கடன் கொடுத்த நிறுவனம் கவலைப்படத் தொடங்கியது. கடன் வாங்கிக் கொண்டு அமைச்சர்களை அழைத்து திறப்பு விழா நடத்திவிட்டு, மறுநாளிலிருந்து காணாமல் போய்விட்ட காந்திக்கு மேலும் மேலும் கடிதங்களைப் போட்டுக் கொண்டிருந்தது. காந்தி அவற்றைப் பிரித்துப் பார்ப்பதைக் கூட விட்டுவிட்டான். ஆறுமாதம்... ஒருவருடம் கூட முடிந்து விட்டது.

ஒருநாள் காந்திக்குப் பதிவு தபாலில் நோட்டீஸ் வந்தது. சொத்துக்களை ஏலம் போடப் போவதாக வந்த லாயர் நோட்டீஸ் அது. அவன் அதைக் கூட பொருட் படுத்தவில்லை.

அன்றைய பேப்பரைப் பார்த்துவிட்டு அவன் ''லக்ஷ்மி! லக்ஷ்மி!'' என்று கத்தினான். ரொம்ப நாட்களுக்குப் பிறகு அவன் அன்றுதான் அத்தனை மகிழ்ச்சியோடு தென்பட்டான்.

''என்ன?'' என்று கேட்டுக்கொண்டே லக்ஷ்மி உள்ளேயிருந்து வந்தாள்.

''இதோ பார். இன்னிக்குத்தான் டன்னல் திறப்பு விழா'' என்று பேப்பரைக் காண்பித்தான்.

''இதில் நமக்கு நல்ல செய்தி என்ன இருக்கு?''

காந்தி முறுவலுடன் பேப்பரை அவளிடம் தந்து விட்டு உள்ளே போய்விட்டான்.

பேப்பரை புரட்டிக் கொண்டிருந்த லக்ஷ்மி கடைசி பக்கத்தில் ஒரு மூலையில் வெளியாகியிருந்த விளம்பரத் தைப் பார்த்து வீலென்று கத்தினாள். உள்ளேயிருந்து ஓடி வந்த காந்திக்கு அதைக் காண்பித்தாள்.

இன்ஜினியரிங் இன்டெஸ்ட்ரியல் ஏரியாவை ஏலம் போடப்போவதாக வெளியாகியிருந்த விளம்பரம் அது.

பிற்பகல் பதினொரு மணி. சம்பத்குமாரின் அறையில் ஒரு மூலையில் காந்தி உட்கார்ந்திருந்தான். எதிரே சேட் ஹிரன்லால் சிகாரியா, மகேந்திர ஜெயின், சதாசிவரெட்டி, மல்ஹோத்ரா முதலியவர்கள் அமர்ந் திருந்தார்கள். காந்தியின் இண்டஸ்ட்ரியல் ஏரியாவை ஏலத்தில் எடுப்பதற்காக அவர்கள் டெண்டர் கொடுத் திருந்தார்கள்.

சம்பத்குமார் ஒவ்வொரு கவராக பிரித்தார். இரண்டு பேர் பதினைந்து ரூபாயும், ஒருவர் பதினேழு ரூபாயும் மல்ஹோத்ரா இருபது ரூபாயும் குறிப்பிட்டு இருந் தார்கள். அந்த ரேட்டைப் பார்த்தபோது சம்பத்குமாருக்கு மூளையே கலங்கிவிடும் போலிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ஏக்கர் முப்பதாயிரம் கூட போகாத அந்த இடத்திற்கு இன்று ரேட் ஒரு லட்சம்!

ஆனால் அந்த விலையைப் பார்த்து காந்தி வியப்படைய வில்லை. மலையைக் குடைந்து டன்னல் போடுவதற்கு காந்தி லஞ்சம் தந்தது இந்த வாய்ப்புக்காகத்தான்.

ஒரு வாரத்திற்குள் ஒன்பது லட்சத்து இருபத்தி எட்டாயிரம் கொடுத்து மல்ஹோத்ரா அந்த இடத்தை வாங்கிக் கொண்டார். கடன் கொடுத்த நிறுவனம் அசலையும், வட்டியையும் கழித்துவிட்டு மீதி பணத்தை காந்தியிடம் தந்துவிட்டது. காந்தி ராம்தீர்த் ஆளிடம் பெற்றுக் கொண்ட கடனை வட்டியுடன் சேர்த்துத் திருப்பித் தந்துவிட்டான். அவன் கையில் ஐந்து லட்சம் பாக்கியிருந்தது.

கார் ஹாரன் சத்தம் கேட்டு வெளியே வந்தாள் லக்ஷ்மி. காரில் அமர்ந்தபடி காந்தி ஹாரன் அடித்துக் கொண்டிருந்தான்.

''மை காட்! காரா?'' வியப்புடன் கேட்டாள்.

''ஆமாம். நாற்பதாயிரத்திற்கு வாங்கினேன். இன்னொரு விஷயம் சொல்லட்டுமா?''

''என்ன?''

''நாம் விற்றோமே, அந்த இடத்தை பிளாட்டுகளாக மாற்றி மல்ஹோத்ரா விற்கப் போகிறானாம் சதுரகஜம் நூறு என்ற விலைக்கு.''

''சதுரகஜம் நூறு ரூபாயா?''

''ஆமாம். டன்னல் போட்ட பிறகு அந்த இடம் ஊருக்குள் வந்துவிட்டது. அந்த நிறுவனம் ஏல அறிக்

கையை இன்னும் ஆறு மாதங்கள் கழித்து கொடுத்திருந் தால் ஐம்பது லட்சமும் ஒரே டீலில் கிடைத்திருக்கும். பந்தயத்தில் வெற்றி பெற்றிருப்பேன். இன்னும் சில நாட்கள் கழித்து சீனிவாசன் அதைத்தான் செய்யப் போகிறார்.''

''அமைச்சர் சீனிவாசனா?''

''ஆமாம். நான்தான் அவரை வற்புறுத்தி அங்கே நிலம் வாங்கச் செய்தேன். இல்லாவிட்டால் அத்தனை செலவு செய்து அரசாங்கம் டன்னல் போடுமா?''

லக்ஷ்மியால் இந்த உண்மையை அத்தனை எளிதில் ஜீரணிக்க முடியவில்லை.

''லக்ஷ்மி! இன்றுடன் சரியாக பாதிதூரம் கடந்து வந்திருக்கிறோம். ஐந்து ஆண்டுகளில் சரிபாதி. அதாவது இன்றுடன் இரண்டரை ஆண்டுகள் முடிந்துவிட்டன.''

''அப்படியா?'' பற்றற்ற குரலில் சொன்னாள்.

''உனக்காக ஒரு பரிசு கொண்டுவந்திருக்கிறேன்'' என்று காரை நோக்கி நடந்தான். அதிலிருந்து ஒரு சிறு அட்டைப் பெட்டியை எடுத்துக் கொண்டு அவன் திரும்பி வருவதற்குள் லக்ஷ்மி ஒரு பேப்பரில் நாலைந்து வரிகள் எழுதி ஒரு உறையில் போட்டு ஒட்டினாள்.

காந்தி தான் வாங்கி வந்த கடியாரத்தை அவளிடம் தந்தான்.

''இது உனக்கு'' என்றாள் லக்ஷ்மி கவரை நீட்டிய படி.

''என்ன இது?'' உறையைப் பிரிக்கப் போனான்.

''வேண்டாம். இப்பொழுது வேண்டாம்'' லக்ஷ்மி தடுத்தாள். ''நாம் பாதிவழி கடந்து வந்தாலும் நீ ஐம்பது லட்சம் சம்பாதிக்கும் வாய்ப்பு கூட சரிபாதிதான். சரியாக ஐந்து வருடங்கள் முடியும்போது, நீ ஜெயித்தாயா இல்லை தோற்றுவிட்டாயா என்று தெரிந்த அன்று இதைத் திறந்து பாரு.''

அதற்குள் வாசலில் சந்தடி கேட்கவே இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே ஒரு ஆள் நின்றிருந்தான். சற்றே வளர்ந்த தாடி, கசங்கிய ஆடையுடன்.

அவனைப் பார்த்ததும் லக்ஷ்மியின் முகம் வாடிவிட்டது. ''எங்க அண்ணன்'' என்றாள் முணுமுணுப்பது போல்.

காந்தி ''வாங்க'' என்று வரவேற்றான்.

'வேண்டாம்!' என்று கத்தவேண்டும் போலிருந்தது லக்ஷ்மிக்கு. ஆனால் யாரோ குரல்வளையத்தை அழுத்துவது போல் குரல் வெளியே வர மறுத்தது. அப்படியே சிலையாக நின்றுவிட்டாள். அதற்குள் அவன் அருகில் வந்தான். ''வணக்கம். என் பெயர் அனுமந்து. என் தங்கையை இந்த நிலையில் பார்க்கும்போது எனக்கு எத்தனை சந்தோஷமாக இருக்கு தெரியுமா?'' வீட்டை ஒருமுறை பார்வையால் அளந்தவாறு சொன்னான்.

காந்தி மௌனமாக இருந்தான்.

''உங்களைப் பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். இரண்டுபேரும் சேர்ந்து இருக்கீங்களாமே. லக்ஷ்மி!

முன்னைக்கு இப்போ நீ ரொம்ப மாறியிருக்கிறாய்'' என்றான் தங்கையைப் பார்த்துக் கொண்டே.

'சேர்ந்து இருக்கீங்க' என்ற வார்த்தையை அவன் சொன்னமுறை காந்திக்கு அருவருப்பாக இருந்தது.

அவன் மேலும் சொன்னான், ''நாங்க ரொம்ப நலிந்து போய்விட்டோம். என்னால் மகனுக்கு வயிறு நிரம்ப சாப்பாடு கூட போடமுடியவில்லை. அவன் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டு போய்விட்டான். இப்போ எங்கள் நிலைமை ரொம்ப மோசமாகிவிட்டது. லக்ஷ்மீ! நீயாவது நன்றாக இருக்கிறாயே. அதுவே போதும்.''

''நீங்களும் எங்களுடனே இருந்து விடுங்கள்'' என்றான் காந்தி. லக்ஷ்மி சட்டென்று 'வேண்டாம்' என்று சொல்லப் போனாள். ஆனால் அதற்குள் அனுமந்து காந்தியின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான். ''உண்மையிலேயே நீங்க தெய்வம்தான் சார்'' என்றான்.

லக்ஷ்மி மௌனமாக உள்ளே போய்விட்டாள்.

அன்று மாலையே அனுமந்துவும், அவன் மனைவியும் பிரியம்வதாவும் வந்து சேர்ந்தார்கள். அன்று இரவு ரொம்ப நேரம் கழித்து அனுமந்து வெளியில் சென்று பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்தான்.

''ஹலோ! நான்தான் அனுமந்து பேசுகிறேன்.''

''சொல்லு.''

''நீங்க சொன்னது போலவே கோட்டைக்குள் நுழைந்துவிட்டேன். கோட்டை ரொம்ப நன்றாக

இருக்கு. நாலைந்து லட்சம் தேறும். மற்ற விஷயங்களை நிதானமாக தெரியப்படுத்துகிறேன்.''

''சரி.'' மறுமுனையில் போன் வைக்கப்பட்டு விட்டது. மறுமுனையில் பேசிய நபர் ராஜாராம்.

★ ★ ★

காந்தியின் ஸ்டேடஸ் உயர்ந்து விட்டது. இன்னும் பெரிய வீடாக எடுத்துக் கொண்டான். புது வீட்டில் போர்டிகோவும், கார் நிறுத்துவதற்கு காரேஜும் இருந்தது. முன் அறையை ஆபீஸாக மாற்றினான். புத்தக அலமாரியில் ஸ்டாக் மார்க்கெட் சம்பந்தப்பட்ட புத்தகங்களை அடுக்கினான்.

நிலம் விற்றதில் கிடைத்த லாபத்தில் ஒரு லட்சத்தை வங்கியில் டிபாசிட் செய்தான். மீதி நான்கு லட்சங்களை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் முதலீடு செய்தான். ஓரிரு முறை நஷ்டம் வந்தாலும், சுபாவத்திலேயே கெட்டிக்காரனாக இருப்பதால் லாபம் அதிகமாக வரத்தொடங்கியது.

ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ப்ரோகரின் பெயர் லாலா. இருவருமாக சேர்ந்து திட்டம் போடுவார்கள். எந்த ஷேர்களின் விலை கூடுமோ, எந்த ஷேர்களின் விலை இறங்குமோ உடனுக்குடன் பேசி முடிவு எடுப்பார்கள்.

காலம் நிதானமாக ஓடிக் கொண்டிருந்தது. நான்கு லட்சங்கள் பெருகி ஐந்து லட்சங்களாகி விட்டன. அதற்குள் ஆறுமாதங்கள் கழிந்தன. அதாவது காந்தி பந்தயத்தில் ஈடுபட்டு மூன்று வருடங்கள் முடிந்துவிட்டன.

லக்ஷ்மிக்கு வேலை அதிகமாக இருந்தது. தினமும் வியாபாரத்திற்கு சம்பந்தப்பட்ட நாளேடுகளைப் படிப்பது, முக்கியமான விஷயங்களை குறித்துக் கொள்வது, டைப் செய்த கீடிதங்களை அனுப்புவது, கணக்கு எழுதுவது போன்ற எல்லா வேலைகளையும் அவளே செய்து வந்தாள். காந்தி அடிக்கடி தன்னுடைய திட்டங்களை மாற்றிக் கொண்டிருந்தான். கொஞ்சம் விலை ஏறினாலும் ஷேர்களை விற்றுவிடுவான்.

அந்த வீட்டில் இருக்கும் மற்றொரு நபர் அனுமந்து. அவன் வீட்டில் தங்குவதே ரொம்ப குறைவு. அதற்காக வெளிவேலைகளையும் செய்துகொண்டிருக்கமாட்டான். தெருமுனையில் இருக்கும் பெட்டிக்கடையில் ஆடுபுலி ஆட்டம் ஆடுவது அவனுடைய பொழுதுபோக்கு.

எந்த வேலையும் இல்லாதவள் பிரியம்வதா ஒருத்தி தான். வீட்டில் அவளுக்குப் பொழுதே போகவில்லை. அவள் கண்களுக்கு காந்தி அபூர்வ மனிதனாகத் தென் பட்டான்.

முதலில் லக்ஷ்மியும் காந்தியும் ஒன்றாக தங்கியிருப் பதைக் கேட்டதும் எல்லோரையும் போலவே அவள் ஒரு மாதிரியாக நினைத்தாள். ஆனால் அவர்களுடன் சேர்ந்து நான்கு நாட்கள் தங்கியபிறகு தன்னுடைய எண்ணம் தவறு என்று உணர்ந்துகொண்டாள். தன் நாத்தனாரின் கெட்டிக்காரத்தனத்தைக் கண்டு சிறிது பொறாமையும் அடைந்தாள். ஆனால் அதைவிட அவள் உள்ளத்தை அதிகமாக கவர்ந்தது காந்திதான். பிரியம் வதா திருமணத்திற்கு முன் ரொம்ப நல்ல பெண்ணாகத்

தான் இருந்து வந்தாள். ஆனால் அனுமந்துவைத் திரு மணம் செய்துகொண்ட பிறகு அவள் வாழ்க்கையே மாறிவிட்டது.

பிரியம்வதாவுக்கு தன் அழகைப் பற்றிப் பெருமை இருந்தது. அந்த அழகிற்கு மயங்காதவன் காந்தி ஒருவன் தான். அவளுக்கு அதிகமாகப் பேசத் தெரியாது. இரு பொருள்பட பேசுவது, மனதில் இருப்பதை மறைமுக மாக வெளிப்படுத்துவது இதெல்லாம் அவளுக்குத் தெரியாது. எதுவாக இருந்தாலும் நேராகத்தான். அதனால் ஒருநாள் காந்தியுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தபோது மேஜையின் அடியிலிருந்து காலால் அவன் காலை அழுத்தினாள்.

காந்தி கலவரப்படவில்லை. கைத்துப் போக வில்லை. ரசிப்பது போல் முறுவலிக்கவும் இல்லை. ரொம்ப நிதானமாக, ஆனால் நேராக, தவம் கலைந்து விட்ட ரிஷியைப் போல் தீட்சண்யமாக பார்த்தான். பிரியம்வதா வாழ்க்கையில் முதல்முறையாக பயந்து விட்டாள்.

பிறகு அவனிடம் நேராகப் பேசும் துணிச்சல் இல்லாமல் போய்விட்டது. ஆனால் அவள் உள்ளத்தில் துளிர்விட்ட ஆசைமட்டும் இமய மலையாய் உயர்ந்து நின்றது. கிட்டாத பொருள் மீதுதானே ஆசை அதிகம்!

★ ★ ★

சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் சிலசமயம் வாழ்க்கை யின் போக்கையே மாற்றிவிட வல்லவை. அது போன்ற

சம்பவம் ஒன்று காந்தியின் வாழ்க்கையில் நடந்தது. பழைய பத்திரிகைகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த போது ஒரு கட்டுரை சிவப்புப் பேனாவால் கீழே கோடிடப்பட்டு அவன் கண்ணில் பட்டது. யாரோ குறித்துவிட்டு தூக்கிப் போட்டிருந்தார்கள். தலைப்பைப் பார்த்ததும் ஆர்வம் ஏற்பட்டு முழுவதுமாக படித்தான்.

செங்கல்பட்டுக்கு இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் 'அல்லாரம்' என்ற புறம்போக்கு இடத்தில் பூமிக்குக் கீழே மைக்கா இருப்பதாக வெளியாகியிருந்த கட்டுரை அது. அவனுக்கு ஏனோ அதில் ஆர்வம் பிறந்தது. அரசாங்க காரியாலயத்திற்குப் போய் அந்த இடத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டான். சுமார் இருநூறு ஏக்கர் நிலம் அது. கற்களைத் தவிர வேறெதுவும் இல்லை. காய்ந்த கட்டாந்தரை நிலம்.

அந்த நிலத்தைப் பற்றி முழுவதுமாக தெரிந்து கொண்டபிறகு மைக்காவைப் பற்றித் தேர்ந்த சில நிபுணர்களையும், விஞ்ஞானிகளையும் சந்தித்துப் பேசினான். அங்கே மைக்கா கிடைக்க வாய்ப்பு இருப்பதாக அவர்களும் சொன்னார்கள். ஆனால் முதலில் மண்ணைச் சோதிக்க வேண்டும். பிறகு ஆழமாக தோண்ட வேண்டும். எல்லாவற்றிற்கும் சுமார் நாலு லட்சம் செலவாகும். தன்னிடமிருந்ததை எல்லாம் அதில் போட்டுவிட்டால், பிற்பாடு அங்கே ஒன்றுமே இல்லை என்று தெரிய நேர்ந்தால் முழுவதுமாக இழக்க வேண்டியிருக்கும் எனவே தயங்கினான்.

அந்த இடத்தை வாங்குவது பற்றி அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே வேறொருவர் அதை வாங்கி விட்டதாக தெரியவந்தது. அதை வாங்கியது T.F.T. என்ற கம்பெனி. புறம்போக்கு நிலம் என்பதால் அரசாங்கம் மிகக் குறைவான விலைக்கு விற்றுவிட்டது. அதில் பரிசோதனைகளைச் செய்யவும், தோண்டி எடுக்கவும் மேலும் எட்டு லட்சங்கள் ஆகலாம் என்று கருதப் பட்டது.

மொத்தம் பத்துலட்சம் முதலீட்டுடன் T.F.T. கம்பெனி நிறுவப்பட்டது. இரண்டு மார்வாடிகளும் ஒரு குஜராத்திக்காரரும் அதில் டைரக்டர்கள். திரிவேதி, ஃபெர்ணான்டஸ், டாடாவாலா என்ற மூவரின் பெயரிலும் அந்தக் கம்பெனி T.F.T. என்று அழைக்கப்பட்டது.

அந்தச் சமயத்தில் கம்பெனி தன்னுடைய ஷேர்களை மார்க்கெட்டில் வெளியிட்டது. அதைப்பற்றி யாருமே அக்கறை காட்டவில்லை. ஆனால் அதற்காகவே காத்துக் கொண்டிருந்த காந்தி உடனே பத்தாயிதரம் ஷேர்களை வாங்கிவிட்டான்.

இது நடந்து ஒரு மாதத்திற்கெல்லாம் அங்கே மைக்கா கிடைக்கும் என்று உறுதியாக தெரிந்து கொள்ள முடிந்தது. பரிசோதனைக்கு அனுப்பிய சாம்பில் மண்ணி லிருந்து அதன் அறிகுறிகள் தென்படுவதாக பம்பாயி லிருந்து ரிப்போர்ட் வந்தது.

அந்த ரிப்போர்ட் வந்தவுடன் மார்க்கெட்டில் பத்து ரூபாய் விற்ற ஷேர் பன்னிரெண்டு ரூபாய்க்கு ஏறி

விட்டது. பம்பாயிலிருந்து வந்த மார்வாடி ஒருவர் மார்க்கெட்டில் இருந்த ஷேர்கள் அத்தனையும் தானே வாங்கி விட்டதால் ஷேரின் விலை பதினைந்து ஆகிவிட்டது.

காந்தி மார்க்கெட் நிலவரத்தைக் கவனித்து வந்தான். ஏற்கனவே அவன் முதலீடு செய்த லட்ச ரூபாய்க்கு ஐம்பதாயிரம் வரை லாபம் வந்துவிட்டது.

அன்றிரவு காந்திக்கும் லாலாவுக்கும் இடையே உரையாடல் நிகழ்ந்தது. அதற்குள்ளேயே பலபேரின் பார்வை T.F.T. கம்பெனியின் மீது விழுந்தது. ஆனால் பலன்தான் இருக்கவில்லை. ஷேர்களை யாருமே விற்க முன்வரவில்லை. பம்பாயிலிருந்து வந்த மார்வாடி எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுத்து ஷேர்களை வாங்க முயன்று கொண்டிருந்தார். அதே சமயத்தில் பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று T.F.T. க்கு உதவி செய்யத் தயாராக இருப்பதாக செய்தி வந்தது. அந்த உதவியின் மூலம் தோண்டும் வேலையை, மிகப் புதிய சாதனங்களுடன் குறைந்த செலவில் முடிக்க முடியும். பிரிட்டிஷ் கம்பெனியுடன் இந்த ஒப்பந்தம் நடந்து கொண்டிருந்தபோதே அல்லாரத்திலிருந்து செங்கல் பட்டு வரையிலும் ரயில்பாதை போட அரசாங்கம் யோசித்து வருவதாக தகவல் வந்தது. அதே நாளில் நாளேடுகளில் பெரிய எழுத்துக்களில் மைக்கா கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதாக செய்தி வெளியானது.

அந்தச் செய்தி வெளியான அன்றே யாருமே ஊகித்திராத அளவுக்கு ஷேரின் விலை முப்பது ரூபாயாகி விட்டது. அதைவிட உற்சாகம் தரக்கூடிய செய்தி ஒன்று

ஷேர் ஹோல்டர்களுக்கு தெரிய வந்தது. திரிவேதி, ஃபெர்னாண்டஸ் இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் திரிவேதி டைரக்டர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார் என்பதுதான் அது. உடனே அதிக அளவில் ஷேர்களை வைத்திருப்பவர்கள் எல்லோரும் டைரக்டர் பதவிக்காக முயற்சி செய்யத் தொடங்கினார்கள். ஆனால் எல்லோரையும்விட அதிகமாக ஷேர்கள் இருப்பது காந்தியிடமும், பம்பாயிலிருந்து வந்த மார்வாடியிடமும்தான். அதனால்தான் அத்தனை அவசரமாக காந்தி லாலாவிடம் பேசினான்.

''இன்னும் ஒரு பத்தாயிரம் ஷேர்கள் அதிகமாக இருக்கும் பட்சத்தில் நமக்கு டைரக்டர் பதவி கிடைப்பது உறுதி'' என்றான் காந்தி.

''பத்து ரூபாய் ஷேருக்கு முப்பது ரூபாய் தருவதாக சொன்னாலும் யாருமே விற்க முன்வரவில்லை சார்'' என்றான் லாலா.

''மற்றவர்களுக்கு அதனால் அவ்வளவாக லாபம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த பத்தாயிரம் ஷேர்கள் நமக்கு எத்தனையோ லாபத்தை ஈட்டித் தரும். T.F.T. கம்பெனி டைரக்டர் பதவி என்றால் சாதாரண விஷயம் இல்லையே?''

காந்தி சொன்னதை ஒப்புக் கொள்வது போல் லாலா மௌனமாக இருந்தான். ஆனால் இன்னும் பத்தாயிரம் ஷேர்களை எப்படி சம்பாதிப்பது?

இவர்கள் இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்த பொழுது பம்பாயிலிருந்து வந்த மார்வாடியிடமிருந்து ரகசியமாக ஒரு செய்தி வந்தது, காந்தி மட்டும் தன் ஷேர்களை விற்க முன்வந்தால் நான்கு லட்சம் வரையிலும் விலைகொடுத்து வாங்கிக் கொள்வதாக.

மிக நல்ல தருணம்!

ஆனால் காந்தி அத்தனை சுலபமாக வலையில் விழத் தயாராக இல்லை. மார்வாடி தன் ஷேர்களை விற்க முன் வந்தால் தானே அந்த விலைக்கு வாங்கிக் கொள்வதாக பதில் செய்தி அனுப்பினான். போட்டி என்று வந்தால் டைரக்டர் ஆக வருவதற்கு காந்திக்குத் தான் வாய்ப்பு அதிகம். அதனால் அந்த மார்வாடி அந்த விலைக்கு ஒப்புக் கொண்டார்.

உடனே காந்தி தன்னுடைய டிபாசிட்டுகள், மற்ற கம்பெனியின் ஷேர்கள் எல்லாவற்றையும் பணமாக மாற்றி மார்வாடியிடமிருந்து ஷேர்களை வாங்கிக் கொண்டான். இனி டைரக்டர் பதவியில் அமருவதற்கு எந்த தடைகளும் இல்லை. தேர்தல் நடக்க வேண்டியது தான் பாக்கி.

காந்தி உற்சாகத்தில் திளைத்தான். ஏறத்தாழ வெற்றியைச் சாதித்து விட்டாற்போலுத்தான். ஒருமுறை அந்தக் கம்பெனியின் டைரக்டர் பதவியில் உட்கார்ந்துவிட்டால் போதும், மிகச் சுலபமாக முன்னேறி விடலாம். அந்த நாள் ரொம்ப தொலைவில் இல்லை. அவன் பரபரப்புடன் தேர்தலுக்காக காத்திருந்தான்.

அதற்குள் மற்றொரு செய்தி வந்தது. டாடா வாலாவும் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டார் என்று. நிலத்தைத் தோண்டும்போது நீர்ஊற்று வந்து விட்டதால் மேலும் தோண்டுவது அனாவசியம் என்று அவர் வாதம் புரிந்தார். அவருடைய பேச்சை யாரும் கேட்கவில்லை. அதனால் ராஜினாமா செய்துவிட்டார்.

டாடாவாலா ராஜினாமா செய்த காரணம் பெரும் பாலானவர்களுக்குப் புரியவில்லை. சுரங்கம் தோண்டும் போது ஊற்று வருவது சாதாரண விஷயம்தானே. சில ஷேர் ஹோல்டர்கள் பயந்துபோய் தங்களுடைய ஷேர் களை விற்க முன் வந்தார்கள். அதனால் ஷேரின் விலை முப்பது ரூபாயிலிருந்து இருபத்தி ஒன்பது ரூபாய்க்கு இறங்கியது. அதே நேரம் பிரிட்டிஷ் கம்பெனி தன் உதவியை அளிப்பதற்கு முன்னால் நிபுணர்கள் அடங்கிய குழுவை அனுப்பிப் பரிசோதிக்கப் போகிறது என்ற செய்தி வெளியாயிற்று. உண்மையில் அந்த விஷயம் முதல் முதலில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத் திலேயே இடம்பெற்றிருந்தது. ஆனால் அப்போ யாரும் பொருட்படுத்தவில்லை.

ஆனால் சொன்னதுபோலவே நிபுணர்கள் குழு வந்து பரிசோதனை செய்யத் தொடங்கியதும் ஷேரின் விலை இருபத்தி ஆறுக்குக் குறைந்தது.

இந்தப் பரிசோதனை நிகழ்ந்த பதினைந்து நாட்கள் கழித்து பாராளுமன்றத்தில் அல்லாரம் ரயில்பாதை பற்றிய கேள்வி எழுப்பப்பட்டது. ஒரு தனியார் தொழிற் சாலைக்காக இந்தப் பாதையைப் போடுவதா என்ற

கேள்வியை எதிர்க்கட்சி அங்கத்தினர் கொண்டு வந்தார். அதற்குப் பதில் சொல்லும்போது அது போன்ற யோசனையே இல்லை என்றும் அந்த ரயில் பாதையைப் போடுவதாக அரசாங்கம் என்றுமே ஒப்புக் கொள்ளவில்லை என்றும் அமைச்சர் சொன்னார். பிற்பகல் பன்னிரெண்டு மணிக்கு மேல் இந்தச் செய்தி வெளியானதுதான் தாமதம், பங்கு மார்க்கெட்டில் T.F.T. கம்பெனி ஷேரின் விலை இருபத்து நான்கு ரூபாய்க்கு சரிந்துவிட்டது.

திடீரென்று விலை சரிந்துவிட்டதால் ஷேர்களை விற்பவர்களின் கூட்டம் பெருகிவிட்டது. அவரவர்கள் தங்களுடைய ஷேர்களை விற்க முனைந்தார்கள். காந்தி என்னசெய்வது என்று புரியாமல் தடுமாறினான். மணிக்கு மணி ஷேர் விலை குறைந்துகொண்டே போயிற்று.

22

20

18

மாலை நாலு மணியாகும்போது விலை பதினெட்டில் வந்து நின்றது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் கம்பெனியின் நிபுணர்கள் குழு தம் பரிசோதனையின் அறிக்கையை வெளியிட்டது, அந்த இடத்தில் மைக்கா இல்லவே இல்லை என்பதோடு அந்த மண்கூட எதற்கும் லாயக்கு இல்லை என்றும்.

இந்தச் செய்தி வெளியான பத்து நிமிடங்களில் கடன் உதவி செய்த நான்கு நிறுவனங்களும் கொடுத்த

கடனைத் திருப்பித் தரச்சொல்லி நோட்டீஸ் அனுப்பி விட்டதாக வதந்தி பரவியது.

அவ்வளவுதான்! காலையில் இருபத்தாறு ரூபாய்க்கு விற்ற ஷேரின் விலை மாலையில் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் மூடும் சமயத்தில் மூன்று ரூபாய்க்கு வந்து நின்றது. மறு நாளே கம்பெனி திவாலாகிவிட்டதாக செய்தி பரவிற்று. ஒரு ஷேரை பத்து பைசாவுக்கு விற்க முன்வந்தாலும் வாங்குவதற்கு ஆள் இல்லை.

காந்தி சம்பாதித்த ஐந்து லட்சங்கள் முற்றிலும் மண்ணோடு மண்ணாகி விட்டதோடு, மேலும் இரண்டு லட்சங்கள் கடனில் சிக்க வைத்துவிட்டது. வீட்டையும், காரையும் விற்றுவிட்டு மறுபடியும் ஊர் எல்லையில் இருக்கும் குடிசைக்கே போய்ச்சேர வேண்டிய நிலைமை. கட்டிய உடையுடன் நின்றான் காந்தி. முதலீடு செய்த போது கையில் நாலணாவாவது இருந்தது. இப்பொழுது அதுவும் இல்லை.

8

காந்தி வெளிறிப்போன முகத்துடன் மேஜை மீது கைகளை ஊன்றியபடி பார்வையைத் தரையில் பதித்திருந் தான். அவன் முகம் உணர்ச்சியற்று தென்பட்டாலும் உள்ளத்தில் பலவிதமான உணர்வுகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

தான் தோற்றுவிட்டது வாதத்திற்கும் அப்பாற்பட்ட விஷயம். இப்பொழுது இந்த இரண்டு லட்சம் கடனைத் தீர்க்க வேண்டுமென்றால் I.P. வைக்க வேண்டும். கோர்ட்டில் விஷயம் முடிவடையும் வரையில் எந்த வருமானமும் இருக்காது. அந்தக் கடன்களிலிருந்து கோர்ட் தன்னை விடுதலை செய்ய எப்படியும் ஆறேழு மாதங்கள் ஆகிவிடும். அதற்குப் பிறகு எப்பொழுது சம்பாதிப்பது ஐம்பது லட்சத்தை?

போன் ஒலித்தது. ரிசீவரை எடுத்து ''ஹலோ!'' என்றான்.

''ஆழ்ந்த அனுதாபங்கள்.''

''நீங்க யாரு?''

"T.F.T. என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?'' மெல்லிய சிரிப்பு ஒலி கேட்டது. ''டிட் ஃபர் டாட்!'' போன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

காந்தி ரிசீவரைப் பிடித்துக் கொண்டு அப்படியே அமர்ந்துவிட்டான். அந்தக் குரல் யாருடையது என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது.

அது ராஜாராமின் குரல்!

அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு அரைமணி நேரம் பிடித்தது. வரிசையாக போன் செய்யத் தொடங்கினான். பழைய நாளேடுகள் வரவழைத்தான். கம்பெனியின் விதிமுறைகளை, நிபந்தனைகளை மறுபடியும் எடுத்துப் படித்தான். ரொம்ப திறமையாக எழுதப்பட்ட அறிக்கை அது. மைக்கா கிடைக்கும் வாய்ப்பைப் பற்றிய ரிப்போர்ட்டும் அதுபோலவே இருந்தது. கிடைக்கக்கூடும்... வாய்ப்பு இருக்கிறது... இப்படி எழுதப்பட்டிருந்ததே தவிர உறுதியாக எங்கேயும் குறிப்பிடவில்லை. காந்திக்கு என்ன நடந்தது என்று புரிந்துவிட்டது.

ராஜாராம் போன்ற செல்வாக்கு படைத்த நபருக்கு பிரிட்டிஷ் கம்பெனியிடமிருந்து ஒப்பந்தம் பெற்றுக் கொள்வது கஷ்டமான காரியம் இல்லை. அதேபோல் யாராவது பத்திரிகை நிருபர் மூலம் ரயில்பாதை வரப் போவதாக வதந்தியைப் பரப்பிவிட்டிருக்கக் கூடும். மக்கள் பைத்தியம்போல் ஷேர்களை வாங்கினால் அது அவருடைய தவறு இல்லை.

ராஜாராம் தன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனித்து வருகிறார் போலும். தான் லட்சம் ரூபாய்க்கு ஷேர்களை வாங்கியதுமே திரிவேதியை ஏதோ சாக்குச் சொல்லி ராஜினாமா செய்ய வைத்தார்.

சிவப்புப் பேனாவால் மைக்காவைப் பற்றிய செய்தியின் கீழே கோடிட்டுவிட்டு அந்தப் பத்திரிகை தன் வீட்டுக்கு எப்படியோ வந்து சேரும்படி செய்திருக்கிறார். தான் ஏதோ பெரிய ரகசியம் ஒன்றைத் துப்பறிந்து கண்டுபிடித்துவிட்டாற்போல் செயல்படத் தொடங்கி விட்டான். சரியாக தன்னிடமுள்ள பணத்திற்கு தகுந்த உயரத்தில் டைரக்டர் பதவியை வைத்துவிட்டு, தான் உயரே எம்பி பதவியை அடையப்போன பொழுது, கீழே இருந்த ஆதாரத்தை தள்ளிவிட்டதோடு குழியையும் பறித்துவிட்டார்.

எதிரியாக இருந்தாலும் ராஜாராமை பாராட்டத்தான் வேண்டும். காந்தியின் யோசனைகளைச் சிதறடிப்பது போல் லக்ஷ்மி வந்தாள். ''பம்பாயிலிருந்து எந்த மார்வாடியும் வரவே இல்லை. உன்னிடம் வந்தது ராஜாராமின் பர்சனல் செகரெட்ரி. பத்து ரூபாய்கூட பெறாத ஷேர்களை தந்துவிட்டு உன்னிடமிருந்த நாலு லட்சங்களையும் சுருட்டிக் கொண்டு போய் விட்டான்'' என்றாள்.

காந்தி மௌனமாக இருந்தான். பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. அதுவரையில் சட்ட ரீதியாய் பணம் சம்பாதிப்பதையே லட்சியமாக வைத்திருந்தான். இன்று சட்டரீதியாகவே ஏமாற்றப்பட்டிருக்கிறான். எவ்வளவு சாமர்த்தியமாக, திறமையாக செயல்பட்டு தன்னை வலையில் வீழ்த்தியிருக்கிறார்கள்?

இதில் ராஜாராமுக்குப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை கூட இல்லை. தன்னைப் பழிவாங்க

வேண்டும் என்ற எண்ணம் மட்டும்தான். திரிவேதி, டாடாவாலா, ஃபெர்ணான்டஸ் இந்த மூவரும் அவருடைய ஆட்களே என்றாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

காந்தி எழுந்துகொண்டான். ''வா லக்ஷ்மி! போகலாம்.''

''எங்கே?''

''நம் குடிசைக்குத்தான். அந்த இடம் இன்னும் காலியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு வருவோம்.''

''பந்தயம் முடிந்துவிட்டதா?''

''அதை விட்டுத்தள்ளு. நாம் எல்லாவிதமாகவும் நாசமாகிவிட்டோம்'' என்றான் முறுவலுடன். ஆனால் அந்த முறுவலில் உயிர் இருக்கவில்லை.

''நாம் இரவோடு இரவாய் கார் முதலியவற்றை விற்று பணமாக்கிக் கொள்ளலாமே?'' என்றாள் பிரியம்வதா.

லக்ஷ்மி அவளைக் கூர்ந்து பார்த்தாள். இந்த உரையாடலில் பிரியம்வதா பங்குபெறுவதை லக்ஷ்மி விரும்பவில்லை. கைகளைக் கட்டி சுவற்றில் சாய்ந்தபடி மௌனமாக உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்தான் அனுமந்து.

''ஏன்? நான் சொன்ன யோசனை நன்றாக இல்லையா?'' பிரியம்வதா கேட்டாள்.

''சட்ட ரீதியாக சம்பாதிப்பதாக பந்தயம் கட்டியிருக் கிறேன். இரவோடு இரவாக நான் சொத்துக்களை மாற்றி னால் அது குற்றமாகிவிடும்'' என்றான் காந்தி.

''கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் சட்டமாவது பந்தயமாவது?'' அதுவரையிலும் மௌன மாக இருந்து அனந்து சொன்னான்.

''இதில் பந்தயம் பற்றி பேச்சே இல்லை. இனி நான் ஜெயிப்பேன் என்ற நம்பிக்கையும் இல்லை. இன்னும் ஒன்றரையாண்டில் ஐம்பது லட்சம் சம்பாதித்து பந்தயத்தில் ஜெயிப்பது என்பது கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் எதிர்காலத்தில்கூட சட்டரீதியாக எந்தக் குற்றமும் செய்யாமல் வாழ வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்கும் பந்தயத் திற்கும் சம்பந்தம் இல்லை.''

''நாங்க போய்விட்டு வருகிறோம்.''

அனுமந்து திடீரென்று இப்படிச் சொன்னதும் லக்ஷ்மியும், காந்தியும் வியப்புடன் அவனைப் பார்த் தார்கள்.

அவன் ஓரடி முன்னால் வைத்து, ''ஆமாம். ஏதோ பாலும் நீரும்போல் உங்களோடு சேர்ந்து இருக்கலாம் என்று நினைத்தோம். ஆனால் உங்களுடைய நிலை மையே இப்படி ஆகிவிட்டபோது மேலும் பாரமாக நாங்க இருப்பானேன்? எங்கேயாவது தூர தேசத்திற்கு போய் கஞ்சியோ கூழோ குடித்துக் கொள்கிறோம்'' என்றான்.

காந்தியின் நிலைமைக்கு மிகவும் வருந்துவது போல் வாயால் சொன்னாலும் கண்களில் சந்தோஷம் லேசாக பளிச்சிட்டது. சிறிது சிறிதாக பீரிட்டுக் கொண்டிருந்த அந்த மகிழ்ச்சியை சட்டென்று உணர்ந்து கொண்டவள் லக்ஷ்மி ஒருத்திதான். ஆனால் அது தாங்கள் தோற்றுப்போய்விட்டதால் ஏற்பட்ட சந்தோஷம் என்று நினைத்தாளே தவிர அவன் ராஜாராமின் ஆள் என்பதை புரிந்துகொள்ளவில்லை.

காந்தி அவனிடம், ''எங்கே போகப் போறீங்க?'' என்று கேட்டான்.

''எங்க பழைய வீட்டிற்குத்தான்.''

''நானும் பழைய வீட்டிற்குத்தான்'' என்று சொன்ன காந்தி லக்ஷ்மியின் பக்கம் திரும்பி ''நீ?'' என்றான்.

லக்ஷ்மி திகைத்துவிட்டாள். இந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை. அவன் சொன்னது உண்மைதான். சமுதாயக் கட்டுப்பாடுகளையும் மீறி அவனுடன் இத்தனை நாள் ஒரே வீட்டில் தங்கியிருந்தாள்.

லக்ஷ்மி ஏதோ சொல்ல வரும்முன் அனுமந்து ''அப்போ நாங்க கிளம்புகிறோம்'' என்று மனைவியுடன் சேர்ந்து கிளம்பினான். வாசல்வரை சென்ற பிரியம்வதா திரும்பி காந்தியின் பக்கம் பார்த்தாள். வேதனை கலந்த முறுவலை உதிர்த்துவிட்டு நகர்ந்தாள்.

''உன்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும்.'' காந்தி சொன்னான்.

''எதற்கு?'' வியப்புடன் கேட்டாள் லக்ஷ்மி.

''இத்தனை நாளும் ஒரு லட்சியமும் இல்லாமல் உன்னையும் என்னோடு சேர்ந்து அலைக்கழித்ததற்கு.''

''இதில் எனக்கு இழப்பு எதுவும் இல்லை. மாதா மாதம் சம்பளம்தான் கொடுத்துவிட்டாயே.'' லக்ஷ்மி சொன்னாள்.

''என் வீடு என்று நான் சொன்னது சரியில்லை லக்ஷ்மி. அந்த வீடு உண்மையில் உன்னுடையதுதான். நான்தான் வேறு குடிசையைப் பார்த்துக் கொண்டு போகணும்.''

''குடிசையில் வாழும் அளவுக்கு நாம் தாழ்ந்து விட வில்லை என்பது என்னுடைய எண்ணம்.''

''எப்படி?''

''சமுதாயத்தில் நமக்கு இருக்கும் மதிப்பு, பெரிய பெரிய மனிதர்களுடன் நமக்கு இருக்கும் அறிமுகம்... இதெல்லாம் நமக்கு ஏதாவது ஒரு வேலையைக் கூடவா வாங்கித் தராது?''

''எப்படி?''

''நான் சம்பத்குமாரிடம் போய் வேலை கேட்பதாக வைத்துக் கொள். அவர் நமக்கு...''

''லக்ஷ்மீ!'' என்று கத்தினான் காந்தி. ''நீ சம்பத் குமாரிடம் போவது எனக்குப் பிடிக்கவில்லை. இந்த வேலை விஷயம் மட்டுமே இல்லை, எதற்குமே.''

''ஏன்?''

''எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்.'' சுருக்கமாகச் சொன்னான்.

''அதான் ஏன் என்று கேட்கிறேன்?''

''ஒவ்வொன்றையும் உனக்கு விளக்கமாக சொல்ல வேண்டுமா என்ன?'' அலுத்துக் கொண்டான்.

அவனுடைய சலிப்பைப் பார்த்ததும் அவளுக்குக் கோபம் வந்தது. இருந்தாலும் கட்டுப்படுத்திக் கொண்டு நிதானமான குரலில், ''என்னை இன்னும் பர்சனல் செகரெட்ரியாக வைத்துக் கொள்ளப் போகிறாயா?'' என்று கேட்டாள்.

திடீரென்று அவள் அப்படிக் கேட்டதும் திகைத்துப் போனான். ''பர்சனல் செகரெட்ரியாகவா? என்னிடம் பணம் எங்கே இருக்கு?'' என்றான்.

''நான் உன்னுடைய செகரெட்ரியாக இல்லாத போது என்னைத் தடுக்கும் உரிமை உனக்கு இல்லை'' என்றாள்.

அந்தச் சொல் அவன் மனதில் நுட்பமான இடத்தைத் தாக்கியது. ''போகவேண்டாம் என்று சொல்வதற்குக் கூட சம்பளம் தர வேண்டுமா?'' என்றான் எரிச்சலுடன்.

''தேவையில்லை. வேலைக்குப் போவதற்கு உனக்கு விருப்பம் இல்லாவிட்டால் அதை எனக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் நீ என்னை சம்பத் குமாரிடம் போகக்கூடாது என்று சொன்னால் மட்டும் அதற்கு விளக்கம் தரவேண்டும்.''

''என்னைவிட சம்பத்குமார்தான் உனக்கு உசத்தி யாகி விட்டானா?''

''இதில் உசத்தி தாழ்த்தி என்ற பேச்சு இல்லை. என் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நீ தலையிடும்போது அதற்கான காரணத்தைச் சொல்லியாக வேண்டும்.''

இத்தனை நாளும் சேர்ந்து இருந்தவள் இன்று தன்னை வேற்று மனிதனாக நினைத்துவிட்டாளே என்ற வேதனை துளைத்துக் கொண்டிருந்தது.

லக்ஷ்மியின் எண்ணமே வேறு. இத்தனை நாளும் அவனுக்கு உதவியாக இருந்து வந்தாளே. மனதில் இருப்பதை வெளிப்படையாக சொல்ல ஏன் மறுக் கிறான்? தன்னை வேற்று நபராக எண்ணுவானேன்? அவன் மனதில் இருப்பதை எப்படியாவது அவன் வாயாலேயே சொல்ல வைக்க வேண்டும் என்று தவித் தாள்.

''என்னால் காரணம் சொல்ல முடியாது. நீ மட்டும் நான் சொன்னது போல் செய்துதான் ஆகணும்'' என்றான் தீர்மானமாக.

''நீ சொன்னது போல் நான் நடந்து கொள்ளணும் என்று சட்டம் எதுவும் இல்லையே?'' என்றாள். பிறகு அவன் முகத்தைப் பார்த்ததும் அப்படிச் சொன்னதற்கு வருத்தப்படவும் செய்தாள்.

''அதாவது நம் இருவருக்கும் இடையே பணத்தைத் தவிர வேறு எந்தவிதமான உறவும் இல்லை. அப்படித் தானே.'' கம்மிவிட்ட குரலில் சொன்னான் காந்தி.

''இந்த உலகில் பணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற தியரி என்னுடையது இல்லை, உன்னுடையது.''

''நீ...நீ... என்ன பேசுகிறாயோ புரிந்துதான் பேசுகிறாயா?'' என்றான் கோபமாக.

''புரியாமல் என்ன? உன்னைப் பற்றித்தான் உனக்குப் புரியவில்லை. இத்தனை நாளும் உன்னிடம் இந்த எரிச்சலை நான் கண்டதே இல்லை. நிலைமை தலைகீழானதும் எரிச்சல் அடைவது உத்தம லட்சணம் இல்லை. பணம் உன்மீது எந்த அளவுக்கு பாதிப்பு ஏற்படுத்தியிருக்கிறதோ யோசித்துப் பாரு.''

'இந்த எரிச்சல் நிலைமை தலைகீழானதால் ஏற்பட்டதல்ல. சம்பத்குமார் பற்றி நீ பேச்செடுத்ததால் ஏற்பட்டது' என்று சொல்ல நினைத்தான். ஆனால் அதற்குள் அவள் அறையைவிட்டு வெளியேறிவிட்டாள்.

அவன் மட்டுமே தனித்துவிடப் பட்டான் அறையில். வாசலில் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். பிரியம்வதா!

''அவர் வீடு பார்க்கப் போவதாகச் சொன்னார். பிறகு வந்து சாமான்களை எடுத்துப் போவதாகச் சொன்னார்.''

அவன் மௌனமாக இருந்தான். அவள் வந்து பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு ''ஏன்? என்னவோ போல் இருக்கிறாயே?'' என்று கேட்டாள். அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை.

''பணம் அப்படித்தான் வரும் போகும். அதற்காக இப்படி இடிந்து போய்விடலாமா?''

''நான் அதைப்பற்றி யோசிக்கவில்லை.''.

''பின்னே எதைப்பற்றி?''

'மனிதர்களைப் பற்றி' என்று சொல்ல நினைத்தான், ஆனால் சொல்லவில்லை.

அவன் மௌனத்தை அவள் வேறுவிதமாக புரிந்து கொண்டு அவன் கைமீது கையைப் பதித்தாள். அவன் கையை பின்னால் இழுத்துக் கொள்ளவில்லை. அது ஒரு விதமான சலனமற்றத்தன்மை.

காந்தியின் கையை வருடியபடி, ''நான் ஒரு விஷயம் சொல்லட்டுமா?'' என்றாள்.

''என்ன?'' இயல்பான குரலில் கேட்டான்.

''உன்னைக் கவிழ்க்க நடந்த சூழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட நபர்களைப் பற்றி.''

அவன் சட்டென்று அவள் பக்கம் திரும்பி, ''நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''எனக்குச் சில விஷயங்கள் தெரியும். உனக்குப் பயன்படக் கூடியவை'' என்றாள்.

''எனக்கு பயன்படக்கூடியவையா? அதென்ன?'' பரபரப்புடன் கேட்டான்.

அவன் பரபரப்பைக் கண்டு அவள் முறுவலுடன் உதட்டைக் கடித்தபடி எழுந்து நின்றாள். அவள் தன்

அழகையெல்லாம் ஒன்றாகக் கூட்டி இடுப்பு வளைவில் வெளிப்படுத்துவது போல் ஒய்யாரமாக நின்றாலும் அவன் பார்வை அங்கே ஒரு நிமிடம் கூட பதிய வில்லை.

''விஷயம் சொல்லு ப்ளீஸ்'' என்றான்.

''பிசினெஸ்! உங்களுடன் இருந்ததில் எனக்கும் வியாபாரம் பழகிவிட்டது. எதுவும் பிசினெஸ்தான். பதிலுக்கு என்ன தருவாயோ சொல்லு'' காந்தியின் கையை இரு கரங்களாலும் ஏந்திக் கொண்டாள். ''காந்தி! எனக்குப் பெரிய பெரிய வார்த்தைகள் பேசத் தெரியாது. உன்னை எனக்குப் பிடித்துவிட்டது. ஒரே ஒரு முறை போதும் ப்ளீஸ்'' என்றாள் கெஞ்சுவது போல்.

''என்னது ஒரு தடவை?'' குழம்பிப் போனவனாக கேட்டான்.

''நீ இந்தச் சதியில் எப்படி சிக்கிக் கொண்டாயோ தெரிந்து கொள்ளணும் என்றால் என்னுடன் சமாதானம் செய்துகொள்ளணும். சமாதானம் செய்து கொள்வது என்றால் உனக்குத் தெரியாதா என்ன? உனக்குத்தான் கம்ப்யூட்டர் மூளையாச்சே. நாம் மறுபடியும் சந்தித்துக் கொள்ளாமல் போகலாம். சந்தித்துக் கொண்டாலும் பேசத் தேவையில்லை. இந்த கண்டிஷனுக்கு நானும் சம்மதிக்கிறேன். ஆனால் ஒரே ஒரு முறை...'' என்று அறைக்குள் நுழையப் போனவள் நின்றாள். ''உள்ளே உனக்காக ஐந்து நிமிடம் காத்திருப்பேன். அதற்குள் ஒரு பேப்பரில் நடந்த சூழ்ச்சியைப் பற்றி எழுதி வைக்

கிறேன். அதைத் தெரிந்துகொள்ளவில்லை என்றால் உனக்குத்தான் நஷ்டம். அதற்குள் நீ வந்துவிட்டால் சரி. இல்லையா அந்தப் பேப்பரை நான் எடுத்துக் கொண்டு போய்விடுவேன். சரிதானா?'' உள்ளே போனாள் அவள். உள்ளே மேஜை டிராயரைத் திறந்த சத்தம். பிரியம்வதா பேப்பரில் எழுதத் தொடங்கினாள்.

காந்தி ஹாலில் நின்றபடி யோசித்துக் கொண்டிருந்தான். அவள் என்ன எழுதிக் கொண்டிருக்கிறாள்? அது தனக்கு எந்தவிதமாக பயன்படும்? அது தெரிந்து கொள்ளணும் என்றால் உள்ளே போகணும். உள்ளே போவது என்றால் எதற்கு சம்மதிப்பது என்று அவனுக்குப் புரியாமல் இல்லை. போணுமா வேண்டாமா என்ற யோசனை ஒரு பக்கம். எல்லாம் முடிந்த பிறகு இப்போ தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறோம் என்ற எண்ணம் மற்றொரு பக்கம்.

இங்கே காந்தி இப்படி எதிர்மறையான எண்ணங்களில் மூழ்கியிருந்தபோது அங்கே சம்பத்குமார் வீட்டு டிராயிங் ரூமில் லக்ஷ்மி வேறு விதமான யோசனையில் மூழ்கியிருந்தாள். இன்னும் பத்து நிமிடங்களில் சம்பத்குமார் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரப்போவதாக செய்தி வந்தது. காந்தி சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவள் நினைவுக்கு வந்தன. தான் ரொம்ப அவசரப்பட்டுவிட்டதாக லக்ஷ்மிக்குத் தோன்றியது. 'நான் உன்னுடைய பர்சனல் செகரெட்ரி இல்லை என்பதால் என்னைக் கட்டுப்படுத்தும் உரிமை உனக்கு இல்லை' எவ்வளவு கடுமையாக பேசியிருக்கிறாள்! அதைக்

கேட்டதும் காந்தியின் முகம் எப்படி மாறியதோ நினைவுக்கு வந்தபோது சிரிப்பு வந்தது. இனி அங்கே இருக்க பிடிக்கவில்லை.

பத்து நிமிடங்கள் கழித்து ஆபீஸிலிருந்து வந்த சம்பத்குமாருக்கு டிராயிங் ரூம் காலியாகத் தென்பட்டது.

★ ★ ★

காந்தி வாசலில் நின்றுகொண்டு ''என்ன எழுதுகிறாய்?'' என்று கேட்டான்.

எழுதி முடித்த பேப்பரை மடித்து வைத்துக் கொண்டே, ''அத்தனை சுலபமாகச் சொல்லிவிடமாட்டேன்.'' என்றாள் பிரியம்வதா. ''லக்ஷ்மி எங்கே போனாள்?''

லக்ஷ்மியைப் பற்றி பேச்சு வந்ததுமே அவன் முகம் இறுகிவிட்டது. ''வேலையைத் தேடிக்கொள்ள'' என்றான் வெறுப்புடன். அவள் பேனாவை மூடிக் கொண்டிருக்கும்போது, ''எங்கே? அந்தப் பேப்பரை இப்படிக் கொடு'' என்று கையை நீட்டினான். அவன் முன்னோக்கி அடியெடுத்து வைத்ததுதான் தாமதம். அவள் அவனைத் தாண்டிக் கொண்டுபோய் கதவைத் தாழிட்டுவிட்டாள். பின்னாலிருந்து அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டு, ''உனக்காக எத்தனை நாளாக காத்திருக்கிறேன் தெரியுமா?'' என்றாள்.

காந்தி மௌனமாக இருந்தான். அவள் விட்ட மூச்சுக் காற்று அவன் கழுத்தில் சூடாகப் படிந்தது.

''என்ன யோசிக்கிறாய்?''

''ஷேரின் விலை அந்த மாதிரி கிடுகிடுவென்று ஏறிக்கொண்டே போனபோது கூட இதெல்லாம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் ஏமாற்று வேலை என்ற சந்தேகம் எனக்கு ஏன் வரவில்லை?'' என்றான் யோசித்தவாறே.

அவள் சட்டென்று அவனைச் சுற்றியிருந்த கைகளை விலக்கிவிட்டு ஓரடி பின்னால் நகர்ந்தாள். இதெல்லாம் அவன் தன்னை அவமானப்படுத்துவதற்காக மேற்கொண்ட நடிப்போ என்ற சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் உண்மையிலேயே யோசனையில் மூழ்கியிருப்பதை உணர்ந்து வியப்படைந்தாள். இது அவனுக்கு முதல் அனுபவம் என்று அவளுக்குத் தெரியும். முதல் ஸ்பரிசத்தில் கூட அவன் கொஞ்சம் கூட நெகிழ்ந்து போகாமல் வேறு யோசனையில் மூழ்கியிருக்கிறான் என்றால்! முற்றிலும் துறந்த முனிவர்கள் காடுகளில் மட்டும்தானா? சாதாரண மனிதர்களுக்கு நடுவிலும் இருப்பார்கள்.

''என்னை மன்னித்துவிடு'' என்றான் காந்தி, அவள் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டவன் போல்..

புரியாதவள் போல் பார்த்தாள்.

''நான் ஒன்றும் ரிஷ்ய சிருங்கர் இல்லை. ராமனை போல் ஏகபத்னிவிரதம் கடைப்பிடிக்கணும் என்ற கொள்கையும் எனக்கு இல்லை. ஆனால் எந்தக் காரியத்தைச் செய்தாலும் பரிபூரணமாக செய்ய வேண்டும் என்பது என் உத்தேசம். நம்முடைய இந்தச் சந்திப்பு

குறைந்த பட்சம் உனக்காவது திருப்தியைத் தரும் என்று நான் நினைக்கவில்லை. என் மனம் இங்கே இல்லை. என்னை மன்னித்துவிடு.''

அவன் முகத்தை ஏறிட்டு நோக்கியவள், பிளவுசுக்குள் மறைத்து வைத்திருந்த பேப்பரை எடுத்து அவனிடம் நீட்டினாள். ''நாம் மறுபடியும் சந்திக்காமல் போகலாம். போய் வருகிறேன் காந்தி'' என்றாள். கதவைத் திறந்துகொண்டு ஹாலைத் தாண்டி வெளியே போனவள் இருளில் மறைந்துவிட்டாள்.

காகிதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு அவள் போன திசையைப் பார்த்தபடி அறையைவிட்டு வெளியே வந்தான். ஹால் நடுவில் சோபாவில் கைகளைக் கட்டிக் கொண்டு சிலையாய் அமர்ந்திருந்த பெண்ணுருவத்தைக் கண்டதும் கல்லாகச் சமைந்துவிட்டான்.

அந்தப் பெண் லக்ஷ்மி!

முதலில் பேசியது காந்திதான். ''வேலை விஷயம் என்ன ஆச்சு?''

லக்ஷ்மி பதில் பேசவில்லை.

சூழ்நிலையை எளிதாக மாற்றும் முயற்சியில் லேசாக முறுவலித்துக் கொண்டே, ''உன் ஒருத்திக்குத் தானா இல்லை எனக்கும் வேலை தருவதாக சொன்னாரா?'' என்று கேட்டான். அதற்கும் அவள் பதில் சொல்லவில்லை. அவனுக்குக் கோபம் வந்தது. அவள் தன்னை ஒரு குற்றவாளியைப் போல் பார்ப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''உள்ளே என்ன நடந்தது?'' நேராக கேட்டாள்.

''என்ன நடந்தால் உனக்கென்ன?''

''என் கேள்விக்கு பதில் இது இல்லை.''

''அப்படி என்றால் சொல்கிறேன். கேட்டுக் கொள். எவ்வளவோ நடந்தது.''

''என்ன?''

''உனக்கும் சம்பத்குமாருக்குமிடையே வேலை விஷயமாக என்ன நடந்ததோ, அதுவேதான்.''

அவள் கை எவ்வளவு வேகமாக மேலே எழும்பிய தென்றால்... அது மட்டும் தாக்கியிருந்தால் அவன் கன்னம் அப்பம் போல் வீங்கியிருக்கும். அவள் கையை அப்படியே பிடித்துக் கொண்டு நின்றுவிட்டான். அவள் ஆவேசமாக மூச்சிரைத்தபடி நின்றாள். அவனுக்குத் தான் அதிகமாக பேசிவிட்டோமோ என்று தோன்றியது. தவறை உணர்ந்து உடனே திருத்திக் கொள்ளும் முயற்சியில் ''இதற்கெல்லாம் காரணம் நீ எழுதிய ரிப்போர்ட் தான்'' என்றவன் பழைய பையிலிருந்து ஒரு பேப்பரை எடுத்துப் பேனாவால் கோடிட்டு அவள் முன்னால் தள்ளினான். அது அவளுடைய கையெழுத்துத்தான். சம்பத்குமார் பற்றி அவள் எழுதித் தந்த ரிப்போர்ட்.

'சம்பத்குமார் பெண்பித்தன் என்ற வதந்தி இருக்கிறது. நல்ல பர்சனாலிடி, பதவி, அந்தஸ்து இவற்றால் பெண்களைச் சுலபமாக வசப்படுத்திக் கொண்டு விடுவான் என்று சொல்லப்பட்டாலும், உண்மை அது இல்லை. பெண்கள்தான் அவன்பால் கவரப்படுகிறார்கள்.'

அந்த வரிகளைப் படிக்கும்போது அவள் இதழ் களில் முறுவல் மலர்ந்ததைக் கவனித்து அவன் நிம்மதி யாக மூச்சு விட்டுக் கொண்டான்.

''பெண்களிடம் உனக்கு இவ்வளவு தாழ்வான அபிப்பிராயம் இருப்பதைக் கண்டு வருந்துகிறேன்.'' லக்ஷ்மி சொன்னாள்.

''ஆண்களிடம் உனக்கு இவ்வளவு தாழ்வான அபிப் பிராயம் இருப்பதைக் கண்டு நானும் வருந்துகிறேன்.'' என்றான்.

அவள் மறுபடியும் சண்டை போடுவதற்கு தயா ராகிக் கொண்டிருந்தபோது வாசலில் அரவம் கேட்டது. லாலா உள்ளே வந்தார். அவரைப் பார்த்ததும் காந்திக்குத் தான் இருந்த நிலைமை நினைவுக்கு வந்தது. முகம் வாடி விட்டது.

''வாங்க லாலாஜீ'' என்று வரவேற்றான்.

''இரண்டு நாளாக நான் ஊரில் இல்லை. உங்களுக் குத் தெரிந்திருக்குமே T.F.T. கம்பெனி திவாலாகிவிட்ட விஷயம்?'' லாலா கேட்டார்.

''தெரியும். ஷேருக்கு எவ்வளவு வரும்?''

''ஒன்றும் வராமல் போகலாம். கடனைத் தீர்க்கவே போதும் போறாததுமாக இருக்கும்.''

''மிகப் பெரிய மோசடி.''

''ஆமாம் மோசடிதான். இதனால் யாருக்கு நன்மை கிடைத்ததென்று புரியவில்லை. மக்களை ஏமாற்றுவதற்

காக எக்கசக்கமாக ஷேர்களை விற்றார்களா என்றால் அதுவும் இல்லை.''

''அப்படி விற்று இருந்தாலும் கேஸ்போட் வாய்ப்பு இருக்குமோ என்னவோ?'' காந்தி சொன்னான்.

லாலாஜி கையிலிருந்த பைலை மேஜை மீது வைத்துக் கொண்டே, ''இப்போ நாம் என்ன செய்யப் போகிறோம்?'' என்றார்.

''செய்வதற்கு இன்னும் என்ன பாக்கியிருக்கிறது லாலாஜி?''

''அப்படி என்றால்?''

''ஷேர் வியாபாரம் செய்ய என்னிடம் பணம் இல்லை. இன்னும் வெளிப்படையாக சொல்லணும் என்றால் இனி நான் உங்களுடன் எந்த வியாபாரமும் செய்ய முடியாது.''

''அப்படிச் சொல்லாதீங்க. உங்களைப் போன்ற திறமைசாலிகள் இந்தத் துறையிலிருந்து விலகிவிட்டால் எப்படி?''

''எனக்கு வேறு வழி தெரியவில்லை.''

''குறைந்த பட்சம் ஒரு லட்சமாவது இதில் போடுங்கள். நான் சிபாரிசு செய்த ஷேர்கள் ஒருநாளும் உங்களை ஏமாற்றாது.''

''உங்கள் மீது நம்பிக்கை இல்லாமல் இல்லை. ஆனால் ஒரு ரூபாய்கூடப் போடும் நிலையில் நான் இல்லை.''

லாலா எழுந்து நின்றார். ''அப்படி என்றால் அந்தப் பணத்தை எல்லாம் என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''எந்தப் பணம்?''

''உங்களுடைய T.F.T. ஷேர்களை விற்றதில் கிடைத்த பணம்.''

காந்தி ஒரே துள்ளலில் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். ''T.F.T. ஷேர்களை விற்றதில் கிடைத்த பணமா?'' என்றான்.

லக்ஷ்மி புரியாதவள் போல் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மூன்று நாட்களுக்கு முன்னால் நீங்கதானே இருக்கிற ஷேர்களை எல்லாம் விற்றுவிடச் சொல்லி கடிதம் அனுப்பியிருந்தீங்க?'' லாலா பைலைப் பிரித்த படி சொன்னார்.

''வாட்!'' காந்தி உரத்த குரலில் கத்திவிட்டான். உணர்ச்சியின் கொந்தளிப்பில் நடுங்கும் விரல்களை கட்டுப்படுத்திக் கொள்ள நாற்காலியின் விளிம்புகளை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

லாலா பையிலிருந்து ஒரு காகிதத்தை உருவி நீட்டினார். ''இதோ உங்கள் கடிதம். கடிதத்தில் அர்ஜெண்ட் என்று குறிப்பிட்டதைப் பார்த்துவிட்டு அன்று மாலையே எல்லா ஷேர்களையும் விற்று விட்டேன். ஏன் திடீரென்று இந்தமாதிரி விற்கச் சொன்னீங்கன்னு ஆச்சரியம் கூட ஏற்பட்டது. அதுவும் ஷேர் விலை வேகமாக உயர்ந்து கொண்டிருக்கும்போது

ஆனால் நேற்று காலையில் டில்லியில் பேப்பரில் பார்த்தேன். உங்களுக்கு ஏதாவது துப்பு கிடைத்திருக்கும். அதான் விற்கச் சொல்லியிருக்கீங்க. உண்மையிலேயே உங்களுடைய புத்திசாலித்தனத்தை பாராட்டத்தான் வேண்டும். மயிரிழையில் போண்டியாவதிலிருந்து, தப்பித்து விட்டீங்க.''

லாலாவின் வார்த்தைகள் காந்தியின் காதுகளில் விழவில்லை. அவன் யோசனைகள் வேறு எங்கேயோ இருந்தன.

ஹோட்டலில் ஹரரிகா சொன்ன வார்த்தைகள்!

''அவசரப்பட்டு யாருக்கும் வாக்குத் தரக்கூடாது. பிசினெஸ்ஸில் யாரையும் கட்டிய மனைவியாக இருந்தாலும் சரி நம்பக் கூடாதுன்னீங்க. ஆனால் என்னை நம்பி வெள்ளைத் தாளில் கையெழுத்துப் போட்டுத் தந்துட்டீங்களே?''

காந்தி கையிலிருந்த பேப்பரைப் பார்த்தான். 'தாங்க்யூ ஹாரிகா! தாங்க்யு.'

லால சொல்லிக் கொண்டிருந்தார். ''ஒரு ஷேர் இருபத்தி ஐந்து ரூபாய் வீதம் விற்றேன். மொத்தம் எட்டு லட்சம்.''

காந்திக்குப் புரிந்துவிட்டது. ஹாரிகாதான் உதவி செய்திருக்கிறாள். தந்தை யாருடனோ ரகசியமாகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கேட்டிருப்பாள். அல்லது தந்தையின் திட்டத்தை வேறு விதத்தில் தெரிந்து கொண்டிருப்பாள். கடைசி நேரத்தில்

எல்லோரும் கைவிட்ட சமயத்தில் தன்னைக் காப்பாற்றிய அந்தப் பெண்ணிற்கு அவன் எவ்விதமாக கைமாறு செய்யப் போகிறான்?

''காந்தீ! என்ன யோசிக்கிறாய்?''

யோசனையிலிருந்து மீண்டவனாய் லக்ஷ்மியின் பக்கம் பார்த்தான். ''லாலா போய்விட்டாரா?''

''ஊம். என்ன நடந்தது?''

காந்தி ஒன்றும் சொல்லாமல் கையிலிருந்த இரண்டாவது காகிதத்தைப் பிரித்தான். பிரியம்வதா எழுதியது அது.

'மைக்கா கிடைப்பது பற்றிய செய்தியை சிவப்பு பேனாவால் கோடிட்டது என் கணவர்தான். இந்த குறிப்பு போதும்னு நினைக்கிறேன்.'

காந்தியின் புருவங்கள் முடிச்சேறின. கொஞ்சம் கூட சந்தேகம் வராதபடி கோட்டைக்குள் புகுந்த எதிரி நீதானா அனுமந்து!

காந்தி அந்த காகிதத்தை மடித்து வைத்துக் கொண்டிருக்கும் போது அனுமந்து பரபரப்புடன் உள்ளே நுழைந்தான்.

''நல்ல வீடு கிடைத்துவிட்டது. ஆனால் நாங்க மட்டும் தனியாக போவது நன்றாக இருக்காது. இத்தனை நாளும் என் தங்கைக்கு ஆதரவு கொடுத்தீங்க. அந்த நன்றியில் கேட்கிறேன். நீங்களும் எங்களுடன் வந்து இருங்களேன்.''

காந்தியின் இதழ்களில் முறுவல் படர்ந்தது. அதற்குள் ராஜாராமுக்குத் தான் பணத்தை முற்றிலும் இழந்துவிடவில்லை என்று தெரிந்துவிட்டது போலும். அதனால் அனுமந்துவை மறுபடியும் அனுப்பி வைத்திருக்கிறார்.

''உங்களுடைய அழைப்புக்கு நன்றி. நல்ல வேளையாக எனக்கு வியாபாரத்தில் நஷ்டம் வரவில்லை. இந்த வீட்டிலேயே இருப்போம். மறுபடியும் இன்னொரு வீடு எதுக்கு?'' என்றான் காந்தி முறுவல் மாறாமல்.

அனுமந்து போலி வியப்பைக் காட்டியபடி ''உண்மையாகவா? எவ்வளவு நல்ல செய்தியைச் சொல்லியிருக்கீங்க. சரி அப்படியே செய்து வருகிறேன்'' என்றான். அவன் நடிப்பு முகத்திலேயே வெளிப்படையாக தென்பட்டுக் கொண்டிருந்தது.

9

வாழ்க்கையில் சில சம்பவங்கள் விநோதமாக நிகழ்ந்து விடுகின்றன. சிலவற்றின் பாதிப்பு வாழ் நாளெல்லாம் இருக்கும். சில நிகழ்ச்சிகள் வாழ்க்கை யின் போக்கையே மாற்றி விடக்கூடியவை.

ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டவாறு காரை ஓட்டிக் கொண்டிருந்தான் காந்தி. யாரோ ஒருவன் காருக்கு முன்னால் வந்து மோதிக் கொண்டு விழுந்தபோதுதான் அவன் யோசனை சிதறியது.

கீழே விழுந்த இளைஞனுக்கு முழங்கையில் இலே சாக அடிபட்டு ரத்தம் வந்து கொண்டிருந்தது. மக்கள் கும்பலாக கூடி ரகளை செய்யும் முன்பே அவனை எழுப்பிக் கையைப் பிடித்து காருக்குள் உட்கார வைத் தான்.

''சாரி. பார்க்காமல் ஓட்டி வந்து விட்டேன். வாங்க ஆஸ்பத்திரிக்குப் போகலாம்.''

அவனுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம். அதற்குள் தலைமுடி நரைத்து விட்டதோடு, எண்ணெய்ப் பசை யின்றி தேங்காய் நாராய் காட்சியளித்தது. சட்டையின் கிழிசல்கூட தைக்கப்படாமல் இருந்தது.

''தவறு என்னுடையதுதான். ஏதோ யோசனையில் சாலையின் நடுவில் நடந்து கொண்டிருந்தேன்'' என்றான் அவன்.

காரில் போகும்போது அந்த இளைஞனின் பெயர் வித்யார்த்தி என்று தெரிந்து கொண்டான் காந்தி. வித்யார்த்தி ராஜாராம் நடத்தி வந்த காகிதத் தொழிற் சாலையில் பிளாண்ட் இன்சார்ஜ் ஆக பணிபுரிந்து வந்தான். மலிவு விலையில் பேப்பரைத் தயாரிக்க முடியும் என்று அவன் சொன்னதை மேனேஜ்மெண்ட் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தத் திட்டம் பலித்து விட்டால் தங்களுடைய தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பேப்பர்களை மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்க முடியாமல் போய்விடும். எனவே ராஜாராம் வித்யார்த்தியை வேலையிலிருந்து நீக்கி விட்டார்.

இந்த விவரமெல்லாம் தெரிந்தபிறகு காந்தியின் மனதில் ஒரு திட்டம் உருவாயிற்று.

''பேப்பரை கண்ட்ரோல் செய்வதற்கு தனியாக போர்ட் இருக்கிறதே. ராஜாராம் கள்ள மார்க்கெட்டில் எப்படி விற்க முடியும்?'' காந்தி கேட்டான்.

''ராஜாராம் தன் செல்வாக்கினாலும், பணத்தாலும் எல்லோரையும் விலைக்கு வாங்கி விட்டார்.''

கார் முனையில் திரும்பிக் கொண்டிருந்தது.

''இங்கேயே இறக்கிவிடுங்க. ஆஸ்பத்திரிக்குப் போகத் தேவையில்லை'' வித்யார்த்தி சொன்னான்.

''நாம் ஆஸ்பத்திரிக்குப் போகவில்லை.''

''பின்னே?'

''எங்க வீட்டுக்கு.''

★ ★ ★

''மறுபடியும் இன்னொரு சதித்திட்டத்தில் மாட்டிக் கொள்ளப் போகிறாய். இந்த வித்யார்த்தி ராஜாராமின் ஆளாக இருந்தாலும் இருக்கும்'' லக்ஷ்மி சொன்னாள்.

காந்தி சிரித்தான். ''எனக்கும் அந்தச் சந்தேகம் வந்தது. ஆனால் நான் முடிவு செய்து விட்டேன்.''

''ஒருமுறை பட்டு அனுபவித்த பிறகுமா?''

''அதற்காக எந்த ரிஸ்கும் எடுத்துக் கொள்ளா விட்டால் எப்படி? யோசித்துப் பாரு லக்ஷ்மி! என் பந்தயம் ஐம்பது லட்சம் சம்பாதிப்பது மட்டுமே இல்லை. கெடு முடிவதற்குள் ராஜாராமுக்கு சரியான பாடம் கற்பிப்பதும் தான். அத்தனை பெரிய வேலையை மேற்கொண் டிருக்கும் போது இந்த அளவுக்கு ரிஸ்க் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.''

இரண்டு நாள் தனியாக யோசனையில் கழித்தான் காந்தி. ரொம்ப ஆபத்தான திட்டம் அது. எங்கேயாவது சற்று பிசகிவிட்டாலும் சரி முதலுக்கே மோசம் வந்து விடும்.

ஆனாலும் அவன் ரிஸ்க் எடுத்துக் கொள்ள முடிவு செய்து விட்டான். தான் எதிர்த்து நிற்கப் போகும் நபர் சாமானியமானவன் இல்லை என்றும், தான் எப்படி திட்டம் தீட்டுகிறானோ அதைவிட இருமடங்கு புத்தி சாலித்தனத்துடன் திட்டம் தீட்ட வல்லவன் என்றும் காந்திக்குத் தெரியும். அது மட்டுமே இல்லை. தன்னை விட அவருக்கு வாழ்க்கையிலும், பண விவகாரங் களிலும் அனுபவம் அதிகம் என்றும் தெரியும்.

காந்தி ராஜாராமைப் பற்றி முழுவதுமாக ஸ்டடீ செய்தான். எந்தெந்த இடங்களில் எவ்வளவு பணம் முதலீடு செய்திருக்கிறார் போன்ற விவரங்களை அறிந்து கொண்டான். தான் ராஜாராம் பற்றி துப்பு துலக்குவது போலவே அவரும் தன்னைப் பற்றி விவரங்களைச் சேகரித்து வருகிறார் என்று தெரியும். ஆனால் தன்னை வேவு பார்க்க அவரால் நியமிக்கப்பட்ட ஆள் அனுமந்து தான் என்று தெரிய வந்தது நல்லதாகிவிட்டது.

''பணத்தை எல்லாம் வங்கியில் போட்டுவிட்டு சும்மா இருக்கீங்களே. உங்களைப் போன்ற புத்திசாலிகள் இப்படி வெறுமே இருப்பது அழகே இல்லை'' என்றான் அனுமந்து.

''நான் சும்மா இல்லை. ஒரு பெரிய பிராஜெக்ட் செய்து கொண்டிருக்கிறேன்'' காந்தி சொன்னான்.

''என்ன பிராஜெக்ட்? '' பரபரப்புடன் கேட்டான் அனுமந்து.

''பேப்பர் மில் தொடங்கப் போகிறேன். உங்க தங்கையின் பெயரில்தான். லக்ஷ்மி பேப்பர் மில்ஸ்'' அனுமந்துவின் முகத்தை உற்றுப்பார்த்தபடி சொன்னான். அந்தச் செய்தி உடனே ராஜாராமுக்கு எட்டிவிடும் என்று அவனுக்குத் தெரியும். அதுபோலவே எட்டவும் செய்தது.

★ ★ ★

சிவ கைலாஸ் பாங்க் லிமிடெட் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டது. மிகச்

சிறிய வங்கி அது. மொத்தம் எழுபது கிளைகள் மட்டுமே இருந்தன. மக்கள் அவற்றில் பணம் பெரிய அளவிலேயே போட்டிருந்தார்கள். சுமார் ஐம்பது லட்சம் முதலீட்டுடன் இயங்கிய சிவகைலாஸ் வங்கியில் டிபாசிட்டுகள் முப்பது கோடி வரையிலும் இருந்தன. பெரும்பாலான கடன்கள் டைரக்டர்களின் உறவினர் களுக்கும் வேண்டியவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தன. ஒரு விதமாக சொல்லப் போனால் இது டைரக்டர்கள் தங்களுடைய தேவைகளுக்காக, தமக்குத் தாமே நடத்தும் நிறுவனம். ஆனால் பணம் மட்டும் மக்களுடையது.

அப்பாவி மக்களுக்கு எதுவும் தெரியாது. அவர் களுக்குத் தெரிந்ததெல்லாம் வங்கியில் போட்டால் தங்களுடைய பணம் பத்திரமாக இருக்கும், வட்டியும் கிடைக்கும். அவ்வளவுதான். வேடிக்கை என்ன வென்றால் கடந்த பத்து ஆண்டுகளாக சிவகைலாஸ் வங்கிக்கு லாபங்கள் அதிகமாக வரவில்லை. நூறுரூபாய் ஷேர் மார்க்கெட்டில் ஐம்பது ரூபாய்க்கு இறங்கி விட்டது. ஆனால் இது வெறும் ஸ்டாடிஸ்டிக்ஸ் மட்டும் தான். வங்கியை நிறுவியவர்களே வரியைக் கட்டாமல் இருப்பதற்காக தங்களுடைய கறுப்புப் பணத்தை ஷேர் களாக முதலீடு செய்து கடன் என்ற பெயரில் திரும்பப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

புதிய பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டதும் சின்னச் சின்ன வங்கிகளை அரசுடமை ஆக்கப் போவ தாக வதந்தி பரவியது. உடனே ஷேரின் விலை இருநூறு

ரூபாய் ஆகிவிட்டது. ஆனால் நல்லதை வரவேற்கத் தெரியாத எதிர்க்கட்சியினர் அந்த பார்ட்டியை வீழ்த்தி விட்டார்கள். பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டிய தாயிற்று. உடனே ஷேரின் விலை நாற்பதுக்கு இறங்கி விட்டது. இந்தச் சின்ன மாற்றத்தைத் தவிர நாடு வழக்கம்போல் இயங்கிக் கொண்டிருந்தது. எப்போதும் போல் மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

சிவகைலாஸ் வங்கியின் நிர்வாகத்தில் மட்டும் இதன் தாக்கம் வேறு விதமாக இருந்தது. வங்கியின் முதலீட்டையும், நிர்வாகத்தையும் இரு டைரக்டர்கள் கவனித்து வந்தார்கள். ஐம்பது லட்சம் முதலீட்டுப் பணத்தில் சுமார் முப்பது லட்சங்கள் அவர்களுடையது தான். எஞ்சிய இருபது லட்சங்கள் அப்பாவி மக்களுடையது. எப்பொழுதோ வாங்கிய ஷேர்களை என்ன செய்வது என்று புரியாமல் குழம்பிக் கிடக்கும் ஜனங்களுடையவை.

ஷேரின் விலை நாற்பது ரூபாய்க்கு இறங்கிய அந்த நேரத்தில் ஒரு நபர் ஏறத்தாழ பாதி ஷேர்களை விலைக்கு வாங்கிக் கொண்டு மக்களுக்கு நிம்மதியைத் தேடி தந்தார். பிறகு அதே நபர் சிவகைலாஸ் வங்கியின் டைரக்டர் பதவியை ஏற்றுக் கொள்ளவும் செய்தார். அந்த நபரின் பெயர் என்.எல்.த்ரிபுரா.

★ ★ ★

''உங்க வங்கிக்கு புது டைரக்டர் வந்திருக்கிறாராமே?'' ராஜாராம் விசாரித்தார்.

வங்கியின் மற்ற இரு டைரக்டர்களும் இருந்தார்கள்; அங்கே பார்ட்டி நடந்து கொண்டிருந்தது.

''யாரந்த டைரக்டர்?''

''பெயர் த்ரிபுரா. வட இந்தியாவைச் சேர்ந்தவள்.'' டாடாவாலா சொன்னார். இரண்டு டைரக்டர்களில் அவர் ஒருவர். மற்றொருவர் டைரக்டர் ஃபெர்ணான்டஸ். இந்த இருவர்தான் T.F.T. என்ற கம்பெனியைத் தொடங்கி காந்தியை நடுத்தெருவுக்கு கொண்டு வர முயன்றவர்கள்.

''வெளி நபரை ஏன் டைரக்டராக வரவிட்டீங்க? நம்ம ஆட்களையே போட்டிருக்கலாமே?'' ராஜாராம் கேட்டார்.

''அந்தம்மா நம்ப விவகாரங்களில் தலையிட மாட்டாங்க. அவளுடைய தந்தை பெரிய எண்ணெய் கம்பெனியின் முதலாளி. வெளிநாட்டுக்குப் போகும் முன்னால் அனுபவம் கிடைக்கட்டுமே என்று இங்கே சேர்த்திருக்கிறார்.''

''இந்த விவரமெல்லாம் உனக்கு எப்படித் தெரியும். அதற்குள்ளே அவளை சினேகம் பிடித்து விட்டாயா?

டாடாவாலா திடுக்கிட்டார். ''செ... செ... அதெல்லாம் இல்லை'' என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தார். டாடாவாலாவுக்கு பெண்கள் என்றால் ஒருவித பலவீனம் இருந்தது. ஆனால் டயாபிடிஸும், பி.பி.யும் இருந்ததால் வெறும் பேச்சுடன் நிறுத்திக் கொள்வார். உண்மை

யில் பத்து நாட்களுக்கு முன்புதான் அவர் த்ரிபுராவுடன் டின்னர் சாப்பிட்டார்.

★ ★ ★

"சும்மா ஐந்தாறு மாதங்கள் அனுபவம் கிடைக் கட்டுமே என்றுதான் அப்பா இங்கே வேலை பார்க்கச் சொன்னார். எனக்கு இந்த வங்கி நிர்வாகத்தில் அவ்வளவு ஆர்வமில்லை. ஏதோ உங்களைப் போன்ற வர்களுடன் வேலை செய்தால் ஓரளவுக்கு வேலை கற்றுக் கொள்ள முடியும் இல்லையா. கொஞ்சம் ஸ்வீட் போட்டுக் கொள்ளுங்கள்." த்ரிபுரா உரிமையுடன் பரி மாறினாள். "அப்பாவுக்கு நான் ஒரே வாரிசு. அதான் தன்னுடைய பிசினெஸ் விவகாரங்களை என்னை கவனிக்கச் சொல்கிறார். அதற்கு முதல் படியாகத்தான் இந்த டைரக்டர் பதவி. நீங்க எல்லோரும் இருப்பதால் கொஞ்சம் தைரியமாக இருக்கிறேன். இல்லாவிட்டால் இந்த சின்ன வயதில் டைரக்டராக இருப்பதாவது?"

"வயதுக்கும், பதவிக்கும் சம்பந்தம் இல்லை." டாடாவாலா சொன்னார்.

"அப்படித்தான் என்கிறீர்களா? தாங்க்ஸ்" என்று முறுவலித்தாள் த்ரிபுரா. டாடாவாலாவுக்கு நினைவு தப்பி விடும்போல் இருந்தது.

"உத்திர பிரதேஷ் மாநிலத்தில் ஒரு எண்ணெய் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று நினைக் கிறேன். உங்க அப்பாவிடம் பேசணும்." அந்த மயக்கத் திலும் டாடாவாலா தன்னுடைய வியாபாரத்தை மறக்க வில்லை.

''அனுபவக் குறைவினால் நான் ஏதாவது தவறு செய்தால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே'' கெஞ்சுவது போல் சொன்னாள் த்ரிபுரா.

''நீங்களும் எங்க ஹைப்பீ போல் ஒரு டைரக்டர். நாங்க உங்களைக் கோபித்துக் கொள்வதாவது? ஃபெர்ணான்டஸிடமும் சொல்லி வைக்கிறேன்.''

''வேண்டாம். வேண்டாம். நாம் இப்படி சேர்ந்து டின்னர் சாப்பிட்டது யாருக்கும் தெரிய வேண்டாம். பிறகு அப்பா வரையிலும் விஷயம் போய்விடும். அப்பா அந்தக் காலத்து ஆசாமி. அவருக்கு இதெல்லாம் பிடிக்காது. அதோடு...'' வார்த்தையை முடிக்காமலேயே மோகனப் புன்னகையை உதிர்த்தாள். அந்தப் புன்னகையில் டாடாவாலா முழுவதுமாக சரணாகதி அடைந்து விட்டார்.

த்ரிபுரா கேட்டாள். ''நம் வங்கியில் ராஜாராம் என்பவருக்கு பங்கு இருக்கிறதா?''

''டைரக்டர்களுக்கு வங்கி நேரடியாக கடன் தரக் கூடாது. அதனால் ராஜாராம் திரைமறைவில் இருந்து கொண்டு மற்ற டைரக்டர்களை தோல் பொம்மை போல் ஆட்டுவிப்பார்.''

''ராஜாராமை உங்களுக்குத் தெரியுமா?'' டாடாவாலா கேட்டார்.

''எங்க அப்பாவுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கு.''

''இனி கிளம்புவோமா?'' டாடாவாலா எழுந்து கொண்டார்.

''ஷ்யூர்.''

டாடாவாலா பில்லை தரப் போனார். ''ப்ளீஸ். என் மகிழ்ச்சிக்காக'' த்ரிபுரா நளினமாக அவருடைய கையை விலக்கிவிட்டு பில்லைக் கொடுத்தாள். அந்தத் தொடு கையில் அவருடைய மனம் வசமிழந்து விட்டது.

★ ★ ★

''அவளுடைய அப்பா கூட உங்களுக்குத் தெரிந் தவர்தானாமே.''

''அப்படியா? அவருடைய பெயர்?'' ராஜாராம் கேட்டார்.

''பெயர் கேட்டுக் கொள்ள மறந்து விட்டேன்.''

''அது போகட்டும். காந்தியைப் பற்றி ஒரு முக்கிய மான செய்தி கிடைத்தது.''

''என்ன செய்தி?''

''ஊட்டிக்கு நூறு கி.மீ. தொலைவில் அவன் ஒரு காகிதத் தொழிற்சாலையை நிறுவப் போகிறானாம். மிக ரகசியமாக வேலைகள் நடந்து வருகின்றனவாம். இந்தத் தொழிற்சாலைக்காக அவன் நம்மிடம், அதாவது சிவ கைலாஸ் வங்கிக்கு வரப்போகிறான், ஏறத்தாழ ஐம்பது லட்சம் கடன் வாங்க.'' ராஜாராம் ஒரு நிமிடம் நிறுத் தினார்.

''இந்த விவகாரத்தில் அவனை அடியோடு வீழ்த்தணும். அவ்வளவுதானே'' டாடாவாலா சொன்னார்.

''நாம் கடன்தர மறுத்து விட்டால் விஷயம் முடிந்தது'' என்றார் ஃபெர்னாண்டஸ்.

ராஜாராம் சிரித்தார். ''நாம் தரவில்லை என்றால் இன்னொரு வங்கிக்குப் போவான். நாம் எப்படி தடுக்க முடியும்? அவனுக்கு ஆட்டம் காட்ட வேண்டும். ஆனால் கடன் தரக்கூடாது. ஆசை காட்டி நன்றாக அலையவைக்க வேண்டும். அதற்குள் மற்ற கடன்காரங்களும், கடன் கொடுத்த நிறுவனங்களும் அவன்மீது படையெடுத்து வரும்படி செய்ய வேண்டும். பணம் சம்பாதிப்பது அவ்வளவு சுலபம் இல்லை என்று புரிந்து கொண்டு அவனாகவே ஓடிப்போகும்படி செய்ய வேண்டும்.''

''ரொம்ப நல்ல யோசனை.''

''அவனுடைய கடன் அப்ளிகேஷன் அடுத்த போர்ட் மீட்டிங்கில் வைக்கப்படுமாம். கம்பெனியின் பெயர் 'லக்ஷ்மி பேப்பர் மில்ஸ்'. அதைத் தனியாக கவனியுங்கள்.''

ஒரு வாரத்திற்குப் பிறகு வங்கியின் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் மீட்டிங் நடைபெற்றது.

த்ரிபுரா, டாடாவாலா, ஃபெர்னாண்டஸ் மூவரும் உட்கார்ந்து ஒவ்வொரு மனுவாக பரிசீலித்துக் கொண்டிருந்தார்கள். லக்ஷ்மி பேப்பர் மில்லின் முறை வந்தது.

''இந்தத் தொழிற்சாலையின் பிராஜெக்ட் ரிப்போர்ட் இன்னும் விவரமாக தேவைப்படுகிறது. அடுத்த மீட்டிங் கிற்குள் தரச் சொல்லிக் கேட்போம்'' என்றார் டாடா வாலா.

''அப்படியே காந்தியின் சொத்து விவரங்களையும் தரச் சொல்லுங்கள்'' ஃபெர்னாண்டஸ் பைலை மூடிய படி சொன்னார்.

''அந்த இரண்டையும் அப்புறமாக தரச் சொல்லி கண்டிஷன் போட்டு கடன் வழங்குவோம்.'' த்ரிபுரா சொன்னாள்.

ஃபெர்னான்டஸும் டாடாவாலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''வேண்டாம் வேண்டாம். இவனுக்குக் கடன் தர முடியாது.'' பதட்டத்துடன் சொன்னார் டாடாவாலா.

''ஏன்? இதற்கு முன்னால் இந்த மாதிரி சில கேஸுகளில் நாம் கடன் வழங்கவில்லையா?''

''ஆனால் இது ஐம்பது லட்சம்'' என்றார் ஃபெர் னான்டஸ். ''அவ்வளவு பெரிய தொகையை யாரோ அனாமத்து ஆசாமியான காந்திக்கு எப்படித் தரமுடியும்? அவனுடைய சொத்து விவரம் தேவை.''

''ஆனால் இத்தனை விவரமாக நாம் எல்லா கேஸு களையும் ஆராயவில்லையே?'' என்றாள் த்ரிபுரா. பிறகு டாடாவாலாவின் பக்கம் திரும்பி, ''நீங்க என்ன சொல் றீங்க?'' என்று கேட்டாள்.

டாடாவாலா தர்ம சங்கடத்தில் ஆழ்ந்தார். அவளை எதிர்த்துப் பேசவும் முடியாது. மூன்று டைரக்டர்களில் இருவர் எந்த பக்கம் ஓட்டுப் போடுகிறார்களோ அது தான் ஜெயிக்கும். அவர் ஒரு முடிவுக்கு வந்தவர்போல் சற்று முன்னால் குனிந்து, ''த்ரிபுரா தேவி! உங்களிடம் மறைப்பானேன்? அந்த காந்தி என்பவனுக்கு கடன் தராமல் தாமதப்படுத்தணும். அவனை அலைக்கழிக் கணும். இதுதான் ராஜாராமின் எண்ணம்'' என்றார்.

''ஏன்? காந்திக்கும் ராஜாராமுக்கும் முன் விரோதம் ஏதாவது இருக்கிறதா?''

'சரியாக புரிஞ்சுக்கிட்டீங்க' என்பது போல் டாடா வாலா பார்த்தார். அவருடைய கருத்துடன் ஒத்துப்போவது போல் ஃபெர்ணான்டஸ் தலையை அசைத்தார்.

''இதைப் பற்றி என்னிடம் ஏன் முன்னாடியே சொல்லவில்லை? என்னை உங்களுக்குள் ஒருத்தியாக நினைக்கவில்லை போலிருக்கு.'' வருத்தப்படுவது போல் சொன்னாள்.

''ச்செ... ச்செ. அப்படி எதுவும் இல்லை. தேவை யில்லாத தலைவலி உங்களுக்கு எதுக்குன்னுதான்,'' சமா தானப்படுத்த முயன்றார் டாடாவாலா.

''சரி விடுங்கள். அந்த காந்தியை ஒரு வருடம் அலைக்கழிக்கணும். அவ்வளவுதானே. அப்படியே செய் வோம்.''

''ராஜாராம் ரொம்ப சந்தோஷப்படுவார்.'' டாடா வாலா சொன்னார்.

மற்ற மனுக்களை பார்வையிட்டார்கள். கடைசியாக வந்த ஃபைல் G.H.T. லிமிடெட் கம்பெனி. அதுவும் காகிதத் தொழிற்சாலைதான்.

''இதென்ன? மற்றொரு காகித மில்லா?'' சுவாரசிய மில்லாமல் கேட்டாள் த்ரிபுரா.

டைரக்டர்கள் ரிப்போர்ட்டை படித்தார்கள். ஐம்பது லட்சம் முதலீட்டுடன் தொடங்கவிருக்கும் பேப்பர் தொழிற்சாலை அது. இதுவும் ஊட்டிக்குப் பக்கத்தில் தான்.

''இதுவும் நமக்கு பிரயோஜனப்படாது'' என்றார் ஃபெர்னான்டஸ். ''டைரக்டர்கள் புதியவர்கள். ரொம்ப சொத்து சுகமும் கிடையாது. எதை நம்பி கடன் கொடுப்பது?''

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.''

த்ரிபுரா நாற்காலியின் பின்னால் சாய்ந்துகொண்டு, ''அந்த காந்தி தொழிற்சாலைக்காக இதுவரையில் எவ்வளவு முதலீடு செய்திருப்பான்?'' என்று கேட்டாள்.

''சுமார் ஒரு லட்சம்'' என்றார் டாடாவாலா.

''அவன் தொடங்கவிருந்தது கூட அதே ஊட்டி எல்லையில்தானே.''

''ஆமாம்.''

''இந்த மில்லுக்கு நாம் கடன் கொடுத்து உதவினால் அதே இடத்தில் தொடங்கயிருந்த காந்தியின் முகத்தில் கரியைப் பூசினாற்போல் தானே ஆகும்? அந்த எல்லை

யில் விளையும் யூகலிப்டஸ் மரங்களை எல்லாம் இந்தப் புது தொழிற்சாலை பயன்படுத்திக் கொண்டு விடும் என்பதால் காந்தி இதுவரையில் போட்ட லட்ச ரூபாயும் நஷ்டமானது போலத்தானே'' என்றாள்.

அந்த யோசனை தங்களுக்கு அதுவரையில் வராத தற்கு இருவரும் நாக்கைக் கடித்துக் கொண்டார்கள்.

''அற்புதமான யோசனை'' என்றார் டாடாவாலா. ஆமாம் என்பது போல் ஃபெர்னான்டஸ் தலையை அசைத்தார். உண்மையில் காந்தியை வீழ்த்தணும் என்றால் அவனுக்கு முன்னால் மற்றொருவன் நிறுவனத் தைத் தொடங்குவது தான் சிறந்தது. G.H.T. கம்பெனிக்கு ஐம்பது லட்சம் கடன்தர அனுமதி வழங்கப்பட்டது.

த்ரிபுரா முறுவலுடன், ''அந்த காந்தி யாரோ? அவனை பழிவாங்க இந்தக் கம்பெனிக்கு கடன் வழங்க முடிவு செய்து விட்டோம். அதுசரி. இந்தக் கம்பெனி யாருடையது?'' என்று கேட்டாள்.

ஃபெர்னாண்டஸ் பைலை பரிசீலித்துவிட்டு, ''யாரோ வித்யார்த்தியாம்'' என்றார். ''நரிமுகத்தில் விழித்துவிட்டு அப்ளிகேஷன் போட்டிருப்பானாய் இருக்கும்.''

★ ★ ★

''வெரிகுட். கங்கிராஜுலேஷன்ஸ்'' என்றான் காந்தி.

''ஆனால் இந்த விஷயத்தை ரொம்பநாள் மறைத்து விட முடியாது என்று நினைக்கிறேன். இந்த வங்கியின்

விவகாரங்களில் ராஜாராமுக்கு ரொம்ப தொடர்பு இருக்கு'' லக்ஷ்மி சொன்னாள்.

''எனக்கும் தெரியும். ரொம்ப நாள் மறைத்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை. G.H.T. கம்பெனி வித்யார்த்தியுடையது என்று தெரியாமல் இருந்தால் போதுமானது.''

''அதுசரி. கேட்கணும்னு இருந்தேன். மறந்து விட்டது. G.H.T. என்றால் என்ன?''

'' Go to Hell'' முறுவலுடன் சொன்னான் காந்தி. ''அதுதான் ராஜாராமிடம் நான் சொல்லப் போகும் கடைசி வார்த்தை. அவர் என்னைப் பார்த்துச் சொன்ன டிட் ஃபர் டாட் என்ற வார்த்தைக்குப் பதில் அதுதான்.''

லக்ஷ்மிக்கு ஒரு வினாடி புரியவில்லை. புரிந்ததும் அடக்க முடியாமல் சிரித்தாள். பிறகு சிரிப்பை அடக்கிக் கொண்டு ''நாம் இதில் மாட்டிக் கொண்டு விடுவோமோ என்று பயமாக இருக்கு'' என்றாள்.

''ஏன்?''

''இந்த வித்யார்த்தி உண்மையிலேயே நம்ப ஆள் தானா இல்லையா என்று தெரியவில்லை. ராஜாராமுக்கு இந்த விஷயம் தெரிய வந்தால் மறுநிமிடத்திலிருந்து வங்கி நமக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கிவிடும். வித்யார்த்திக்கு என்ன வந்தது, அவன் சல்லிக்காசு போட வில்லை. அவன் நன்றாகத்தான் இருப்பான். நம் பணம் முழுவதும் இதில்தான் இருக்கு. இசை கேடாக ஏதாவது நடந்தால் படுகுழியில் தள்ளப்பட்டு விடுவோம்.

அதற்குள் கெடு முடிந்து விடும். பந்தயத்திலும் தோற்றுப் போய் விடுவோம்.''

''நீ சொன்னதெல்லாம் நடந்து பந்தயத்தில் தோற்றுப் போனாலும் போகலாமே தவிர படுகுழியில் மட்டும் விழமாட்டோம்.''

''அது எப்படி?''

''நம்முடைய பணம் இதில் சல்லிக்காசு கூட இருக்காது. அதனால்தான்.''

லக்ஷ்மி திகைப்புடன் பார்த்தாள். ''முதலீடு எதுவுமே இல்லாமல் கோடி ரூபாய்க்கு தொழிற்சாலையைத் தொடங்குவதாவது?

அவன் சிரித்தான். ''நம்ப முதலீடு எதுவும் இல்லை என்று ஏன் எண்ணுகிறாய்?''

''இல்லை என்று இப்பொழுதுதானே சொன்னாய்.''

''பணம் இல்லை என்றேன். மற்றபடி...''

''மற்றபடி?''

''புத்திசாலித்தனம் இருக்கிறதே?''

''வார்த்தை ஜாலம் போதும். எப்படி இது நடக்கப் போகிறது என்று சொல்லு.''

காந்தி பைலிலிருந்து பிராஜெக்ட் காகிதங்களை காண்பித்தான்.

முதலீடு	5 லட்சம்
அரசாங்க முதலீடு	5 லட்சம்

பங்கு மூலதனம்	11 லட்சம்
மத்திய அரசு உதவித் தொகை	15 லட்சம்
நீண்டகாலக் கடன்	70 லட்சம்
வர்கிங் காபிடல்	50 லட்சம்
	1,50 லட்சம்

ஒரு வினாடி லக்ஷ்மி மூச்சு விடவும் மறந்து விட்டாள். ''ஐந்து லட்சம் முதலீட்டை வைத்துக் கொண்டு ஒருகோடியே ஐம்பது லட்சம் மதிப்பிற்கு கம்பெனியைத் தொடங்கப் போகிறாயா?'' என்றாள்.

காந்தி சிரித்தான். ''பந்தயத்தில் சட்ட ரீதியாக என்ற ஒரு நிபந்தனை இருப்பதால்தான் இந்த மட்டும். இல்லாவிட்டால் இந்த ஐந்து லட்சம் கூடத் தேவை யில்லை'' என்றான்.

★ ★ ★

கால வெள்ளத்தில் மேலும் சில மாதங்கள் அடித்துச் செல்லப்பட்டன. G.H.T. கம்பெனி வேலைகள் சுறுசுறுப் பாக நடைபெற்று வந்தன. காட்டுப் பகுதியைச் சீர் படுத்தி நிலத்தைச் சமன் செய்தார்கள். அஸ்திவாரம் தோண்டப்பட்டு அவர்கள் எழுப்பப்பட்டன. மற்றொரு புறம் ஃபேப்ரிகேஷன் வேலைகள் நடைபெற்று வந்தன.

இது இவ்வாறு நடந்து கொண்டிருக்கும்போது அங்கே சிவகைலாஸ் வங்கியில் அரசியல் வேறுவிதமாக திசை திரும்பிக் கொண்டிருந்தது. வேறொரு பேப்பர் மில்லுக்கு கடன் வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததும் ராஜாராம் முதலில் கொதித்தெழுந்தார். ஆனால் அது

ரொம்ப சிறிய மில் என்று தெரிந்தபிறகு நிம்மதி அடைந்தார்.

ஆனால் எத்தனை நாளைக்குத்தான் மறைத்து வைக்க முடியும்? ஒருநாள் குட்டு வெளிப்பட்டு விட்டது. அந்த பேப்பர் மில் வித்யார்த்தியுடையது என்று தெரிந்ததும் ராஜாராம் படம் எடுத்த பாம்புபோல் சீறினார். டாடா வாலாவை அழைத்து ஓர்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தார். டாடாவாலா குனிந்த தலை நிமிரவில்லை. பிறகு தாழ்ந்த குரலில், ''இந்தக் கம்பெனி சிறிய கம்பெனி என்றும், நமக்குப் போட்டியாக வராது என்றும் நினைத்தோம் சார். அதோடு நாம் இல்லை என்று சொன்னால் வேறு வங்கிக்குப் போகத்தானே போறாங்க. எத்தனை கம்பெனிகளுக்குத்தான் கடன் கொடுப்பதாக ஆசை காட்டி நம்மிடமே வைத்துக் கொள்ள முடியும்? காந்தி சம்பந்தப்பட்ட பைலை ஒரு வருடமாக அப்படித்தானே அலைக்கழித்துக் கொண்டிருக்கிறோம்'' என்று சமாதானப்படுத்த முயன்றார்.

அதைக் கேட்டு ராஜாராம் திருப்தியடைந்தார். காந்தியை ஒரு வருடமாக அலைக்கழித்துக் கொண்டிருக்கிறோம் என்ற செய்தி அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. காந்தி பேப்பர் மில் வைக்கும் யோசனையை எப்பவோ கைவிட்டு விட்டான் என்றும், தன் பணத்தை எல்லாம் G.H.T. கம்பெனியிலேயே முதலீடு செய்திருக்கிறான் என்றும் அவருக்குத் தெரியாது. தினந்தோறும் அவருக்குத் தகவல் தந்து கொண்டிருக்கும் அனுமந்துவுக்கும் அது தெரியாது.

''குட்'' என்றார் ராஜாராம். இன்னும் ஒரு வருஷம் இப்படியே தடுத்து நிறுத்தினால் போதும். அப்புறமாக காந்தியைப் பற்றிய கதையே அடியோடு ஒழிந்து விடும். அவர் தன் சொந்த விஷயத்தையும் மறந்து விடவில்லை. மறுநாளே வித்யார்த்தியை அழைத்து வரச் செய்தார்.

தன் பழைய முதலாளியைப் பார்த்து பணிவுடன் எழுந்து நின்றான் வித்யார்த்தி.

''ரொம்ப பெரியவனாகி விட்டாய். சந்தோஷம்.''

''உங்க தயவு சார்.''

''இவ்வளவு பணத்தை எப்படி முதலீடு செய்தாய்?''

''ராஜஸ்தான் லாட்டரியில் பரிசு கிடைத்தது.''

சற்று நேரம் மௌனம்.

ராஜாராம் சொன்னார். ''இதோ பாரு. என்னுடைய மில்லில் வேலை செய்த ஆள் நீ. இந்த நாட்டின் காகிதத் தொழிற்சாலையில் எனக்கு எவ்வளவு பங்கு இருக்கிறதோ உனக்குத் தெரியும். இன்று எனக்குப் போட்டியாக இன்னொரு மில்லை தொடங்கியிருக்கிறாய்.''

வித்யார்த்தி மிரண்டவன் போல் ஓரடி பின்னால் நகர்ந்தான். ''அப்படிச் சொல்லாதீங்க சார். உங்களுக்குக் கீழே வேலை செய்தவன் நான். உங்களுக்கு நான் போட்டியாக வருவதாவது?'' என்றான்.

''அப்படி இல்லை என்றால் உன் மில்லில் உற்பத்தி ஆகும் காகிதத்தை எங்க ஏஜென்ஸிக்கே மொத்த விற்பனையாக ஏன் தரக்கூடாது?''

வித்யார்த்தி தடுமாறினான். அதைக் கவனித்த ராஜா ராம் ''டர்ம்ஸ் விஷயத்தில் நீ எதுவும் யோசிக்கத் தேவை யில்லை'' என்றார்.

''ச்செ... ச்செ... அதற்காக இல்லை சார். உற்பத்தி தொடங்கவே இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் ஆகலாம். அதோடு எங்களுடையது சாதாரண மில் இல்லை. மலிவு விலையில் யூகலிப்டஸ் மரத்திலிருந்து தயாரிக்கப்படும் காகிதம். அது உற்பத்தியாகும் வரையில் அதன் தரத்தைப் பற்றிச் சொல்ல முடியாது. இப்பவே அக்ரிமெண்ட் எதுக்கு?''

''உன் வேலை திறமையைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். உன் மில்லிலிருந்து தரமான காகிதம்தான் தயா ராகும். எனக்கு நம்பிக்கை இருக்கு.''

'இந்த நம்பிக்கை ஏன் முன்னாடியே வரவில்லை' என்று கேட்க நினைத்தான் வித்யார்த்தி. ஆனால் கேட்க வில்லை.

இருவரும் ஃபார்வார்ட் காண்ட்ராக்டில் கையெழுத்துப் போட்டார்கள் அன்றைக்கே.

★ ★ ★

''வித்யார்த்திக்குக் கடன் கொடுத்ததற்காக நம்மை அவர் கடிந்து கொள்வதற்கு உரிமை கிடையாது. நாம் டைரக்டர் பதவியில் இருப்பவர்கள்'' என்றாள் த்ரிபுரா.

''அப்படிச் சொல்லாதீங்க த்ரிபுரா தேவி. முன் கூட்டியே நாம் அவரிடம் தெரிவித்திருக்கணும்.'' டாடா வாலா சொன்னார்.

''நாம் தருகிற ஒவ்வொரு கடன் பற்றியும் அவரிடம் சொல்லித்தான் ஆகணுமா?''

டாடாவாலா மௌனம் சாதித்தார்.

த்ரிபுரா மேலும் சொன்னாள். ''முதலில் நாம் அவருக்கு எதற்காக அப்படிக் கட்டுப்பட்டு இருக்கணும். இதெல்லாம் அவருடைய பணம் இல்லையே? போகட்டும். அந்த வித்யார்த்தியைக் கூப்பிட்டு ஒப்பந்தத்தில் எப்படி கையெழுத்துப் போட்டார்? இதையெல்லாம் பார்க்கும் போது அவர் ஆடும் சதுரங்க ஆட்டத்தில் நம்மை ஒரு பகடைக் காயாக பயன்படுத்துகிறாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. பணம் முழுவதும் நம்முடையது. ஆனால் அதிகாரம் அவருடையது. உண்மையில் அவரைவிட நாம்தான் அதிகமாக உழைக்கிறோம். லாபங்களை மட்டும் அனுபவிப்பது அவருடைய பங்கு. யாரோ அனாமத்து ஆசாமி காந்தி என்பவனை பழிதீர்த்துக் கொள்வதற்காக டிட் ஃபர் டாட் என்ற கம்பெனியைத் தொடங்கி வைத்தார் என்று நீங்களே சொல்லியிருக்கீங்க. அதெல்லாம் கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த விவகாரத்தில் உங்களுக்கு ஏற்பட்ட நாலைந்து லட்ச ரூபாய் நஷ்டத்தை அவர் ஏற்றுக் கொண்டாரா?''

தான் சொல்ல வந்ததை அவர் புரிந்து கொண்டு விட்டார் என்று அவள் உணர்ந்த விட்டாள். இன்றைக்கு இது போதுமானது. விதை விதைத்தாகி விட்டது. இனி அது மரமாக ஓங்கி வளருவதற்கு கொஞ்சகாலம் பிடிக்கும்.

★ ★ ★

''இதெல்லாம் சினிமா மாதிரி இருக்கு'' என்றாள் லக்ஷ்மி.

''எது?'' வியப்புடன் கேட்டான் காந்தி.

''வில்லன்களுக்கு நடுவில் நான் மாறுவேடத்தில் புகுந்துகொண்டு கருத்து வேற்றுமையை உருவாக்குவது.''

''அதனால் என்ன?கதாநாயகி என்றால் இதுபோன்ற வேலைகள் எல்லாம் செய்துதானே ஆகணும்'' என்றான்.

''நீ கதாநாயகனாக இருந்தால் இருக்கலாம். ஆனால் நான் மட்டும் கதாநாயகி இல்லை'' என்றாள் சாதாரணமான குரலில்.

''நானும் கதாநாயகன் இல்லை. சாதாரண மனிதன். அவ்வளவுதான்.'' அவன் குரல் திடீரென்று தீவிரமாக ஒலித்தது. ''சமுதாயத்தின் பால் விரக்தியுடன் இருக்கும் ஒரு பட்டதாரி. ஆனால் மற்றவர்களை போல் சமுதாயம் மாற வேண்டும் என்று முழக்கமிட்டுக் கொண்டு வெறுமே கைகளைக் கட்டிக் கொண்டு என்னால் உட்கார முடியாது. யாரோ வந்து இந்தச் சமுதாயத்தைத் திருத்தியமைக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு அரசியலையும், சமுதாயத்தையும் குற்றம் சாட்டும் இளைஞர்களை விட நான் மேலானவன் என்று நினைக்கிறேன். உண்மையில் பணம் சம்பாதிப்பது அத்தனை கஷ்டமான காரியம் இல்லை. லட்சம் லட்சமாக சம்பாதிப்பது வேண்டுமானால் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் சாதாரணமான வாழ்க்கையைக் கழிப்பதற்குத்

தேவையான பணம் சம்பாதிப்பது நிச்சயமாக கஷ்ட மான காரியம் இல்லை. இந்த வாதம் சிலருக்குச் சிரிப்பை வரவழைக்கலாம். மேலும் சிலருக்குக் கோபத்தை வரவழைக்கலாம். ஆனால் நான் என் அனுப வத்தில் சொல்கிறேன். நீயே பார்த்தாய் இல்லையா. ஊட்டி பிராஜெக்டில் வேலை செய்ய புது இஞ்சினி யர்கள் தேவை என்று போன வருடம் விளம்பரம் செய்த போது ஐயாயிரம் மனுக்கள் வந்தன. வேலையில்லாப் பட்டதாரிகள் இத்தனை பேர்கள் இருக்கிறார்களா என்று வியப்பாக இருந்தது. ஆனால் இப்பவும் நமக்கு வேண்டிய அளவுக்கு ஆட்கள் கிடைத்த பாடில்லை. வேலையில் சேர்ந்தவர்கள் மூன்று மாதங்களில் போய் விடுகிறார்கள். இருப்பவர்களும் போகத் துடிக்கிறார்கள். கிடைக்கும் வரையில் வேலை கிடைக்கவில்லையே என்ற தவிப்பு. கிடைத்ததும் இன்னும் நல்ல வேலை வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. வரச் சொல்லு பார்ப் போம். எத்தனை பட்டதாரிகள் வந்தாலும் அவர்களுக்கு நான் வேலைக்கு வழி செய்கிறேன். உணவுக்கும், உடைக்கும் பஞ்சமில்லாத சம்பளம். என்னோட சேர்ந்து கஷ்டப்பட்டு காட்டில் வேலை பார்க்கட்டும்.''

''லட்சக் கணக்கில் வருவார்கள்.''

''வருவார்களே தவிர நாலைந்து மாதங்களில் கொசுக்கடி என்று முணுமுணுப்பார்கள். கொடுக்கும் சம்பளத்திற்கு இந்த மட்டும் வேலை செய்தால் போதும் என்று சோம்பேறித்தனமாக இருப்பார்கள். வைட் காலர் ஜாப் இல்லையே என்று வருத்தப்பட ஆரம்பிப்பார்கள்.''

''ஒரு படியிலிருந்து இன்னொரு படிக்கு ஏற முயற்சி செய்வதில் தவறு எதுவும் இல்லையே?''

''ஆனால் ஏறுவதற்கு உரிய திறமையை வளர்த்துக் கொள்ளாமல், எட்டாத உயரத்தில் படி இருக்கிறது என்று சமுதாயத்தைக் குறை கூறுவது தவறு.''

''எல்லோரும் உன்னைப்போல் புத்திசாலியாக இருப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?''

''புத்திசாலித்தனம் தேவையில்லை. வேலையில் நேர்மையாக இல்லையே என்பதுதான் என் வருத்தம்.''

''வித்யார்த்திக்கு நீ எவ்வளவு சம்பளம் தருகிறாய் காந்தி?''

அவன் வியப்படைந்து, ''தொழிற்சாலையே அவனுடையதுதானே?'' என்றான். அவள் எதற்காக அப்படி கேட்டாள் என்று அவனுக்குப் புரியவில்லை.

''காகிதத்தின் மீது இருக்கும் சட்டத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. உண்மையில் அவனுக்குக் கிடைக்கும் வருமானத்தைப் பற்றி.''

''மாதத்திற்கு ஆயிரம்.''

''ஃபாக்டரி முழுவதும் அவனே பார்த்துக் கொள்வதோடு, நேர்மையாக உழைப்பவன் என்பதால் இன்க்ரிமெண்டும் கிடைக்கும் இல்லையா.''

''ஆமாம்.''

''ரிடையர் ஆகும்போது அவன் சம்பளம் இரண்டாயிரம் ஆகலாம். அல்லது காட்டுப்பகுதி என்பதால்

நடுவில் மலேரியா வந்து இறந்து போனாலும் போக லாம்.'' லக்ஷ்மி சொன்னாள்.

காந்தி பதில் சொல்லவில்லை.

லக்ஷ்மி மேலும் சொன்னாள். ''ஆனால் வெறும் ஐந்து லட்சம் முதலீடு போட்டதற்கு முப்பது வயது முடியும் முன்பே நீ கோடி ரூபாய் வரையிலும் சம்பா தித்து விடுவாய். இருவருமே புத்திசாலிகள்தான். இருவருமே நேர்மையானவர்கள் தான். ஆனால், இந்த வித்தியாசம் ஏன் காந்தி? இந்தக் கேள்விக்கு நீ என்றைக்குப் பதில் சொல்கிறாயோ அன்றைக்கு நான் உன் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்.''

10

தான் த்ரிபுரா என்று ராஜாராமுக்குத் தெரியாமல் ரொம்ப நாள் கடத்த முடியாது என்று லக்ஷ்மி உணர்ந் தாள். டைரக்டர்களின் ரிஜிஸ்டரில் கூட S.L. த்ரிபுரா என்று கையெழுத்திட்டாள். ஆனால் எத்தனை நாளை தான் இவ்வாறு ஓட்ட முடியும்?

இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் ராஜாராமை அவள் சந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர் அதிக மாக பேசாததால் சுலபமாக தப்பித்துக் கொள்ள முடிந்தது. ஆனால் என்றாவது குட்டு வெளிப்பட்டு விடுமோ என்று அவள் பயந்து கொண்டே இருந்தாள்.

காந்தி மட்டும் அலட்சியமாக இருந்தான். ''எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? அவர் லக்ஷ்மியாக உன்னை என்றுமே சந்தித்தது இல்லையே?'' என்றான்.

ஆனால் அந்த நாள் வந்தேவிட்டது.

ராஜாராமின் வீட்டில் பார்ட்டி நடக்க விருந்தது. முதலில் லக்ஷ்மி போக வேண்டாம் என்றுதான் நினைத் தாள். ஆனால் அதற்கு முன்பே ஓரிருமுறை பார்ட்டி களில் சந்தித்து விட்டதால் பரவாயில்லை என்று கிளம் பினாள்.

அவள் ஒரு விஷயத்தை முற்றிலும் மறந்து விட்டாள். பார்ட்டி நடக்கப் போவது ராஜாராம் வீட்டில் என்பதை யும், அங்கே ஹாரிகாவும் இருப்பாள் என்பதையும்

தான். பயந்தாற்போலவே நடந்து விட்டது. ஆனால் அது ஹாரிகாவினால் இல்லை.

பார்ட்டி தொடங்கிய பத்து நிமிடங்களுக்கு ஹாரிகா அங்கு வந்து சேர்ந்தாள். டாடாவாலா த்ரிபுராவை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். கைகளை ஜோடித்து வணக்கம் சொல்லப் போன ஹாரிகா அப்படியே நின்று விட்டாள். லக்ஷ்மியின் முகம் ஏற்கனவே அறிமுகமானது போல் அவளுக்குத் தோன்றியது. எங்கே இவளைப் பார்த்தோம் என்று யோசனையில் ஆழ்ந்து விட்டாள்.

லக்ஷ்மி மட்டும் இயல்பாக பேசிக் கொண்டிருந்தாள். ஹாரிகாவைப் பார்த்ததும் ஒரு வினாடி கலவரமடைந்தாள். ஆனால் அவள் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாததை உணர்ந்து சமாளித்துக் கொண்டாள். தான் செய்த தவறு புரிந்தாலும் ஆபத்து ஏதும் நேராததில் மகிழ்ச்சியடைந்தாள்.

பார்ட்டி முடியும் வரையில் ஹாரிகா யோசனையிலேயே மூழ்கியிருந்தாள். தன் நினைவாற்றலில் அவளுக்கு அளவற்ற நம்பிக்கை இருந்தது. அப்படியிருக்கும் போது இவளை எங்கே பார்த்தோம் என்பதை எப்படி மறந்து விட்டாள்?

பார்ட்டி முடிந்து விட்டது. ஒவ்வொருவராக விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். ராஜாராம் வாசலில் நின்று கொண்டு விடைகொடுத்துக் கொண்டிருந்தார். வெளியே கார்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்

டிருந்தன. டாடாவ்வாலா லக்ஷ்மியைக் கொண்டுவிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

காருக்குப் பக்கத்திலேயே நின்றபடி டிரைவருடன் வம்பு பேசிக் கொண்டிருந்தான் அனுமந்து. படியிறங்கி வந்து கொண்டிருந்த லக்ஷ்மியைப் பார்த்துவிட்டு சட்டென்று காருக்குப் பின்னால் மறைந்து கொண்டான். அதை யாரும் கவனிக்கவில்லை, ராஜாராம் ஒருவரைத் தவிர. விருந்தாளிகள் எல்லோரும் போய்விட்ட பிறகு அனுமந்துவை தன்னுடைய அறைக்கு வரவழைத்தார்.

''ஏன் காருக்குப் பின்னால் மறைந்து கொண்டாய் என்று கேட்டார்.''

அனுமந்துவின் முகம் உத்வேகத்தால் நிரம்பியிருந்தது. நெற்றி முழுவதும் வியர்த்துக் கொட்டியது. ''பார்ட்டிக்கு வந்தாளே, அந்தப் பெண் என் தங்கை லக்ஷ்மி சார்'' என்றான்.

அதைக் கேட்டதும் ராஜாராமின் முகம் கோபத்தில் சிவந்து விட்டது. ஆனால் அதெல்லாம் ஒரே ஒரு வினாடிதான். அடுத்த வினாடியே சாதாரணமாகி விட்டார். இதுபோன்ற சமயங்களில் தன்னைச் சமாளித்துக் கொள்வது அவருக்குக் கை வந்த கலை.

''சரி நீ கிளம்பு'' என்றார் இயல்பான குரலில். அனுமந்து போய்விட்டான்.

ராஜாராம் கண்களை மூடிக் கொண்டார். ''காந்தி! உண்மையிலேயே நீ கெட்டிக்காரன்தான். எனக்கே தெரியாமல் எனக்காக குழி தோண்டுகிறாயா? இன்னொரு

வருஷம் கழிந்திருந்தால் என் வங்கியிலிருந்தே ஐம்பது லட்சம் எடுத்து என்னிடம் காட்டி பந்தயத்தில் ஜெயித்து விட்டிருப்பாய். பரவாயில்லை. இப்பவும் சமயம் மிஞ்சி விடவில்லை. உன் விரலில் உன்னுடைய கண்ணையே எப்படி குத்திக் கொள்ளப் போகிறாய் என்று காட்டு கிறேன் பார்!''

★ ★ ★

வித்யார்த்தியும் காந்தியும் பேசிக் கொண்டே தொழிற்சாலையை நோக்கி நடந்து வந்து கொண்டிருந் தார்கள். ஃபாக்டரியின் கட்டடம் ஏறக்குறைய முடி வடையும் தருவாயில் இருந்தது. திறப்பு விழா நடத்த வேண்டியதுதான் பாக்கி.

''நமக்கு தொழிலாளிகளுடன் பிரச்னை வரப் போகிறது. இந்த இடத்தைச் சேர்ந்தவர்களைத்தான் எடுத்துக் கொள்ளணும் என்று ரகளை செய்யப் போகி றார்களாம்.'' வித்யார்த்தி சொன்னான்.

''எப்படியும் இந்த ஊரைச் சேர்ந்த ஆட்களைத் தானே எடுத்துக் கொள்ளப் போகிறோம்?''

''லேபர் வேலைக்காக இல்லை. ஆபீசில் கிளார்க் மற்றும் இன்ஜினியர் போன்ற இடங்களுக்கு அந்த வேலைகளுக்கும் இந்த ஊரைச் சேர்ந்தவர்களைத்தான் எடுத்துக் கொள்ளணுமாம்.''

''இண்டர்வ்யூ செய்து தகுதியானவர்களை எடுக்கும் உரிமை நமக்கு இல்லையா?''

''இங்கே உரிமை பற்றிய பேச்சே இல்லை. இந்தக் காட்டில் ஃபாக்டரி வைத்திருப்பதால் இந்தப் பக்கத்து ஆட்களையே எடுத்துக்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். இன்று காலையில் கூட எம்.எல்.ஏ. ஒருவர் சிலரை அழைத்துக் கொண்டு வந்தார். வேலையில்லாப் பட்ட தாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களாம். அதற்குள் முதலமைச்சருக்கும், பிரதமருக்கும் மனுக்கள் கூட அனுப்பத் தொடங்கிவிட்டார்கள்.''

''அனுப்பட்டுமே. சட்டப்படி நாம் எந்தத் தவறும் செய்யவில்லை. நாட்டில் யாருக்கு வேண்டுமானாலும் வேலை கொடுக்கலாம் என்று அரசாங்கமே சொல் கிறது.'' காந்தி முடிவாகச் சொன்னான்.

ஆனால் எம்.எல்.ஏ. இந்தப் பிரச்னைக்கு வேறு விதமாக பரிகாரம் செய்து விட்டார். அரசு தரப்பிலிருந்து சிபாரிசு வாங்கிவந்து விட்டார். G.H.T கம்பெனியின் பாதிப் பங்கு அரசாங்கத்துடையதுதான். அதனால் காந் திக்கு அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

உள்ளூர் இளைஞர்களில் பலபேருக்கு வேலை தர வேண்டியதாயிற்று. சுமாராக மார்க் வாங்கி பாஸ் செய் திருந்த இளைஞர்களை பெரிய பதவியில் எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம்.

காந்தி வருத்தப்பட்டுக் கொண்டான். ''இதுவே இன்டர்வ்யூ வைத்து திறமையான இளைஞர்களைத் தேர்ந்தெடுத்திருந்தால் ஃபாக்டரி விவகாரங்கள் நன்றாக நடந்திருக்கும். என் ஃபாக்டரியின் உற்பத்தித் திறன்

குறைந்து விட்டால் அதற்கு இந்த அரசாங்கம்தான் காரணம்'' என்று நொந்து கொண்டான்.

எம்.எல்.ஏ. பல இளைஞர்களுக்கு வேலை வாங்கித் தந்ததால் அவருடைய செல்வாக்கு அந்த எல்லையில் பரவி, அவருடன் போட்டியிட்ட எதிர்க்கட்சி ஆளுக்கு வயிற்றெரிச்சல் ஏற்பட்டது. அவருக்கு அந்த எல்லையில் இருக்கும் காட்டுவாசிகளிடையே செல்வாக்கு இருந்தது. காட்டில் இருக்கும் மரங்களை எல்லாம் ஃபாக்டரி முதலாளிகள் கொள்ளையடித்துக் கொண்டு போய்விடுவதாக பிரசாரம் செய்தார்.

காகித உற்பத்திக்கு மாதந்தோறும் நிறைய மரக் கட்டைகள் தேவைப்பட்டன. அதற்காக மரங்களை வெட்டிக் கொள்வதற்கு காட்டு இலாகா அனுமதி வழங்கியிருந்தது.

பரம்பரை பரம்பரையாக அந்த இடத்தில் வாழ்ந்து வரும் காட்டுவாசிகளைக் கொண்டு அரசாங்கத்திற்கு மனு போட வைத்தார். காகிதத் தொழிற்சாலை வந்தால் அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படும் என்று வாதம் புரிந்தார். ஆனால் அவர் எதிர்க்கட்சியைத் சேர்ந்த ஆள் என்பதால் அரசாங்கம் அவருடைய வாதத்தைச் சுலபமாக தள்ளிவிட்டது. காட்டு வாசிகளுக்கு வேண்டிய மாற்று ஏற்பாடுகளைச் செய்து தருவதாக அதிகாரிகள் வாக்களித்தார்கள்.

ஆனால் எதிர்க்கட்சி ஆளுக்கு வேண்டியது காட்டு வாசிகளுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பது இல்லை. தன்னுடைய செல்வாக்கு அதிகரிக்க வேண்டும்

என்பதுதான். அதன் காரணமாக அந்த சுற்று வட்டாரத் தில் பல சங்கங்கள் தோன்றலாயின. 'காட்டுவாசிகளின் முன்னேற்ற சங்கம்' என்றும் காட்டுவாசிகளை அழிப் போரைத் தடுக்கும் சங்கம் என்றும் மக்கள் எழுச்சி சங்கம் என்றும் ஆங்காங்கே கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தப் புதிய தொழிற்சாலை தம் சொத்துக்களை எல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு போகிறது என்று முழக்கமிடுவதுடன் பாக்டரி சுவர்களில் கரிக்கட்டையால் இஷ்டம் வந்தது போல் எழுதினார்கள். ஒருநாள் இரவு நேரத்தில் ஃபாக்டரியின் வேனை யாரோ கொளுத்தி விட்டார்கள்.

இதையெல்லாம் பார்த்து வித்யார்த்தி பயந்து விட்டான். அவன் ஒரு நல்ல டெக்னீஷியன் மட்டும் தான். இதுபோன்ற போராட்டங்கள், கோஷங்கள் எதுவும் அவனுக்குத் தெரியாது. காந்தி அவனுக்குத் தைரியம் சொன்னான்.

''இதெல்லாம் வழக்கமாக நடக்கும் விஷயங்கள் தான். இந்த எதிர்ப்புகளையும் தாண்டி நம்ப வேலையை நாம் பார்த்துக் கொண்டு போகணும்.''

''ஆனால் இவர்களுடைய பிரச்னை உண்மை யானது இல்லையா?'' வித்யார்த்தி கேட்டான்.

''எந்தப் பிரச்னைக்கும் இரண்டு பக்கம் இருக்கும். உபயோகமற்றுக் கிடக்கும் செல்வங்களைத் தொழிற் சாலைகள் மூலமாக உபயோகமுள்ளதாக மாற்றுவதற்குச் சில தியாகங்களைச் செய்துதான் தீரணும்.''

''அப்படி என்றால் இந்தக் காட்டுவாசிகள் எல்லோரையும் நம் பாக்டரியில் வேலைக்கு எடுத்துக் கொண்டுதான் ஆகணுமா?''

காந்தி சிரித்தான். ''நிலம் அவர்களுடையது. உழைப்பு அவர்களுடையது. மூலதனம் அரசாங்கத்தினுடையது. லாபம் மட்டும் நம்முடையது. இது உண்மைதான். ஆனால் வாதம் புரிபவர்களால் இதற்குப் பரிகாரம் சொல்ல முடியாது. வயிறு காய்ந்து போன மக்களே தீர்வு காண்பார்கள். அந்த நேரம் வந்தால் புரட்சி வரத்தான் செய்யும். இதுபோன்ற தண்ணீர்ப் பாம்புகளுக்கு நாம் பயப்படவேண்டியதில்லை. இன்று மாலையே அதை நிரூபிக்கிறேன் பார்'' என்றான்.

அன்று மாலையே எதிர்க்கட்சி அரசியல் தலைவரைச் சந்தித்தான். ஒரு மணி நேரம் ரகசியக் கூட்டம் நடந்தது. காகிதத் தொழிற்சாலையைச் சுற்றிலுமுள்ள கிராமங்களை ஐந்து வங்கிகள் தத்து எடுத்துக் கொள்வதாகவும், காகிதமில்லின் நிதியிலிருந்து காட்டுவாசிகளின் முன்னேற்ற சங்கத்திற்காக ஐம்பதாயிரம் நிதி வழங்குவதாகவும் முடிவு செய்யப்பட்டது. அந்தச் சங்கத்திற்கு பிரசிடெண்டாக அந்த அரசியல் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இந்தவிஷயமே மிக ரகசியமாக வைக்கப்பட்டது.

கிராமங்களை வங்கிகள் தத்து எடுத்துக் கொள்வது தெரிந்த முதலமைச்சர் தன் மகிழ்ச்சியை தந்தி மூலம் தெரியப்படுத்தினார். பெரிய பொது சட்டம் விழாபோல் நடந்தது. அரசியல் தலைவர் தலைமை தாங்கினார். காந்தி சீஃப் கெஸ்டாக கலந்து கொண்டான்.

இதையெல்லாம் பார்க்கும்போது வித்யார்த்திக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. இந்தப் பிரச்னையைப் பற்றி தான் எவ்வளவு நுணுக்கமாக யோசித்திருப்பான்? எவ்வளவு பயந்திருப்பான்? உண்மையில் இந்தப் பிரச்னை இவ்வளவு சீக்கிரமாக சரியாகிவிடும் என்று அவன் நம்பவே இல்லை.

காந்தி சொன்னான். ''நான் செய்தது எல்லா மக்களுக்கும் ஒத்துப் போய்விட்டது. அதிகார பார்ட்டியிலிருந்த எம்.எல்.ஏ.வின் ஆட்களுக்கு வேலை போட்டுக் கொடுப்பதன் மூலமும், எதிர்க்கட்சியிலிருந்த ஆட்களுக்கு பணம் தந்ததன் மூலமும் நம் இடத்தை நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது. இந்தச் செலவுகளைச் சரிகட்டணும் என்றால் மற்றவர்களை போல் நாமும் நியூஸ் பிரிண்டை பிளாக் மார்கெட்டில் விற்க வேண்டியிருக்கும். இந்தச் சமுதாயம்தான் மனிதனை மோசடி செய்யத் தூண்டுகிறது. இந்தக் காட்டுவாசிகளைக் குறை சொல்லுவானேன்? அவர்கள் அப்பாவிகள்.''

''நான் கவலைப்படுவது காட்டுவாசிகளைப் பற்றி அல்ல. இப்பொழுது போராடுகிற இந்த இளைஞர்களைப் பற்றித்தான். இவர்களுடைய யோசிக்கும் திறமை எங்கே போய்விட்டது?''

''இந்த இளைஞர்களுக்கு புரட்சியைப் பற்றி பாடல்களை எழுதத்தான் தெரியும். அவர்களுடைய அபிப்பிராயத்தின்படி பணக்காரர்கள் எல்லோரும் கெட்டவர்கள். அடி, குத்து, உதை... இவைதான் இவர்களுடைய பேச்சில் வெளிப்படும். கல்லூரியைத் தாண்டியதும்

இவர்களுடைய ஆவேசம் அடங்கிவிடும். பிரச்னைக்கு உண்மையான காரணம் என்னவென்றே தெரியாது. இந்த கும்பலில் எவனோ ஒருத்தன் கெட்டிக்காரனாக இருப்பான். அந்த கும்பல் முழுவதும் அவன் பேச்சைத்தான் கேட்கும். அவன் மட்டும் படிப்பு முடிந்ததும் அரசியல் வாதியாகவோ முதலாளியாகவோ ஆகிவிடுவான்'' காந்தி சொல்லி முடித்தான்.

இந்தவிதமாக சின்னச் சின்ன பிரச்னைகளைக் கடந்தபிறகு ஒருவாறு திறப்பு விழாவுக்கு தேதி முடிவு செய்யப்பட்டது. முதலமைச்சர் திறந்து வைப்பதாகவும், நிதி அமைச்சர் முக்கிய விருந்தினராக கலந்து கொள்வ தாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

★ ★ ★

மறுநாள் திறப்பு விழா. முதல்நாள் இரவில் ரொம்ப தொலைவிலிருந்து காந்திக்கு போன்கால் வந்தது. போன் எடுத்து ''ஹலோ!'' என்றான்.

மறுமுனையிலிருந்து ரொம்ப மெல்லிய குரல் ஒலித்தது. ''காந்தி!''

''காந்திதான் பேசுகிறேன்.''

''நான்தான் ஹாரிகா.''

காந்தி துள்ளி விழப் போனவன் சமாளித்துக் கொண் டான். ஹாரிகா! அவனால் நம்பமுடியவில்லை. ஹாரிகா தனக்காக இவ்வளவு தொலைவிலிருந்து போன் செய்கி றாளா?

மறுமுனையிலிருந்து ஹாரிகா பேசினாள். ''இரண்டு மணி நேரமாக யோசித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. உடனே போன் செய்தேன்.''

''என்ன விஷயம்?'' பரபரப்புடன் கேட்டான். அவன் மார்பு வேகமாகத் துடித்தது. எத்தனையோ அவசர விஷயமாக இருந்தால் தவிர இந்த நேரத்தில் ஹாரிகா ஏன் போன் செய்யப் போகிறாள்?

''நீங்க இந்த ஊரில் முன்பு ஒரு தொழிற்சாலையைத் தொடங்கிய போது யாரோ ஒரு பெண்ணை அறிமுகப் படுத்தினீங்களே. அவள் யாரு?''

காந்தி மூச்சை அடக்கிக் கொண்டு ''ஏன்?'' என்றான். அவன் மனம் தீங்கை எடை போட்டது.

''அந்தப் பெண் உங்களுக்குச் சாதாரணமாக தெரிந்த நபர் என்றால் பரவாயில்லை. வேறு விதமாக இருந்தால்?''

''ப்ளீஸ்... மேலே சொல்லுங்கள்'' உரத்தக் குரலில் கத்திவிட்டான்.

''இன்றைக்கு அவள் எங்க வீட்டில் நடந்த பார்ட்டிக்கு வந்தாள். சிவகைலாஸ் வங்கியின் டைரக்டராம். அவளைப் பார்த்ததுமே எங்கேயோ பார்த்தது போல் இருக்கே என்று நினைத்தேன். இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது அவளை நீங்க எனக்கு அறிமுகம் செய்து வைத்தீங்க என்று.''

''அவள் பெயர் லக்ஷ்மி. த்ரிபுரா லக்ஷ்மி.''

''அவளைப் பார்த்ததுமே அனுமந்து மறைவில் ஒளிந்து கொண்டான். ஏன் என்று குழம்பினேன். பிறகு அவன் அப்பாவுடன் ரகசியமாக ஏதோ பேசினான். நடுவில் உங்க பெயரும் அடிபட்டது. உங்களைப் பற்றி ரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்காக அப்பாவால் ஏற்பாடு செய்யப்பட்ட நபர் அனுமந்து என்று எனக்குத் தெரியும். அவனுக்கும், அவளுக்கும் என்ன தொடர்பு இருக்குமென்று புரியாமல் குழம்பிப் போய் உங்களுக்குப் போன் செய்தேன். இந்த விஷயம் உங்களுக்கு ஏதாவது பயன்படுமா?''

காந்தி சிலையாகி விட்டான். அவள் மேலும் எதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அதெல்லாம் அவன் காதில் விழவில்லை. லக்ஷ்மிதான் டைரக்டர் என்ற விஷயம் ரா ஜாராமுக்குத் தெரிந்து விட்டதா? இப்பொழுது என்ன செய்வது? அவனுக்கு மூளையே மறத்து விட்டது போல் இருந்தது.

இந்த ஆபத்திலிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது?

''சின்ன விஷயத்திற்கு அனாவசியமாக போன் செய்து உங்களைத் தொந்தரவு செய்து விட்டேனா?''

''இல்லை இல்லை ஹாரிகா. நீங்க சிரமம் எடுத்துக் கொண்டு இப்போ செய்த இந்த போன்கால் எனக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறதோ வார்த்தைகளில் சொல்லி விட முடியாது. தாங்க்யூ ஹாரிகா தாங்க்யூ.''

போனை வைத்துவிட்டு நாற்காலியில் அப்படியே உட்கார்ந்து விட்டான். ஐந்து நிமிடங்கள் கழித்து லக்ஷ்மிக்கு போன் செய்யத் தொடங்கினான்.

டிரங்கால் வந்தபொழுது இரவு ஒரு மணி. ஆழ்ந்த உறக்கத்திலிருந்து லக்ஷ்மி உறக்கம் கலையாமலேயே போனை எடுத்து ''ஹலோ!'' என்றாள்.

''நான்தான் காந்தி. அங்கே அனுமந்துவோ பிரியம் வதாவோ இருக்காங்களா?''

''இல்லை, ஏன்?''

''அப்படி என்றால் கவனமாக கேட்டுக் கொள். மாலையில் ராஜாராம் வீட்டுக்குப் போயிருந்தாயா?''

''ஆமாம். டின்னருக்குப் போனேன்,''

''அதுதான் குடி மூழ்கிவிட்டது. நீ லக்ஷ்மி என்று அவருக்குத் தெரிந்து போய்விட்டது, அனுமந்துவின் மூலமாக.''

உடனே அவளுடைய உறக்கம் விடுபட்டுப் போய் விட்டது. ''இப்போ என்ன செய்வது?'' என்றாள்.

''இந்த விஷயம் தெரிந்ததிலிருந்து அதைத்தான் யோசிச்சுக்கிட்டு இருக்கிறேன். இந்தச் சமயத்தில் G.H.T. கம்பெனி இன்னொரு வங்கியைத் தேடிக்கொள்ள முடியாது. ஐந்தாண்டுகள் முடிவடைவதற்கு அதிகநாள் இல்லை. இந்த நிலையில் நாம் ஓரளவுக்கு நஷ்டமடை யாமல் இருக்க வேண்டுமென்றால் அந்த வங்கியின் ஷேர்களை எல்லாம் விற்றுவிட்டு டைரக்டர் பதவியை

ராஜினாமா கொடுத்துவிடு. இதைத்தவிர நாம் செய்யக் கூடியது வேறு எதுவுமே இல்லை. கிடைத்த பணத்தில் திருப்திபட்டுக் கொள்வோம்'' என்று போனை வைத்து விட்டான்.

இனி உறக்கம் வரப்போவதில்லை. தன் குவார் டர்ஸ்லிருந்து வெளியே வந்தான். தொலைவில் ஃபாக்டரி தென்பட்டது. இன்னும் நாலு நாட்களில் திறப்புவிழா. அது நடக்கப் போவதில்லை. அப்படியே நடந்தாலும் வங்கி சரியான நேரத்தில் கடன் வழங்காத காரணத்தினால் மறுநாளே இழுத்து மூடப்படும்.

அவன் மேலும் நடந்தான். சுற்றிலும் காடு. குவார்டர்ஸ் சுற்றிலும் கம்பி வேலி. வேலிக்கு அப்பால் அருவி. தொலைவில் உயரமான தேக்கு மரங்கள்.

நிலவின் வெளிச்சம் எங்கும் பரவியிருந்தது. இரண்டாவது முறையும் ஹாரிகா உதவி செய்யாமல் இருந்தால் தான் முற்றிலும் நாசமடைந்திருப்பான். கம்பி வேலியின் மேல் தலையைச் சாய்த்துக் கொண்ட காந்தி கண்களை மூடிக் கொண்டான். அவனையும் அறியாமல் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

★ ★ ★

மாலை ஐந்து மணியாகிவிட்டது. நிகழ்ச்சி தொடங்க இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. மத்திய நிதியமைச்சரும், முதலமைச்சரும் அங்கே வந்திருப்பதால் மற்ற அரசியல்வாதிகளும் அங்கே வந்து சேர்த்து கொண்டார்கள்.

காந்தி ஒரு முடிவுக்கு வந்து விட்டான். எப்படியும் ராஜாராமுக்கு லக்ஷ்மியின் விஷயம் தெரிந்து விட்டது. இனி விரைவிலேயே தன்னைப் பற்றியும் தெரிந்து விடும். அதுவரையிலும் ஏன் காத்திருக்க வேண்டும்? எப்படியும் சாகத்தான் போகிறோம். அதற்கு முன்னால் எதிரியின் காலையாவது உடைக்க வேண்டும்.

இந்த முடிவுக்கு வந்தபின் அவன் விழாவில் சுறு சுறுப்பாக பங்கெடுத்துக் கொண்டான்.

மணி ஆறடிக்கும்பொழுது ராஜாராமின் கார் வந்து நின்றது. மேடை அருகில் நின்று கொண்டிருந்த காந்தி அவரைப் பார்த்ததும் சட்டென்று மேடைக்குப் பின்னால் நகர்ந்து கொண்டான். அதே சமயத்தில் ஹாரிகா இறங் கினாள். ஹாரிகாவைப் பார்த்ததும் அவன் சிலையாகி விட்டான். வட்டமான முகம், ரோஜா வண்ணப் புடவை, ஒளிவீசும் கண்கள்.

வித்யார்த்தி ஓடிப்போய் அவர்களை வரவேற்றான். முதலமைச்சர், நிதியமைச்சர்களுடன் ராஜாராமையும் மேடைக்கு அழைத்து வித்யார்த்தி உட்கார வைத்தான். ராஜாராமுக்கு ரொம்ப பெருமையாகவும் சந்தோஷ மாகவும் இருந்தது. அமைச்சர்களுடன் சேர்ந்து மேடையில் ஒன்றாக உட்காருவது சாதாரண விஷயம் இல்லையே.

முதலமைச்சர் பேசும்போது தொழில் வளர்ச்சிதான் நாட்டிற்கு முதுகெலும்பு என்றும், மேலும் பல தொழிற் சாலைகள் உருவாக வேண்டுமென்றும் சொன்னார். நிதி யமைச்சர் பேசுகையில் இவ்வாறு பின்தங்கிய இடங் களில் தொழிற்சாலைகள் வந்தால் மாநிலங்களுக்கு

நல்ல பலன் கிடைக்கும் என்றார். ராஜாராம் பேசிய பிறகு வித்யார்த்தியின் முறை வந்தது. அவன் மைக்கின் முன்னால் வந்து நின்றான்.

''இந்தத் தொழிற்சாலை என்னுடையது. இதிலுள்ள ஷேர்கள் பெரும்பாலும் என் பெயரில்தான் இருக்கின்றன. ஆனால் இந்தத் தொழிற்சாலை உருவாவதற்கு மூலகாரண கர்த்தாவான மற்றொரு நபரை இப்பொழுது உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன். தெருவில் அனாமத்தாக சுற்றிக் கொண்டிருந்த என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்று, காகிதத் தொழிலில் எனக்குள்ள அனுபவத்தைப் புரிந்து கொண்டு, முக்கியமாக என்னை நம்பி இந்தத் தொழிற்சாலையை என்னைக் கொண்டு ஆரம்பித்திருக்கும் அந்த நபரை மேடைக்கு வந்து பேசச் சொல்லி அழைக்கிறேன்.''

அந்த நபர் யாராக இருக்கும் என்று மக்கள் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காந்தி தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்து மெதுவாக மேடையை நோக்கி வரத் தொடங்கினான்.

குனிந்து அருகில் இருந்த முதலமைச்சருடன் பேசிக் கொண்டிருந்த ராஜாராம் முதலில் அவனைப் பார்க்க வில்லை. படியேறி மேடைக்கு வரும்பொழுது பார்த்தார். கடல் அலைகள் உயரே எழும்பி முகத்தைத் தாக்கியது போல் அதிர்ச்சி அடைந்தார்.

காந்தி நிதானமாக படியேறிக் கொண்டிருந்தான். மேடையில் அமர்ந்திருந்த ராஜாராமைப் பார்த்தான். அவர் தன்னையே துளைத்தெடுப்பது போல் நோக்கு

வதைக் கண்டு லேசாக முறுவலித்தான். ராஜாராம் சிரிக்க வில்லை. அவர் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீள வில்லை. G.H.T. கம்பெனி காந்தியுடையதா? இந்த உண்மையை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை. அவர் முகம் வெளிறிப் போய்விட்டது.

காந்திக்குத் தெரியும் தன்னுடைய இந்த வெற்றி தற்காலிகமானதுதான் என்று. ராஜாராம் அதிர்ச்சியி லிருந்து மீண்டதும் தன்னை எந்த விதமாக தாக்குவது என்று ஆராயத் தொடங்குவார்.

அவன் மைக் முன்னால் வந்து நின்றான். முன் வரிசையில் ஹாரிகா அமர்ந்திருந்தாள். இருவரின் கண் களும் சந்தித்துக் கொண்டதும் லேசாக முறுவலித்தாள்.

காந்தி பேசத் தொடங்கினான். அது ஒரு நதியின் பிரவாகமாக ஆரம்பித்து பிறகு அருவியைப் போல் ஆவேசமாக பொங்கியது. அதுதான் தன் வாழ்க்கையின் இறுதிச் சொற்பொழிவு என்பதுபோல் மனம் திறந்து பேசலானான். தன் தாயின் மரணம், பணத்தைச் சம்பா திப்பது, நியாயத்திற்கும், அநியாயத்திற்கும் உள்ள வேறு பாடு, கீழ் மட்டத்திலிருந்து உயருவதற்குச் செய்த முயற்சி, இன்றைக்கு இவ்வளவு உயரத்தை எவ்வாறு எட்டிப்பிடித்தான் என்பதையும் சொல்லி முடித்தான். பந்தயத்தைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. அவன் சொல்ல வந்தது ஒன்றுதான். இன்றைய இளைஞர் களிடம் உழைப்பைவிட சமுதாயத்தின்பால் கோபமும், அதிருப்தியுமே அதிகமாக உள்ளன. கொஞ்சம் திறமை யும், உழைப்பும் மட்டும் இருந்துவிட்டால் இந்தநாடு

எப்பவோ முன்னேறி இருக்கும். இளைஞர்கள் இதை உணராமல் சங்கங்களைத் தோற்றுவித்து வெறுமே காலம் கடத்துகிறார்கள். அரசியலில் ஊழல் புகுந்து விட்டது. இதை ஒருவருமே உணரவில்லை. உண்மை யான உழைப்புக்குப் பலன் எப்பொழுதும் உண்டு.

இதைத்தான் சொன்னான் அவன். அவனுடைய நீண்ட சொற்பொழிவு முடிந்தது. சபையோர் கைதட்டவும் மறந்து விட்டார்கள். இதுவரையில், யாருமே சொல்லி யிராத தியரியை அவன் சொல்லியிருந்தான். அதை அவர் களால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. சொற் பொழிவு முடிந்ததும் மேடையை விட்டு இறங்கி இருளில் மறைந்து விட்டான்.

அவனுடைய சொற்பொழிவிலிருந்த உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் இருவர்தான்.

ஒருவர் ஹாரிகா.

மற்றொருவர் ராஜராமோ வித்யார்த்தியோ இல்லை. நிதியமைச்சர்!

அவரும் ஏழைக்குடும்பத்தில் பிறந்து, உழைப்பால் முன்னுக்கு வந்தவர். அன்றிரவு அவர் காந்திக்கு ஒரு செய்தி சொல்லிவிட்டிருந்தார். மறுநாள் விடியற்காலை யில் தன்னுடன் சேர்ந்து பறவைகள் சரணாலயத்திற்கு வரச்சொல்லி.

11

காந்தி தன் இருப்பிடத்திற்கு வரும்போது இரவு பதினோருமணி ஆகியிருந்தது. வந்த ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் போன் ஒலித்தது.

''நான்தான் ஹாரிகா.'' மறுமுனையிலிருந்து குரல் ஒலித்தது.

அதுவரை அவனைச் சூழ்ந்திருந்த சோர்வும், அசதியும் அந்த ஒரே வார்த்தையில் மாயமாக மறைந்து விட்டன. ஜன்னல் வழியாக பார்த்தபொழுது பக்கத்து காட்டேஜிலிருந்து போனில் பேசிக் கொண்டிருந்த ஹாரிகாவின் நிழல் தென்பட்டது.

''நீங்களா?'' என்றான்.

''ஒரு மணி நேரமாக முயற்சி செய்கிறேன்.''

''என் மனநிலை சரியாக இல்லை ஹாரிகா. தோல்வியின் விளிம்பில் நிற்கிறேன் நான்'' என்றான்.

இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்ட அந்த வார்த்தைகளில் இருந்த வேதனையை உணர்ந்தாள். ''ஏன்? என்ன விஷயம்?'' கலவரத்துடன் கேட்டாள்.

''இந்தக் கம்பெனி என்னுடையது என்று உங்க அப்பாவுக்குத் தெரிந்து விட்டது. இதற்கு வேண்டிய பணம் வங்கியிலிருந்து வராமல் தடுத்துவிடப் போகிறார். திறப்புவிழா நடந்த மறுநாளே ஃபாக்டரி மூடப்பட்டு

விட்டால் தொழிலாளர் சங்கம் சும்மா இருக்காது. பெரிய அளவில் ரகளை நடக்கும்.''

''ஆனால் நாட்டில் இருப்பது சிவகைலாஸ் வங்கி மட்டும் இல்லையே!''

''ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கிக்கு மாறுவது அத்தனை சுலபம் இல்லை. எத்தனையோ தடைகள் இருக்கும்.''

ஹாரிகா கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள். ''நான் அன்றைக்குப் போன் செய்து சொன்னதால்தானே இந்தப் பிரச்னை எல்லாம் வந்தது.''

''இல்லை ஹாரிகா. நீங்க சொன்னதால் நான்கு லட்சமாவது மிஞ்சியது. இல்லாவிட்டால் முற்றிலும் நஷ்டமாகியிருக்கும்'' என்றான். (லக்ஷ்மி இன்னும் ஷேர் களை விற்கவில்லை என்று அவனுக்குத் தெரியாது.)

''நாளை காலையிலேயே நாங்க கிளம்பிப் போகி றோம். விழா முடிந்ததுமே உங்களைக் காணவில்லை. உங்கள் சொற்பொழிவு ரொம்ப அற்புதம். நேர்மையாகவும் இருந்தது. வாழ்த்துக்கள்! நேரில் வந்து சொல்ல முடிய வில்லை.''

அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவள் சுயமாக தனக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க நினைத்ததோடு, பக்கத்து காட்டேஜிலிருந்து போன் செய்து பேசியது.

திரைச்சீலையை விலக்கி ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். எதிர் காட்டேஜில் ஜன்னல் கம்பியின் மேல் கையை ஊன்றியபடி போனில் பேசிக் கொண்

டிருந்த ஹாரிகா தென்பட்டாள். நிலா வெளிச்சம் அவள் மேல் விழுந்து கொண்டிருந்தது.

''பேசுங்கள்'' ஹாரிகா சொன்னாள்.

''என்ன பேசுவது?''

''உங்க பந்தயம் எந்த மட்டிலும் வந்திருக்கு?''

''இனி அதற்கான அவகாசமும் இல்லை. சமயமும் இல்லை.'' சாதாரணமாக சொல்ல முயன்றான்.

''மனதை தளர விடாதீங்க.''

அது ஆறுதலுக்காக சொன்ன வார்த்தை என்று அவனுக்குத் தெரியும்.

''சரி. போனை வைத்து விடுகிறேன். அப்பாவின் மீட்டிங் கூட முடியப் போகிறது.''

காந்தி திடுக்கிட்டு ''யாரோடு மீட்டிங்?'' என்று கேட்டான்.

''வித்யார்த்தியுடன். சுமார் இரண்டு மணி நேரமாக பேசிக்கொண்டிருக்கிறார்கள்.''

அவ்வளவுதான். காந்தியின் கையிலிருந்து ரிசீவர் நழுவிவிட்டது. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது.

அதே சமயம் வித்யார்த்தி ராஜாராமின் காட்டேஜி லிருந்து வெளியே வந்தான். ஜன்னல் வழியாக காந்தி யைப் பார்த்துவிட்டு இந்தப் பக்கமாக வந்தான்.

''என்ன நடக்கிறது இத்தனை நேரமாக?'' பரபரப்பை கட்டுப்படுத்த முயன்று கொண்டே கேட்டான் காந்தி.

ஆனால் அவன் பதட்டத்தை வித்யார்த்தி உணர வில்லை. ரொம்ப இயல்பாக ''நம்ப ஃபாக்டரியில் உற்பத்தியாகும் பேப்பரை ராஜாராமுக்கு சப்ளை செய் வதாக ரொம்ப நாளைக்கு முன்பே ஒப்பந்தம் செய்து கொண்டோம் இல்லையா'' என்றான்.

''ஆமாம்.''

''அந்த ஒப்பந்தத்தில் சில மாறுதல்களைச் செய் தார்.''

நடுங்கும் குரலில் ''என்னது அது?'' என்று கேட்டான் காந்தி.

''நாம் குறிப்பிட்ட காலத்திற்குள் பேப்பரை சப்ளை செய்யாவிட்டால் பெனால்டியுடன், கிரிமினல் வழக்குக் கூட தொடுக்கலாம் என்ற நிபந்தனைகளையும் சேர்த்து ஒப்பந்தத்தைத் திரும்பவும் எழுதிக் கொண்டோம்.''

காந்தி அதிர்ச்சியடைந்து விட்டான். ராஜாராம் எத்தனை திறமையாக பதிலடி கொடுத்திருக்கிறார்! தன்னை மேடையில் பார்த்த உடனேயே அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து விட்டாற் போலும். தான் ஓரடி எடுத்து வைப்பதற்குள் முந்திக் கொண்டு விட்டார். தன்னை வலையில் நன்றாகச் சிக்க வைத்து விட்டார்.

நாளையிலிருந்து ஃபாக்டரியை மூட நேர்ந்தால் தன்னால் காகிதம் சப்ளை செய்ய முடியாது. அதனால் ராஜாராம் கோர்ட்டுக்குப் போவார். தான் ஜெயிலுக்குப் போக நேரிடும்.

ராஜாராம் உண்மையிலேயே திறமைசாலிதான். தான் பேசி முடித்துவிட்டு மேஜையை விட்டு இறங்குவதற்குள் வித்யார்த்தியை மடக்கி ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்து தன்னை மேலும் சிக்க வைத்துவிட்டார்.

''வித்யார்த்தீ! லெட் அஸ் செலப்ரேட் தி டிஃபீட். பாட்டிலை கொண்டு வா.''

அவன் வாயிலிருந்து வெளிவந்த விருப்பத்தைக் கேட்டு வித்யார்த்தி குழப்பமடைந்தான். ''சார்!'' என்றான்.

காந்தி அலமாரியைத் திறந்தான். அரசியல் தலைவர்களுக்காக வாங்கி வைத்திருந்த மதுபாட்டில்கள் இருந்தன. 'சம்திங் ஸ்பெஷல்' என்று இருந்ததைப் பார்த்து விட்டு சிரித்தான். ''ஆம். இன்னிக்கு ஸம்திங் ஸ்பெஷல்தான்'' என்றான்.

வித்யார்த்தி காந்தியின் பக்கம் பார்த்தான். காந்தி இரண்டு கிளாஸுகளில் நிரப்பினான். முதல் பெக்... இரண்டு ,.. மூன்று பெக்குகள் கூட முடிந்து விட்டன.

''இவ்வளவு நாளாக மனிதர்களை ஏன்தான் குடிக்கிறார்களோ என்று நினைத்துக் கொள்வேன். இவ்வளவு பணம் சம்பாதித்த போதிலும் குடிப்பழக்கம் ஏற்பட வில்லை என்று பெருமைபட்டுக் கொண்டேன். இப் பொழுதுதான் புரிகிறது. லட்சக்கணக்கில் சம்பாதிக்கிற வங்க இந்த ஸ்காட்சை ஏன் நாடறாங்கன்னு. பகலெல் லாம் உழைத்துப் பாடுபடுவதால் உண்டாகும் சோர் வுக்கும், திடீரென்று லட்சக்கணக்கில் நஷ்டம் வந்தால்

உண்டாகும் மனத் தளர்ச்சிக்கும் அதிக வித்தியாச மில்லை. அவன் சாராயம் குடிப்பான். இவனோ விஸ்கி குடிப்பான். நீயும் குடி பிரதர்! நாளையிலிருந்து நமக்கு இது கூட இருக்குமோ இருக்காதோ.''

ஐந்தாவது பெக்கைக் குடித்ததும் வித்யார்த்தி மயக்கம் போட்டு விழுந்து விட்டான். காந்திக்கும் இது புது அனுபவம் தான். ஆனால் என்ன வேடிக்கை என்றால் குடித்த பிறகும் அவனால் கவலையை மறக்க முடியவில்லை. பாட்டிலை காலி செய்யும்போது மூன்று மணி ஆகிவிட்டது.

காட்டேஜ் விட்டு வெளியே வந்தான். காடு முழுவதும் உறங்கிக் கிடந்தது. மறுபடியும் உள்ளே போனான். லக்ஷ்மி ஷேர்களை விற்றாளோ இல்லையோ? ராஜாராம் அங்கேயும் புகுந்து விளையாடி இருந்தால்?

அந்த யோசனை வந்ததும் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனே ட்ரங்கால் போட்டான். இரவு மூன்று மணி என்பதால் உடனே லைன் கிடைத்து விட்டது. பிரியம்வதா போனை எடுத்தாள்.

''லக்ஷ்மி இல்லை. இரவு பத்து மணிக்கு திடீரென்று டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு கிளம்பிப் போனாள்'' என்றாள்.

''எங்கே?''

''உங்களிடம்தான்.''

காந்திக்கு இது மற்றொரு அதிர்ச்சி. அத்தனை தூரத்திலிருந்து இரவோடு இரவாக கிளம்ப வேண்டிய

காரணம் என்ன? அதுவும் இந்தக் காட்டுப் பகுதிக்கு. ஏதோ குடிமூழ்கப் போகும் காரியம் நடந்திருந்தால் தவிர அவள் இப்படி கிளம்பியிருக்க மாட்டாள்.

அவன் வாழ்க்கையில் முதல்முறையாக பயந்து விட்டான். விதி எல்லாப் பக்கத்திலிருந்தும் தன்னை ஒரே சமயத்தில் பழி தீர்த்துக் கொள்ளப் போகிறதோ? இன்னும் ஓரிரண்டு மணி நேரத்தில் லக்ஷ்மி இங்கே வந்தால் தவிர அசல் விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ள முடியாது.

கடியாரத்தில் நான்கு மணி அடித்தது. அமைச்சரைச் சந்திக்க வேண்டியது நினைவுக்கு வந்தது. குளித்து முடித்து விட்டு தயாராக இருந்தான். நாலரை மணிக்கு அழைப்பு வந்தது. இருவரும் புறப்பட்டார்கள். கார்ட் ஒருவரும் துணைக்கு வரவில்லை. காந்தியும், அமைச்சரும் மட்டுமே கிளம்பினார்கள்.

அமைச்சர் உற்சாகத்துடன் தென்பட்டார். கழுத்தில் பைனாக்குலர் தொங்கிக் கொண்டிருந்தது. சாதாரண வேளையில் அமைச்சருடன் இரண்டு நிமிடங்கள் இன்டர்வ்யூ கிடைப்பது கூட சாத்தியமில்லை.

இரண்டு பர்லாங்கு தூரம் நடப்பதற்குள் காட்டுப் பகுதி தொடங்கிவிட்டது. கிழக்கிலிருந்து சூரியன் மெதுவாகக் கிளம்பிக் கொண்டிருந்தான். பறவைகளின் கலகல சத்தம் கேட்க ஆரம்பித்து விட்டது.

''ஆர்னிதாலஜி. அதாவது பறவைகளைக் கவனிக்கும் சாஸ்திரம். இது புரியாதவர்களுக்கு வேடிக்கையாக

இருக்கும். ஆனால் நீயே பாரு. உன்னைச் சுற்றிலும் இந்த உலகம் எத்தனை அழகாக இருக்கிறதோ.''

'உண்மைதான்' என்றெண்ணிக் கொண்டான் காந்தி.

''அரசியலில் நுழையாமல் இருந்தால், நான் ஆர்னி தாலஜிஸ்டாக மாறியிருப்பேன். ஐ லவ் பர்ட் வாட்சிங். டில்லியில் ஜன்பத் ரோடில் உள்ள எங்கள் வீட்டைச் சுற்றிலும் காடாக மண்டிக் கிடக்கும் சூழல். மாலை யானால் போதும், மிக அரிதான பறவைகள் அங்கு வந்து கூடும். விடிந்த பிறகு அரசியல் மிருகங்கள் வந்து சேரும்.''

காந்தி திடுக்கிட்டவனாக அவரை ஏறிட்டுப் பார்த் தான். அவர் பைனாகுலர் வழியாக தொலைவில் பார்த்துக் கொண்டே சொன்னார்.

''பறவைகளைப் பார்த்து மனிதன் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கு. உணவுக்காக அவை எப் போதும் பறந்து திரிய வேண்டும். எந்த மூலையிலிருந்து எப்போ எந்த ஆபத்து வருமோ என்று பயந்தபடியே இருக்க வேண்டும். ஆனால் அவை என்றுமே 'ஐயோ! நான் இத்தனை கஷ்டப்படுகிறேனே' என்று சுய இரக் கத்தில் மூழ்கிப் போகாது. இந்த சுய இரக்கம் என்ற வார்த்தையை நான் எதற்கு சொன்னேன் என்றால் நேற்று இரவு உன் சொற்பொழிவில் அது நிறைய இடத்தில் வெளிப்பட்டது.''

காந்தி சிலையாக நின்றுவிட்டான்.

''எங்க அப்பா ஒரு ஓய்வு பெற்ற ஸ்கூல் வாத்தியார். ரொம்ப ஏழைக்குடும்பம் எங்களுடையது. அந்த நிலையி லிருந்து இன்று நிதிஅமைச்சர் பதவி வரையில் உயர்ந் திருக்கிறேன் என்றால் நடுவில் எத்தனையோ மேடு பள்ளங்கள் ஏற்றத்தாழ்வுகள், இரண்டு தடவை தற்கொலை செய்து கொள்ளவும் துணிந்து விட்டேன்.''

காந்தி அவரையே இமைக்காமல் பார்த்தான். நேற்றிரவு பிரச்னைகளிலிருந்து விடுபடுவதற்கு தான் குடியை நாடியது நினைவுக்கு வந்தது.

''அவ்வளவு தூரம் எதுக்கு? இன்றைக்கு நாட்டின் பொருளாதார நிலையை ஒரே ஒரு கையெழுத்தின் மூலம் மாற்றி அமைக்கக்கூடிய நான் சரியாக ஆறுமாதங் களுக்கு முன் வேறு கட்சி அதிகாரத்தில் இருந்தபோது ஜெயிலில் கைதியாக இருந்தேன். இதைவிட அவ மானம் வேறு இருக்க முடியுமா?''

காந்தி பேசவில்லை. மீண்டும் அவரே சொன்னார். ''நேற்றிரவு நீ பேசியதைப் பார்த்தபோது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் இருந்த நிலைமை எனக்கு நினைவு வந்தது. அதே மனச்சோர்வு. அதே ஆவேசம். உழைப்பு வீணாகிறதே என்ற ஆதங்கம். ஆனால் இதெல்லாம் வாழ்க்கையில் ஒரு பகுதி மட்டும் தான். அதைத் தெரிந்து கொள்ள எனக்கு பத்து ஆண்டுகள் பிடித்தன. பிறகுதான் அரசியல்வாதியாக ஆனேன். நேற்று இரவு உன்னைப் பார்த்தபோது என் கடந்த காலம் நினைவுக்கு வந்தது. அதான் உன்னை இங்கே அழைத்தேன். இந்த உலகில் உண்மையாக உழைப்ப

வர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். மற்றவர்கள் விமர் சித்துக்கொண்டோ அல்லது பாராட்டிக் கொண்டோ காலத்தை வியர்த்தமாக கழிப்பார்கள். உண்மையாக உழைப்பவன் மனச்சோர்வை தம் அருகில் கூட வர விடக் கூடாது. அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.''

அதற்குப் பிறகு அவர்கள் அந்த விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொள்ளவில்லை. பலவிதமான பறவை களை பைனாகுலர் வழியாக பார்த்து ரசித்தார்கள்.

திரும்பும்போது ஆறரையாகிவிட்டது. வழியில் காந்தி கேட்டான். ''காகிதத் தொழிற்சாலையின் எதிர் காலம் எப்படி இருக்கப் போகிறது?''

''பல பிரச்னைகளை எதிர் கொள்ளப் போகிறது.''

காந்தி வியப்புடன் ''ஏன் அப்படி?'' என்று கேட்டான்.

''ஓவர் லைசன்சிங்'' என்றார் அவர்.'' உதாரணமாக நம் தமிழ் நாட்டையே எடுத்துக் கொள்வோம். இங்குள்ள காகித ஆலைகள் எல்லாம் சேர்ந்து ஒரு நாளைக்கு 2,400 டன்கள் மரத்தை பயன்படுத்துகின்றன. ஒரு செடி மரமாக மாறுவதற்கு ஏழு வருடங்கள் பிடிக்கும். இந்தக் கணக்குப்படி பார்த்தால் எவ்வளவு காடுகளை அழிக்க வேண்டியிருக்கும்? காடுகளை அழித்துக் கொண்டே போனால் சுற்றுச் சூழல் என்னவாகும்? உறவினர் களுக்கு லைசென்ஸ் வாங்கித் தரணும் என்று டில்லிக்கு சிபாரிசுகளுடன் வந்து டோரா போடும் அரசியல்வாதி களுக்குத் தெரியாதா இந்த அழிவைப் பற்றி? அல்லது

அவர்களை விரோதித்துக் கொள்ளப் பிடிக்காமல் லைசென்ஸுகளை வழங்கும் எங்களுக்குத்தான் தெரியாதா? எங்களை விமரிசிக்கும் எதிர்க்கட்சி ஆட்கள் அதிகாரத்திற்கு வந்தாலும் இதைத் தவிர்க்க முடியாதுன்னு தெரிந்த விஷயம்தானே. இட்ஸ் ஆல் இன் தி கேம்'' என்று சிரித்தார் அமைச்சர்.

வியப்பால் கண்கள் அகலமாக விரிய அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் காந்தி. அதுவரையில் காந்திக்கு அமைச்சர்கள் என்றாலும், அரசியல்வாதிகள் என்றாலும் இளப்பமான அபிப்பிராயம் இருந்து வந்தது. இப்பொழுது அது முற்றிலும் மாறிவிட்டது. நாட்டின் நிதிஅமைச்சர் தமிழ் நாட்டின் காகிதத் தொழிற்சாலைகளைப் பற்றி புள்ளி விவரங்களுடன் அலசுகிறார். ஏனோ தெரியவில்லை. காந்தியின் விழிகளில் நீர் சுழன்றது. ''தாங்க்யூ சார்'' என்றான்.

அவர் வியப்பபுடன் ''எதுக்கு?'' என்றார்.

''இது உங்களுக்கு சொற்ப நேரமாகவே இருக்கலாம். ஆனால் இந்தச் சந்திப்பு என்னுள் பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது. என் யோசனைகள் எல்லாம் எவ்வளவு அற்பமானவை என்று இன்று புரிந்து கொண்டேன். ஊர் பெயர் தெரியாதவனுக்காக உங்கள் நேரத்தைச் செலவு செய்ததற்கு மிக்க நன்றி.'' காந்தி சொன்னான்.

★ ★ ★

ஏழுமணியடித்தது. அமைச்சர்கள் கிளம்பிப் போய் விட்டார்கள். சந்தடி குறைந்து விட்டது. ராஜாராமின்

காட்டேஜிற்கு வெளியே அவருடைய கார் நின்றிருந்தது. புறப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருந்த சலசலப்பு தென்பட்டது. தொலைவில் நேற்றிரவு விழா நடந்த மேடை சூனியமாக, காலியாக சொத்தை இழந்த கோடீஸ்வரன் போல் காட்சி தந்தது.

காந்தி தெருமுனையைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். லக்ஷ்மியின் வருகைக்காக காத்திருந்தான். அவள் கொண்டு வரப்போகும் இன்னொரு வெடிகுண்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

தொலைவில் டாக்ஸி வருவது தென்பட்டது. காந்தியின் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. டாக்ஸி தூசியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்றது. அதிலிருந்து லக்ஷ்மி இறங்கினாள்.

''என்ன? என்ன நடந்தது?''காந்தி பரபரப்புடன் கேட்டான்.

''ஒன்றும் ஆகவில்லையே?'' என்றாள் லக்ஷ்மி சாதாரணமாக இருக்க முயற்சி செய்து கொண்டே.

''இல்லை, ஏதோ நடந்திருக்கு. அதான் உன்முகம் அப்படி இருக்கு. சொல்லு. ஷேர்களை விற்று விட்டாயா?''

''இல்லை.''

காந்தி இடிந்து போனவனாக ''இல்லையா?'' என்றான்.

''வாங்குகிறவர்கள் கிடைக்கவில்லை.''

காந்திக்கு உலகமே சுழலுவது போல் இருந்தது. ஆனால் லக்ஷ்மி அவன் நிலைமையைக் கவனிக்க வில்லை. டிரான்ஸிஸ்டரைத் திருப்புவதில் முனைந்த படி ''அப்பாடி – இந்தச் செய்தி அறிக்கை நேரத்திற்குள் இங்கே வந்து சேரணும் என்று அந்த டாக்ஸிகாரனை எத்தனை அவசரப்படுத்தினேன் தெரியுமா?'' என்றாள்.

'எதுக்கு?' என்று கரந்தி கேட்கப் போனபோது லக்ஷ்மி ''ஷ்!'' என்று தடுத்து விட்டுச் செய்திகளைக் கேட்கச் சொல்லி சைகை காட்டினாள்.

செய்தி வாசிப்பாளர் முதல் செய்தியாக அந்தச் செய்தியைப் படித்தார். ''ஆறு முக்கிய வங்கிகளை அரசுடைமையாக மாற்ற நேற்றிரவு ஜனாதிபதி உத்தர விட்டார். நேற்று மாலை முதல் இந்த உத்தரவு அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசுடமையாக்கப் பட்ட வங்கிகளின் பெயர்கள் சென்ட்ரல் பாங்க் ஆஃப் மகாராஷ்ட்ரா, சிவகைலாஸ் வங்கி...''

காந்தி சட்டென்று திரும்பினான். அதுவரையில் சீரியஸாக இருப்பது போல் நடித்த லக்ஷ்மி இனியும் பொறுத்துக் கொள்ள முடியாதவள் போல் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள். மழையைப் பார்த்து குழந்தைகள் கும்மாளமிட்டுச் சிரிக்கும் சிரிப்பு.

சில நாட்களுக்கு முன்னால் ஹாரிகா ஷேர்களை விற்று காப்பாற்றினாள். இப்பொழுது லக்ஷ்மி ஷேர் களை விற்காமல் காப்பாற்றிவிட்டாள். இப்பொழுது ஷேரின் விலை நானூறு ஆகிவிடும். அதாவது நாற்பது இலட்சங்கள் லாபம். எல்லாவற்றையும் விட முக்கிய

மானது காகிதத் தொழிற்சாலையை மூட வேண்டிய அவசியம் இருக்காது. ராஜாராமால் கூட ஒன்றும் செய்து விட முடியாது.

காந்தி சந்தோஷத்தில் ''ஹீர்ரே!'' என்று கத்தி விட்டான். ஓடிவந்து லக்ஷ்மியை அப்படியே அலக்காகத் தூக்கினான். லக்ஷ்மியும் தடைசொல்லவில்லை. அங்கே ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லை. இரண்டு நபர்கள் தம் வாழ்க்கையின் மிக அபூர்வமான வெற்றியைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

அதே நேரத்தில் ஹாரிகா ப்ரீஃப்கேஸை மூடி கையில் எடுத்துக் கொண்டாள். தந்தை போய்க் காரில் உட்கார்ந்து கொண்டார். வெளியேறப் போனவள் திரைச் சீலையை விலக்கி காந்தி இருந்த காட்டேஜ் பக்கம் பார்த்தாள். திறந்திருந்த அந்தக் காட்டேஜின் ஜன்னல் வழியாக காற்றில் கிர்ரென்று சுழன்று கொண்டிருந்த லக்ஷ்மி தென்பட்டாள், காந்தியின் கரங்களில்.

ஹாரிகா திரைச்சீலையைத் சரிசெய்துவிட்டு வந்து தந்தையின் பக்கத்தில் காரில் அமர்ந்தாள். அவள் முகத்தில் எந்த உணர்ச்சியியும் தென்படவில்லை. கார் புறப்பட்டது.

கார் நகரத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. பின் சீட்டில் தந்தையும், மகளும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். பிற்பகல் பதினோரு மணியளவில் நகரமும் கிராமமும் அல்லாத ஊருக்குள் நுழைந்தார்கள்.

''டிபன் சாப்பிடுகிறாயா?'' ராஜாராம் கேட்டார்.

''வேண்டாம். வாழைப்பழம் வாங்கிக் கொள் வோம்'' என்றாள் ஹாரிகா.

டிரைவரிடம் பணத்தைத் தந்து, ''அப்படியே பேப்பரையும் வாங்கிக் கொண்டு வா'' என்றார். டிரைவர் இரண்டையும் வாங்கி வந்தான். கார் மறுபடியும் புறப் பட்டது.

பழத்தை நீட்டியபடி, ''எடுத்துக் கொள்ளுங்கள் டாடீ'' என்றாள்.

''ஊஹூம். எனக்கு வேண்டாம்'' என்று சொல்லி விட்டு பேப்பரைப் பிரித்தார். கார் குறுகலான தெரு வழியாக மெதுவாக போய்க் கொண்டிருந்தது. தூசி உள்ளே வராமல் இருப்பதற்காக கண்ணாடிக் கதவை மேலே ஏற்றினாள் ஹாரிகா.

பேப்பரில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக் களில் வெளியாகியிருந்த செய்தியைப் பார்த்துவிட்டுச் சட்டென்று முன்னால் குனிந்தார் ராஜாராம்.

'சிவகைலாஸ் வங்கி உள்பட ஆறு வங்கிகள் அரசுடைமை ஆக்கப்பட்டன.'

நடுங்கும் கரங்களுக்கிடையே பேப்பர் படபடத்தது. எழுத்துக்கள் மங்கலாக தென்பட்டன. இருக்கையில் அப்படியே பின்னால் சரிந்து விட்டார்.

ஹாரிகா முதலில் கவனிக்கவில்லை. எதற்காகவோ பக்கத்தில் திரும்பிப் பார்த்தபோது தந்தையின் நிலைமை யைக் கண்டு ''அப்பா!'' என்று கத்தினாள். ராஜாராம் பேசவில்லை.

''டிரைவர்! காரை நிறுத்து.''

கார் தெரு ஓரமாக நின்றது. ஹாரிகா முன்னால் குனிந்து தந்தையின் தோளில் கையைப் போட்டு ''அப்பா!'' என்று மறுபடியும் அழைத்தாள். ராஜாராம் கண்களைத் திறந்து மகளைப் பார்த்தார். அவர் நெற்றியிலிருந்து வியர்வை ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது.

''என்ன ஆச்சு டாடீ?'' பதட்டத்துடன் கேட்டாள்.

''லேசாக நெஞ்சு வலிப்பது போலிருக்கும்மா.''

''நெஞ்சு வலியா! இந்த ஊரில் ஏதாவது ஆஸ்பத்திரி...''

மகள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே முறுவலித்தார். ''இத்தனை சின்ன விஷயத்திற்கு ஆஸ்பத்திரி எதுக்கு? டிரைவர்! காரை வேகமாக ஓட்டு. மாலை நாலு மணிக்குள் ஊருக்குப் போய்ச் சேரணும்.''

அவர் நாலுமணிக்குள் ஊருக்குப் போய்ச் சேரணும் என்று சொன்னது தன்னை டாக்டரிடம் பரிசோதித்துக் கொள்வதற்காக அல்ல. அதற்கு முதல் நாள்தான் டாடா வாலா அவருக்கு போன் செய்து லக்ஷ்மி தன்னிடம் வந்தாள் என்றும் வங்கியின் ஷேர்களை விற்கப் போவதாகச் சொன்னாள் என்றும் தெரிவித்தார். அந்த ஷேர்களை வாங்கிக் கொள்ளலாமா என்று அவர் கேட்டபோது வேண்டாம் என்று தடுத்து விட்டார். இப்பொழுது வங்கி அரசுடமை ஆக்கப்பட்டு விட்டது. அதாவது ஷேரின் விலை உயரப்போகிறது.

ஷேரின் விலை அதிகரிக்கப் போவதும், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு விவகாரங்களும் லக்ஷ்மிக்குத் தெரிந்திருக் காது. அவளுக்கு அறிவுரை வழங்கும் காந்தியும் எங்கேயோ காட்டுக்குள் இருக்கிறான். அவன் லக்ஷ்மிக்கு போன் செய்து ஷேர்களை விற்க வேண்டாம் என்று சொல்வதற்குள் டாடாவாலாவை லக்ஷ்மியிடம் அனுப்பி ஷேர்களை உடனே வாங்க செய்ய வேண்டும். அதற் காகத்தான் அவர் டிரைவரை வேகமாகப் போகச் சொன்னார்.

இவ்வாறு அவர் அவசரப்படுத்திக் கொண்டிருந்த அதே நேரத்தில் லக்ஷ்மி அதைவிட வேகமாக காரில் விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தாள். அதற்குக் காரணம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் ஒரு நாலுமணி நேரம் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

காலை ஏழுமணிக்கு லக்ஷ்மி வந்து ரேடியோவில் செய்தி அறிக்கையை கேட்கச் செய்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியிலிருந்து சீக்கிரமாக மீண்டான் காந்தி. இது முழுமையான வெற்றி இல்லை என்று அவனுக்குத் தெரியும். அவன் மனதில் யோசனைகள் ஜெட் விமானத் தைவிட வேகமாக பயணித்துக் கொண்டிருந்தன.

லக்ஷ்மி சொன்னாள். ''ரொம்ப நல்லதாகிவிட்டது. நேற்றே அவசரப்பட்டு ஷேர்களை விற்காமல் இருந் தோமே.''

அவள் வார்த்தைகள் அவனுள் வேறுவிதமான எண்ணத்தைத் தோற்றுவித்தன. ''நாம் ஷேர்களை விற்கப் போகிறோம் லக்ஷ்மி'' என்றான்.

''என்ன?'' புரியாதவள் போல் கேட்டாள்.

''டாடாவாலாவுக்கு நீ ஷேர்களை விற்கப் போகிறாய்.''

''ஏன்?''

''அவருக்கு உன் மேல் நம்பிக்கை ஏற்படத்தான்.''

''எதுக்கு காந்தி இதெல்லாம்? எப்படியும் நீதானே பந்தயத்தில் ஜெயிக்கப் போகிறாய்.''

காந்தி மௌனம் சாதித்தான். அவன் கண் முன்னால் ஒரு காட்சி நிழலாடியது. ராஜாராம் தன்னை வேலைக் காரர்களுக்கு முன்னால் கழுத்தைப் பிடித்து வராண்டாவி லிருந்து கீழே தள்ளியது.

''ராஜாராமுக்கு நாம் சரியான பதிலடி கொடுக் கணும் லக்ஷ்மீ! டாடாவாலாவை நம் பக்கம் திருப்பிக் கொள்ளணும். வங்கி அரசுடமை ஆக்கப்பட்ட விஷயம் தெரிந்தும்கூட நீ ஷேர்களை விற்றால் நமக்கு ஐந்து லட்சம் நஷ்டம் வரும் என்பது உண்மைதான். ஆனால் டாடாவாலாவுக்கு உன்மீது நம்பிக்கையும், மதிப்பும் ஏற்படும். இன்னொரு விதமாக சொல்லணும் என்றால் ஐந்து லட்சம் கொடுத்து நாம் அவருடைய நம்பிக் கையை விலை கொடுத்து வாங்குகிறோம்.''

''ஆனால் இது எப்படி சாத்தியம்? இந்த நேரத்தில் ராஜாராம் பாதி தூரம் சென்றிருப்பார். போனதுமே அவர் டாடாவாலாவுக்கு போன் செய்து ஷேர்களை வாங்கி னாயா என்ற கேட்பார். அவர் இல்லை என்று சொல்லு வார். அப்புறம் நான் போனாலும் பிரயோஜனம்

இருக்காது. இதெல்லாம் உன்னுடைய பிளான் என்று அவருக்குத் தெரிந்து விடும்.''

''நீ இங்கே வந்தது டாடாவாலாவுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''அனுமந்துவுக்கு?''

''அவன் ஊரிலேயே இல்லை.''

காந்தி சிரித்தான். ''அப்படி என்றால் அவரைவிட நீ முன்னால் போகப் போகிறாய் லக்ஷ்மீ!''

''ராக்கெட்டில் பேரனால் தவிர சாத்தியப்படாது.''

''ராக்கெட் முடியாது என்றாலும் என்னால் விமானத்தை வரவழைக்க முடியும்.''

ஏதோ சொல்லப் போன லக்ஷ்மி அவன் சொன்னது புரிந்ததும் சிலையாக நின்று விட்டாள். காந்தி போன் செய்து சார்டெட் ஏஜென்ஸி மூலமாக சிறிய விமானத்தை வரவழைக்க ஏற்பாடு செய்தான்.

கார் விமான நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. காந்தி டிரைவ் செய்து கொண்டிருந்தான். லக்ஷ்மி காந்தியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். ரொம்ப ஷார்பாக யோசித்தால் தவிர இவ்வளவு திறமையாக திட்டம் போட்டிருக்க முடியாது. உண்மையில் மாலையில் நிதானமாக கிளம்பி மறுநாள் ஷேர்களை விற்றிருக்கலாம். ஆனால் ராஜாராம் ஊருக்குப் போனதுமே தன்னைப் பற்றி நிச்சயம் விசாரிப்பார். அந்த நேரத்தில் தான் முன்கூட்டியே அங்கே இருக்கணும்.

இத்தனை செய்தாலும் ஒருகால் தான் காந்தியைச் சந்தித்த விஷயம் ராஜாராமுக்குத் தெரிந்து விட்டால் இந்தத் திட்டமே வியர்த்தமாகிவிடும்.

காந்தி போகும் வழியிலேயே அவளிடம் என்ன செய்ய வேண்டுமோ எடுத்துச் சொன்னான்.

லக்ஷ்மி விமானத்தில் ஏறினாள். காந்தி நேரத்தைப் பார்த்தான். பரவாயில்லை. இன்னும் நேரம் பாக்கி யிருக்கிறது.

விமானம் புறப்பட்டது. லக்ஷ்மி கையை அசைத் தாள். காந்தியும் கையை அசைத்தான். விமானம் காற்றில் எழும்பியது- சரியாக அதே நேரத்தில் ராஜாராமின் கார் வாழைப்பழமும், நியூஸ் பேப்பரையும் வாங்க அந்த ஊரில் நின்றது.

12

சரியாக பன்னிரெண்டரை மணிக்கு லக்ஷ்மி டாடா வாலாவின் வீட்டுக்கு ஷேர் சர்டிஃபிகேட்களுடன் சென்றாள். வங்கி அரசுடைமை ஆக்கப்பட்ட விஷயம் தெரிந்தது முதல் அவர் வருத்தத்தில் நொடிந்து போயிருந்தார்.

''வருத்தப் படாதீங்க சார். மறுபடியும் டைரக்டர் பதவிக்கு முயற்சி செய்வோம்'' லக்ஷ்மி ஆறுதல் சொன்னாள்.

காலை முதல் இந்த மட்டுமாவது தைரியம் சொன்னவர்கள் யாரும் இல்லை. டாடாவாலா தேறிக் கொண்டு ''என்ன விஷயமாக வந்தாய்?'' என்று கேட்டார்.

''ஷேர்களை உங்களிடம் தருவதற்காக'' என்றாள்.

அவள் சொன்னது அவருக்குப் புரியவில்லை. ''என்ன?'' என்றார்.

''நேற்று ஷேர்களை விற்க வந்தபோது வேண்டாம் என்று சொல்லீட்டீங்க. நீங்க இன்னும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். முன்பின் தெரியாத இந்த பிசினெஸ் விவகாரங்களில் என்னை வழி நடத்திச் செல்ல எனக்கு ஒரு பெருந்துணை வேண்டும். அந்தத் துணையாக நீங்க இருப்பீங்க என்று நம்பித்தான் நேற்று வந்து உங்களிடம் எல்லா விஷயத்தையும்

சொன்னேன். நீங்க என்னை நம்பவில்லை. ராஜாராமுக்கு போன் செய்தீங்க. அவர் வேண்டாமென்றதும் நீங்க வாங்கிக் கொள்ளவில்லை.'' அவள் நிறுத்தினாள். அறையில் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. அந்த நிசப்தத்தை ஊடுருவிக் கொண்டு அவள் குரல் ஒலித்தது. ''ஏதோ இன்றைக்கு விலை ஏறிவிட்டது. நல்ல வேளை நாம் நேற்று விற்காமல் போனோமே என்று நான் நினைக்க வில்லை. இந்த ஷேர்கள் உங்களிடம் இருந்தாலும் சரி. என்னிடம் இருந்தாலும் சரி. எல்லாம் ஒன்றுதான். நேற்றே இதை விற்று விட்டதாக அர்த்தம். இவற்றை நீங்க எடுத்துக் கொண்டு நேற்றைய விலையைக் கொடுங்கள்.''

டாடா வாலாவுக்கு தன் செவிகளையே நம்பமுடிய வில்லை. சுமார் இருபது லட்சம் லாபமடையப் போகிறார். ஆதரவற்ற பெண்மணி ஒருத்தி தன் காதலையும், அன்பையும் பெறுவதற்காகவே இத்தனை தியாகம் செய்கிறாள். இதில் எந்த மோசடியும் இல்லை.

இந்த நாற்பத்தெட்டு வயதில் தன்னைப் பார்த்து இருபத்தி ஐந்து வயது பெண்மணி, வங்கியின் டைரக்டர் பதவியில் இருப்பவள், மனதை இழந்தவளாக இருபது லட்சத்தை துச்சமாக நினைப்பது! அவரால் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத விஷயம் இது. இருபது லட்சத்தை விட ஒரு பெண் தன்னை விரும்புகிறாள் என்ற விஷயமே அவருக்குத் தாங்க முடியாத சந்தோஷத்தை ஏற்படுத்தியது. சரியாக பத்து நிமிடங்களில் ஒப்பந்தம் முடிந்து விட்டது.

ஷேர்களை லாக்கரில் வைத்துப் பூட்டிய டாடா வாலா, ''எனக்கு இந்த ஷேர்களை விற்று நஷ்டம் அடைந்து விட்டதாக நினைக்க வேண்டாம் மிஸ் திரிபுரா. இனிமேல் நீ என்னைச் சேர்ந்தவள். இன்று நீ எடுத்த இந்த முடிவு உன் வாழ்க்கையை மாற்றி அமைக்கப் போகிறது. அந்த காந்திக்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று நீயே சொல்லி விட்டாய். உனக்கு யாருமே இல்லையென்று இனி கவலைப்படத் தேவையில்லை. நான் இருக்கிறேன். அது சரி. அந்த காந்தி மேலுக்குத்தான் அப்படித் தென்படுவானே தவிர ரொம்ப கெட்டிக்காரன். கண்டிப்பாக பந்தயத்தில் ஜெயித்து அந்த ராஜாராமின் மகளையும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான், எனக்குத் தெரியும்.''

லாக்கரைப் பூட்டிவிட்டுத் திரும்பிய டாடா வாலா லக்ஷ்மி அசைவின்றி சிலையாக நாற்காலியில் அமர்ந் திருப்பதைப் பார்த்து வியப்படைந்தார். அப்பொழுது தான் கையெழுத்துப் போட்டு விட்டு நிமிர்ந்த லக்ஷ்மி அப்படியே ஆடாமல் அசையாமல் உட்கார்ந்து விட்டாள். டாடாவாலா சொன்ன இறுதி வார்த்தைகள் அந்த அறையில் எதிரொலிப்பது போல் இருந்தது. அவள் முகம் சலனமற்று இருந்தது.

''மிஸ் திரிபுரா! உடம்பு சரியில்லையா?''

சட்டென்று தேறியவள், ''அதெல்லாம் ஒன்று மில்லை. நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்று சொல்லி விட்டு எழுந்து கொண்டாள். நடந்து கொண்டே யோசிக்கத் தொடங்கினாள். ரொம்ப நாட்களுக்கு

முன்னால் ராஜாராமின் வீட்டிற்கு டின்னருக்குப் போயிருந்த பொழுது தன்னை அவர் அடையாளம் கண்டு கொண்டு விட்ட விஷயம் இரவோடு இரவாக காட்டுக்குள்ளே இருந்த காந்திக்கு எப்படி எட்டியதென்று இப்பொழுதுதான் அவளுக்குப் புரியத் தொடங்கியது.

★ ★ ★

ராஜாராம் ஊருக்கு வந்து சேரும்போது மாலை ஐந்தாகி விட்டது. காரிலிருந்து இறங்கியதுமே நேராக போய் டாடா வாலாவுக்குப் போன் செய்தார்.

''டாடா வாலா! நம் வங்கி...''

டாடா வாலா இடைமறித்து ''நேற்று மாலையே எனக்குத் தெரியும். தகவல் சொல்லலாம் என்றால் நீங்க ஊரில் இல்லை'' என்றார்.

''அதைவிட முக்கியமான விஷயம் பேசத்தான் போன் செய்தேன். அந்த திரிபுர லக்ஷ்மி விற்க எண்ணிய ஷேர்களை எப்படியாவது வாங்கி விடணும்.''

''இன்றைக்கு வாங்கி விட்டேன்.''

''வாட்!'' கத்தி விட்டார் ராஜாராம்.

''அவள் மறுபடியும் இன்றைக்கு என்னிடம் வந்தாள். வங்கி அரசுடமை ஆகிவிட்டால் ஷேரின் விலை அதிகரிக்கும் என்ற விஷயம் அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. பாவம் ஷேர்களை எல்லாம் விற்று விட்டாள்.'' சிறிய பொய் ஒன்றைச் சேர்த்துச் சொன்னார் டாடாவாலா.

ராஜாராம் முகத்தில் மீண்டும் களை வந்தது. ''குட்'' என்று போனை வைத்து விட்டார்.

''என்னப்பா இது? வந்ததும் வராததுமாக போன் பேசித்தான் ஆகணுமா? உடம்பை விட இப்போ பணம் சம்பாதிப்பதுதான் முக்கியமாகி விட்டதா?'' என்றாள், அது வரையிலும் அங்கேயே நின்று கொண்டிருந்த ஹாரிகா.

''பணம் சம்பாதிப்பது இல்லை ஹாரிகா. நமக்கு இருக்கும் பணம் பத்துத் தலைமுறைக்குப் போதும். இன்னும் பத்து வங்கிகள் நம்முடையவை அரசுடமை ஆக்கப்பட்டாலும் நமக்கு ஒன்றும் ஆகாது. ஆனால் நாலு வருடங்களுக்கு முன் ஒரு தண்ணிப் பாம்புடன் சின்ன சவாலை விட்டேன். சின்ன பாம்புதானே என்று அப்போதே தடியால் அடிக்காமல் விட்டு விட்டேன். இப்போ அது தன்னை ஒரு நாகப்பாம்பு என்று நினைத்துக் கொண்டு படகு விரித்து ஆடத் தயாராகி விட்டது. மறுபடியும் தலையெடுக்காமல் அடித்து நசுக்கிடணும்.''

''அது உண்மையிலேயே தண்ணிப்பாம்பு என்றால் பயப்படுவானேன்?''

''அப்படி அசட்டையாக இருந்து விடக் கூடாது. நானும் அப்படி நினைத்துத்தான் இத்தனை நாளும் சும்மா இருந்து விட்டேன். இந்தக் குறுகிய காலத்திற்குள் அது நிறைய பலத்தைத் திரட்டி விட்டது. ஆனாலும் பரவா யில்லை. இருபத்தைந்து ஆண்டுகளாக வியாபாரத்

திலேயே ஊறிவிட்ட இந்த ராஜாராமால் உண்மையான நாகப்பாம்பு வந்தால்கூட எதிர்த்து நிற்க முடியும்.''

''உங்க பயமெல்லாம் அவன் ஐம்பது லட்சம் சம்பாதித்து விடப் போகிறானே என்றுதானே? உங்க மகளை அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமே என்றுதானே?''

எதிர்பாராத இந்தக் கேள்வி ராஜாராமைத் திகைக்க வைத்தது. மகள் பக்கம் பார்த்தார். அவள் முகம் சாதாரண மாக இருந்தது. அருகில் சென்று தோளில் கையை வைத்துப் பரிவோடு, ''அன்று ஆவேசத்தில் ஏதோ வாய் தவறிப் பந்தயம் வைத்துக் கொண்டேன். அதைப் பற்றி ஒரு பயமும் உனக்கு வேண்டாம். என் உடம்பில் உயிருள்ள வரையில் உன் திருமணம் அவனுடன் நடக்க அனுமதிக்க மாட்டேன்.''

ஹாரிகா பதில் சொல்லவில்லை.

தன் வார்த்தைகள் மகளைச் சமாதானப்படுத்த வில்லை என்று உணர்ந்த ராஜாராம், ''அவனுடைய அழிவு தொடங்கி விட்டதம்மா. நேற்று வங்கி அரசுடமை ஆக்கப்பட்ட செய்தியைத் தெரிந்து கொள்ளாமல் இன்று அவனுடைய பிரதிநிதி இங்கே இருபத்தைந்து லட்சம் மதிப்பு வாய்ந்த ஷேர்களை வெறும் நாலு லட்சத்திற்கு விற்று விட்டாள்.''

''விற்று விட்டாள் என்று சொல்றீங்க. அந்தப் பிரதி நிதி ஒரு பெண்ணா டாடி?''

''பெண்தான். லக்ஷ்மி என்று ஒருத்தியை வைப் பாட்டியாக வைத்துக்கிட்டு இருக்கிறான். அந்த மாதிரி கேவலமான ஆட்களுக்கு மதிப்பாக, நாகரீகமாக வாழத் தெரியுமா என்ன?''

அவள் போனுக்கு அருகில் இருந்த சோபாவில் மெதுவாக உட்கார்ந்து கொண்டாள். எரிமலை ஒன்று அவள் மனதில் வெடிக்கத் தயாராக இருந்தது.

ராஜாராம் தன்னுடைய அறைக்குப் போக முற்பட்ட போது அவள் இறுதியாக ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''அப்படி என்றால் இன்னிக்கு டாடா வாலாவுக்கு ஷேர்களை விற்றது லக்ஷ்மி தானே?''

''ஆமாம்மா'' ராஜாராம் உள்ளே போய் விட்டார்.

அவள் சோபாவில் சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டாள். லக்ஷ்மி... லக்ஷ்மி. எங்கேயோ இந்தப் பெயரைக் கேட்டிருக்கிறாள். எங்கே? மூளையில் பளிச் சென்று எங்கேயோ மின்னியது. சில நாட்களுக்கு முன்னர் காந்தியுடன் போனில் பேசிய உரையாடல் நினைவுக்கு வந்தது. அவள் பெயர் திரிபுரா லக்ஷ்மி என்று அவன் சொன்னது உள்பட. காலையில் காந்தி ஒரு பெண்ணைத் தூக்கிக் காற்றில் சுழற்றியது. கண்முன்னே காட்சி தெரிந்தது.

லக்ஷ்மி இந்த ஊரிலேயே இருந்து ஷேர்களை விற்றிருக்கும் பட்சத்தில் அந்தப் பெண் பின்னே யாராக இருக்கும்? எழுந்து போனை எடுத்தாள். டைரக்டரியை புரட்டி நம்பரைத் தேடிப் பிடித்து விமான நிலையத் திற்குப் போன் செய்தாள்.

''ஹலோ!'' மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

''இன்றைக்கு ஏர்போர்ட்டில் சார்டெட் விமானம் ஏதாவது வந்ததா?''

''ஆமாம் மேடம். ஊட்டியிலிருந்து வந்தது.''

''அதில் யார் வந்தார்கள்?''

''எங்களிடம் அந்த ரிகார்ட் இருக்காது மேடம்.''

''ஆனால் கிரவுண்ட் கண்ட்ரோலுக்குத் தெரியாத விஷயம் இருக்குமா?'' அவள் சிரித்தாள்.

''யார் பேசுவது?''

''பர்சனல் அஸிஸ்டெண்ட்டு ஏவியேஷன் டிபார்ட் மெண்ட்.''

''யாரோ ஒரு பெண் வந்து இறங்கினாள் மேடம். அவ்வளவுதான் தெரியும்.''

''தாங்க்யூ'' அவள் போனை வைத்து விட்டாள். அவள் சந்தேகப்பட்டது உண்மையாகிவிட்டது. ஆனால் அந்த வெற்றி அவளுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை.

★ ★ ★

ஜெயிண்ட் வீலுக்கு அருகில் காந்தி நின்று கொண் டிருந்தான். மனிதனின் உயரத்தை விட சுமார் பத்து மடங்கு பெரிய இரும்புச் சக்கரம் அது. கிர்ரென்று சுழன்று கொண்டிருந்தது.

யூகலிப்டஸ் மரத்தைத் தண்ணீரில் ஊறவைத்து அந்தச் சக்கரத்திற்கு அருகில் போட்டுக் கொண்டிருந்

தார்கள். பெருத்த ஓசையுடன் அந்த இயந்திரம் அவற்றைத் துண்டுத் துண்டாக்கிக் கொண்டிருந்தது. அந்தத் துண்டுகள் பெல்ட்டுகள் வழியாக கிரஷிங் யூனிட்டுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அங்கிருந்து மிக்ஸிங் பிளாண்டுக்கும், ரியாக்ஷன் சென்டருக்கும் சென்று கூழாக மாற்றப்பட்டு உருமாறி பேப்பராக மாற்றப்படுகிறது.

அதே காம்பவுண்டுக்குள்ளே இருந்த ஆபீசுக்குப் போனான் காந்தி. வெளியே வெளிநாட்டுக் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது. தன்னைத் தேடிக் கொண்டு இந்தக் காட்டிற்கு விலை உயர்ந்த காரில் வந்திருப்பவர்கள் யாராக இருக்கும் என்று வியப்புடன் ஆபீஸ் அறைக்குள் நுழைந்தான் காந்தி.

நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டு நீளமான சுருட்டை ஆனந்தமாக புகைத்தபடி அமர்ந்திருந்த அந்த நபர்...

தி பேப்பர் கிங்!

அஞ்சி ரெட்டி.

அஞ்சிரெட்டி பிசினெஸ் உலகில் எப்படி அடியெடுத்து வைத்தான் என்று தெரியாது. எவ்வளவு முதலீடு போட்டான் என்றும் உலகத்திற்குத் தெரியாது. ஆனால் இன்று காகித வியாபாரத்திற்கு மகுடம் சூடாத மன்னனாக விளங்கினான். பேப்பர் கிங் என்றுதான் எல்லோரும் அவனை அழைப்பார்கள். மத்தியப் பிரதேஷ் காடுகளில் பாதியை அவன் பினாமி பெயரில் காண்ட்

ராக்ட் எடுத்திருந்தான். ஹிமாசல் பிரதேஷிலும் பாதி பேப்பர் மில்லுகள் அவனுடையவைதான். கண் அசைவி லேயே பேப்பரின் விலையை இருமடங்காக்கக் கூடிய வல்லமை படைத்தவன். அவ்வளவு செல்வாக்கு இருந்தது அவனுக்கு.

சுமார் இருபத்தைந்து வருட்ங்களுக்கு முன் அவன் ஒரு அனாதை. பழைய ஓட்டு வீட்டை விற்று பழைய பேப்பர் வியாபாரத்தைத் தொடங்கினான். அத்துடன் மனி சர்க்குலேஷன் திட்டம் ஒன்றையும் வைத்து கைதாகி நான்கு மாதங்கள் சிறையில் இருந்தான். ஜெயிலிலிருந்து வெளியே வந்த பிறகு இந்தச் சில்லரை வியாபாரத்தில் பிரயோஜனமில்லை என்று உணர்ந்து மத்தியப்பிரதேஷிற்குப் போய்விட்டான். காட்டுவாசி களைக் கூட்டிக் கொண்டு அவர்களுடைய பெயரில் அரசாங்கம் தரும் சலுகைகளைப் பயன்படுத்தி பேப்பரில் மில்லை தொடங்கினான். கோவாபரேடிவ் முறையில் காட்டுவாசிகளின் உறுதுணைச் சங்கமாக இயங்கிய அந்த மில் ஓராண்டிற்குள் நஷ்டத்தில் மூழ்கியது. அந்த மில்லை மிகக் குறைந்த விலைக்கு மார்வாடி ஒருவர் வாங்கிக் கொண்டார். ஆறு மாதங்களுக்குள் அஞ்சி ரெட்டி அந்த மார்வாடிக்கு எப்படி பார்ட்னர் ஆனான் என்பதைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு அந்த காட்டுவாசிகளுக்கு புத்திசாலித்தனம் இல்லை. காட்டு வாசிகளுடன் சேர்ந்து நடத்திய போது நஷ்டத்திற் குள்ளான அந்த மில் மார்வாடியுடன் சேர்ந்து நடத்திய பொழுது லாபங்கள் எப்படி ஈட்டியது என்று விசாரிக்க

அரசாங்கத்திற்கும் நேரமில்லை. மார்வாடியுடன் கை கோர்த்த அஞ்சிரெட்டி அவன் மனைவியுடனும் நெருக் கத்தை வளர்த்துக் கொண்டான். அதன் விளைவாக அந்த மார்வாடி மத்தியப்பிரதேஷ் காடுகளில் மில்லை கவனித்துக் கொண்டிருந்தார். அஞ்சிரெட்டி குஜராத்தில் மார்வாடியின் மனைவியை, மேலும் இரண்டு மில்லு களை மேனேஜ் செய்து கொண்டிருந்தான்.

வியாபாரத்திற்கும் அரசியலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஹிமாசல்பிரதேஷில் ஒரு ஃபாக் டரியைத் தொடங்குவதற்கு ஐந்து லட்சம் கேட்டார் ஒரு அமைச்சர். அதை டேப்பில் பதிவு செய்து, போட்டோக் களை எடுத்து பத்திரிகை நிருபர்களிடம் தந்தான் அஞ்சி ரெட்டி. நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது. மந்திரிசபை ராஜினாமா செய்ய வேண்டி வந்தது. அது வரை அதிகாரத்தில் இருந்தது எதிர்க்கட்சி என்பதால் மத்திய அரசு இந்த விவகாரத்தில் மகிழ்ச்சியடைந்தது. பிரதமர் கூட அஞ்சிரெட்டியைத் தனிப்பட்ட முறையில் பாராட்டினார்.

பிரதமரின் பாராட்டைப் பெற்றவனை கொண்டாட வில்லை என்றால் அது ராஜதுரோகமாகிவிடும் என்று அரசியல் தலைவர்களுக்குத் தெரியும். இரவோடு இரவாக அஞ்சிரெட்டி பெரிய மனிதனாகி விட்டான். சுமார் பதினாறு மில்லுகளுக்கு அஞ்சிரெட்டி அதிபதி யாகி விட்டான். காகிதத் தொழிற்சாலைகளை கண்ட் ரோல் செய்து 'பேப்பர் கிங்' என்ற அடைமொழியை பெற்று விட்டான்.

காந்தி உள்ளே நுழைந்து ''ஹலோ'' என்றான். அஞ்சிரெட்டியை அதற்கு முன்னால் சந்தித்தது இல்லை என்றாலும் அவனைத் தெரியாதவர்கள் பிசினெஸ் உலகில் யாரும் கிடையாது.

''வா... காந்தி உட்காரு.''

தன்னுடைய ஆபீசில் தன்னையே வரவேற்று உபசரிக்கும் அஞ்சிரெட்டியை விநோதமாக பார்த்தான் காந்தி. இருந்தாலும் பேசாமல் உட்கார்ந்து கொண்டான்.

''மில் எப்படி இருக்கு?'' அஞ்சிரெட்டி கேட்டான்.

''புதுசு இல்லையா. ஆனாலும் பரவாயில்லை. ஓ.கே.''

''ராஜாராம் என்ன சொல்கிறார்?''

காந்தி திடுக்கிட்டான், திடீரென்று ராஜாராமின் பேச்சை எடுத்ததற்கு. தான் ராஜாராமுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட விஷயம் நினைவுக்கு வரவே அதைப் பற்றிப் பேசத்தான் அஞ்சிரெட்டி வந்திருப்பான் போலும் என்று எண்ணிக் கொண்டான். ரொம்ப காலமாக இருவருமே இதே துறையில் இருந்து வருவதால் ராஜாராமுக்கு ஏஜென்ஸி தருவதை இவன் விரும்ப மாட்டான். உண்மையில் காந்திக்குக் கூட அதில் விருப்பமில்லை. ஆனால் ஒப்பந்தம் முடிந்து விட்டதால் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது. அதைத்தான் அஞ்சிரெட்டியிடம் சொன்னான்.

அஞ்சிரெட்டி அவன் சொன்னதைக் கேட்டு விட்டு உரத்தக் குரலில் சிரித்தான். ''நான் கேட்க வந்தது உங்க

பேப்பர் ஒப்பந்தத்தைப் பற்றி இல்லை. ராஜாராம் என்ன சொல்கிறார்? தன் மகளை உனக்குத் தந்து கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று சொல்கிறாரா?''

காந்தியின் முகம் கன்றிவிட்டது. தம் மூவருக்கு மட்டுமே தெரியும் என்று நினைத்துக் கொண்டிருந்த ரகசியம் எப்பொழுது வெட்டவெளிச்சமாயிற்றோ அவனுக்குப் புரியவில்லை.

அவன் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாதவனாக அஞ்சிரெட்டி மேலும் சொல்லிக் கொண்டே போனான். ''ரொம்ப பெரிய பந்தயம் வைத்து விட்டாய் காந்தி! அதற்காக உன்னைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் நீ செய்த தவறு என்னவென்றால் ராஜாராமின் திறமையைக் குறைவாக எடைபோட்டு விட்டதுதான். அவர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா?''

''தெரியாது'' தன்னையும் அறியாமல் சொன்னான் காந்தி.

''உன் இரு சினேகிதிகளும் சேர்ந்து உனக்கு இது வரையிலும் ஆறு வியாபார சூட்சமங்களை சொல்லித் தந்திருக்கிறார்கள். ஏழாவதாக இறுதியாக முக்கியமான சூட்சுமம் ஒன்றை நான் சொல்கிறேன். கேட்டுக்கொள். வியாபாரத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதை விட எதிராளி என்ன செய்கிறான் என்பதைத்தான் முக்கிய மாக கவனிக்க வேண்டும்.

''நீ இந்த ஸ்டேஜில் இதை மறந்து விட்டதுதான் துரதிர்ஷ்டம். முதலில் நீ ஆயிரக் கணக்கில் மட்டும்

சம்பாதித்துக் கொண்டிருந்தபோது பரவாயில்லை. ஆனால் இப்பொழுது ராஜ்ராம் சுயமாக களத்தில் குதித்து விட்டார். உன்னை முற்றிலும் நாசமாக்க முதல் யுத்தியை கையாண்டிருக்கிறார். அவருடைய திட்டத்தின் படி மார்ச் பத்தொன்பது அன்று நீ ஜெயிலில் இருப்பாய். அந்தத் தேதியின் முக்கியத்துவம் உனக்குத் தெரியும் என்பதால் நான் சொல்லத் தேவையில்லை.''

காந்திக்கு தொண்டைக்குழி வற்றிவிட்டது போல் இருந்தது. ''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

அஞ்சிரெட்டி சிரித்தான். ''இது ரொம்ப சின்ன விஷயம். உன் வாழ்க்கையே ஒரு டைரி போல் குறிக்கப் பட்டு இருக்கிறது. முதலில் நீ ஒரு பிச்சைக்காரியிட மிருந்து நாலணாவை பெற்றுக் கொண்டு வியாபாரத்தைத் தொடங்கியதிலிருந்து இன்று வரை அத்தனையும். ராம் தீர்த்துடன் சேர்ந்து நீ பங்காளி ஆனது கூட எங்களுக்குத் தெரியும். பை தி பை பிரியம்வதா என்ன சொல்கிறாள்?''

காந்தி அதற்குப் பதில் சொல்லாமல், ''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும் என்றுதான் கேட்கி றேன்?'' என்றான்.

''ஐ.ஜி. எனக்கு நெருங்கிய நண்பர். ஒருநாள் பேச்சு வாக்கில் 'பாரேன், இந்த இளைஞன் யாரோ ரொம்ப சுறுசுறுப்பாக இருக்கிறான்' என்றேன். உடனே முழுவது மாக ரிப்போர்ட் தயாரித்து கொடுத்து விட்டார்.''

அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் சூழ்ந்து கொண்டது. காந்தி நாற்காலியிலிருந்து எழுந்து கொண்டான். அவன் முகம் கடினமாக மாறியது. ''ஆமாம். நான் ராம்தீர்த்திடம் கடன் வாங்கினது உண்மைதான். கடன் பெற்று நிலத்தை வாங்கி மலைப் பாதையைப் போடச் செய்து விலை உயர்ந்ததும் விற்றதும் உண்மைதான். ஆனால் இதில் எதுவும் சட்டத்திற்கு புறம்பானது இல்லை. என்னை நீதிமன்றத்தில் குற்ற வாளியாக நிறுத்திவிட முடியாது.''

''இப்பொழுது நீதி மன்றத்தைப் பற்றி யார் பேசினார்கள்? உண்மையில் ஒருவனை குற்றவாளியாக நிறுத்த வேண்டும் என்றால் அவன் சட்ட விரோதமான காரியங்களைச் செய்திருக்க வேண்டுமென்பது அவசிய மில்லை. உங்கள் ஃபாக்டரியின் புகைப் போக்கிக்குக் குழாய் தேவையான அளவு உயரத்தில் இல்லை என்ற காரணம் ஒன்றை மட்டுமே காட்டி உன்னை இந்த நிமிடமே அரெஸ்ட் செய்ய முடியும்.''

''அரசாங்கத்தில் ரொம்ப செல்வாக்கு இருக்கும் நபர் நீங்கள். தவறு செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒரு ஆளைக் குற்றவாளியாக நிரூபிக்கக் கூடிய வாய்ப்பு நம் சட்டத்தில் எப்போதும் இருக்கிறது. எதுவும் இல்லாத நிலையில் இருந்து இன்று ஓரளவுக்கு சம்பாதித்து இருக் கிறேன். என் கடந்த காலத்தில் நான் ஏதாவது தவறு செய்திருக்கக் கூடும். அதைக் கண்டும் காணாமல் விட்டு விடுவதா அல்லது என்னை ஜெயிலில் தள்ளுவதா என்று முடிவு செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. நான்

உங்களுக்கு உதவினால் முதலாவதைச் செய்வீங்க. உதவி செய்யாவிட்டால் இரண்டாவதைச் செய்வீங்க. அதற்கு வேண்டிய சாட்சியங்களும், ஆதாரங்களும் உங்களிடம் இருக்கும். இவ்வளவு தூரம் வந்து விட்ட பிறகு இன்னும் மூடி மறைப்பானேன்? நான் என்ன செய்ய வேண்டுமோ சொல்லுங்கள்.''

காந்தி நேராக இப்படிக் கேட்டதும் அஞ்சிரெட்டி திகைத்துப் போனான். உடனே சுதாரித்துக் கொண்டு காந்தியைப் பாராட்டுவது போல், ''பேஷ்! நான் நினைத்ததை விட ரொம்பவும் கெட்டிக்காரனாக இருக்கிறாய்'' என்றான்.

''நாம் நேராக விஷயத்திற்கு வரலாமே?''

அஞ்சிரெட்டி உடனே பதிலளிக்கவில்லை. நாற்காலியை விட்டு எழுந்து போய் ஜன்னல் வழியாக தென்பட்ட அடர்ந்த காட்டைப் பார்த்தான்.

''காந்தீ! காகிதத் தொழிற்சாலை விரைவிலேயே பெரிய ஆபத்தை எதிர்கொள்ளப் போகிறது. இதற்குக் காரணம் அளவுக்கு மீறி தோன்றிக் கொண்டிருக்கும் காகிதத் தொழிற்சாலைகள்தான். இதில் என்னுடையவையும் சிலது இருக்கு. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ராஜாராமுக்குத்தான் பெரும்பகுதி மில்களில் பங்கு இருக்கிறது. காகிதத்தின் விலை சரிந்து விட்டால் இவை எல்லாவற்றுக்கும் நஷ்டம் தான். அதனால் ஏதாவது காரணம் காட்டி சில மில்லுகளை மூட வேண்டியிருக்கும்.''

காந்தி திடுக்கிட்டான். ஒரு பக்கம் மாணவர்களும், அப்பாவி பள்ளிச் சிறுவர், சிறுமியர் பாடப் புத்தகங்கள் கிடைக்காமல் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கும் போது இந்தத் தொழிலதிபர்கள் பேப்பர் விலை சரிந்து விடாமல் இருப்பதற்காகவும், முடிந்தால் விலையை இன்னும் கொஞ்சம் உயர்த்துவதற்காகவும் மில்களை மூடிவிட நினைக்கிறார்கள்.

அஞ்சிரெட்டி சொல்லிக் கொண்டே போனான். ''விலை குறைந்து விடுவதால் ராஜாராமுக்கு பெரிதாக நஷ்டம் எதுவும் வந்து விடாது. காரணம் அவருக்குச் சொந்த ஏஜென்ஸிக்கள் நிறைய இருக்கின்றன. தன் மில்லில் உற்பத்தியாகும் பேப்பரை அவர் எப்படி யாவது விற்று விடுவார். நஷ்டம் வந்தால் அது எனக்குத் தான். அது போகட்டும். அவர் உங்க கம்பெனியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். உங்க மில் தயாரிக்கும் பேப்பர் முழுவதையும் வாங்க தீர்மானித்து விட்டார். அப்பொழுதே எனக்குச் சந்தேகம் வந்தது. ஒரு பக்கம் பேப்பரின் விலை சரிந்து கொண்டிருக்கும்போது இந்த ராஜாராம் இன்னொரு புது கம்பெனியுடன் ஏன் ஒப்பந்தம் செய்து கொண்டார் என்ற யோசித்தேன். ஆராய்ந்து பார்த்தபோது பல விஷயங்கள் வெளி வந்தன. நீயும் அவரும் பந்தயம் வைத்துக் கொண்டது, உங்களுக்கு இடையே ஏற்பட்ட பகைமை எல்லாமே தெரிய வந்தன. உன்னை முற்றிலும் அழித்து விடுவதற் காக ராஜாராம் ரொம்ப கட்டுத்திட்டமான திட்டம் ஒன்றைத் தீட்டியிருக்கிறார். அவர் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார் தெரியுமா?''

''என்ன செய்கிறார்?'' காந்தி கேட்டான்.

★ ★ ★

''பிரண்ட்ஸ்!'' என்றார் ராஜாராம் குரல் செருமிக் கொண்டு. ''இப்பொழுது மாணவர் சங்கத் தலைவர் திரு பிரகாஷ் பேசப் போகிறார்'' என்று அறிவித்தார்.

பிரகாஷ் எழுந்து கொண்டான். அந்த ஹாலில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும், அவர்களின் பிரதிநிதிகளும், எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களும் இருந்தார்கள். பிரகாஷ் பேசத் தொடங்கினான். அவன் ஆவேசத்தோடு பேசும்போது அந்த அறையே ஸ்தம்பித்து விட்டது.

''நண்பர்களே! இந்த அரசாங்கம் நமக்கு எந்த உதவியும் செய்யவில்லை. இந்தக் கொடுங்கோல் அரசாங்கத்தை மாணவர்களால் மட்டும்தான் எதிர்கொள்ள முடியும். சமத்துவ சமுதாயத்தைத் தோற்றுவிக்கணும் என்றால் மாணவர்கள் தொழிலதிபர்களுடன் சேர்ந்து பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் புதிய மலர்ச்சி தோன்றும்.''

இவ்வாறு அரைமணி நேரம் சொற்பொழிவு ஆற்றினான். அங்கிருந்தவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் இன்னும் மீசை கூட சரியாக அரும்பாத இளம் பருவத்தில் இருந்தார்கள். பிரகாஷ் பேசி முடித்த பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். இந்தியா போன்ற ஏழை நாட்டில் கல்வி கூட விலை உயர்ந்ததாக போய்விட்டதென்றும், அதற்குக் காரணம் அரசாங்கத்தின் இயலாமை

தான் என்றும் அழுத்திச் சொன்னார். நோட்டுப் புத்தகங்களை மலிவு விலையில் கொடுக்க முடியாத, பாடப் புத்தகங்களை நேரத்திற்குள் சப்ளை செய்ய முடியாத இந்த அரசாங்கத்தை உடனே பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று முழக்கமிட்டார். மாணவர்கள் தன் பக்கம் இருந்தால் உயிரைக் கொடுத்தாவது அவர்களைக் காப்பாற்றத் தயார் என்றும் சொன்னபோது அவையில் கைத்தட்டல்கள் எதிரொலித்தன.

ராஜாராம் மட்டும் சிறிது நியாயமாக பேசினார். ''தமிழ் நாட்டில் பேப்பர் மில்கள் எல்லாவற்றிலும் எனக்குத் தொடர்பு இருக்கிறது. தற்போதைய விலையை விடச் சற்று குறைவான விலைக்கு தருவதற்கு நாங்கள் தயார்தான். ஆனால் அரசாங்கம் முன் வர மறுக்கிறது. பாடப் புத்தகங்கள் உரிய காலத்தில் மார்க்கெட்டுக்கு வர வில்லை என்றால் அதற்குக் காரணம் அரசாங்கத்தின் நிர்வாகக் குறைவுதானே தவிர பேப்பர் தட்டுப்பாடு ஒன்று மில்லை. காகித மில்களின் பிரதிநிதியாக பேப்பரின் விலையை ஐந்து சதவீதம் குறைத்துக் கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் இந்தக் கூட்டத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.''

மாணவர்கள் ஜோராக கைதட்டினார்கள். பிறகு பல தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு கல்லூரியின் பிரதிநிதியும் ஸ்ட்ரைக் வெற்றியடைய பாடுபடுவதாக உறுதியளித்தார்கள். ஒவ்வொரு ஊரிலும் கலெக்டர் அலுவலகம் வரையிலும் ஊர்வலம் நடத்துவ தென்று முடிவு செய்யப்பட்டது.

கூட்டம் வெற்றிகரமாக முடிவடைந்தது.

★ ★ ★

''இதுதான் நடந்தது'' என்றான் அஞ்சிரெட்டி. அவன் சொன்னதையெல்லாம் கேட்டபிறகு காந்தியின் முகம் வெளிறி விட்டது.

''இனிமேல் என்னி நடக்கும் என்று தெரியுமா?'' அஞ்சிரெட்டி கேட்டான்.

''தெரியும். பேப்பர் விலையைக் குறைக்கச் சொல்லி அரசாங்கம் காகிதத் தொழிற்சாலைகளை வற்புறுத்தும். இப்பொழுதுதான் இந்தத் துறையில் அடியெடுத்து வைத்திருக்கும் என்னால் அந்த விலைக்கு சப்ளை செய்ய முடியாது. கிரிமின்ல் கிளாஸுடன் ஃபார்வார்ட் காண்ட்ராக்டில் நுழைந்து விட்ட நான் என் தொழிற்சாலையை மூடும்படி நேரும். சரக்கை சப்ளை செய்யாததால் ராஜாராம் என்னை அரெஸ்ட் செய்து விடுவார். சரியாக பத்தொன்பதாம் தேதிக்கு ஐம்பது லட்சங்களுடன் பந்தயம் ஜெயித்திருக்க வேண்டிய நான் அன்று ஜெயிலில் கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்பேன்.''

''நீ ரொம்ப கெட்டிக்காரன்தான். சொல்லாமலேயே எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விட்டாய். ஆனால் உனக்கு என்ன நேரப் போகிறது என்பதை மட்டும்தான் நீ யோசித்துப் பார்த்திருக்கிறாய். ஆனால் ராஜாராமின் எண்ணங்கள் இதைவிடப் பெரியவை. காகிதத்தின் விலையைக் கொஞ்சம் குறைத்து, அதன்மூலம் பாதிக்கும் மேற்பட்ட மில்களை சாசுவதமாக மூடச் செய்து தானே லாபங்களை அடைய வேண்டுமென்று நினைக்கிறார்.''

காந்தியின் மனதில் பலவிதமான எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன. என்ன முடிவு செய்வது என்று மட்டும் புரியவில்லை.

''சொல்லு காந்தி! எப்படியும் உன் மில் மூடி விடப் போவது நிச்சயம். இப்பொழுதே மூடிவிடப் போகிறாயா? அல்லது ராஜாராம் மாணவர்களைத் தூண்டிவிட்டு ஸ்ட்ரைக் செய்ய வைத்து அரசாங்கம் விலையைக் குறைக்கச் சொல்லி உத்தரவிட்ட பிறகு அந்த விலைக்கு சப்ளை செய்ய முடியாமல் அப்பொழுது மூடப் போகிறாயா?''

காந்தி சிறிது நேரம் யோசித்தான். இரு நபர்களுக்கு இடையே நிகழும் இந்த விளையாட்டில் தான் இப் பொழுது எடுக்கப் போகும் முடிவு தன் வாழ்க்கையை சாசுவதமாக தீர்மானிக்கப் போகிறது. நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு வெளிவந்தது அவன் குரல். ''நான் உங்க பேச்சைக் கேட்டுக் கொண்டு இன்றைக்கு மில்லை மூடி விட்டால் ராஜாராம் கோர்ட் மூலமாக என் மேல் நட வடிக்கை எடுக்கமாட்டார் என்பதற்கு என்ன உறுதி?''

''அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு. மூச்சு கூட விடமுடியாத அளவுக்கு வேலைகளிலும், கஷ்டங் களிலும் ராஜாராம் திணறிப்போகும்படி செய்யும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. போதுமா?''

''நான் ஒரு மாதத்திற்குள் ஏதாவது ஒரு காரணம் காட்டி லாக்கவுட் அறிவித்து விட்டு தொழிற்சாலையை மூடி விடுகிறேன்.'' தன் இறுதி முடிவைச் சொன்னான் காந்தி.

''குட்'' என்று எழுந்து கொண்டான் அஞ்சிரெட்டி. ''என்னை நம்பியவர்கள் யாருமே வீண் போனதில்லை. ஒரு வருடம் போவதற்குள் சட்டமன்றத்திலிருந்து உனக்கு அழைப்பு வந்தாலும் ஆச்சரியப்பட வேண்டிய தில்லை.''

இருவரும் சேர்ந்து வெளியே வரும்போது காந்தி கேட்டான். ''அரசாங்கத்தில் இத்தனை செல்வாக்கு இருக்கும் நீங்க ராஜாராமை ஆரம்பத்திலேயே அடக்கி யிருக்கலாமே. இந்த ஸ்ட்ரைக் நடந்து, நாட்டில் ரகளை ஏற்பட்டு அரசாங்கத்திற்கு இது ஒரு பெரிய தலைவலி யாய் மாறும் வரையில் சும்மாயிருப்பானேன்?''

''பிரதமருக்கும், முதலமைச்சருக்கும் ஒத்துப் போக வில்லை. எந்த நிமிடம் வேண்டுமானாலும் அவரை நீக்கிவிடணும் என்று பிரதமர் நினைத்துக் கொண்டிருக் கிறார். இந்த பேப்பர் பஞ்சத்தை முதலமைச்சர் சரியாக சமாளிக்கவில்லை என்றால் மக்களிடையே அவருடைய பெயர் கெட்டுவிடும். அந்தக் காரணம் காட்டி பிரதமர் முதலமைச்சரை நீக்கி விடலாம். அதனால்தான் பார்த்தும் பார்க்காதது போல் நடக்கிறது விவகாரம்.''

''பாதி மில்கள் உங்களுடையவைதானே. இதை மூடிவிட்டால் பஞ்சம்தானே? அது போறாதா?''

''ரொம்ப சங்கடமான கேள்விகளைக் கேட்கிறாய் நீ. இருந்தாலும் சொல்கிறேன். முதலமைச்சரை நீக்கி விட்டால் இப்பொழுது பதவியிலிருக்கும் ஹோம் மினிஸ்டர் அந்த இடத்திற்கு வந்து விடுவார். அதில்

எனக்கு விருப்பம் இல்லை. நாட்டில் நடக்கும் ரகளையை அடக்கி ஒடுக்கமுடியாத ஹோம் மினிஸ்டர் முதலமைச்சர் பதவிக்கு ஏற்றவர் இல்லை என்று நான் பிரதமரிடம் சொல்ல வேண்டுமென்றால் நாட்டில் பெரிய கலகம் ஏற்படணும். நோட்டுப் புத்தகங்களும், பாடப் புத்தகங்களும் கிடைக்காததால் ஏற்படும் கலகம் மக்களின் இரக்கத்தைச் சம்பாதித்துத் தரும். பேப்பரின் விலை குறைக்கப்பட்டால் எனக்கு ஐம்பது லட்சம் வரும். அவ்வளவுதானே. ஆனால் முதலமைச்சர் பதவிக்கு நான் கொண்டு வரப் போகும் ஆள் மூலமாக எனக்குக் கிடைக்கப் போகும் ஆதாயம் இரண்டு மூன்று கோடி இருக்கும்.''

''முதலமைச்சர் பதவிக்கு வரப்போவது யாரு?''

''சொல்லித்தான் ஆகணுமா?''

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லாவிட்டால்.''

அஞ்சிரெட்டி முறுவலித்தான். ''கல்வி அமைச்சர்.''

இந்தப் பதிலைக் கேட்ட பிறகு தன்னைச் சமாளித்துக் கொள்ள காந்திக்கு சில நிமிடங்கள் பிடித்தன. ''ஹோம் மினிஸ்டரை மறுத்து விட்டு கல்வி அமைச்சரை எதற்கு முதலமைச்சர் பதவியில் அமர்த்தணும்? இப்போ இருக்கும் முதலமைச்சரை மாற்ற வேண்டிய காரணம் தான் என்ன?'' குழப்பமாகக் கேட்டான் காந்தி.

அஞ்சி ரெட்டி காரில் ஏறி அமர்ந்தான். டிரைவர் பணிவுடன் கதவைச் சாத்தினான். கார் புறப்படும்போது அஞ்சிரெட்டி மென்மையான குரலில் பதிலளித்தான்.

''இப்போ இருக்கும் முதலமைச்சரும், ஹோம் மினிஸ்டரும் வேறு வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள். கல்வி அமைச்சரும், நானும் ரெட்டியார், ஒரே ஜாதி யைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் காரணம்.''

தூசியைக் கிளப்பிக் கொண்டு கார் சென்று விட்டது. காந்தி சிலையாக நின்று விட்டான். நாட்டில் மிகக் குறுகிய காலத்தில் ஏற்படப் போகிற் கலவரத்திற்குக் காரணம் இந்த அற்ப விஷயமா?

''கடவுளே! இந்த நாட்டைக் காப்பாற்று. இந்த அற்பர்களிடமிருந்தும், ஜாதி வேற்றுமை துவேஷத்தை உண்டாக்கும் துஷ்டர்களிடமிருந்தும் மக்களைக் காப் பாற்று.'' மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டான்.

13

லக்ஷ்மியிடம் ஏதோ மாற்றம் தெரிந்தது. ஆனால் அது என்னவென்று காந்திக்குப் புரியவில்லை.

நாட்டில் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. மேலும் மோசமாகியிருக்குமோ என்னவோ. நடுவில் ராஜாராம் உடல் நலனை பரிசோதித்துக் கொள்வதற்காக ஸ்விட்ஜர்லாண்டிற்குப் பதினைந்து நாட்கள் போனதால் கொஞ்சம் தடை ஏற்பட்டது. லக்ஷ்மி இப்பொழுது காந்தி யுடன் இல்லாமல் காட்டிலிருந்த தொழிற்சாலையில் இருந்து வந்தாள். இதற்குக் காரணம் தெரிய வேண்டு மென்றால் சிறிது பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

சிவகைலாஸ் வங்கி அரசுடமை ஆக்கப்பட்டதில் லக்ஷ்மிக்கு டைரக்டர் பதவி போய்விட்டது. வெறுமே பொழுதைக் கழிக்கப் பிடிக்கவில்லை. வேலையில் லாமல் தனக்குப் பொழுது போகவில்லை என்று காந்தி யிடம் சொன்னபோது பேப்பர் தொழிற்சாலைக்கு ஜெனரல் மேனேஜராக ஊட்டிக்கு அனுப்பி வைத்தான். தான் பட்டணத்திலேயே இருந்து கொண்டு அரசியல் வாதிகளுடன் அறிமுகம் வளர்த்துக் கொண்டான்.

ஃபாக்டரிக்கு போய்ச் சேர்ந்த லக்ஷ்மி வேலையில் ஆழ்ந்து விட்டாள். உற்பத்தியின் மீது கவனம் செலுத்தி னாள். லக்ஷ்மியின் வருகையால் வித்யார்த்தியின் வேலைப் பளு பாதியாக குறைந்து விட்டது. லக்ஷ்மி

சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை பார்க்கும் நபராக நடந்து கொண்டாள். வேலையில் சேர்ந்ததுமே அவள் செய்த முதல் காரியம் யூனியன் தலைவர்களுடன் பேசி, தொழிலாளர்களின் வீட்டு வசதி, வைத்திய வசதி, முதலியவற்றைப் பேசி முடிவு எடுத்தது தான். காட்டுப் பிரதேசம் என்பதால் மலேரியாவின் பாதிப்பு அதிகம். வெளியிலிருந்து வந்து வேலைக்குச் சேர்ந்தவர்கள் அந்த இடத்து பகல் நேரத்து வெயிலையும், இரவில் குளிரை யும் தாங்க முடியாமல் சிரமப்பட்டார்கள்.

லக்ஷ்மியின் வருகை அந்தச் சூழ்நிலைக்கு ஒரு புதிய அழகைச் சேர்த்தது. அவள் சுறுசுறுப்பாக வேலை செய்தது எல்லோருக்கும் தூண்டுகோலாய் இருந்தது. இரவு ஒரு மணி வரையிலும் விழித்திருந்து அவள் வேலை பார்த்து வந்தாள். அவளைப் பற்றி முதலில் இளக்காரமாக நினைத்தவர்கள் கூட விரைவிலேயே தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டார்கள்.

உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியது. இதே ரீதியில் போனால் முதல் ஆண்டின் இறுதியிலேயே அதிக அளவு போனஸ் பெறமுடியும் என்ற நம்பிக்கை தொழிலாளர் களுக்கு ஏற்பட்டது. லக்ஷ்மிக்கு இருபத்தி நான்கு மணி நேரம் கூட போதவில்லை. ஆனால் கூர்ந்து கவனித்தால் இனம் புரியாத வேதனையை மறைப்பதற்காகவே அவள் இப்படி வேலையில் ஆழ்ந்து போகிறாள் என்பது புரியும்.

அவள் ஃபாக்டரியில் சேர்ந்த புதிதில் ஒருநாள் அனுமந்து வந்தான். அண்ணனைப் பார்த்ததுமே அவள்

மகிழ்ச்சியடைந்தாள். அவன் ராஜாராமின் ஆள் என்று தெரிந்தாலும் அந்த நேரத்தில் ஒரு தங்கையாக அவனை வரவேற்றாள். அதுதான் அவள் செய்த தவறு.

இரவு பத்து மணிக்கு ஆபீஸ் அறைக்குள் நுழைந்த அண்ணனை, களைத்துப் போன கண்களுடன், இதழ்களில், முறுவலுடன் வரவேற்றாள்.

''எதற்காக நீ இவ்வளவு கஷ்டப்படணும்?'' எதிர் சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டே கேட்டான் அனுமந்து.

''அவர்கள் நமக்குச் சம்பளம் தரும்போது அதற்குத் தகுந்தாற்போல் வேலை செய்ய வேண்டாமா?''

''இத்தனை சின்ன வயதில் நீ இவ்வளவு பெரிய பொறுப்பை நிர்வகிப்பதைப் பார்க்கும்போது ரொம்ப சந்தோஷமாக இருக்கும்மா.''

லக்ஷ்மி பதில் சொல்லவில்லை. அவன் மேலும் ஏதோ சொல்ல வந்தபோது பேச்சை மாற்றியபடி, ''நீயும் அண்ணியோடு இங்கேயே வந்து விடக் கூடாதா அண்ணா? இங்கேயே ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக் கொள்ளலாமே.'' என்றாள்.

''வேண்டாம் லக்ஷ்மி. காந்தியிடம் வேலைக்குச் சேருவது எனக்குப் பிடிக்கவில்லை.''

''ஏன்? காந்திக்கு என்ன வந்தது?''

''அந்த விஷயத்தை விட்டுத் தள்ளு. வேறு ஏதாவது விசேஷம் இருந்தால் சொல்லு.''

''வேறென்ன விசேஷம் இருக்கப் போகிறது?''

''இந்த ஃபாக்டரி ஆரம்பித்து எவ்வளவு நாளாகிறது?''

''ஆறேழு மாதங்கள் இருக்கும்.''

''நீ இங்கே வந்து சேர்ந்து எத்தனை மாதமாகிறது?''

''இரண்டு மாதங்கள் இருக்கும்'' என்றாள் லக்ஷ்மி.

''சம்பளம் எவ்வளவு வருகிறது?''

அவளுக்குச் சொல்லப் பிடிக்காததால் ''அந்த மாதிரி கணக்காக எதுவும் இல்லை'' என்று பொய் சொன்னாள்.

''உனக்குச் சொல்கிற அளவுக்கு நான் ஒன்றும் பெரிய ஆள் இல்லை. இருந்தாலும் மனிதன் எந்த சமயத்தில் எப்படி மாறுவானோ, யாருக்குத் தெரியும்? காந்தியிடமிருந்து ஒரு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வாங்கிக் கொள்ளக் கூடாதா?''

''அந்த மாதிரி எதுவும் தேவையில்லை. காந்தியின் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.''

''சரி. உன் விருப்பம்'' என்று அவன் எழுந்து கொண்டான். அதற்குள் இர்ண்டாவது ஷிப்ட் மேனேஜர் வந்து ஏதோ சொன்னார். லக்ஷ்மி அவருடன் அவசரமாக ஃபாக்டரியை நோக்கிக் கிளம்பினாள்.

அவர்கள் இருவரும் தொலைவிலிருந்த ஃபாக்டரி கட்டடத்தை அடையும் வரையிலும் அனுமந்து அப்படியே ஜன்னல் அருகில் நின்றபடி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் தொலைவாக

போய்ச் சேர்ந்துவிட்டதை உறுதிப் படுத்திக் கொண்ட பிறகு ஜன்னலை விட்டு நகர்ந்தான். லக்ஷ்மியின் மேஜையையும், அலமாரியையும் தேடத் தொடங்கினான். ராஜாராம் எதைக் கொண்டு வரச் சொல்லி அவனை அனுப்பியிருந்தாரோ அதைக் கண்டு பிடிப்பதற்கு பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

ஒரு சிறிய நோட்டுப் புத்தகம் அது. லக்ஷ்மி தன் கைப்பட எழுதியிருந்த நோட்டு.

எக்ஸைஸ் வரி சம்பந்த ஆட்களுக்காகவும் – இன்கம்டாக்ஸ்காரர்களுக்காகவும் எழுதப்படும் கணக்குப் புத்தகங்கள் ஃபாக்டரியின் அகௌண்டஸ் பிரிவில் இருக்கும். உண்மையில் நடக்கும் விஷயம் என்னவென்று முதலாளிக்கும், ஜெனரல் மேனேஜருக்கும் மட்டும்தான் தெரியும். இது எங்குமே நடப்பதுதான். அனுமந்து தன்னுடன் எடுத்துச் சென்றது அசல் கணக்குகள் எழுதப் பட்ட புத்தகம்.

லக்ஷ்மிக்கு இந்த விஷயம் மறுநாள் மதியம்தான் தெரியவந்தது. அதிகாலையிலேயே அனுமந்து பஸ் ஸ்டாண்டுக்குப் புறப்பட்டபோது, ''அண்ணா! நாளைக்கு போய்க் கொள்ளலாமே. நாளைக்கு என்றால் கார்கூட போகும். அதிலேயே அனுப்பி வைக்கிறேன்'' என்றாள்.

''எனக்கு எதுக்கும்மா காரும் கப்பலும்?'' என்று சொல்லிவிட்டு அனுமந்து புறப்பட்டு விட்டான்.

அன்று பிற்பகல் புரொடக்ஷன் மேனேஜர் வந்து முதல் நாள் நடந்த உற்பத்திக் கணக்குகள் அடங்கிய

ஷீட்டைக் கொடுத்துவிட்டுப் போனார். அவற்றைக் குறித்துக் கொள்வதற்காக நோட்டைத் தேடியபொழுது அதைக் காணவில்லை.

பதட்டத்தில் அவளுக்கு உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. புத்தகங்களையெல்லாம் தலைகீழாகத் தேடினாள். அது ரொம்ப முக்கியமான புத்தகம் என்றும், யார் கண்ணில் பட்டாலும் ஆபத்து என்றும் அவள் அறிவாள். எங்கேயோ கண்மறைவாக ஒளித்து வைக்க வேண்டிய புத்தகம் அது. அலட்சியமாக ஆபீஸ் அறை யிலேயே வைத்து விட்டாள். இப்பொழுது இந்த விஷயம் காந்திக்குத் தெரிந்தால் என்ன ஆகும்?

அவள் வித்யார்த்தியை உடனே வரச் சொல்லி தி அனுப்பினாள். நடந்ததைக் கேட்டு அவனும் கல ர மடைந்தான்.

''எப்படி தொலைந்தது? நேற்று நீங்க இல்லாத போது யாராவது வந்தார்களா?'' என்று கேட்டான். அப் பொழுதுதான் அவளுக்கு அனுமந்துவைப் பற்றிய நினைவு வந்தது. உடனே எல்லாம் புரிந்து விட்டது. பக்கத்திலேயே இருந்த போனை எடுத்து காந்தியுடன் தொடர்பு கொண்டு பேசத் தொடங்கினாள்.

★ ★ ★

''இன்னும் பத்து நாட்களில் மாணவர் சங்கத் தலை வர்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்ட்ரைக் அறிவிக்கப் போகிறார்கள். நாடு முழுவதும் ஒரே நாளில் தொடங்கப் போகிறார்கள். ஸ்ட்ரைக் தொடங்கிய பத்து நாட்கள்

கழித்து அதனுடைய தீவிரத்தைப் பார்த்துக் கொண்டு ராஜாராம் பேப்பர் விலையைக் குறைப்பதாக அறிவிப் பார். வெற்றி அவருடையதாக ஆகும் முன்பே நாம் ஏற்கனவே முடிவெடுத்தது போல் மில்களை மூடிவிட வேண்டும். அவர் சொல்லும் விலைக்கு நம்மால் எப்படி யும் உற்பத்தி செய்ய முடியாது. அதனால் கையைச் சுட்டுக் கொள்வதற்கு முன்பே இந்தக் காரியத்தைச் செய் யணும்.'' அஞ்சி ரெட்டி சொல்லிக் கொண்டிருந்தான். காந்தியின் ஆபீஸ் அறையில் அமர்ந்திருந்தார்கள் இரு வரும்.

புத்தகங்கள் வேண்டுமென்று மாணவர்கள் செய்யும் ஸ்ட்ரைக் காரணமாக காகித உற்பத்தி மேலும் குறைந்து புத்தகங்களின் விலை ஏறுவதோடு மேலும் தாமதமாகப் போகிறது. இந்த விஷயம் அரசியல் தலைவர்களுக்கும், மேதாவிகளுக்கும், ஸ்ட்ரைக் செய்பவர்களுக்கும் தான் தெரியாது. இதை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று காந்திக்குப் புரியவில்லை. ஆனாலும் இப்போ எதுவும் செய்ய முடியாது.

அஞ்சிரெட்டி ஏதோ சொல்லப்போன பொழுது போன் ஒலித்தது. ரிசீவரை எடுத்துப் பேசிய காந்தியின் முகம் அடுத்த நொடியில் கறுத்து விட்டது. ''மை காட்! எப்போ புறப்பட்டான் அனுமந்து?'' என்று கேட்டான். பதிலைக் கேட்டுவிட்டு சட்டென்று போனை வைத்து விட்டான். அவன் முகம் வெளிறிப் போயிருந்தது.

''என்ன நடந்தது?'' அஞ்சிரெட்டி கேட்டான்.

காந்தி போனில் தெரிவிக்கப்பட்ட செய்தியைச் சொன்னான். விஷயத்தைக் கேட்ட அஞ்சிரெட்டி கூட ராஜாராமின் யுத்தியைக் கேட்டு, வியப்படைந்தான். ஆனால் அது ஒரு வினாடி நேரம்தான். உடனே சுதாரித்துக் கொண்டு, ''அந்தப் புத்தகத்தை அனுமந்து ராஜாராமிடம் கொடுத்து விட்டிருப்பானா?'' என்று கேட்டான்.

''இந்நேரத்திற்கு ஊருக்கு வந்து சேர்ந்திருப்பான். நேராக ராஜாராம் வீட்டுக்கே போறானோ அல்லது தன் வீட்டிற்குப் போய் விட்டுப் பிறகு போகிறானோ தெரிய வில்லை.'' அவன் முகத்தில் கலவரம் படிந்திருந்தது.

அஞ்சிரெட்டி ஒரு முடிவுக்கு வந்தவனாக, ''சரி. அந்த விஷயத்தை என்னிடம் விட்டுவிடு. நோட்டை வாங்கித் தருவது என்னுடைய பொறுப்பு'' என்றான்.

''எப்படி?''

''பிசினெஸ் என்றால் வெறும் பணம் வரவு செலவு பார்த்துக் கொள்வது மட்டுமே இல்லை. நம்மைச் சுற்றி நடப்பதைக் கூட கூர்ந்து கவனிக்கணும். நாம் சொல்லும் வேலைகளை எதிர்க்கேள்வி கேட்காமல் செய்து முடிக்கும் ஆட்களையும் தேடிக் கொள்ளணும்.''

''அந்த நோட்டைத் திரும்பவும் பெற்று விடுவதால் பிரச்னை தீர்ந்து விடாது. பஸ்ஸிலேயே அனுமந்து அந்த நோட்டில் இருப்பதைப் படித்து விட்டிருப்பான். அந்த நோட்டு நம்மிடம் வந்து சேர்ந்து விட்டாலும், ராஜா ராமுக்கு அதில் இருக்கும் விஷயங்கள் தெரிந்துவிட்டால் ஆபத்து. அனுமந்து முட்டாள் ஒன்றும் இல்லை'' காந்தி சொன்னான்.

ஆம். அனுமந்து முட்டாள் ஒன்றுமில்லை. பஸ்ஸை விட்டு இறங்கியதும் நேராக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். வந்ததுமே ஜேபியிலிருந்து பாக்கெட் டேப்ரிக்கார்டரை வெளியே எடுத்தான். இதுபோன்ற ஒரு டேப்ரிக் கார்டரை அவன் பயன்படுத்துவான் என்று லக்ஷ்மியோ, காந்தியோ நினைத்துப் பார்க்கவில்லை. இதை அவனுக்கு தந்தது ராஜாராம்தான்.

அறையின் கதவைச் சாத்திக் கொண்டு அந்த காசெட்டுக்குப் பக்கத்திலேயே இன்னொரு காசெட்டை வைத்து சுமார் கால்மணி நேரம் இடைஇடையே தானும் பேசிக் கொண்டே புதிதாக பதிவு செய்தான்.

ஏறக்குறைய இந்த வேலை முடிவடையும் தருணத்தில் வெளியே கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தான். யாரோ முன்பின் தெரியாத இரண்டு பேர் நின்றிருந்தார்கள்.

''அனுமந்து என்பது நீங்கதானா?''

''ஆமாம்.''

''டாடாவாலா உங்களை உடனே அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்.''

அனுமந்துவுக்கு டாடா வாலாவை ஓரளவுக்கு தெரியுமே. ''இதோ வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் உடைகளை மாற்றிக் கொண்டு வந்து காரில் அமர்ந்தான்.

அதற்குப் பிறகு அவன் என்ன ஆனான் என்று யாருக்குமே தெரியாது. நம்மிடையே வாழ்ந்து வரும்

மனிதர்கள் திடீரென்று மாயமாகி விடுவது இந்தச் சமுதாயத்திற்குப் புதிது ஒன்றுமில்லை.

பிரியம்வதா மட்டும் ரொம்ப நாள் வரையிலும் பூவும், பொட்டும் வைத்துக் கொண்டுதான் இருந்தாள்.

★ ★ ★

ராஜாராம் வெளிப் பார்வைக்குச் சாதாரணமாக தென்படுவாரே ஒழிய அவர் மனதில் ஆழம் மட்டும் யாருக்கும் தெரியாது. சொல்லப் போனால் அவருடைய மகளுக்கும்.

மகளை, காட்டு நடுவில் இருந்த ஃபாக்டரி திறப்பு விழாவுக்கு அழைத்துப் போன சூட்சுமத்தை பிரம்ம தேவனால் கூட கண்டுபிடித்து விட முடியாது. ஒரு முறை காந்தி பற்றி பேச்சு வந்தபோது மகளின் கண்கள் பளிச்சென்று மின்னியதை அவர் கவனித்து விட்டார். தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற் காகவே அவர் அவளைத் திறப்பு விழாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கே லக்ஷ்மி வருவாள் என்று அவர் எதிர் பார்த்தார். ஆனால் அவருடைய எதிர்பார்ப்புக்கு மாறாக காந்தி அங்கே தென்பட்டது, சொற்பொழிவு ஆற்றியது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. காந்தி பேசிக் கொண் டிருந்தபோது அவர் தன் மகளையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். கண்ணிமைக்காமல் கவனமாக காந்தி யின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த மகளைப் பார்த்ததும் அவருக்கு ஏதோ புரிவது போல் இருந்தது.

இதுபோன்றவற்றை அவர் ஆயிரக்கணக்கில் பார்த் திருக்கிறார். அவருடைய வலையில் ஹாரிகா சுலபமாக

விழுந்து விட்டாள். இரவு பதினோரு மணிக்கு தந்தை அடுத்த அறையில் வித்யார்த்தியுடன் பேசிக் கொண்டு இருப்பதாக நினைத்துக் கொண்டு பக்கத்து காட்டேஜுக்கு போன் செய்து காந்தியுடன் பேசியதை ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். கோபத்தால் அவர் முகம் ஜிவுஜிவு என்று மாறியது. ஆனால் அது ஒரு நிமிடம்தான். பிறகு வழக்கம்போல் உறங்கச் சென்று விட்டார்.

ஊருக்கு வந்ததுமே அவர் செய்த முதல் காரியம் டெலிபோன் பில்களை வரவழைத்துப் பார்த்தார். தன் வீட்டிலிருந்து ஊட்டி பேப்பர் தொழிற்சாலைக்கு எத்தனை டிரங்கால்கள் செய்யப்பட்டன என்று பார்த்தார். ஹாரிகா சில நாட்களுக்கு முன் காந்திக்குச் செய்த போன்கால் கிடைத்தது. அதாவது நான் நினைத்ததை விட அவ்விருவரின் அறிமுகம் வளர்ந்து விட்டிருக்கிறது. காந்தியின் வெற்றிக்கு தன் மகளே மறைமுகமாக உதவி செய்து வருகிறாள்.

தான் திறமையாக காந்தியின் வீட்டில் இருக்கும் ஆளையே தனக்கு ஒற்றனாக நியமித்துக் கொண்டால், காந்தி இன்னும் ஒருபடி மேலேயே போய் தன் மகளையே தனக்கு எதிராக திருப்பி விட்டான். ஆவேசத்தினால் அவருடைய உடல் நடுங்கியது. இப்பொழுது பிரச்னை காந்தியின் வெற்றியில்லை. காதல் என்ற பெயரில் மகள் வீட்டை விட்டுக் கிளம்பிப் போய் காந்தியுடன் சேர்ந்து பிச்சை எடுக்காமல் முளையிலேயே இதை கிள்ளி எறிந்து விடணும். அதற்காக அற்புதமான ஒரு திட்டம்

போட்டு அனுமந்துவை லக்ஷ்மியிடம் அனுப்பி வைத் தார். கணக்குப் புத்தகம் வெறும் சாக்கு மட்டும்தான். லக்ஷ்மியிடம் என்ன பேச வேண்டுமோ, எப்படிப் பேச வேண்டுமோ ராஜாராம் முன் கூட்டியே சொல்லித் தந்தார். டேப்ரிக்கார்டரையும் கொடுத்து அனுப்பினார்.

அவன் வந்து விட்டது தெரிந்து ராஜாராம் தானே சுயமாக அவன் வீட்டிற்குப் போனார்.

பிரியம்வதா கதவிற்குப் பின்னால் நின்று கொண்டு, ''இப்பொழுதுதான் யாரோ வந்து காரில் அவரை அழைத்துக் கொண்டு போனார்கள்'' என்றாள் பணி வுடன்.

அனுமந்து தன்னுடைய கையாள் என்று காந்திக்குத் தெரிந்து விட்ட பிறகு இனி அவனுடன் அவருக்கு வேலையில்லை. மேஜை மீது இருந்த காசெட்டை கோட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினார்.

★ ★ ★

''இதோ...இதுதானா உன் புத்தகம்?'' மேஜை மீது வீசி எறிந்தவாறு அஞ்சிரெட்டி சொன்னான்.

அதைப் பார்த்ததும் காந்தியின் முகம் மலர்ந்தது. ''இதுவேதான்.'' புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டே சொன்னான்.

''இதை அவன் தன் யஜமானிடம் கொடுக்க வில்லை. அதற்கு முன்பே கைப்பற்றி விட்டோம்.''

''எங்கே கிடைத்தது?''

''அனுமந்துவிடமிருந்து.''

''ஆனால் அவன் இதைப் படித்திருப்பானோ?''

''படித்திருந்தாலும் அவனால் யாருடனும் பேசமுடியாது.''

''அப்படி என்றால்?''

''வாழ்க்கையிடம் விரக்தியடைந்து சன்யாசியாகி விட்டானாம்.''

''என்னவோப்பா. சிலபேர் அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள். வேறு சிலரோ ராஜாராமின் பணம் ஐந்தாறு லட்சங்களை சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும் பேசிக் கொள்கிறார்கள். எது உண்மை என்று யாருக்கும் தெரியாது. தெரிந்த ஒரே உண்மை அனுமந்துவைக் காணவில்லை என்பதுதான்.''

காந்தியின் கரங்கள் நடுங்கின. ''அனுமந்து செத்துப் போய் விட்டானா?'' என்றான்.

''சில விஷயங்களை நாம் வெளிப்படையாக் பேசிக் கொள்ளாமல் இருப்பதே நல்லது. அவங்கவங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதை நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்.''

அறையே எதிரொலிப்பதுபோல் ''நோ!'' என்று கத்தினான் காந்தி. அவன் கண்களில் நீர் சுழன்றது. ''நம் தேவைக்காக ஒரு ஆளை பலி வாங்குவது அநியாயம்'' என்றான் நாத்தழுதழுக்க.

அஞ்சிரெட்டி இடத்தை விட்டு அசையவில்லை. ஆறுதலும் சொல்லவில்லை. நிதானமாக சிகாரை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ''நீ அனாவசியமாக ரொம்ப அப்பாவி போல் நடிக்கிறாய் என்பது என்னுடைய எண்ணம்'' என்றான்.

காந்திக்கு வியப்பால் குரல் வெளிவரவில்லை.

''உண்மையைச் சொல்லு. அனுமந்துவின் வாய் சாசுவதமாக மூடப்பட்டு விடும் என்பது உனக்குத் தெரியாதா என்ன? அப்படி செய்யாவிட்டால் அவனிடமிருந்து ரகசியம் வெளியில் போய்விடாமல் எப்படிக் காப்பாற்ற முடியும்? இதையெல்லாம் நாம் வெளிப்படையாக பேசிக் கொள்ளவில்லை என்பது உண்மைதான். ஆனால் 'அந்த விஷயத்தை என்னிடம் விட்டு விடு. அந்த நோட்டுப் புத்தகம் வாங்கித் தருவது என் பொறுப்பு' என்று நான் சொன்ன பொழுது வேலைக்கு நீ சம்மதித்து விட்டதாக அர்த்தம். கொஞ்சம் யோசித்திருந்தால் நான் செய்யப் போவது உனக்குப் புரிந்திருக்கும். ஆனால் மேற்கொண்டு யோசிக்க உன் மனம் ஒப்பவில்லை. எனக்கு ஒன்றுமே தெரியாது என்று மனச்சாட்சியை ஏமாற்றிக் கொண்டு உன் தவறை மூடி மறைக்க முயற்சி செய்கிறாய். இப்போ நான் உன்னை தவறை ஒப்புக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தப் போவதில்லை. நடந்ததெல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் ஒன்றும் தெரியாதது போல் சும்மா இருந்து விடுவோம். வியாபாரத்தில் பெரிய மனிதர்களைக் கையாளும் முறை அதுதான்.''

''பிசிநெஸ்! பிசிநெஸ்! டு ஹெல் வித் திஸ்.''

''இதைத்தான் மயான வைரக்கியம் என்று பெரிய வர்கள் சொன்னார்கள். வாழ்க்கையில் எல்லோருக்கும் ஏதாவது ஒரு சமயத்தில் வரத்தான் செய்யும்.''

கண்ணீர் நிறைந்த விழிகளை உயர்த்தி அஞ்சிரெட்டி யைப் பார்த்தான். அனுமந்துவின் மரணத்தை அவனால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை.

''நீங்க என்னைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை. நான் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு இருப்பேன் என்றும், சட்ட விரோதமாக எதுவும் செய்ய மாட்டேன் என்றும் சபதம் செய்திருக்கிறேன். அப்படிப்பட்ட என்னை மிகப் பெரிய குற்றமான கொலைக்குற்றத்திற்கு காரணகர்த்தா வாக்கிட்டீங்களே.''

அஞ்சிரெட்டி சிரித்தான். ''நீ கொலை செய்ய வில்லை. சட்டம் உன்னை எதுவும் செய்ய முடியாது.''

''நீங்க சொன்னதுபோல் இது மனச்சாட்சியை வஞ்சித்துக் கொள்வதுதான். உண்மையிலேயே கொஞ்சம் யோசித்துப் பார்த்திருந்தால் எனக்குப் புரிந்திருக்கும்.

''முன்கூட்டியே தெரிந்திருந்தால் என்ன செய்திருப் பாய்? நோட்டுப் புத்தகம் ராஜாராமுக்கு போய்ச் சேரும் வரையில் சும்மா இருந்திருப்பாயா?''

காந்தி மௌனமாக இருந்தான்.

''இந்தச் சமுதாயத்தில் சட்டத்திற்கு விரோதமாக பணம் சம்பாதிப்பது என்ற கேள்விக்கே இடமில்லை

காந்தி! நீ இவ்வளவு அப்பாவியாக எப்படிப் பந்தயம் வைத்தாய் என்றே எனக்குப் புரியவில்லை. உன் பந்தயத்தை 'சட்டத்தின் பிடியில் சிக்காமல்' என்று மாற்றிக் கொள். சட்ட விரோதம் என்பது வியாபார லட்சணங்களில் ஒன்று. அதை நீ செய்து கொண்டுதான் இருக்கிறாய்.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியாமல் இரண்டு விதமான அகௌண்ட் புத்தகங்களைத் தயாரிப்பது சட்ட விரோதமில்லையா?''

''அது கம்பெனியைச் சேர்ந்தது. கம்பெனியின் சட்டப்படி A Company is an artificial person.''

''இரண்டாவது முறையாக உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய். நீ வேறு கம்பெனி வேறு என்றால் அந்த சின்ன நோட்டுக்காக அவ்வளவு கலவரப்படுவானேன்? அந்தப் புத்தகம் வெளிப்பட்டு விட்டால் டைரக்டர் வித்யார்த்தியைத் தான் அரெஸ்ட் செய்வார்கள். ஜெனரல் மேனேஜர் லக்ஷ்மியை ஜெயிலில் போடுவார்கள். அப்படி நடந்தால் வெறுமே பார்த்துக் கொண்டிருப்பது நியாயமாகுமா? பணம் சம்பாதிப்பது, தவறு செய்வது இவ் விரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்துதான் இருக்கும். உன்னை நம்பியிருக்கும் வித்யார்த்தியை, உன்னைக் காதலித்த லக்ஷ்மியைக் காப்பாற்றுவதற்காக இந்த அளவுக்காவது நீ செய்துதான் ஆகணும்.''

காந்தி சட்டென்று நிமிர்ந்து, ''காதலித்த லக்ஷ்மியா? என்ன சொல்றீங்க?'' என்று கோபமாகக் கேட்டான்.

''இந்த விஷயம் உனக்குத் தெரியாது என்று சொன்னால் மூன்றாவது முறையாக மனச்சாட்சியை வஞ்சித்துக் கொள்வதாக அர்த்தம்.''

★ ★ ★

ஏ.சி.யின் ஓசையைத் தவிர அந்த அறையில் வேறு சத்தம் இருக்கவில்லை. அறையின் கதவை உட்புறமாக தாழிட்டுக் கொண்டு தான் கொண்டு வந்த காசெட்டை டேப்ரிக்கார்டரில் போட்டு சுவிட்ச்சை அழுத்தினார் ராஜாராம். லக்ஷ்மிக்கும், அனுமந்துவுக்கும் இடையே உரையாடல் இவ்வாறு ஒலித்தது.

''நீயும் அண்ணியோடு இங்கேயே வந்துவிடக் கூடாதா அண்ணா! இங்கேயே ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக் கொள்ளலாமே.''

''உன்னுடைய கணவரிடமா? வேண்டாம் அம்மா.''

''ஏன்? காந்திக்கு என்ன வந்தது?''

''சரி. அது போகட்டும். காந்தி என்ன சொல்கிறான்? ஏதாவது விசேஷம் இருக்கா?''

''வேறு என்ன விசேஷம் இருக்கப் போகிறது?'' லக்ஷ்மியின் குரல்.

''எவ்வளவு நாளாச்சு உங்களுக்குக் கல்யாணமாகி?''

''ஆறேழு மாதங்கள் இருக்கும்.''

''பின்னே எந்த விசேஷமும் இல்லை என்கிறாயே?''

லக்ஷ்மி சிரித்தாள். ''நான் அப்படி ஒன்று சொல்ல வில்லையே?''

''எத்தனையாவது மாதம்?''

''அப்படிக் கணக்காக ஒன்றுமில்லை. இரண்டு மாதம் இருக்கலாம்.''

''உனக்குச் சொல்கிற அளவுக்கு நான் ஒன்றும் பெரிய மனிதன் இல்லை. இருந்தாலும் மனிதன் எந்த சமயத்தில் எப்படி மாறுவானோ யாருக்குத் தெரியும்? குறைந்த பட்சம் ரிஜிஸ்டர் ஆபீசிலேயாவது திருமணத்தைப் பதிவு செய்யுங்கள்.''

''அந்த மாதிரி எதுவும் தேவையில்லை. காந்தியின் மேல் நம்பிக்கை இருக்கிறது.''

''சரி. உன் விருப்பம்.''

டேப் முடிந்து விட்டது. ராஜாராமும் அதை நிறுத்தி விட்டு காசெட்டை எடுத்துக் கோட்டுப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். அவர் முகம் திருப்தியோடு பிரகாசித்தது.

★ ★ ★

சிவகைலாஸ் வங்கி அரசுடமையாக்கப்பட்ட பிறகு பழைய டைரக்டர்களுக்குப் பதவிகள் பறிபோய் விட்டன. லக்ஷ்மி பேப்பர் மில்லில் வேலையைத் தேடிக் கொண்டாள். ஆனால் டாடாவாலா மட்டும் டில்லியில் ஒரு மாதம் பழி கிடந்து எப்படியெல்லாமோ முயற்சி செய்து டைரக்டர் பதவியைத் திரும்பவும் சம்பாதித்துக் கொண்டார்.

யாருமே எதிர்பாராத விஷயம் என்னவென்றால் மற்றொரு டைரக்டர் பதவி ராஜாராமுக்குக் கிடைத்தது

தான். இத்தனை நாளாகத் திரை' மறைவில் இருந்து கொண்டு நாட்டின் பொருளாதார நிலையை ஆட்டுவித்துக் கொண்டிருந்த ராஜாராம் இனிமேல் நேராகவே களத்தில் குதிக்கிறார் போலும் என்று எல்லோரும் எண்ணிக் கொண்டார்கள். அவருக்கு இந்தப் பதவி கிடைத்த செய்தி வந்தபோது ஸ்விட்சர்லாண்டில் இருந்தார். அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து கேபிள்கள் பறந்தன.

ஒருவிதத்தில் அஞ்சிரெட்டி கட்சியினருக்கு இது தோல்வி. வங்கிகளை அரசுடமை ஆகும்படி செய்து ராஜாராமுவுக்கு நெஞ்சுவலி வரும்படியாக செய்த வெற்றியின் சூடு இன்னும் தணிவதற்குள் அவரை வங்கிக்கு டைரக்டராக நியமித்த செய்தி கிடைத்தது. போன்கள் இயங்கின. எத்தனையோ சதி திட்டங்கள் ரகசியமாக நிகழ்ந்தன.

மத்திய நிதி இலாகா தயாரித்த டைரக்டர்களின் லிஸ்டில் கடைசி நேரத்தில் ஒரு பெயர் புதிதாக சேர்க்கப்பட்டது. இந்தப் பெயரைச் சேர்த்துக் கொள்வ தற்காக மாநில கல்வியமைச்சர் ஒரு ப்ரிஃப்கேஸுடன் அன்று மாலையே டில்லிக்குக் கிளம்ப வேண்டியிருந்தது. கட்சி நிதிக்காக பேப்பர் மில்களின் கூட்டுறவுச் சங்கத் தின் சார்பில் ஐந்து லட்சம் நன்கொடை தரப்பட்டது. உண்மையில் இந்தத் தொகை ரொம்ப குறைவுதான். இருந்தாலும் அமைச்சரவையில் உண்டாகப் போகும் மாற்றங்களை மனதில் கொண்டு கல்வி அமைச்சர் இந்த வேலைக்குச் சம்மதம் தெரிவித்தார். புதிதாக டைரக்டரின் பெயரைச் சேர்ப்பதற்கு ரொம்ப கஷ்டப்பட வேண்டி

யிருக்குமோ என்று அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக வேலை ரொம்ப சுலபமாக முடிந்து விட்டது.

ராஜாராம் ஸ்விட்சர்லாண்டிலிருந்து திரும்பி வருவ தற்குள் இங்கே நிலைமை நன்றாக வேரூன்றி விட்டது. ராஜாராமின் செல்வாக்கு ஐந்து மடங்கு பெருகிவிட்டது. அவர் சாதித்த வெற்றி குறைவானது ஒன்றுமில்லை. எவ்வளவோ பெரிய மனிதர்கள் இந்தப் பதவிக்காக முயற்சி செய்து கொண்டிருந்தபோது எங்கேயோ சுவிட் சர்லாண்டில் இருந்து கொண்டு ரொம்ப சுலபமாக டைரக்டர் பதவியை அடைந்தார் என்றால் அது சாதாரண விஷயம் இல்லை. அதுநாள் வரையிலும் பேப்பர் இண்டஸ்ட்ரீயில் அஞ்சிரெட்டியை சப்போர்ட் செய்து கொண்டிருந்தவர்களில் சிலர் ராஜாராமுக்கு வாழ்த்துக் களை வெளிப்படையாக தெரிவிப்பதன் மூலம் தாங்கள் அவர் பக்கம் சேர்ந்து விட்டதை மறைமுகமாக உணர்த் தினார்கள்.

காந்திக்கு இது பெரிய அதிர்ச்சி. முன்பு சிவ கைலாஸ் வங்கி ராஜாராமுடையது என்பதால் தன் னுடைய பேப்பர் மில்லைப் பற்றி எதுவும் தெரிந்து விடாமல் கவனமாக இருந்தான். நல்ல வேளையாக அந்த வங்கி அரசுடமை ஆக்கப்பட்டது. ஆனால் இன்று ராஜாராம் அந்த வங்கிக்கு டைரக்டர் ஆகிவிட்டார். மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் தன்னை நசுக்கி விடுவார். இந்த விஷயமாக காந்தி அஞ்சிரெட்டியைச் சந்தித்தான். அவனும் இந்த விளைவுகளைக் கண்டு ஓரளவுக்கு கலவரமடைந்திருந்தான்.

''வங்கி ராஜாராமின் ஆதிக்கத்தின் கீழே வந்து விடும் போலிருக்கு. இப்போ என்ன செய்வது?'' கேட்டான் காந்தி.

''அது ரொம்ப சின்ன பிரச்னை. அதை விட பெரிய விஷயம் ஒன்று இருக்கு'' என்றான் அஞ்சிரெட்டி.

''என்ன?''

''ராஜாராம் டில்லியிலிருந்தே பிரதமருடன் போனில் பேசினார் என்றும், பிரதமரின் ஸ்விஸ் வங்கி கணக்கில் சில லட்சங்கள் போட்டிருக்கிறார் என்றும், அதற்கு பிரதிபலனாக பிரதமர் டைரக்டர் பதவியைக் கொடுத் திருக்கிறார் என்றும் வதந்தி ஒன்று பரவப் போகிறது.''

''பணம் கொடுத்து டைரக்டர் பதவியை வாங்கிக் கொண்டார் என்றால் அது அவருடைய கௌரவத்திற்கே இழுக்கு இல்லையா?-''

''அவருடைய மதிப்பு வேண்டுமானால் குறைய லாமோ என்னவோ. ஆனால் பிரதமரிடம் ஸ்விட்சர் லாண்டிலிருந்தே போனில் பேசினார் என்றால் பிரத மருக்கும் அவருக்கும் ரொம்ப் நெருக்கம் என்பதை உணர வைக்கிறது. அரசியல் வட்டாரத்தில் அவருடைய செல்வாக்கு அதிகரித்து விட்டது. அமைச்சர்கள் விமான நிலையத்திற்கே போய் அவரை மாலை போட்டு வர வேற்கிறார்கள். முதலமைச்சரின் காரிலேயே அவரும் வங்கியின் மீட்டிங்கிற்குப் போகிறார். முதலமைச்சரும் அவரும் சேர்ந்து காரில் ஏறும்போது எடுக்கப்பட்ட போட்டோவுடன் நான் சொன்ன விஷயங்களை கட்டுரை

யாக எழுத ஒரு நிருபருக்கு இரண்டாயிரம் லஞ்சம் கொடுக்கப்பட்டது. 'பிரதமர் லஞ்சம் வாங்கினாரா? ராஜாராம் ஸ்விட்சர்லாண்ட் போன மர்மம் என்ன?' போன்ற தலைப்புகளில் நாளேட்டில் கட்டுரை வெளியாகப் போகிறது.''

''மைகாட்! இவ்வளவு பெரிய சதித்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா?'' என்றான் காந்தி.

''பிரதமரும், முதலமைச்சரும் நாளேட்டில் தீவிரமாக விமர்சனம் செய்யப்படுவார்கள். லஞ்சம் வாங்கிக் கொண்டு பதவிகளைத் தந்த இந்த அரசாங்கம் ரொம்ப மோசமானது என்று எடிடோரியல் எழுதப்படும். அரசாங்கத்திற்குக் கூட பயப்படாமல் உண்மையை எழுதும் நேர்மையான பத்திரிகை என்று மக்கள் பாராட்டுவார்கள். ஆனால் ராஜாராமின் பெயர் மேலும் பிரபலமடைவதற்கு அந்தக் கட்டுரைகள் துணை புரிவதை யாராலும் கண்டு பிடிக்க முடியாது. இதெல்லாம் வழக்கமாக நடப்பதுதான். அதை விட்டுத் தள்ளு. சிவகைலாஸ் வங்கியில் ராஜாராமின் செல்வாக்கைக் குறைக்கணும். பத்திரிகைகள் இனிமேல் நேரிடையாக அவர் பெயரைக் குறிப்பிட்டு திட்டினாலும் அதன்மூலம் அவர் செல்வாக்கு மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டுதான் போகும். அதை நாம் முதலில் தடுக்கணும். பை தி பை உன்னிடம் எவ்வளவு 'பி' இருக்கு?'' (பி என்றால் பிளாக்மணி)

''ஒரு கிராண்ட்.'' (ஒரு லட்சம்)

''ரொம்பக் குறைவு. நான் ஒரு மூன்று தருகிறேன். பிறகு அட்ஜெஸ்ட் செய்துவிடு.''

வியாபாரத்தில் பெரிய பெரிய புள்ளிகளுக்கு நடுவில் பிராமிசரி நோட்டுகள், கடன் பத்திரங்களோ எதுவும் இருக்காது. பணம் அக்கௌண்ட்களுக்கு இடையே மாற்றப்படும். இப்பொழுது மூன்று லட்சம் தனக்குக் கடன் கொடுத்து விட்டு தன் மூலம் அவனுடைய எதிரியை வீழ்த்தி விடலாம் என்று அஞ்சிரெட்டி திட்டம் போடுகிறான். இது இரண்டு விதத்திலும் அவனுக்கு லாபம்தான். இந்த மாதிரி யுத்திகளைக் கையாண்டதால் தான் வாழ்க்கையில் இந்த அளவுக்கு முன்னுக்கு வந்திருக்கிறான்.

''நாம் ஏன் கல்வி அமைச்சர் மூலமாக பணத்தை அனுப்ப வேண்டும்? நாமே டில்லிக்கு எடுத்துக்கிட்டுப் போகலாமே?''

அஞ்சிரெட்டி சிரித்தான். ''ராஜாராம் போட்ட திட்டத்தினால் அமைச்சருக்குக் கூட நம்மீது நம்பிக்கை குறைந்து விட்டது போல் தோன்றுகிறது. நாலுலட்சம் அவரிடம் கொடுத்து அனுப்புவதன் மூலமாக 'உன்மேல் எங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ பார்த்துக் கொள்' என்று மறைமுகமாக உணர்த்துகிறோம். இதனால் சில நாட்களாவது அவர் நம் பக்கம் இருப்பார். அதற்குள் நம் சக்தி, சாமர்த்தியங்களை நிரூபித்து விடவேண்டும்.''

காந்தி எழுந்து கொண்டான். ''புரிந்து விட்டது. மூன்று லட்சத்தை என் பெயரில் கடனாக எழுதிக் கொள்ளுங்கள்'' என்றான்.

14

அரசுடமை ஆக்கப்பட்ட பிறகு முதல்முறையாக அன்று காலையில் பத்து மணிக்கு சிவகைலாஸ் வங்கியின் போர்ட் மீட்டிங் தொடங்கியது. எட்டரை மணிக்கு விமானத்தை விட்டு இறங்கிய ராஜாராம் நேராக முதலமைச்சரின் இருப்பிடத்திற்குப் போய்விட்டு அங்கிருந்து பத்து மணிக்கெல்லாம் மீட்டிங் நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். எல்லோரும் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டார்கள். பார்வையாலேயே எதிராளியை எடை போட்டார்கள்.

ராஜாராமன் சேர்மன் பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகில் இருந்த நாற்காலியில் அரசாங்கத்தின் சார்பில் டைரக்டர் சியாம், அடுத்ததாக ரிசர்வ் வங்கியின் டைரக்டர் பிரகாஷ் மெஹரா, டாடா வாலா உட்கார்ந்து இருந்தார்கள். இன்னும் ஒரு டைரக்டர் வரவில்லை.

நேரம் பத்து மணி ஐந்து நிமிடம். சேர்மன் தொண்டையைச் செருமிக் கொண்டு பேசத் தொடங்கினார். ''பிரண்ட்ஸ்! இன்று ரொம்ப பொன்னான நாள். நாம் எல்லோரும் இங்கே இப்படிச் சந்தித்துக் கொள்வது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதுவரையில் தனியார் துறையிலிருந்த இந்த நிறுவனம் இன்று அரசாங்கத்தின் நிறுவனமாக மாறிவிட்டது. பின்தங்கிய வர்க்கத்தினருக்கு உதவும் வாய்ப்பை அளித்த அரசாங்கத்திற்கு

நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.'' இது போல் சம்பந்தமில்லாமல் ஏதேதோ பேசிவிட்டு அரசாங் கத்தையும் பிரதமரையும் புகழ்ந்தார். எதிர்காலத்தில் அதை செய்ய வேண்டும், இதை செய்ய வேண்டும் என்று முழக்கமிட்டு சொற்பொழிவை முடித்துக் கொண்டார். அவர் உட்காரப் போனபோது, ப்யூன் துண்டுச் சீட்டு ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான். அதைப் படித்துவிட்டு அவர் மறுபடியும் நாற்காலியை விட்டு எழுந்து கொள்ளும்போதே கதவு திறந்து கொண்டது.

''நம் வங்கியின் ஒன்பதாவது டைரக்டர் வருகிறார்'' என்று கதவு அருகில் நின்று கொண்டிருந்த நபரைப் பார்த்து விட்டு வரவேற்பது போல் ''வெல்கம்'' என்றார்.

புதிதாக வந்த நபர் கதவு அருகில் முறுவலுடன் நின்றிருந்தார். அந்தச் சமயம் ராஜாராம் பக்கத்தில் திரும்பி சியாமுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். எல்லோருடனும் சேர்ந்து திரும்பிப் பார்த்தவர் அப்படியே சிலையாகி விட்டார். அவர் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்து விட்டது. அவ்வாறு எத்தனை நேரம் இருந் தாரோ தெரியாது. கோபமும், இயலாமையும் ஒன்றாக ஆட்கொள்ள அவர் முகம் சிவந்து விட்டது. கதவு அருகில் நின்றிருந்த அந்த நபர் காந்தியேதான். அவன் வந்து உட்கார்ந்து கொண்டதும் மீட்டிங் தொடங்கியது.

கொஞ்ச நேரம் கழித்து ராஜாராம் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டார். யோசித்துப் பார்த்தபொழுது தன் பயத் திற்குக் காரணமே இல்லை என்று தோன்றியது. போர்டில் எல்லோருமே தன்னுடைய ஆட்கள் தான். இந்தப்

பதவிக்காக காந்தி நிறைய செலவழித்திருப்பான். அதெல்லாம் கடலில் கரைத்த பெருங்காயமாகப் போவது நிச்சயும்.

லஞ்ச் இடைவேளைக்காக போர்ட் ஒத்திப் போடப் பட்டது. அந்தச் சமயத்தில் காந்திக்கு அஞ்சிரெட்டியிட மிருந்து போன் வந்தது. ''எப்படியிருக்கு புதுப்பதவி?''

காந்தி சிரித்தான். ''நன்றாகத்தான் இருக்கிறது. ராஜாராம் நாம் நினைத்தாற்போல் பயந்துவிடவில்லை. அனாவசியமாக நாலுலட்சம் செலவழித்து விட்டோமோ என்று தோன்றுகிறது.''

''நம்ப பிரச்னையைப் பற்றிப் பேசினார்களா?''

''இன்னும் இல்லை. இனிமேல் வரும்னு நினைக் கிறேன்'' என்று போனை வைத்து விட்டான். சரியாக மூன்றரை மணிக்கு அந்த விவகாரம் சர்ச்சைக்கு வந்தது.

சில்லறை பேப்பர் வியாபாரிகளுக்கு தாராளமாக கடன் வழங்க வேண்டும். வங்கியின் நிதி இந்த வழியில் பயன்படுத்தினால் தொழிற்சாலைகள் மேலும் வளர்ச்சி அடையும் என்பது தான் சர்ச்சை. இந்த விஷயத்தைச் சேர்த்தது ராஜாராம்.

''ஓ.கே.'' என்றார்கள் எல்லோரும். செலவழிக்கப் போவது தங்களுடைய சொத்து இல்லையே. சேர்மன் அந்த அம்சம் முடிவடைந்து விட்டாற்போல் டிக்மார்க் செய்யப்போன பொழுது காந்தி மெதுவாக ''இது சின்ன விஷயம் இல்லை என்று நினைக்கிறேன்'' என்றான். எல்லோரும் அவன் பக்கம் பார்த்தார்கள். ராஜாராமும்

வியப்புடன் அவனை நோக்கினார். ஏன் என்றால் சில்லறை பேப்பர் வியாபாரிகளுக்கு நிறைய கடன்களை வழங்கினால் தங்கள் எல்லோருக்கும் லாபம்தான். அப்படி இருக்கும் போது காந்தி இதை எதிர்ப்பானேன் என்று புரியவில்லை. காந்தி குரலைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

''பிரதமரின் விருப்பத்தின்படி நாம் தொழிற்சாலைகளுக்கும், அவற்றின் முன்னேற்றத்திற்கும் உதவும் வகையில் செயல்படவேண்டும். அவ்வளவுதானே தவிர சில்லறை பேப்பர் வியாபாரிகளுக்கு அதிகமாக கடன் தரப்பட்டால் அவர்கள் காகிதத்தை மேலும் அதிகமாக வாங்கிப் பதுக்கி வைப்பார்கள். அதனால் பேப்பரின் விலை மேலும் உயரும். அது நம் பிரதமரின் லட்சியத்திற்கு நேர் விரோதம். நாம் இந்த நிதியை பேப்பர் தொழிற்சாலைகளுக்குத்தான் செலவழிக்கணும் என்றால் சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் தருவதை விட புதிதாக இன்னொரு பேப்பர் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு வழங்கினால் அதன் மூலம் உற்பத்தி கூடும்.''

உடனே ராஜாராம் இடைமறித்தார். ''ஏற்கனவே காகிதம் அளவுக்கு மீறி தயாராகிக் கொண்டிருக்கும் போது இன்னும் ஒரு ஆலை எதுக்கு? இதைவிட முட்டாள்தனமான யோசனை வேறு இருக்க முடியாது.''

''காகிதம் நிறைய தயாராகிக் கொண்டிருக்கும் விஷயத்தை ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் தருவானேன்? எப்படியும் உற்பத்தியாளர்கள் சில்லறை விற்பனையாளர்களுக்கு கிரெடிட் தருவார்களே?''

ஹாலில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் பரவியது. காந்தி சரியான இடமாக பார்த்து ராஜாராமுக்கு பதிலடி கொடுத்து விட்டான்.

ராஜாராம் நேராக அவனைப் பார்த்தார். ஒரு காலத்தில் பத்து பைசாவுக்கு லாட்டரி அடித்துக் கொண்டு கிழிந்த சட்டையுடன், தேய்ந்த செருப்புடன் தன் எதிரில் நின்று பந்தயம் கட்டிய இளைஞன், இன்று தனக்குச் சரிசமமாக கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக் கிறான். நாலு வருடங்களுக்கு முன்னால் இவன் ஒரு வேலையில்லா பட்டதாரியாக அலைந்ததைச் சொன்னால் நம்பத்தான் முடியுமா? இதில் லாட்டரி சீட்டு இல்லை. அதிர்ஷ்டம் இல்லை. சுயமாகவே இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறான்.

வினாடி நேரத்தில் அவர் உள்ளத்தில் இத்தனை எண்ணங்களும் சூழ்ந்து கொண்டன. தான் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறோமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. உடனே பிடிவாதம் மேலோங்கியது. சுதாரித்துக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். போர்ட் டைரக்டர்கள் எல்லோரும் தன்னையே பார்ப்பதைக் கவனித்து தொண்டையைச் செருமிக்கொண்டு, ''காகித உற்பத்தி அதிகரித்து விட்ட விஷயம் உண்மைதான். ஆனால் மார்க்கெட்டில் நோட்டுப் புத்தகங்களே கிடைப்ப தில்லை. பாடப்புத்தகங்களும் தாமதமாகத்தான் வரு கின்றன. இதற்கெல்லாம் காரணம் சில்லறை வியாபாரி களிடம் சரியான பணப்புழக்கம் இல்லாததுதான். அதற்குள் மாணவர்கள் ஸ்டிரைக் வேறு தொடங்கி

விட்டார்கள். நாட்டில் கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு மாநில அரசுக்கு உதவுவது வங்கியின் கடமை. சில்லறை பேப்பர் வியாபாரிகளுக்குக் கடன் தருவதன் மூலம் நாம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். நாம் எடுத்துக் கொள்ளப் போகும் இந்த முடிவு மாநில அரசுக்கு உதவியாக இருப்பதுடன், பின் தங்கிய வர்க்கத்தினருக்கு கடன் உதவி செய்தோம் என்ற நல்ல பெயரும் நம் வங்கிக்குக் கிடைக்கும். இந்த மாதிரி சந்தர்ப்பம் ஆயிரத்தில் ஒரு முறைதான் கிடைக்கும். அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விடுவது முட்டாள்தனம். இதைவிட நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை'' என்றார்.

அவருடைய சொற்பொழிவைக் கேட்டு அங்கே இருந்தவர்கள் எல்லோரும் மந்திரத்திற்குக் கட்டுண்டவர்கள் போல் ஆகிவிட்டார்கள். ஏறக்குறைய எல்லோருமே அந்த அம்சத்திற்குச் சம்மதம் தெரிவிக்க உத்தேசித்து விட்டார்கள்.

அதற்குள் காந்தி பிரீஃப்கேஸிலிருந்த பேப்பர்களை எடுத்து மேஜை மீது பரப்பினான். டைரக்டர்கள் அவற்றைப் பரிசீலித்துக் கொண்டிருந்த பொழுது சொல்லத் தொடங்கினான்.

''இப்போ நான் உங்களுக்குத் தந்த பேப்பர்களில் மாநிலத்தில் மொத்தமாக உற்பத்தியாகும் காகிதத்தின் விவரங்கள் இருக்கின்றன. இன்றைய தேதி வரையில் கிடங்குகளிலும், ஹோல்சேல் வியாபாரிகளிடமும் இருக்கும் ஸ்டாக்கின் விவரங்களும் இருக்கின்றன.

இவற்றைக் கவனித்தால் ஏறக்குறைய ஆறு மாதங்களில் உற்பத்தியான சரக்கு கிடங்குகளில் தேங்கிக் கிடப்பது புரியும். நானும் ஒரு பேப்பர் மில்லின் முதலாளிதான். ஒரு முதலாளியாக நான் எடுக்கும் முடிவு என்னவென்றால் என் வாடிக்கையாளர்களுக்கு எப்படியாவது சரக்கைத் தள்ளிவிடுவதுதான். பேப்பர் உற்பத்தி இவ்வளவு அதிகமாக இருக்கும்போது பாடப் புத்தகங்கள் மார்க்கெட்டில் வராத காரணம் என்ன?''

காந்தி மற்றொரு காகிதக் கட்டை டைரக்டர்களுக்கு முன்னால் தள்ளினான்.

''இவை நாட்டிலுள்ள பெரிய அச்சகங்களின் விவரங்கள். இவைத் தவிர சின்னச் சின்ன அச்சகங்களின் விவரமும் இருக்கு. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் புத்தகங்கள் உரிய காலத்தில் வராததற்குக் காரணம் காகிதப் பற்றாக்குறை இல்லை. அச்சகங்கள் குறைவாக இருப்பதும், அவற்றுக்குத் தகுந்த நிதியுதவி கிடைக்காமல் போவதும்தான். நாம் தருவதாக இருக்கும் இரண்டு கோடி ரூபாயை சின்னச் சின்ன அச்சகங்களுக்குத் தருவோம். ஒரு பேப்பர் மில் முதலாளியாக இது எனக்கு நஷ்டம்தான் என்றாலும் பிரதமரின் உயர் கொள்கையை நிறைவேற்றுவதற்காக நான் இதை ஆதரிக்கிறேன்'' என்று முடித்தான்.

டைரக்டர்கள் இந்த அம்சத்தை வாக்கெடுப்புக்கு வைத்தார்கள். ராஜாராமுக்கு மூன்றும், காந்திக்கு இரண்டு ஓட்டுகளும் கிடைத்தன. இனி சேர்மனும், டாடா வாலாவும்தான் பாக்கி. டாடாவாலா தன் முடிவைத் தெரி

விக்கப் போனபொழுது ப்யூன் வந்து சேர்மனிடம் துண்டுச் சீட்டு ஒன்றைத் தந்தான். சேர்மன் சீட்டைப் படித்துவிட்டு ''டாடா சார்! உங்களுக்கு போன், டில்லியி லிருந்து'' என்றார். டாடா வாலா அவசரமாக எழுந்து வெளியே போனார். ஆனால் அவர் எதிர்பார்த்தாற்போல் அங்கே போன் வரவில்லை. லக்ஷ்மி நின்று கொண்டிருந் தாள்.

''டாடா சார்! இது வரையிலும் உங்களை நான் எதுவும் கேட்டதில்லை. இந்த ஒன்றை மட்டும் கேட் கிறேன். செய்து விடுங்கள் ப்ளீஸ்'' என்றாள்.

சுமார் ஐந்து நிமிடங்களாக அவர்களுக்கு நடுவில் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்தது. டாடா வாலா யோசித்தார். அந்த விநாடி தான் எடுக்கப்போகும் முடிவு தன் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரப் போகிறது என்பதை அவர் அறிவார். ராஜாராமுடன் தன்னுடைய உறவுக்குச் சாசுவதமாக முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

ராஜாராம் தனக்கு இதுவரையில் என்ன செய்திருக் கிறார்? அவர் செய்த ஒவ்வொன்றும் அவருடைய சுய நலத்திற்காகத்தான். சதுரங்கத்தில் பகடைக்காய் போல் தன்னைப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் லக்ஷ்மி அப்படி இல்லை. தன்னை நம்பி எல்லாவற்றையும் தன்னிடம் சொல்லியிருக்கிறாள். அவள் காந்தியைச் சேர்ந்தவளாக இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே. அரசியலிலும், வியாபாரத்திலும் நட்பாவது? உறவாவது?

டாடாவாலா ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தார். லக்ஷ்மி அவருடைய கரத்தைப் பற்றி ''ப்ளீஸ்!'' என்றாள். டாடா வாலாவின் மனம் அப்படியே இளகிவிட்டது.

போர்ட் அறைக்குள் நுழைந்த டாடாவாலா காந்தியின் பக்கம் ஓட்டு போட்டதும் சேர்மன் சிறிது கலவரமடைந்தார். இப்பொழுது தான் எந்தப் பக்கம் ஓட்டுப் போடுகிறாரோ அந்தப் பக்கம் ஜெயிக்கும். சற்று யோசித்து விட்டு காந்தியின் பக்கம் ஓட்டு போட்டார். ராஜாராம் தோற்றுப் போய்விட்டார்.

சரியாக ஐந்து மணிக்கு மீட்டிங் முடிந்தது. ராஜாராம் கொண்டு வந்த தீர்மானம் தோற்றுப் போனது வரலாறு காணாத அதிசயமாக பேசப்பட்டது. காந்தியின் ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. டாடாவாலாவை வியப்புடன் பார்த்தான். மீட்டிங் முடிந்து வெளியே வந்தபோது, லக்ஷ்மி தென்பட்டாள். மேலும் ஆச்சரியமடைந்தவனாய், ''நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று கேட்டான்.

''நீ அவசரமாக வரச் சொன்னதாக அஞ்சிரெட்டி கூப்பிட்டார். காலையில் வந்து சேர்ந்தேன்.''

அவனுக்கு அஞ்சிரெட்டியின் திட்டம் புரிந்தது. அதற்குள் அஞ்சிரெட்டியிடமிருந்து போன் வந்தது. ''தாங்க்யூ அண்ட் கங்கிராட்ஸ். இந்த அடியில் ராஜாராம் வீழ்ச்சி அடைவது நிச்சயம். உன் பகை தீர்ந்தாற்போல் தான்'' என்றான்.

''தாங்க்ஸ். நீங்க எனக்குத் தந்த மூன்று லட்சங்களி லிருந்து ஒரு லட்சம் கழித்துக் கொள்ளுங்கள்'' என்றான் காந்தி.

''திருப்பித் தந்துவிடப் போகிறாயா?'

''இல்லை. வங்கி டைரக்டராக இருந்து கொண்டு நான் உங்களுக்குச் செய்த உதவிக்காக.''

''என்ன உதவி?''

''சில்லறை பேப்பர் வியாபாரிகளுக்கு கடன் தராமல் தடுத்து விட்டது. உங்களுக்கு லாபம் தானே. அதைச் செய்ததற்கு ஃபீஸ் லட்ச ரூபாய். இப்படி சின்னச் சின்ன தொகையாகச் சம்பாதித்தால்தானே மூன்று லட்சம் கடனைத் தீர்க்க முடியும்'' என்று சிரித்துக் கொண்டே போனை வைத்து விட்டான் காந்தி.

★ ★ ★

அன்றிரவு எட்டு மணி அளவில் வியக்கத்தக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. கதவு தட்டும் ஓசையைக் கேட்டு காந்தி கதவைத் திறந்தான். எதிரே ராஜாராம் முறுவலுடன் நின்று கொண்டிருந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்தப் பார்வையில் பகைமையும் இல்லை. நட்பும் இல்லை.

''உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும். அப்படி வெளியில் போய்விட்டு வரலாமா?'' ராஜாராம் கேட்டார். காந்தி தலையை அசைத்தான். இருவரும் ஏறி உட்கார்ந்த பிறகு கார் நகர்ந்தது.

''நேராக விஷயத்திற்கு வருகிறேன். இன்று வங்கியில் நடந்த விஷயங்கள் நம் இருவருக்குமே லாபமில்லாதவை என்று உனக்கும் தெரியும். தனிப்பட்ட விரோதத்தை இருவருக்கும் பொதுவான விஷயத்தில் காட்டினால் நஷ்டமடையப் போவது நாம்தானே. சில்லறை பேப்பர் வியாபாரிகளுக்குக் கடன் தராமல் சிறு சிறு அச்சகங்களுக்குத் தந்தோம் என்றால் நமக்கு லட்சக் கணக்கில் நஷ்டம் வரும் இல்லையா?''

காந்தி மௌனமாக இருந்தான். அவர் சொல்வது உண்மை என்று அவனுக்குத் தெரியும்.

''நம் இருவருக்குமிடையே இருக்கும் பந்தயம் வேறு விஷயம். இப்போ நான் அதைப் பற்றிப் பேசவில்லை. அந்தக் கெடு முடிவடைய இன்னும் இரண்டு மாதம் இருக்கு. இந்த நிமிஷம் நான் இந்தமாதிரி உன் வீட்டுக்கு வந்து உன்னைக் காரில் அழைத்துப் போய்க் கெஞ்ச வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இதை என்னுடைய தோல்வி என்று நீ நினைத்தால் அது உன் பிழை.''

காந்தி அப்பொழுதுதான் வாயைத் திறந்தான். ''நம் இருவருக்கும் நன்மை நடக்கும் என்று சொன்னீர்கள். மன்னிக்கணும். இதில் என் நன்மை எதுவும் இல்லை. நான் எப்படியும் காகிதத் தொழிற்சாலையை மூடிவிடலாம் என்று இருக்கிறேன். அதனால் வங்கி யாருக்குக் கடன் கொடுத்தாலும் எனக்கு எந்த நஷ்டமும் இல்லை.'' நிதானமான குரலில் சொன்னான்.

''தொழிற்சாலையை மூடிவிட்டு என்ன செய்யப் போகிறாய்?''

''கெடு முடிவதற்குள் ஐம்பது லட்சம் சம்பாதிக்க இன்னும் என்னென்ன வழிகள் இருக்கிறதென்று தேடப் போகிறேன்'' என்றான் சிரித்தபடி.

''நான்கு வருஷம் பத்து மாதங்களில் முழுசாக இருபது லட்சம் சம்பாதிக்க முடியாதவன் இன்னும் இரண்டே மாதங்களில் முப்பது லட்சம் சம்பாதித்து விடுவாயோ?''

''பார்ப்போம்'' என்றான் மேலுக்கு. ஆனால் உள்ளூற வியப்படைந்தான். தான் இன்றைய தேதி வரையிலும் எவ்வளவு சம்பாதித்து இருக்கிறான் என்பதை அத்தனைத் துல்லியமாக சொல்கிறார் என்றால், தன்மீது அல்லும் பகலும் ஒரு கண் வைத்திருக்கிறார் என்றுதானே அர்த்தம்.

''பந்தயம் விஷயத்தை விட்டால் உனக்கும் எனக்கும் நடுவில் எந்த விரோதமும் கிடையாது. அதை ஒப்புக் கொள்கிறாயா?''

''இப்பேர் அந்தப் பேச்சு எதுக்கு?''

''வங்கியை நேர்கோட்டில் நடத்திச் செல்லத்தான்.''

காந்தி ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான். பிறகு ''நாம் எங்கே போகிறோம்?'' என்று கேட்டான்.

''எங்கேயாவது போகணுமா?''

''உங்க வீட்டுக்குப் போவோம்.''

மனதில் தோன்றிய வியப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ராஜாராம் டிரைவரிடம் வீட்டுக்குப் போகச் சொன்னார்.

''எனக்கு ஒரு விஷயம் மட்டும் புரியவில்லை.'' ராஜாராம் சொன்னார்.

''என்ன?''

''இது நாள்வரையிலும் எனக்கு வலதுகரமாக இருந்து வந்த டாடா வாலா இன்று திடீரெனறு எப்படி உன் பக்கம் சாய்ந்தார்?''

காந்திக்கு லக்ஷ்மியின் நினைவு வந்தது. அவரைத் தன் பக்கம் திருப்பிக் கொள்வதற்கு இரண்டு ஆண்டுகள் அவள் பட்டபாடு நினைவுக்கு வந்தது. இன்றுமட்டும் டாடாவாலா தன் பக்கம் ஓட்டுப் போடவில்லை என்றால் தான் தோல்வி அடைந்திருக்க வேண்டியது தானே. காந்திக்கு அப்பொழுதே காரைச் சட்டென்று நிறுத்திவிட்டு இறங்கி ஓடிப்போய் லக்ஷ்மியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவன் யோசனையைச் சிதறடித்தவாறு ராஜாராம் குரல் கேட்டது.

''வியாபாரத்தில் நட்பாவது ஒன்றாவது என்று சொல்வார்கள். ஆனால் அந்த டாடாவாலாவுக்கு எத்தனை செய்திருக்கிறேன்? அத்தனையும் மறந்து விட்டு இன்று அவன் அந்த அஞ்சிரெட்டி பக்கம் சாய்ந்து விட்டான். ஊம்... அதையும் பார்த்து விடுவோம். என்றாவது ஒருநாள் இதற்குத் தகுந்த பதில் சொல்லாமல் விடப்போவதில்லை.''

தனக்குத்தானே பேசிக் கொள்வது போல் அவர் சொன்னாலும் அதன் உள் அர்த்தம் காந்திக்குப் புரிந்தது. 'நீயும் நானும் ஒன்றாகி விட்டால் இந்த டாடாவாலாவும் அஞ்சிரெட்டியும் எந்த மூலைக்கு?' என்று மறைமுக மாக உணர்த்துவது போல் தோன்றியது. இன்னும் கொஞ்சம் பிகு செய்து கொண்டால், 'சம்பாதித்த இருபது லட்சம் போதும். என் மகளை உனக்கே மணமுடிக் கிறேன்' என்று சொன்னாலும் சொல்வாராக இருக்கும்.

காந்திக்கு அந்தக் கற்பனை மகிழ்ச்சியைத் தர வில்லை. பந்தயத்தில் ஜெயித்தால் அவர் மகளை மணக்கப் போகிறான். இல்லாவிட்டால் இல்லை. அவ்வளவுதானே தவிர இதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அடுத்த ஐந்தாவது நிமிடம் கார் ராஜாராமின் வீட்டின் முன்னே வந்து நின்றது. காரிலிருந்து இறங்கிய காந்தி நேராக உள்ளே போகாமல் வராண்டாவிலேயே நின்று கொண்டான். வராண்டாவின் விளிம்பில் வரிசை யாக பூத்தொட்டிகள் இருந்தன. தொலைவில் கேட் அருகில் கூர்க்கா நின்று கொண்டிருந்தான். வேலைக்காரன் உள்ளே சோபாக்களைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

''உங்களிடம் வயதான வேலைக்காரர் ஒருவர் இருக் கணும். எங்கே அவரைக் காணும்?'' காந்தி கேட்டான்.

அவன் எதற்காக கேட்கிறான் என்று புரியாமல் ''யாரு? ராமய்யாவா!'' என்றார் அவர். அதற்குள் ராமய்யா உள்ளேயிருந்து ட்ரேயுடன் வந்தான்.

எல்லோரும் பார்வையாளராக நின்று கொண்டிருந்த போது காந்தி ராஜாராமிடம் சொன்னான். ''உங்களுக்கு எனக்குமிடையே விரோதம் இல்லை என்பது உண்மை தான். இன்னும் இரண்டு மாதங்களில் என்னால் முப்பது லட்சம் சம்பாதிப்பதும் சந்தேகம்தான். ஆனால் தற் சமயம் நான் உங்களைவிட ஒரு படி மேலே இருக் கிறேன் என்பது மட்டும் உறுதி. அதற்கு இன்று வங்கியில் நடந்த வாக்கெடுப்பே சாட்சி. இனி நான் எந்த விதத்திலேயும் உங்களுக்குக் குறுக்கே வரமாட் டேன். இரண்டே மாதங்களில் ஐம்பது லட்சம் சம்பாதித்து விட்டால் மட்டுமே வருவேன். ஆனால் இன்றிலிருந்து நம் இருவருக்குமிடையே எந்தவிதமான பகைமையும் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்வதற்கு முன்னால் நான் செய்யப்போகும் ஒரு காரியத்திற்கு நீங்கள் சம்மதிக்கணும்.''

''என்ன?'' சந்தேகத்துடன் கேட்டார் ராஜாராம்.

காந்தி உடனே பதில் சொல்லவில்லை. சுற்றிலும் பார்வையிட்டான். பிறகு ராஜாராமின் பக்கம் திரும்பி, ''ஒரு காலத்தில் நான் ஆண்டியாக இருந்தபோது உங்கள் மகளைக் கல்யாணம் செய்து கொள்வதாக பந்தயம் கட்டினேன். அந்தப் பந்தயத்தை மறந்து போய் நீங்க உங்கள் மகளைப் பெண் பார்ப்பதற்கு வேறொருவரை அழைத்தீங்க. நான் தனியாளாக வந்து அதை எதிர்த்த போது அந்த மாலை நேரத்தில் நீங்க என்னைக் கழுத்தைப் பிடித்து, இதோ! இந்த பூந்தொட்டிகளுக்கு நடுவில் தள்ளி விட்டீர்கள். ராஜாராம் சார்! நினைவு இருக்கிறதா?

இந்த முறை நீங்கள் தலையைக் குனிந்து கொள்ளுங்கள். ஒரே ஒரு தடவை உங்க வேலைக்காரர்களுக்கு முன்னால் உங்களைக் கழுத்துப் பிடித்துத் தள்ளிவிட ஒப்புக் கொள்ளுங்கள். அத்துடன் பழைய விரோதத்தை மறந்து விடுவோம். சரிதானா?''

அவன் வார்த்தைகளை முடிக்கும்முன் ராஜாராமின் முகம் கோபத்தால் சிவந்து விட்டது. ஆவேசத்தில் உடல் முழுவதும் நடுங்க சுட்டு விரலை உயர்த்தி, ''யூ கெட் அவுட் ஃபிரம் ஹியர்'' என்று தொண்டை கிழியக் கத்தினார்.

காந்தி பேண்ட் ஜேபியில் இரண்டு கைகளையும் நுழைத்தபடி நிதானமாக வெளியே வந்தான். சாலையில் போய்க் கொண்டிருந்த டாக்ஸியை நிறுத்தி ஏறிக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான்.

★ ★ ★

நாட்டில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருந்தது. நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காமல் மாணவர்கள் செய்யும் ஸ்ட்ரைக் மக்களின் ஆதரவைப் பெற்றுவிட்டது. அதோடு பாடப்புத்தகங்கள் உரிய நேரத்தில் அச்சாகாமல் பெரிய தலைவலியாக மாறியது.

இந்த நிலைமையைப் பார்க்கும்போது முதலமைச் சருக்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. காகித இருப்பு திருப்தியாகத்தான் இருந்து வந்தது. காகித உற்பத்தியாளர்கள் குறைந்த விலைக்கு தரவும் முன் வந்தார்கள். ஆனாலும் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்க

வில்லை. காரணம் என்னவென்று தெரிந்து கொள்வ தற்கு அவகாசம் தராமல் எதிர்க்கட்சியினர் கடையடுப்பு களை மேலும் மேலும் செய்ய வைத்தார்கள். கலவரமும், போலீசாரின் தடியடிப் பிரயோகமும் சர்வசாதாரணமாகி விட்டன. காரணகர்ரியங்களை ஆராய்வதற்கு டில்லியி லிருந்து குழு ஒன்று அனுப்பப்பட்டது. இதெல்லாம் தனக்கு குழிபறிக்கத்தான் என்று முதலமைச்சருக்குத் தெரியும். தவறு முழுவதும் ஹோம் மினிஸ்டருடையது என்று அவர் மீது பழியைத் தள்ளிவிட முயன்றார்.

ஹோம் மினிஸ்டர் கீழ் மட்டத்திலிருந்து பாடு பட்டு முன்னுக்கு வந்தவர். கெட்டிக்காரத்தனமும், திறமையும் உள்ளவர். அவருக்குத் தெரியும், இந்த நிலைமைக்குக் காரணம் கல்வியமைச்சரின் கையாலாகாத் தனம்தான் என்று. பத்திரிகைகளில் அறிக்கை விடு வதைத் தவிர அவர் வேறு ஒன்றும் செய்வதில்லை.

பிரச்னை விரைவிலேயே மேலும் தீவிரமாகப் போகிறது. இதற்கெல்லாம் காரணகர்த்தா தான்தான் என்று மக்கள் நினைத்துக் கொள்வார்கள். இதன் விளைவாக தானும், முதலமைச்சரும் ஏதாவது ஆசிரமத்தில் போய்ச் சேரவேண்டிய நிலைமை உருவாகும். அப்பொழுதுதான் அவருக்குப் புரிந்தது கல்வியமைச்சரின் தந்திரம்.

கல்வியமைச்சருக்கு அஞ்சிரெட்டியின் ஆதரவு இருப்பது அவருக்குத் தெரியும். முதலமைச்சருக்கு ராஜா ராமின் ஆதரவு இருக்கிறது. பின்னே தனக்கு ஆதரவு யாரு? அவருக்குச் சட்டென்று ஒரு பெயர் நினைவுக்கு வந்தது.

காந்தீ!

★ ★ ★

மறுநாள் காலையில் காந்தி எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தபோது ''குட்மார்னிங் சார்'' என்ற குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான். வார்ட் பாய்!

''என்னை அடையாளம் தெரிகிறதா சார்?'' என்று கேட்டான்.

காந்தி தலையை அசைத்துவிட்டு ''ரொம்ப நாளாகி விட்டது. ஏறக்குறைய ஐந்து வருடங்கள்'' என்றான்.

''ஆமாம் சார்.''

''இப்போ என்ன செய்துக்கிட்டு இருக்கே?'' காந்தி கேட்டான். இருவரும் காரை நோக்கி நடந்துகொண்டு இருந்தார்கள்.

''வீடுவீடாக போய் நியூஸ் பேப்பர் போடுகிறேன் சார்.''

''ஏன்? ஆஸ்பத்திரியில் நல்ல வேலைதானே பார்த்துக்கிட்டு இருந்தாய்?''

''அதைவிட இங்கே பேப்பர் விற்பதில் நல்ல கமிஷன் கிடைக்குது சார். அங்கே எனக்கும் பெரிய டாக்டருக்கும் சண்டை வந்து விட்டது.''

''ஏன்?''

''நோயாளிகளிடம் பணம் கேட்டார் என்று அவர் மீது ரிப்போர்ட் செய்தேன்.''

காந்திக்குத் தலைசுற்றுவது போல் இருந்தது. ''இவ்வளவு நல்லவனாக எப்பொழுது மாறினாய்?'' என்று கேட்டான்.

அவன் கேட்ட தொனியில் கேலியிருப்பது போல் உணர்ந்தானோ என்னவோ, வார்ட் பாய் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு பிறகு சொன்னான். ''உங்களால்தான் சார்.''

காந்திக்குப் புரியவில்லை. ''என்னாலேயா?'' என்றான்.

''அன்று நீங்க எந்த மாதிரி நிலைமையில் என்னிடம் வந்தீங்க என்று தெரியும். அந்த நிலைமையிலும் நான் பிணத்தைப் பாதுகாக்க 'மாமூல்' கேட்டதை நினைத்துப் பார்க்கும்போது என்மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. அன்னிலிருந்தே உங்களை நான் கவனித்து வருகிறேன். லக்ஷ்மி எங்கள் பேட்டையில் இருந்த வரையில் அடிக்கடி உங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பாள். நானும் எட்டாம் வகுப்பு வரையில் படித்திருக்கிறேன். நேர்மையாக, நியாயத்திற்குக் கட்டுப்பட்டு இவ்வளவு தூரத்திற்கு முன்னுக்கு வந்திருக்கும் உங்களைப் பார்த்து வெட்கப்படுவேன் சார். அன்று முதல் லஞ்சம் வாங்குவதையும், இனாம் கேட்பதையும் விட்டுவிட்டேன். அதோடு யாராவது அந்தக் காரியத்தைச் செய்தாலும் தடுத்துவிடுவேன். அதனால் வேலை போய்விட்டது. போனால் போகட்டும் சார். இப்போ நிம்மதியாக இருக்கிறேன்.''

காந்தி சிலையாகி விட்டான். தான் காண்பது கனவா நினைவா என்று புரியவில்லை. ஒரு நபரின் வாழ்க்கையில் இன்னொரு நபரின் பாதிப்பு இந்த அளவுக்கு இருக்கும் என்றால் அவனால் நம்பத்தான் முடியவில்லை. ''நீ என்னைப் பார்த்து மாறினாலும், வேறு யாரைப் பார்த்து மாறினாலும் சரி உன்னுடைய இந்த மாற்றம் எனக்குச் சந்தோஷமாக இருக்கு.'' மனப்பூர்வமாகச் சொன்னான்.

''சார்! உங்களால் எனக்கு ஒரு சின்ன காரியம் ஆகணும்.''

''என்ன?''

''காலையில் எழுந்து கொண்டு ஒவ்வொரு வீடாக பேப்பர் போடுவதற்கு ரொம்ப நேரமாகிறது சார். சிலர் கோபப்படறாங்க. லேட்டாக பேப்பர் போட்டால் வேறு பையனை மாற்றிவிடுவதாக சொல்றாங்க. அதனால் ஒரு ஐநூறு ரூபாய் வங்கியிலிருந்து கடன் வாங்கித் தந்தால் ஒரு சைக்கிள் வாங்கிக் கொள்வேன்.''

காந்தி சிரித்து விட்டு, ''வங்கியிலிருந்து உனக்கு கடன் வாங்கித் தர முயற்சி செய்வதை விட அந்த ஐநூறு ரூபாயை நானே உனக்குத் தருவது சுலபம். உனக்கு வங்கி விதிமுறைகளைப் பற்றி அதிகம் தெரியாது என்று நினைக்கிறேன்'' என்று பர்ஸிலிருந்து பணத்தை எடுத்தான்.

வார்ட் பாய் ஓரடி பின்னால் நகர்ந்து, ''வேண்டாம் சார். நான் உங்களிடம் வாங்கணும்னு வரலை''

என்றான். காந்தி வற்புறுத்திச் சொன்ன பிறகு பெற்றுக் கொண்டான்.

''சார்! தவறாக நினைக்காதீங்க. மாத தவணையில் இதைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டால் தான் வாங்கிக் கொள்வேன்'' என்றான்.

''நீ நேர்மையாக வாழ நினைத்தால் அதற்கு முதல் நபராக உதவ வேண்டியவன் நான்தானே. விஷ் யூ பெஸ்ட் ஆஃப் லக்'' என்று தோளில் தட்டிக் கொடுத்தான்.

வார்ட்பாய் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டான். காந்திக்கு இது நம்பமுடியாத அனுபவம். ஆனால் ஒரு மாதம் முடிந்ததும் வார்ட்பாய் ஐம்பது ரூபாய் கொண்டு வந்து தந்ததும் மறுபடியும் மனிதர்கள் மீது நம்பிக்கை பிறந்தது.

★ ★ ★

பத்து நாட்கள் கழிந்தன. மாநிலத்தில் நிலைமை ரொம்ப மோசமாகி விட்டது. முதலமைச்சர் டில்லிக்கும் சென்னைக்கும் பறந்து கொண்டிருந்தார். பத்திரிகைகள் அரசாங்கத்தின் திறமைக் குறைவைப் பற்றி தலையங்கம் எழுதிக் கொண்டிருந்தன.

முன்பு தீர்மானித்தபடி என்றால் ராஜாராம் தன் கட்சி பிரதிநிதிகளுடன் முதலமைச்சரைச் சந்தித்து பேப்பரின் விலையை ஐந்து சதவீதம் குறைப்பதாக சொல்ல வேண்டும். முதலமைச்சர் மகிழ்ச்சியை வெளிப் படுத்தி பத்திரிகையில் அறிவிப்பு தருவார். உடனே

மார்க்கெட்டில் ஸ்டாக்குகள் ரிலீஸ் செய்யப்படும். இதன் மூலம் முதலமைச்சரின் செல்வாக்கு அதிகரிக்கும். அதற்குள் பாதி மில்லுகள் மூடப்பட்டு வருவதால் ராஜா ராமுக்கு லாபம் ஏற்படும். அடுத்த வருடத்தில் எப்படியும் விலையை பத்து சதவீதம் உயர்த்தி விடப் போகிறார்.

முதலமைச்சருக்கும் தனக்கும் இடையே உள்ள நல்லுறவுக்கு இந்தக் காரியத்தை ராஜாராம் எப்பொழுதோ செய்திருக்க வேண்டும். ஆனால் வங்கி மீட்டிங்கில் காந்தி தோற்கடித்து விட்டதால் ராஜாராம் பின்வாங்கி விட்டார்.

ராஜாராம் இப்பொழுது முதலமைச்சருக்கு ஒரு நிபந்தனை வைத்தார். அதாவது முதலமைச்சர் டில்லிக்கு சென்று வங்கி டைரக்டர்களிடம் தன் சார்பில் பேசி அவர்களைத் தன் பக்கம் திருப்பினால் பேப்பரின் விலையைக் குறைக்க முயற்சி செய்வதாகச் சொன்னார். எளிதில் முடிந்து விடும் என்று நினைத்த பிரச்னை இப்படி திசை திரும்பியதும் முதலமைச்சர் நிலை குலைந்து விட்டார். அரசியல் களத்தின் உள்ளே நடக்கும் பூசலைத் தெரிந்து கொள்ளாத மக்கள் ஆட்டு மந்தைபோல் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந் தார்கள்.

15

''சீக்கிரமாக புறப்படு. இன்னிக்கு நீ நினைத்தும் பார்த்திராத அளவுக்கு பெரிய பார்ட்டீ தரப்போகிறேன்'' என்றான் காந்தி.

''பார்ட்டீயா? எதுக்கு?'' லக்ஷ்மி கேட்டாள்.

''டாடாவாலாவைப் பிரமாதமாக டீல் செய்ததற்கு.''

''செய்த ஒவ்வொரு காரியத்திற்கும் உடனே பதில் உதவி செய்து விடுவதுதான் உன் வியாபார லட்சணம் போலிருக்கு'' என்று சிரித்தாள் லக்ஷ்மி.

''ஃபாக்டரி எப்படி இருக்கு?''

''முன்னைவிட ரொம்ப நன்றாக இருக்கு. வீக்லி ரிப்போர்ட்டுகளைத்தான் பார்த்து வருகிறாயே'' என்றாள் லக்ஷ்மி. அவள் சொன்னது உண்மைதான். ஃபாக்டரியின் வளர்ச்சி உற்சாகம் தருவதாக இருந்தது.

''இந்த ஸ்ட்ரைக்தான் பெரிய தலைவலியாக மாறி விட்டது.'' காந்தி சொன்னான்.

''இதில் நமக்குத் தலைவலி என்ன இருக்கு? ஒரு விதத்தில் நல்லதுதான். பேப்பர் விலை அதிகமானாலும் ஆகலாம்.''

''விலையைக் குறைக்கச் சொல்லி அரசாங்கம் உத்தரவு போட்டால்?''

''அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்'' சாதாரண மாகச் சொன்னாள் லக்ஷ்மி.

காந்தி ஸ்பூனை விரல்களுக்கிடையே திருப்பிக் கொண்டே, அவள் முகத்தை நேராகப் பார்க்காமலேயே ''அது வரையிலும் காத்திருக்காமல் நம் ஃபாக்டரியை இப்பவே மூடிவிடலாம்னு நினைக்கிறேன் லக்ஷ்மி.''

''என்ன?'' தான் கேட்டது உண்மைதானா என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மறுபடியும் ''என்ன சொன்னாய்?'' என்று கேட்டாள்.

அவன் மறுபடியும் சொன்னான்.

''ஃபாக்டரியை மூடிவிட்டுப் போகிறாயா? எதற் காக?'' ''அதெல்லாம் ரொம்ப ஆழமான அரசியல் விவகாரங்கள் லக்ஷ்மி.''

அவன் வார்த்தையை முடிக்கும் முன்பே லக்ஷ்மி உரத்த குரலில் ''எனக்குத் தெரியாத ஆழமான விஷயம் அப்படி என்னதான் இருக்கு?'' என்றாள்.

இந்த விஷயத்தை லக்ஷ்மி இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்வாள் என்று அவன் எதிர்பார்க்க வில்லை.

''இந்த ஸ்ட்ரைக்கை ராஜாராம்தான் தூண்டி விட்டிருக்கிறார். காகிதத்தின் விலையைக் குறைத்து அதன்மூலம் தன் எதிரிகளின் மில்லுகளை மூடிவிடச் செய்யத் திட்டம் தீட்டியிருக்கிறார்.''

''ஆனால் நீயே இப்பொழுது மூடிவிடுவதாகத் தானே சொல்கிறாய்.'' அவள் முகம் சிவந்து விட்டது.

லக்ஷ்மி அந்த ஃபாக்டரியை எவ்வளவு தூரத்திற்கு நேசித்து வருகிறாள் என்று காந்திக்குத் தெரியும். அதனால் சமாதானப்படுத்துவது போல் சொன்னான். ''இதோ பார் லக்ஷ்மீ! அவருடைய திட்டம் காரணமாக மூடிவிடுவது, வேறு. நாமே ஃபாக்டரியை மூடிவிடுவது வேறு. இப்படிச் செய்தால் நமக்குக் கொஞ்சம் நஷ்டம் வந்தாலும் மனதளவில் ராஜாராமை தளரச் செய்து விட முடியும்.''

''நான்சென்ஸ்!'' அவள் கத்தினாள்.

''கொஞ்சம் நிதானமாகப் பேசு லக்ஷ்மீ. ப்ளீஸ்.'' சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே சொன்னான்.

''யூ அண்ட் யுவர் ஹிபோகிரஸி! ஐ ஹேட் தெம்!''

ஹோட்டலில் இருந்த அனைவரும் அவளது உரத்தக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். அவள் காந்தியை நேராகப் பார்த்துக் கொண்டே சொன்னாள். ''கொஞ்ச காலத்திற்கு மூடிவிடப் போகிறோம். கொஞ்சம் தான் நஷ்டம் வரும் என்பது சரிதான். ஆனால் விலை உயர்ந்த ஹோட்டல்களில் நீ சாப்பிடும் இந்த மாதிரி சூப்புகளை உன்னால் நிறுத்த முடியாது. உன் படுக்கை அறையில் ஏ.சி.யும் நிற்கப் போவதில்லை. ஆனால் உன் ஃபாக்டரியை நம்பி வயிற்றுப் பிழைப்புக்காக காட்டிற்கு வந்து வசிக்கும் தொழிலாளர்களின் கதி என்ன? ஃபாக்டரியை மூடினாலும் அவர்களுக்குச் சம்பளம் தரப் போகிறாயா? உங்களுடைய பிடிவாதங்களுக்கு நடுவில் தொழிலாளர்களின் வயிற்றைக் காயப் போடப் போகிறாயா?''

இந்த வார்த்தைகள் காந்திக்குக் கோபத்தை வர வழைத்தன. ''இடது சாரிப் பேச்சை எடுக்காதே'' என்றான் எரிச்சலுடன்.

''என் கேள்விக்குப் பதில் அது இல்லை'' என்றாள் அவள். அதே குரலில் ''ஒரு ஃபாக்டரியின் ஜெனரல் மேனேஜராக, நலிந்து போயிருந்த ஒரு மில்லைச் சீர் தூக்கி நிறுத்திய நபராக, என் தொழிலாளர்களின் சார்பில் இந்தக் கேள்வியைக் கேட்க எனக்கு எப்போதும் உரிமை இருக்கிறது. விருப்பம் இருக்கும்போது திறக்கவும் இல்லாதபோது மூடவும் ஃபாக்டரி ஒன்றும் உன்னுடைய சமையல் அறை இல்லை'' சொல்லி முடித்தாள்.

''ஆனால் ஃபாக்டரியைத் தொடர்ந்து நடத்தினால் காகித விலையில் ஐந்து பர்சென்ட் சலுகை தர வேண்டி யிருக்கும். அதைப் புரிந்து கொள் லக்ஷ்மி.''

''ஐந்தென்ன? பத்து சதவீதம் கூட தரமுடியும். இரவும் பகலும் ஃபாக்டரியிலேயே பழிகிடக்கும் என்னிடமே எடுத்துச் சொல்கிறாயா? நமக்கு எத்தனை லாபம் வருகிறதோ, எத்தனை பர்சென்ட் சலுகை தர முடியுமோ எனக்குத் தெரியாதா?''

''விலையைக் குறைத்து விட்டால் லாபம் ஒன்றுமே வராது லக்ஷ்மி.''

''ஆனால் முழுவதுமே மூடிவிட்டால் நூற்றுக்கணக் கான குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துவிடும்.''

''அவர்களைப் பற்றி யோசிக்க இது நேரமில்லை. இப்போ ஃபாக்டரியை மூடாவிட்டால் இனி சாசுவத

மாக ராஜாராமின் கையில் நாம் மாட்டிக் கொண்டாற் போல்தான். என்னைப் புரிந்து கொள்.''

''அந்தத் தேவை எனக்கு இல்லை காந்தி. அதோடு நாம் என்று நீ சொன்ன அந்த வார்த்தையை நீக்கிக் கொள். எனக்கும் ராஜாராமுக்கும் எந்தவிதமான விரோதமும் இல்லை. அவர்மீது உனக்குள்ள தனிப்பட்ட விரோதத்திற்காக பழிவாங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் என்னைச் சேர்ந்தவர்களைப் பட்டினி போடுவதாகச் சொன்னால் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.''

அவள் அப்படிச் சொன்னதும் இதயத்தில் ஈட்டி பாய்ச்சினாற்போல் இருந்தது காந்திக்கு. 'நான் உன்னைச் சேர்ந்தவள் இல்லை' என்று மறைமுகமாக சொல்வது போல் தோன்றியது. ரோஷம் மேலிட ''என்னைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறாயே? ஃபாக்டரி உன்னுடையதா என்ன?'' என்று கேட்டான்.

அவள் கோபம் மேலும் அதிகரித்தது. ''ஃபாக்டரியின் ஜெனரல் மேனேஜர் என்ற முறையில் உன்னைத் தட்டி கேட்கும் அதிகாரம் எனக்கு இருக்கிறது.''

ஹோட்டலுக்குச் சாப்பிட வந்தவர்கள், வெயிட்டர்கள் எல்லோரும் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். காந்தி, லக்ஷ்மி இருவரும் அதைப் பொருட்படுத்தாமல் ஆவேசமாக பேசிக் கொண்டே போனார்கள்.

''நீ லாக்கவுட் அறிவித்த அடுத்த நிமிடமே உன் ஃபாக்டரியின் முன்னாலேயே உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன். காந்தி! பார்த்துக்கொண்டே இரு.''

''ஓஹோ! இடது சாரி கட்சியிலிருந்து மகாத்மா காந்தியின் வழிக்குத் தாவி விட்டாயா? ஃபாக்டரியை மூடப் போவது உறுதி. நீ கடைசி தருணத்தில் ராஜா ராமுடன் இணைந்து போவதாக இருந்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.''

''கடைசி தருணத்தில் கட்சி மாறுவதற்கு நான் ஒன்றும் உன்னைப்போல் கீழ்த்தரமான அரசியலில் இல்லை. ராஜாராமின் மீது இரக்கப்பட்டு ஃபாக்டரியை மூட வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அதில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பற்றி யோசிக்கச் சொல்கிறேன்.''

''இப்படி யோசிப்பதால்தான் நீ இன்னும் ஃபாக்டரி யிலேயே இருக்கிறாய். நான் அதனுடைய முதலாளி ஆகிவிட்டேன்.''

அவ்வளவுதான்! அத்துடன் கடைசியாக ஒட்டிக் கொண்டிருந்த இழையும் அறுந்து விட்டது. அவள் எழுந்து நின்றாள்.

''ஐந்து வருடங்களாக நீ என்ன செய்தபோதிலும், மனச்சாட்சியை வஞ்சித்துக் கொண்டபோதும் சகித்துக் கொண்டு வந்தேன். ஆனால் இன்றைக்கு உன்னிடம் சுய நலம் இவ்வளவு பெருகி ஒரு சின்ன பந்தயத்திற்காக பல குடும்பங்களைப் பட்டினியில் தள்ளிவிடக் கூடிய அளவுக்கு போய் விட்டதென்றால் இனியும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது.''

காந்தியும் எழுந்து கொண்டான். ''நீ அனாவசிய மாக பெரிய பெரிய வார்த்தைகளை உபயோகிக்கிறாய்.

நஷ்டம் வரும் சூழ்நிலையில் என் ஃபாக்டரியை மூடி விடக் கூடிய உரிமை சட்டப்படி எனக்கு இருக்கு.''

''சட்டம்! ஹ¨ம்'' என்றாள் லக்ஷ்மி. ''இந்த வார்த்தையை கடந்த ஐந்து ஆண்டுகளில் பலமுறை பயன் படுத்தியதைப் பற்றி ஏன் பேசமாட்டேன் என்கிறாய்? பிச்சைக்கார கிழவியை பார்ட்னராக சேர்த்துக் கொண்டது முதல் எப்படி அவள் தொல்லையிலிருந்து விடுபடுவது என்று யோசித்தாய். முதல் முதலாக பந்தயத்தில் நீ சம்பாதித்த நூறுரூபாயும் சட்ட விரோதம்தான். இல்லாத வங்கிக்கு கிளையைத் திறக்கச் செய்து ராம்தீர்த்துக்கு வழி சொல்லித் தந்து பணம் சம்பாதித்தாய். பார்ட்டி ஃபண்ட் டொனேஷன் என்ற பெயரில் அமைச்சருக்கு லஞ்சம் கொடுத்தாய். இதெல்லாம் ஆத்மவஞ்சனை இல்லையா? இப்படி மனச்சாட்சியை வஞ்சித்து ஐம்பது லட்சம் சம்பாதித்தாலும் அது உண்மையான வெற்றி யாகுமா? காந்தி! உனக்கும் எனக்கும் இடையே எந்த விதமான சம்பந்தமும் இருந்தது இல்லை. வெறுமே ஆர்வத்தின் காரணமாக பந்தயத்தில் நீ எப்படி வெற்றி பெறப் போகிறாய் பார்க்கலாம் என்று தான் உன்னை ஊக்கப்படுத்தி வந்தேன். ஆனால் இன்று உன்னுள் புரை யோடிவிட்ட சுயநலத்தைப் பார்த்து விட்டேன்.

''காந்தி! எந்தப் பசி உன்னை ஐந்து வருடங்களுக்கு முன் பணம் என்ற மாயவலையில் இழுத்து இவர்களை எல்லாம் பழி தீர்த்துக் கொள்ளச் செய்ததோ, அதே பசி தான் இன்று எனக்கு என் கடமையை உணர்த்தி விட்டது. ஐந்து வருடங்களாக ஒரு நிமிடம் கூட நான்

சந்தோஷமாக இல்லை காந்தி! ஒவ்வொரு நிமிடமும் மனதுடன் போராடிக் கொண்டிருந்தேன். நான் உன்னுடைய சிநேகிதி. இத்தனை நாளாக புனிதமான நட்புடன் பழகி வந்தேன். அப்படிப்பட்ட என்னிடமிருந்து கூட நீ ரகசியத்தை மறைத்தாய். ஹாரிகாவைக் கல்யாணம் செய்து கொள்வது கூட பந்தயத்தில் ஒரு பகுதி என்று என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டாய். உன் சிநேகிதியை நீ ஏமாற்றிவிட்டாய். குறைந்த பட்சம் என்னிடம் கூட நீ வெளிப்படையாக இருக்க முடியாமல் செய்தது இந்தப் பணம்தான். உனக்காக நான் வருத்தப்படுகிறேன்'' என்று வெளியேறப் போனவள் திரும்பவும் விருட்டென்று வந்து, ''நீ லாக்கவுட் எப்பொழுதிலிருந்து ஆரம்பிக்கப் போகிறாயோ, எந்தக் காரணத்திற்காக செய்யப் போகிறாயோ அதைத் தெரிந்து கொள்ளும் உரிமை எனக்கு இருக்கு. தொழிலாளர்களின் சார்பில் நாங்கள் தொடங்கப்போகும் உண்ணாவிரதத்திலிருந்து உன்னையும், உன் ஃபாக்டரியையும் காப்பாற்றிக் கொள்ளத் தயாராக இரு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

காந்தியின் முகம் வெளிறிப் போய்விட்டது. உடனே தேறிக் கொண்டு ''லக்ஷ்மீ!'' என்று அழைத்தான். அதற்குள் அவள் ஹோட்டலைவிட்டு வெளியேறி இருளோடு மறைந்து விட்டாள். மணி பத்தாகி விட்டது. இவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ரொம்ப நேரம் அங்கேயே உட்கார்ந்து விட்டு ஏமாற்றத்துடன் கார் டிரைவ் செய்யத் தொடங்கினான்.

லக்ஷ்மி தந்த அதிர்ச்சியிலிருந்து அவன் இன்னும் மீளவில்லை. அவள் தன்னிடமிருந்து சாசுவதமாக பிரிந்து சென்று விட்டாள் என்றால் அவனால் நம்பமுடிய வில்லை. எல்லாம் கனவு போல் இருந்தது. இத்தனை நாளும் கொந்தளிக்கும் எரிமலையாய் உணர்ச்சிகளை உள்ளேயே அடக்கி வைத்திருந்தாள் போலும். அவளுக்கு ஹாரிகாவைப் பற்றி எப்படித் தெரிந்தது? தெரிந்த பிறகு தன்னிடம் ஏன் கேட்கவில்லை?

குற்ற உணர்வு அவனைச் சுட்டது. உடனே தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ள முயற்சி செய்தான். ஒரு மாதகாலம் ஃபாக்டரியை மூடிவிட்டால் என்ன ஆகிவிடும்? அதற்குள் பட்டினிச் சாவு, உண்ணாவிரதம் அது இது என்று கடுமையாகப் பேசுவானேன்? தன்னை அவள் ஏன் புரிந்துகொள்ளவில்லை? இத்தனை சின்ன விஷயத்திற்கு அவ்வளவு ஆவேசப்படுவானேன்? சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போகிறாளாமே. இருக் கட்டும். தான் ஒன்றும் பயப்படப் போவதில்லை.

யோசித்தவாறே வீடு வந்து சேர்ந்தான் காந்தி. கட்டிலில் படுத்தவன் புரண்டு புரண்டு தவித்தான். தூக்கம் வரவில்லை. யாருடனாவது தன் மனப் போராட் டத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. சற்று நேரம் தயங்கி ஹாரிகாவுக்குப் போன் செய்தான். இரண்டு மூன்று ரிங் போன பிறகு மறுமுனையில் ரிசீ வரை எடுத்த சத்தமும், தூக்கம் கலந்த குரலில் ''ஹலோ'' என்று ஹாரிகா சொன்னதும் கேட்டது.

''நான்தான்'' என்றான். அதற்குள்தான் செய்த தவறு புரிந்தது அவனுக்கு. அந்த இரவு நேரத்தில் இளம்பெண் ஒருத்திக்கு போன் செய்வது பண்பற்ற செயலாகத் தோன்றவே போனை வைத்து விட்டான்.

ஹாரிகா ''ஹலோ... ஹலோ'' என்று இரண்டு மூன்று முறை அழைத்தவள் மறுமுனையில் போன் துண்டிக்கப்பட்டு விட்டதை உணர்ந்தாள். இந்த நள்ளிர வில் காந்தி ஏன் போய் செய்தான் என்று அவளுக்குப் புரியவில்லை. அதற்கு மேல் அவளுக்கு உறக்கம் வர வில்லை. புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள். டேப்ரிகார்டரை கீழ் ஸ்தாயில் வைத்துக் கொண்டு மேஜை விளக்கு வெளிச்சத்தில் படுத்துக் கொண்டே புத்தகம் படிப்பது அவள் வழக்கம்.

டேப்பில் குலாம் அலி பாட்டு மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தது. அ வள் பார்வை புத்தகத்தில் இருந்ததே தவிர கவனம் மட்டும் அங்கே இருக்கவில்லை. அதற்குள் பாட்டு நின்று விட்டது.

ஏதோ உரையாடல் கேட்கத் தொடங்கியது.

''எவ்வளவு நாளாச்சு உங்க கல்யாணம் முடிந்து?'' அனுமந்துவின் குரல்.

''ஆறேழு மாதங்கள் இருக்கும்.'' லக்ஷ்மி.

''பின்னே எந்த விசேஷமும் இல்லை என்கிறாயே?'' லக்ஷ்மி சிரித்துக் கொண்டே ''நான் அப்படி சொல்ல வில்லையே?'' சொல்லும் குரல்.

''எத்தனாம் மாதம்?''

''அந்த மாதிரி கணக்காக ஒன்றுமில்லை. இரண்டு மாதம் இருக்கலாம்.''

டேப் சுழன்று கொண்டிருந்தது. சற்று நேரத்தில் முடிந்து விட்டது. ஹாரிகா அதை நிறுத்தவும் இல்லை. அந்தப் பக்கம் பார்க்கவும் இல்லை. வெளியே சூழ்ந்து கிடந்த காரிருளை வெறித்துப் பார்த்தபடி அப்படியே படுத்திருந்தாள். பிறகு எழுந்து தந்தையின் அறையை நோக்கிப் போனாள். சற்றுத் தயங்கி பிறகு கதவைத் தட்டினாள்.

''கமின்!''

கட்டிலில் உட்கார்ந்தபடி பிசினெஸ் பேப்பர்களைப் புரட்டிக் கொண்டிருந்த ராஜாராம் அந்த நேரத்தில் தன் அறைக்கு வந்த மகளைப் பார்த்து வியப்புடன் ''என்னம்மா'' என்றார்.

அவள் பேசாமல் தந்தையின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். ஒரு முடிவுக்கு வந்து விட்டவள் போல் ''டாடீ!'' என்றாள்.

''என்னம்மா?''

''நான் இன்னும் மேலே படிக்கலாம்னு இருக்கிறேன்.''

ராஜாராம் வியப்புடன் மகளைப் பார்த்தார். ஹாரிகா தலையைக் குனிந்து கொண்டாள்.

''இப்போ திடீரென்று இந்த எண்ணம் ஏன்?'' என்று கேட்கப் போனவர் நிறுத்திக் கொண்டு ''சரிம்மா'' என்றார்.

''இங்கே இல்லை அப்பா.''

''பின்னே?''

''கேம்பிரிட்ஜில் ரிசெர்ச் செய்யப் போகிறேன்.''

ராஜாராமின் முகத்தில் வியப்பு. உடனே ஏதோ புரிந்து விட்டாற்போல் முறுவலிக்கப் போனார். இமைக்கும் நேரத்தில் தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு ''கண்டிப்பாக ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

''உடனே செய்துவிடுங்கள்.''

''உடனேதாம்மா. மார்ச் பத்தொன்பதாம் தேதிக்குள். போதுமா?''

அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. அவள் தலைகுனிந்த வாறு அறையை விட்டு வெளியே வந்தாள்.

ராஜாராம் அருகில் இருந்த அப்பாயிண்ட்மெண்ட் புத்தகத்தை எடுத்து அதில் மறுநாள் டிராவலிங் ஏஜெண்டிடம் சொல்ல வேண்டிய விஷயத்தைக் குறித்துக் கொண்டார். குறிப்பு எழுதிக் கொண்டிருக்கும்போது அவர் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. 'காந்தீ! பந்தயத்தில் நீ ஜெயித்தால் ஜெயிக்கலாமோ என்னவோ. ஆனால் வாழ்க்கையில் நான் உன்னை தோற்கடிக்கப் போகிறேன்!'

★ ★ ★

நாளேடுகள் முழுவதும் ஸ்ட்ரைக் பற்றிய செய்திகளே இருந்தன. எங்கும் கலவரம் பரவியிருந்தது.

சிறப்புப் போலீஸ் படை வந்து இறங்கியது. சமயம் பார்த்து எதிர்க்கட்சியினர் கிளர்ச்சியை மேலும் பரப்பிக் கொண்டு இருந்தார்கள். கல்வி அமைச்சர் இந்த நேரம் பார்த்து டில்லியில் முகாமிட்டிருந்தார். உள்துறை அமைச்சரும் திறமைசாலிதான். அவராலும் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை.

காந்தி செய்தித்தாளைப் புரட்டினான். நாலாவது பக்கத்தில் G.H.T. பேப்பர் மில்லுக்கு முன்னால் லக்ஷ்மி நடத்தும் உண்ணா விரதப் போராட்டம் பற்றிய செய்தி வெளியாகியிருந்தது.

அதைப் படித்ததும் காந்தி வெறுப்புடன் உதட்டைக் கடித்துக் கொண்டான். உண்மையில் அது அவனுக்கு மிகச் சிறிய பிரச்னை. எங்கேயோ காட்டில் ஒரு மூலையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் உண்ணாவிரதப் போராட்டம் மக்களின் கவனத்தைக் கவர வாய்ப்பு இல்லை. மக்கள் அதைவிட பெரிய பிரச்னையில் ஆழ்ந்திருக்கிறார்கள். இருந்தாலும் மனதில் ஏதோ ஒரு மூலையில் வருத்தம். 'லக்ஷ்மி! தேவையில்லாத இந்தப் போராட்டம் எதற்காக? இந்த உலகத்தை நீ எப்பொழுது புரிந்து கொள்ளப் போகிறாய்? நாட்டின் நடப்பைக் கண்கூடாகப் பார்த்த பிறகு ஏன் இப்படி பிடிவாதமாக இருக்கிறாய்? உனக்கு ஒரு பெரிய உண்மையை உணர வைக்கப் போகிறேன். பார்த்துக் கொண்டே இரு.'

பேப்பரை மூடி வைக்கப் போனவனின் பார்வை யதேச்சையாக தேதியின் மீது விழுந்தது. பிப்ரவரி பதினெட்டு. அதாவது இன்னும் ஒரு மாதம்தான் பாக்கி

யிருக்கிறது. கொஞ்சம் பயமாகவும் இருந்தது. அதற்குள் போன் ஒலித்தது. பேசி முடித்துவிட்டு ரிசீவரை வைத்தவன் அன்றைய நிகழ்ச்சி நிரல் அடங்கிய கார்ட்டை கையில் எடுத்தான்.

எட்டரை மணிக்கு வங்கி மீட்டிங், பத்து மணி அளவில் பேப்பர் ஏஜெண்டுகளுடன் சந்திப்பு, பதினோரு மணிக்கு டாக்ஸ் நிபுணருடன், பன்னிரெண்டு மணிக்கு தொழிலாளர் சங்கத் தலைவருடன் கலந்துரையாடல். பன்னிரெண்டரைக்கு அயல் நாட்டு கூட்டுறவு நிறுவனத்தாருடன் லஞ்ச், மூன்று மணிக்கு பிரெஸ் மீட்டிங், நாலு மணிக்கு சட்ட ஆலோசகர், ஆறு மணிக்கு கிளப் மீட்டிங்.

சிவப்புப் பென்சில் எடுத்து முதல் மூன்று அப்பாயிண்ட்மெண்டுகளையும் அடித்துவிட்டு அதன் எதிரில் ஒரே ஒரு வார்த்தையை எழுதிவிட்டுப் புறப்பட்டான்.

'ஹோம் மினிஸ்டர்!'

★ ★ ★

ஆள் நடமாட்டமின்றி சாலை வெறிச்சோடிக் கிடந்தது. மெயின் ரோட்டை அடைந்ததும் எதிரே ஊர்வலம் ஒன்று வருவது தெரிந்தது. மக்கள் முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்கள். சிறுவர்களும், பெரியவர்களும் அட்டைகளை, கொடிகளைக் கைகளில் ஏந்தியிருந்தார்கள்.

எதிரே வந்த வாகனங்களைப் போலீசார் திசை திருப்பிக் கொண்டிருந்தார்கள். காந்தி காரைப் பக்கத்துச் சந்தில் திருப்பி அங்கேயே நிறுத்திவிட்டு வெறுமே

உட்கார்ந்திருந்தான். ரியர்வ்யூ கண்ணாடியில் மெயின் ரோட்டில் போகும் ஊர்வலம் தென்பட்டுக கொண்டிருந்தது.

அப்பொழுது திடீரென்று யாரும் எதிர்பார்க்காத போது அந்தத் தாக்குதல் நடந்தது. வன்முறை கும்பல் ஒன்று தபால் அலுவலகத்தை முற்றுகையிட்டு தாக்கியது. கண்மூடித் திறப்பதற்குள் போலீசாரின் விசில் சத்தமும், மைக்கில் எச்சரிப்பதும், கண்ணீர்ப் புகைப்பிரயோகமும் நிகழ்ந்து விட்டன.

கூட்டத்திலிருந்த சில குண்டர்கள் முன்பே திட்டமிட்டபடி திறந்திருந்த கடைகளுக்குள் புகுந்து கலகம் செய்ய, போலீசார் குண்டுமழை பொழியத் தொடங்கினார்கள். அதிர்ஷ்டவசமாக காந்தியின் கார் நின்று கொண்டிருந்த சந்திற்குள் போலீசாரோ, குண்டர்களோ நுழையவில்லை. சுமார் கால் மணி நேரம் அங்கே பயங்கரமான ரகளை நடந்தது. முதலில் காற்றில் வெறுமே சுட்ட போலீஸ்காரர்கள் பிறகு குண்டர்களை நோக்கி சுடத் தொடங்கினார்கள். அடிபட்டவர்கள் தீனமாக அலறிக் கொண்டிருந்தார்கள். மக்கள் சிதறி நாலாப் பக்கமும் ஓடத் தொடங்கினார்கள். இனியும் தான் காருக்குள்ளேயே இருப்பது நல்லது இல்லை என்று நினைத்த காந்தி காரைவிட்டு இறங்கி ஓரடி முன்னோக்கி வைக்கப் போனான். குண்டு ஒன்று அவன் காது பக்கமாக விர்ரென்று பாய்ந்து சென்றது. அவன் குனிந்து மறைவான இடத்தை நோக்கி ஓடப்போன பொழுது எதிரே சைக்கிளைத் தள்ளிக்கொண்டு ஓடிக் கொண்டிருந்த

இளைஞனின் பிடியிலிருந்து சைக்கிள் தொலைவில் போய் விழுந்தது. அந்த இளைஞன் குண்டுபட்டு தரையில் அப்படியே சரிந்தான். அவன் அலறல் காந்தியின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. ஓடப்போனவன் நின்று விட்டான்.

அருகில் ஒரு மனிதன் சாகக் கிடப்பதைக் கூட பொருட்படுத்தாமல் மக்கள் பீதியில் ஓடிக் கொண்டிருந்தார்கள். வலி தாங்காமல் அந்த இளைஞன் புரண்டு கதறிக் கொண்டிருந்தான். அந்த உருவம் தனக்கு அறிமுகமானதாகத் தோன்றவே ஓடிப்போய் குனிந்து பார்த்தான் காந்தி. அவன் இதயமே இரண்டாகப் பிளந்து விடும் போல் இருந்தது.

அவன் வார்ட்பாய்!

காந்தி சட்டென்று அவன் தலையை தன் மடியில் ஏந்திக் கொண்டான். வார்ட் பாயின் முகம் ரத்தத்தால் நனைந்திருந்தது. மற்றொரு குண்டு மார்பில் பாய்ந்திருந்தது. உயிர் பிரியத் தயாராக இருந்தது. காந்தியின் ஸ்பரிசம் பட்டுக் கண்களைத் திறந்து பார்த்தான். காந்தியை அடையாளம் புரிந்து கொண்டது போல் கண் இமைகளை மூடித் திறந்தான்.

''பயப்படாதே'' என்றான் காந்தி. வார்ட்பாய் சிரித்தான், பழைய நண்பனைச் சந்தித்தது போல்.

''என்ன சொல்ல நினைக்கிறாய்? சொல்லு'' வார்ட் பாய் பேச முயன்றான். ஆனால் குரல் வெளியே வரவில்லை. காந்தி அவன் தலையைத் தூக்கிப் பிடித்துக்

கொண்டான். வார்ட்பாய் கையை உயர்த்தி காற்றில் அசைத்தான். காந்தி அவன் காட்டிய திசையை நோக்கினான். சைக்கிள் தென்பட்டது.''

கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல் அவன் குரல் பலவீனமாக ஒலித்தது. ''சைக்கிளை விற்று உங்களுடைய பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.''

எதிர்பாராதபோது முகத்தில் அடிவாங்கியது போல் இருந்தது காந்திக்கு. மூளையில் கடல் அலைகளின் பேரிரைச்சல்.

''உங்களைப் பார்த்து கற்றுக் கொண்டேன். என்னால் நேர்மையாக வாழ முடியாதா என்ன? ஆஸ்பத்திரியில் லஞ்சம் வாங்குவதை விட்டுவிட்டேன். வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். என் சாவு என் குடும்பத்திற்குப் பெரிய இழப்பு. ஆனாலும் கடனாளியாக இறக்க எனக்கு விருப்பம் இல்லை. எந்தச் சட்டமும் என்னைக் கட்டுப்படுத்தப் போவதில்லை. ஆனால் சட்டத்தையும் மீறி எனக்கு ஒரு நியாயம் இருக்கிறதாக உணருகிறேன். என் சைக்கிளை எடுத்துக்கிட்டு என்னைக் கடனிலிருந்து மீட்டுடுங்க சார்.''

வார்ட்பாயின் தலை கீழே சரிந்து விட்டது.

★ ★ ★

இரவு எட்டு மணிக்கு தன் வீட்டுக்கு வந்த காந்தியைப் பார்த்து வியப்படைந்தார் ராஜாராம். இருந்தாலும் வியப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''கமின்'' என்றார்.

''பீடிகை எதுவும் தேவையில்லை. நேராக விஷயத் திற்கு வருகிறேன். காரணம் கேட்காதீங்க. நானும் பேப்பர் விலையைக் குறைக்கிறேன். பத்து நாட்களில் நோட்டுப் புத்தகங்களை சப்ளை செய்வதாக நாளேடு களில் அறிக்கை தந்து விடுவோம்.'' காந்தி நாற்காலியில் அமர்ந்து கொண்டே சொன்னான்.

ராஜாராம் முகத்தில் கலவரம் தென்பட்டது. ''ஒரே திரியாக கீழே இறங்கி வந்து விட்டாயே? அஞ்சிரெட்டி மறுத்து விட்டானா இல்லை அவன் பக்கம் இருந்தால் தோல்வியைத் தவிர்க்க முடியாதுன்னு தெரிந்து விட்டதா?'' ஏளனமாகக் கேட்டார்.

காந்தியின் முகம் சிவந்து விட்டது. ''காரணம் தேவை யில்லை. ஒருகால் நான் காரணத்தைச் சொன்னாலும் 'இந்தச் சின்ன காரணத்திற்காகவா நீ தோல்வியை ஒப்புக் கொள்கிறாய். நான் நம்ப மாட்டேன்' என்று சொல்வீங்க. மிஸ்டர் ராஜாராம்! நாட்டில் பேப்பர் விலையைக் கட்டுப்படுத்துவது நாம் மூவர்தான். நான் எந்த நிபந்தனையும் இன்றி பணிந்து போகிறேன். இதனால் இந்தப் போராட்டத்தில் உங்களுக்கு வெற்றி கிடைத்து விட்டாற்போல் தான். இந்தப் பிரபோசலை ஏன் ஒப்புக் கொள்ள மறுக்கறீங்க?'' என்றான்.

''நீ என்னுடைய எதிரி. திடீரென்று வந்து நான் யுத்தத்தை நிறுத்துகிறேன் என்று சொன்னால் நம்புவ தற்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை. எனக்குக் காரணம் தேவை.''

''காரணம் வேண்டுமா? சொன்னாலும் உங்களுக்குப் புரியுமோ புரியாதோ. நம் இருவரின் பிடிவாதத்தால் எத்தனையோ மாணவர்கள், இளைஞர்கள், தம் உயிரை இழக்கிறார்கள். அதனால்தான் இந்தப் போராட்டத்தை நான் நிறுத்திக் கொள்ளப் போகிறேன் என்று சொன்னால் நீங்க நம்புவீங்களா? என்னை வழிகாட்டியாக எடுத்துக் கொண்டு வாழ்ந்த வார்ட்பாய் ஒருவன் நம் போராட்டத்தின் காரணமாக ரத்த வெள்ளத்தில் துடிதுடித்துச் சாகும் தருணத்தில் தன் இறுதிக் கடனைத் தீர்த்து விட்டு இறந்து விட்டான். அதைப் பார்த்து விட்டு நான் இன்று இரவு இந்த சமரசப் பேச்சுக்கு வந்திருக்கிறேன் என்று சொன்னால் அந்த உணர்ச்சிகளை உங்களால் ஏற்றுக் கொள்ள முடியுமா?'' என்றான்.

''ஏற்றுக் கொள்ள மாட்டேன்'' என்றார் ராஜாராம் சற்றும் தயங்காமல். ''இதற்குப் பின்னணியில் ஏதோ பெரிய சதித் திட்டம் இருப்பதாக சந்தேகப்படுகிறேன். உன்னுடன் அஞ்சிரெட்டி ஏன் வரவில்லை?''

''இந்த விஷயத்தை அவரிடமும் சொன்னேன். அவர் சம்மதிக்கவில்லை'' என்றான் காந்தி.

ராஜாராம் உரத்தக் குரலில் சிரித்தார். ''அவன் எப்படியும் தோற்றுவிடுவான் என்று தெரிந்து என்னைக் காக்காய் பிடிக்கலாம்னு இங்கே வந்திருக்கிறாய். குட்! ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள். இந்த மாதிரி மூன்றாம் தரமான வழிகளைக் கையாண்டு என்னிடம் நல்ல பெயர் வாங்கினாலும் உனக்கு என் மகளைத் தரமாட்டேன். அந்த மாதிரி ஆசை எதுவும்

வைத்துக் கொள்ளாதே. வேண்டுமானால் ஐந்து ஆண்டு களுக்கு முன்னால் உனக்கு தருவதாகச் சொன்ன குமாஸ்தா வேலை இன்னும் காலியாகவே இருக்கு. அதைத் தருகிறேன், கெடு முடிந்தது'' என்றார்.

காந்தி வலுக்கட்டாயமாக ஆவேசத்தை அடக்கிக் கொண்டான். ''அதற்குள் பந்தயத்தில் ஜெயித்து விட்ட தாக நினைத்து சந்தோஷப்பட்டுக் கொள்ளாதீங்க. கெடு இன்னும் முடியவில்லை'' என்றான்.

''பார்த்துவிடலாம்.''

காந்தி விருட்டென்று வெளியே வந்து விட்டான்.

இந்த உரையாடலை ஒன்றுவிடாமல் உள்ளே அறையில் சுவரில் சாய்ந்தாற்போல் நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தாள் ஹாரிகா. தந்தை மறுப்பு சொன்ன பொழுது ஓடிப்போய் இடைபுகுந்து பேச வேண்டும் என்ற விருப்பத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். காந்தி வெளியேறிக் கொண்டிருந்த பொழுது மட்டும் ஜன்னல் திரைச்சீலையை விலக்கிப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை மட்டும் அவளால் கட்டுப்படுத்த முடிய வில்லை.

16

வீடு திரும்பியபிறகும் ரொம்ப நேரம் காந்தியின் மனநிலை சரியில்லை. யார் மீதென்றே தெரியாத வெறுப்பு. எல்லோரும் தனக்கு எதிரியாகி விட்டது போன்ற உணர்வு. ஹாரிகா... லக்ஷ்மி... அஞ்சிரெட்டி... ராஜாராம்.

இல்லை இல்லை. இந்தக் கடைசி நேரத்தில் தளர்ச்சி அடையக் கூடாது. எல்லாச் சக்திகளைத் திரட்டிக் கொண்டு தனித்து நின்று போராட வேண்டும். தான் யார் என்பதை எல்லோருக்கும் அடையாளம் காட்ட வேண்டும்.

ராஜாராம் சொன்னது உண்மைதான். இன்னும் ஒரு மாதம் கூட இல்லை. இந்த ஸ்ட்ரைக் இன்னும் எவ்வளவு நாள் நீடிக்குமோ தெரியவில்லை... ஃபாக்டரியை மூடியாகிவிட்டது. முதலமைச்சர் மற்றும் ஹோம்மினிஸ்டரால் நிலைமை சீர்திருத்த முடியவில்லை. கல்வி அமைச்சர் என்ன திட்டம் போட்டிருக்கிறார் என்று தெரியவில்லை. அவர் இவ்வளவு நாளாக மௌனமாக இருப்பானேன்?

சில நாட்கள் முன்பு அஞ்சிரெட்டி தன்னிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

"இந்த ஸ்ட்ரைக் உச்சநிலையை அடைந்ததுமே நம் கல்வி அமைச்சர் ஒரு அற்புதமான முடிவை எடுப்பார்.

அந்த முடிவினால் இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் கிடைத்து விடும். கல்வி அமைச்சர் முதலமைச்சர் பதவியில் அமரவேண்டுமென்று மக்களும் பிரதமரும் விரும்புவார்கள். பேப்பர் விலையைக் குறைத்தால் எனக்கு ஐம்பது லட்சம் நஷ்டம் வரும். ஆனால் முதலமைச்சர் பதவிக்கு நான் கொண்டு வரப்போகும் ஆள் மூலமாக எனக்குக் கிடைக்கும் ஆதாயம் இரண்டு மூன்று கோடி இருக்கும்.''

அதென்ன அற்புதமான முடிவு? எந்த முடிவு மக்களையும், பிரதமரையும் திருப்திப்படுத்துவதோடு நாட்டின் நிலைமையைச் சரி செய்து முதலமைச்சர் பதவியை அவருக்குத் தரப் போகிறது?

அதைத் தெரிந்து கொள்வதில்தான் தன் எதிர் காலமே அடங்கியிருக்கிறது. இந்தத் துறையில் தனக்கு அதிக அனுபவம் கிடையாது. மற்றவர்களோ ஜாம்பவான்கள். அவர்களுடைய அனுபவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தான் எந்த மூலைக்கு? மாணவர்களை பகடைக் காய்களாக வைத்து அஞ்சிரெட்டி, ராஜாராம் ஆடும் சதுரங்க ஆட்டத்தில் தான் பலியாகிவிடக் கூடாது. எல்லாவற்றையும் விட தன்னுடைய லட்சியம் காகிதமில்லோ, நாட்டு மக்களின் நலனோ இல்லை. ஐம்பது லட்சம் சம்பாதிப்பது. அதுவும் மார்ச் பத்தொன்ப தாம் தேதிக்குள்.

காந்தி இவ்வாறு மூளையைக் குழப்பிக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் ராஜாராமும் கலவரப்பட்டுக் கொண்டிருந்தார். உண்மையில் அவர்

எண்ணியிருந்தது வேறு. மாணவர்களின் ரகளை தொடங்கியதுமே பேப்பரின் விலையைக் குறைத்து அரசாங்கத்தில் தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார். ஆனால் அஞ்சிரெட்டி இப்படி தடாலடியாக காகித ஆலைகளை மூடும் திட்டத்தை மேற்கொள்வான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. மார்க்கெட்டில் சரக்கு திருப்திகரமாக இல்லாததால் இனி விலையைக் குறைத்தாலும் பிரயோசனம் இருக்கப் போவதில்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் காந்தி அவரைச் சந்தித்தான். காந்தியின் பிரபோசலை ஏற்று அவர் சமரசத்திற்கு ஒப்புக் கொண்டிருந்தால் வேறு திருப்பம் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவருடைய அகம்பாவம் தடுத்து விட்டது. அதன் விளைவுகளையும் அனுபவிக்க நேர்ந்தது. காந்தி ஹோம் மினிஸ்டருடன் அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிக் கொண்டதும் அதற்காகத்தான்.

★ ★ ★

"இதெல்லாம் உண்மை என்று எப்படி நம்பச் சொல்றீங்க?" கையில் இருந்த பேப்பர்களைப் பார்த்துக் கொண்டே கேட்டார் ஹோம் மினிஸ்டர்.

"சில மாதங்களாக என்னைச் சேர்ந்த ஆள் அவருடைய வீட்டிலேயே இருந்தபடி அவருடைய ரகசியங்களைக் கண்டுபிடிக்க நேர்ந்தது.

"அத்தனை சுலபத்தில் ராஜாராம் யாரிடமும் எதையும் சொல்லிவிட மாட்டாரே?"

''உண்மைதான். ரொம்ப பாடுபட்டுத்தான் அவருடைய அந்தரங்க விஷயங்களைச் சேகரிக்க முடிந்தது.''

''எவ்வளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறார்? எந்தெந்த வங்கிகளில் ரகசியமாக கணக்கு வைத்திருக்கிறார் போன்ற விவரங்களை எப்படி கண்டுபிடித்தீங்க?''

''என்னை வேவு பார்க்க அனுமந்துவை என் வீட்டிற்கு அனுப்பியிருந்தார். நடுவில் அனுமந்து இறந்து விட்டதால் அவனுடைய மனைவி விதவையாகி விட்டாள். அவளுக்கு வேலை தேடித் தரும் பொறுப்பு என் மீது விழுந்தது. இந்த வேலையைத் தான் அவளிடம் ஒப்படைத்தேன்.'' காந்தி முறுவலுடன் சொன்னான். ''டிட் ஃபர் டாட்.''

அமைச்சர் கண்கள் அகல விரிய காந்தியை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தார். இந்த இளைஞன் அரசியலில் நுழையாதது தங்களுடைய அதிர்ஷ்டம்.

''இந்நேரம் அவள் ராஜாராம் பக்கம் சாய்ந்திருக்கலாமே. அவள் கொடுத்த தகவல் ஒருகால் தவறாக இருந்தால் அசம்பாவிதமாகிவிடும். பிறகு பல பிரச்னைகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும் இல்லையா?''

''பிரியம்வதா அந்த மாதிரி செய்ய மாட்டாள். எனக்கு அவள் மீது நம்பிக்கை இருக்கிறது. அவளுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. சொல்லப் போனால் ராஜாராமுடன் நெருக்கமான உறவு வைத்திருந்தால் தவிர இந்த ரகசியங்களை வெளியில் கொண்டு வந்திருக்க முடியாது. பல மாதங்களாக

இரண்டாம் பேர் அறியாதவாறு மிக ரகசியமாக நானும் அவளும் ராஜாராம் பற்றிய விவரங்களைச் சேகரித்து வருகிறோம். அவளுடைய கணவன் தன்னுடைய ஆள் என்று அவருக்குத் திடமான நம்பிக்கை. பிரியம்வதா என் தரப்பில் வேலை செய்வாள் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க மாட்டார். நாம் இந்த ரிஸ்க் எடுத்துக் கொள்வோம். வெற்றியோ தோல்வியோ ஒரு கை பார்த்து விடுவோம்.''

அமைச்சர் சற்று யோசித்துவிட்டு ''சரி'' என்றார்.

அன்றிரவே இன்கம்டாக்ஸ் மற்றும் சி.பி.ஐ காரர்கள் ஒன்றாக இணைந்து ராஜாராம் வீட்டில் சோதனை போட்டார்கள். பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட கறுப்புப் பணமும், மேலும் சில விவரங்களும் கிடைத்தன.

அன்றிரவு ராஜாராமுக்கு இன்னொரு முறை மாரடைப்பு வந்தது.

★ ★ ★

லக்ஷ்மி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கி அன்று எட்டாவது நாள். முதலில் தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். பிறகு லக்ஷ்மி சுயமாக களத்தில் இறங்கினாள். காகிதத் தொழிற்சாலைக்கு வெளியே கேட்டிற்கு அருகில் டெண்ட் போடப்பட்டது. தொழிலாளர்கள் முதல் நாளன்று கோஷங்கள் போட் டார்கள். மில் சொத்துக்களைப் பாதுகாக்க போலீஸ் படை வந்தது. இரண்டாவது நாள் கூச்சலும் ஆர்ப்பாட்டமும் நிகழ்ந்தன. ஐந்து பேர் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள்.

அந்தக் காட்டுப் பகுதியில் இருந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த மெம்பர் ஒருவர், இந்தக் கதவடைப்பு சட்ட விரோதம் என்றும், தொழிலாளர்களின் உரிமைக்கு எதிரானது என்றும் பிரசாரம் செய்தார். தொழிலாளர் களின் சங்கத் தலைவர்களை அழைத்துக் கொண்டு சங்கத்தின் செலவில் தலைநகருக்குப் போய் ஸ்டார் ஹோட்டலில் முகாமிட்டு அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தத் தொடங்கினார்.

ஃபாக்டரியின் புகைக் குழாயிலிருந்து புகைவருவது நின்று விட்டது. பாய்லர்கள் செயலற்று இருந்தன. இந்த எட்டு நாளில் லக்ஷ்மி ரொம்பவும் சோர்ந்து விட்டாள். தான் உண்ணாவிரதம் இருப்பதால் அரசாங்கம் கண் களைத் திறந்து பார்க்கும் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை. ஆன்ால் காந்தி இறங்கி வருவான் என்று மட்டும் நம்பினாள்.

அவள் நினைத்தது போலவே காந்தி வந்தான். ஆனால் அவளுடைய விருப்பங்களை ஆமோதிப்பதற் காக இல்லை. இரவு சுமார் பதினோரு மணியளவில் காரை தொலைவிலேயே நிறுத்திவிட்டு டெண்டிற்கு நடந்து வந்தான். எல்லோரும் உறங்கிக் கொண்டிருந் தார்கள். லக்ஷ்மி மட்டும் விழித்துக் கொண்டிருந்தாள். சந்தடி கேட்டுக் கண்களைத் திறந்து பார்த்தாள். நிலா வெளிச்சத்தில் காந்தியைப் பார்த்து முறுவலுடன் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''நீ வருவாய் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் வருவாய் என்று நினைக்கவில்லை.''

காந்தியின் முகத்தில் எந்த உணர்ச்சியும் பிரதிபலிக்க வில்லை. ''கொஞ்சம் எழுந்து வெளியில் வரமுடியுமா? உங்க ஆட்கள் என்னைப் பார்த்தால் ஆவேசத்தில் கொன்று போட்டாலும் ஆச்சரியப்பட வேண்டியது இல்லை.''

லக்ஷ்மி களைப்புடன் எழுந்து கொண்டாள். இரு வரும் சற்று தூரம் நடந்து சென்று ஒரு பாறையின் மேல் அமர்ந்து கொண்டார்கள். நிலவின் வெளிச்சத்தில் ஃபாக் டரியின் புகைக்குழாய் நிழற்படமாக காட்சியளித்தது.

''லக்ஷ்மி! நீ ஏன் இப்படிச் செய்கிறாய்? ஃபாக்டரி யின் ஜெனரல் மேனேஜராக இருந்து கொண்டு தொழி லாளர்களுடன் சேர்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்ள லாமா?'' உரிமையுடன் அதட்டுவதுபோல் சொன்னான்.

''நான் உனக்குக் கீழே வேலை செய்யவில்லை. ஜெனரல் மேனேஜர் பதவியை என்றோ ராஜினாமா செய்து விட்டேன்.'' லக்ஷ்மி சொன்னாள்.

''எல்லாமே உன் விருப்பம்தானா? மூன்று மாத நோட்டீஸ் கொடுக்கத் தேவையில்லையா'' எவ்வளவு பொறுமையாக உரையாடலைத் தொடங்க எண்ணியிருந் தானோ அதற்கு நேர்மாறாக நிகழ்ந்து கொண்டிருந்தது.

அவன் குரலின் கடுமைக்கு அவள் பயந்து விட வில்லை. மெதுவாக நிமிர்ந்து பார்த்தாள். ''நள்ளிரவு நேரத்தில் முதலாளி என்ற உரிமையில் நீ கேட்க வந்தது

இதுதானா? அப்படி என்றால் உன்னிடம் செகரெட்ரி யாக சேரும்போது நான் சொன்னதை நினைவு படுத்திக் கொள். இஷ்டப்பட்ட போது வேலையை விட்டு நின்று விடுவேன் என்பது நான் போட்ட நிபந்தனைகளில் ஒன்று.''

''என் கீழே வேலை பார்ப்பது சிரமம் என்று உனக்கு அப்பொழுதே தெரிந்து விட்டது என்று சொல்லு.''

''தெரிந்து விட்டது'' என்றாள் லக்ஷ்மி நிதானமான குரலில். ''எப்பொழுது பணம் உன்னை ஆட்டுவிக்கத் தொடங்கியதோ, எப்பொழுதிலிருந்து நீ மனச்சாட்சியை ஏமாற்றிக் கொண்டு ஊசலாடத் தொடங்கினாயோ அன்னிக்கே தெரிந்து விட்டது நாம் இருவரும் சேர்ந்து பயணம் செய்ய முடியாதென்று. காலையில் எழுந்ததுமே நான் செய்யும் பிரார்த்தனை என்ன தெரியுமா? 'கடவுளே! என் நண்பனுக்கு பணத்தின் மீது உள்ள மோகத்தைக் கொஞ்சமாவது குறைத்து விடு' என்றுதான். காந்தி! உன் சிநேகிதியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இத்தனை பேரைத் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு நீ எதையும் சாதிக்கப் போவதில்லை. நினைவில் வைத்துக் கொள்.''

''உன் அபிப்பிராயம் தவறு லக்ஷ்மி! பணத்தின் மீது எனக்கு என்றுமே மோகம் இருந்தது இல்லை. பந்தயத் தில் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக நான் செய்யும் முயற்சிதான் இது. பணத்தை எப்போதும் நான் கண்ட் ரோல் செய்து கொண்டுதான் இருக்கிறேன்.''

''அப்படி செய்பவனாக இருந்தால் மனச்சாட்சியை வஞ்சித்துக் கொள்ள மாட்டாய்.''

''நான் மனச்சாட்சியை வஞ்சித்துக் கொண்டேனா?'' அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

''ஒரு சின்ன உதாரணம் சொல்லட்டுமா? G.T.H. கம்பெனி என்றால் என்ன?

''கோ டு ஹெல்! ராஜாராமிடம் நான் அதைத்தான் கடைசியாக சொல்லப் போகிறேன்.''

''பொய்!'' கத்தினாள் லக்ஷ்மி. ''G.T.H. என்றால் காந்தி, திரிபுர லக்ஷ்மி, ஹாரிகாதானே.''

காந்தி வியப்படையவில்லை. ''இருக்கலாம். நீ ஸ்ட்ரைக் செய்வதற்குக் காரணம் அதுதானா?''

அவன் வார்த்தைகளில் தொனித்த ஏளனத்தை உணர்ந்த லக்ஷ்மியின் முகம் சிவந்தது. உடனே சமாளித்துக் கொண்டாள். ''நான் உண்ணாவிரதம் மேற் கொண்டது தொழிலாளர்களின் நலனுக்காக. அவர்கள் வயிற்றுப் பிழைப்பில் மண் அள்ளிப் போட்டு நீ செய்யும் அநியாயத்தை எதிர்ப்பதற்காக'' என்றாள்.

காந்தி சிரித்துவிட்டு, ''மேடையில் சிறந்த பேச்சாள ராக எடுபடுவாய்'' என்றான்.

லக்ஷ்மி எழுந்து நின்றாள். ''நீ பேச வேண்டியது இன்னும் ஏதாவது இருக்கிறதா?''

''இருக்கிறது. நாம் பிரிந்து போவதற்கு முன்னால் ஒரு வார்த்தை சொன்னாயே நினைவிருக்கிறதா? பசியின் கொடுமையைப் பற்றிச் சொல்லியிருந்தாய். அந்தப் பசியைப் பற்றி உன்னைவிட எனக்கு நன்றாகத் தெரியும்

என்று சொல்வதற்காகத்தான் இந்த நள்ளிரவு நேரத்தில் இங்கே வந்தேன். நீ நம்பிக் கொண்டிருக்கும் இந்தத் தொழிலாளர்கள் எப்படி மாறிப் போவார்கள் என்பதை உனக்குப் புரிய வைக்கிறேன். அதைப் பார்க்கப் போகிறாயா அல்லது என் திறமையின்மீது நம்பிக்கை வைத்து இந்த நிமிடமே ஸ்ட்ரைக்கை விட்டு விடுகிறாயா?''

''எனக்குத் தொழிலாளர்களைப் பற்றியோ, கொள்கைகளைப் பற்றியோ அதிகம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மனிதர்களைப் பற்றியும், மன உணர்வுகளைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.''

''அப்படி என்றால் சரி. எந்த மன உணர்வுகள் உன்னையும், உன் தொழிலாளர்களையும் ஒரு சேர காப்பாற்றப் போகிறதோ பார்த்து விடுகிறேன். உனக்குக் கொஞ்சமாவது நடைமுறை வாழ்க்கை பற்றித் தெரிய வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் ஏட்டு அறிவையும், அனாவசியமான ஆவேசத்தையும் விடுவாய். நாளைக்கே உனக்கு உதாரணம் காட்டுகிறேன்.''

''காந்தி! மனிதன் என்றுமே பணத்திற்கு அடிமையாகக் கூடாது. அப்படி அடிமையாகி விட்டால் மனப் போராட்டம்தான் மிஞ்சும் என்று நானும் உனக்கு நிரூபிக்கிறேன்.''

''பந்தயமா?''

''உன் முதல் பந்தயம் முடியட்டும். பிறகு இரண்டாவது பந்தயத்தை வைத்துக் கொள்'' என்றாள் லக்ஷ்மி.

காந்தியின் முகம் மேலும் சிவந்தது. ''கனவிலும் ஊகிக்க முடியாத விளைவுகளைச் சந்திக்கப் போகிறாய்.

உன்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. மனிதர் களின் சுபாவத்தை நம்பி பந்தயம் வைக்காதே. தோற்றுப் போய்விடுவாய். மனிதர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.''

லக்ஷ்மி திரும்புவதற்காக ஒரு அடி நகர்ந்தாள். ''எங்களுடைய போராட்டம் தொடரும். என்றைக்காவது நீ இறங்கி வரத்தான் போகிறாய். விஷ் யூ பேட் லக்'' என்று சொல்லிவிட்டு தன்னுடைய டெண்டை நோக்கி நடந்தாள்.

★ ★ ★

முதலாளி வந்திருப்பதை உணர்ந்து தொழிலாளர் களுக்கிடையே கலவரம் ஏற்பட்டது. உண்மையில் அது வரையில் அவர்கள் குழப்பத்தில் தவித்துக் கொண்டிருந் தார்கள். இது வழக்கமான ஸ்ட்ரைக் இல்லை. கோரிக்கை களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருந்தால் அவர்கள் ரகளை செய்யலாம். ஆனால் முதலாளி ஃபாக் டரியை மூடிவிட்டுப் போய்விட்டால் அவர்களால் என்ன செய்ய முடியும்? இவ்வாறு தவித்துக் கொண்டிருந்த போது காந்தி திரும்பி வந்த செய்தி அவர்களுடைய ஆசையைத் துளிர்க்கச் செய்தது. அதோடு காந்தி வந்த துமே அவர்களைப் பேச்சு வார்த்தைகளுக்கு அழைக்கச் செய்தான். வட்டமேஜையைச் சுற்றிலும் தலைவர்களை உட்காரச் செய்து சொல்லத் தொடங்கினான்.

''ஃபிரண்ட்ஸ்! நீங்களும் நானும் சேர்ந்து இந்த மில்லை முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். சில தவிர்க்க முடியாத காரணங்களுக்காக இந்தக் கம்பெனியை

மூட வேண்டியிருந்தது. ஆனால் இன்று தவறை உணர்ந்து விட்டேன். பேப்பர் இன்டஸ்ட்ரியை விரல் நுனியில் ஆட்டுவிக்கும் இரு பெரிய தொழிலதிபர் களுக்கு இடையே இனியும் நலிந்து போக விரும்ப வில்லை. தொழிலாளர்களின் நலனைக் கருதி மில்லை மறுபடியும் திறக்கலாம் என்று இருக்கிறேன். இந்த லீவில் கூட உங்கள் எல்லோருக்கும் சம்பளம் தரும் நிபந்தனையுடன்.''

முதலில் அவர்களுக்கு அவன் சொன்னது புரிய வில்லை. புரிந்ததும் ஹாலில் கைத்தட்டல்கள் அதிர்ந்தன. காந்தி மேலும் பேசத் தொடங்கினான்.

''சாதாரணமாக லாக் அவுட் அறிக்கை தருவதற்கு முன் சம்பளத்தைக கொடுக்காமல் எப்படித் தட்டிக் கழிப்பது என்று காரணத்தைத் தேடுவார்கள். ஆனால் நான் அப்படி செய்யவில்லை. சட்ட ரீதியாக உங்களுக்குத் தரவேண்டியதைக் கொடுத்து விட்டுத்தான் ஃபாக்டரியை மூடினேன். அப்படியும் நீங்கள் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கினீங்க. அதிலும் நீங்களாகவே செய்யவில்லை. நிர்வாகத்தின் சார்பில் இதுவரையிலும் வேலை செய்து வந்த ஜெனரல் மேனேஜர் திடீரென்று தொழிலாளர்கள் பக்கம் சாய்ந்து இந்தப் போராட் டத்தைத் தொடங்கியிருக்கிறாள். நானும் சராசரி மனிதன் தான். எனக்கும் கோபமும் ஆவேசமும் இருக்கும். நீங்கள் என் சார்பில் யோசித்துப் பாருங்கள்'' என்று எல்லோரையும் ஒருமுறை பார்த்தான்.

''ஃபாக்டரி இன்றிரவு ஷிஃப்ட்லிருந்து தொடங்கப் படும், நீங்கள் யாரும் லக்ஷ்மியைப் பற்றியோ அவள் மேற்கொண்டிருக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தைப் பற்றியோ பொருட்படுத்தாமல் வேலையில் சேரும் பட்சத்தில்'' இறுதி வார்த்தையை அழுத்திச் சொன்னான். ''அவள் உங்களுடைய ஆள் இல்லை. மேனேஜ் மெண்டைச் சேர்ந்தவள். அவளைப் பற்றி முடிவு செய்வது எங்களுடைய பொறுப்பு.''

தலைவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். தன் வார்த்தைகளில் அவர்கள் சமாதான மாகாதது கண்டு மேலும் சொன்னான்.

''லக்ஷ்மிக்கும் எனக்கும் உள்ள உறவு பற்றி உங்களுக்குத் தெரிந்ததுதான். அவள் இன்று ஸ்ட்ரைக் செய்கிறாள் என்றால் அது உங்கள் மேலுள்ள அன்பினால் அல்ல. என்னைத் தனிப்பட்ட முறையில் பழிதீர்த்துக் கொள்ளத்தான். அதனால் அவளை விட்டுவிட்டு நீங்கள் வேலையில் சேர நினைத்தால் அதனால் தொழிலாளர் ஒற்றுமைக்கு எந்த பங்கமும் வராது. நன்றாக யோசித்து எனக்கு ஒத்துழைப்பு தாருங்கள். நான் உங்களைச் சேர்ந்தவன்தான். என்னை முழுவதுமாக நம்புங்கள்.''

★ ★ ★

மாலையில் தொழிலாளர்கள் ஒவ்வொருவராக ஃபாக்டரிக்குள் நுழையத் தொடங்கினார்கள். காந்தியின் வார்த்தைகள் அவர்களை நன்றாக வசப்படுத்தி விட்டிருந்தன. லக்ஷ்மி இருந்த டெண்டைத் தாண்டிக் கொண்டுதான் கும்பல் கும்பலாக உள்ளே போய்க்

கொண்டிருந்தார்கள். அவள் வெறுமையுடன் அந்தப் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். யாருமே அவளைப் பொருட்படுத்தவில்லை.

வயதான தொழிலாளி ஒருவன் மட்டும் அவளிடம் வந்தான். ''ஏம்மா இப்படி உட்கார்ந்திருக்கே? அவங்க தான் நாம் கேட்டதுக்கு ஒத்துக்கிட்டாங்களே. எழுந்து வாம்மா.'' அனுசரணையாக சொன்னான்.

லக்ஷ்மி பதில் சொல்லவில்லை. தன்னை ஏறிட்டுக் கூட பார்க்காமல் போய்க் கொண்டிருக்கும் சக தொழிலாளர்களைப் பார்த்தபடி சிலையாக அமர்ந்திருந் தாள். எங்கே தாக்க வேண்டுமோ அங்கே சரியாக தாக்கி விட்டான் காந்தி.

இருட்டி விட்டது. சுற்றிலும் காரிருள் பரவியது. அந்த இருளில் காந்தியின் கார் மெதுவாக வந்து டெண்ட் முன்னால் நின்றது. காரை விட்டு இறங்கிய காந்தி ஓசைப்படுத்தாமல் கதவைச் சாத்தினான். டெண்ட் அருகில் வந்தவன் தாழ்ந்த குரலில் வெற்றியைச் சாதித்து விட்ட இறுமாப்புடன் ''பார்த்தாயா லக்ஷ்மி!'' என்றான்.

உள்ளேயிருந்து பதில் இல்லை. ஏதோ சந்தேகம் வரவே உள்ளே எட்டிப் பார்த்தான். டெண்ட் காலியாக இருந்தது.

★ ★ ★

விமான நிலையம் பரபரப்புடன் இயங்கிக் கொண் டிருந்தது. டில்லிக்குப் புறப்படும் ஹோம்மினிஸ்டரை வழியனுப்ப பெரிய கூட்டம் வந்திருந்தது.

காந்தி ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான். அவனும் டில்லிக்குத்தான் சென்று கொண்டிருந்தான். அமைச்சரின் பக்கத்து இருக்கைதான் அவனுடையது. ஆனால் அவ்விருவரும் சேர்ந்து பயணிப்பது இரண்டாம் பேருக்குத் தெரியாது. அத்தனை கவனமாக திட்டம் போடப்பட்டிருந்தது.

காந்தியின் மனம் முழுவதும் பதட்டம் நிரம்பி யிருந்தது. மிக ஆபத்தான திட்டம் அது. இதன் வெற்றி யின் மீதுதான் அவன் வாழ்க்கையின் வெற்றியோ தோல் வியோ முடிவு செய்யப்படும்.

கலந்துரையாட வேண்டியது பிரதமருடன்!

அன்றுமாலை ஐந்து மணிக்கு பிரதமரைச் சந்திக்க அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருந்தார் ஹோம் மினிஸ்டர். அந்த மீட்டிங்கில் அவனும் பங்கு பெறப் போகும் விஷயம் அவர்களைத் தவிர யாருக்கும் தெரியாது.

பயணிகளை விமானத்திற்குள் ஏறச் சொல்லி அறிவிப்பு ஒலித்தது. அவன் ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு ஏறப்போன பொழுது தொலைவிலிருந்து வித்யார்த்தி ஓடி வருவது தென்பட்டது. மூச்சிரைக்க காந்தி யிடம் வந்து நின்றவன் ''காந்தீ! லக்ஷ்மி தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்திருக்கிறாள்'' என்றான்.

''என்ன?'' அதிர்ச்சி அடைந்தவனாகக் கேட்டான்.

''கிரோசினை ஊற்றிக் கொண்டு தீக்குளித்து விட்டாள். நிலைமை சீரியஸாக இருக்கிறது. முகம் முழுவதும் எரிந்து போய் விட்டது.''

காந்தியின் கையிலிருந்த ப்ரீஃப் கேஸ் நழுவி விழுந்தது. ஒரே பாய்ச்சலில் போனை அணுகினான். வித்யார்த்தியிடம் நம்பர் கேட்டுத் தெரிந்து கொண்டு ஆஸ்பத்திரிக்கு போன் செய்தான்.

''நிலைமை எப்படி இருக்கு?'' நடுங்கும் குரலில் கேட்டான்.

''சீரியஸ்தான். பிழைப்பது கஷ்டம்.'' மறுமுனையிலிருந்து பதில் வந்தது.

கோபம், இயலாமை, ஆத்திரம் எல்லாம் ஒன்றாகச் சேர ஆவேசத்துடன் ரிசீவரை தரையில் வீசினான். 'ஏன் லக்ஷ்மீ! எதற்காக இப்படிச் செய்தாய்? யாரைப் பழிவாங்க நினைத்தாய்?' ஆஸ்பத்திரியில் படுக்கையின் மீது கிடக்கும் லக்ஷ்மியை மனக் கண்முன்னால் நிறுத்திப் பார்த்தான். உடல் முழுவதும் கருகிப் போய் உருமாறி உயிர் ஊசலாடும் நிலையில்... இதற்குக் காரணம் யாரு, தான்தானோ?

ஊஹூம். இதைப் பற்றி யோசிக்க இது நேரம் இல்லை. விமானம் கிளம்பப் போவதாக அறிவிப்பு கேட்டது. அவனுக்கு அந்த நிமிடம் பயணத்தை நிறுத்தி விட்டு ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. அவனுடைய எண்ணம் அவனுக்கே விநோதமாகத் தோன்றியது. ஹோம் மினிஸ்டர் தன்னுடனே டில்லிக்குப் பயணம் செய்யப் போகிறார். அங்கே பிரதமர் தங்களுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்.

அவன் வித்யார்த்தியைப் பார்த்தான். ''எந்த டாக்டர் லக்ஷ்மியைப் பார்க்கிறார்?''

''காஷ்வாலிடூ.''

''நீ உடனே டாக்டர் அவினாஷை அழைத்துப் போ. அவருடைய யோசனைபடி வேறு யாராவது ஸ்பெஷலிஸ்ட் வேண்டுமானாலும் ஏற்பாடு செய். ஐ வாண்ட் தி பெஸ்ட் ட்ரீட்மெண்ட். உன்னிடம் பணம் ஏதாவது இருக்கா?''

''எஸ்.பி.யில் ஐயாயிரம் வரையில் இருக்கும்.''

காந்தி சட்டென்று ப்ரீஃப்கேஸிலிருந்து செக் புத்தகத்தை வெளியே எடுத்து நான்கு செக்குகளில் கையெழுத்துப் போட்டுத் தந்தான். ''கரெண்ட அகௌண்டில் ஒரு லட்சம் வரையிலும் இருக்கும். எவ்வவு செலவானாலும் தயங்காதே. நான் திரும்பி வருவதற்குள் லக்ஷ்மி பழையபடி ஆகியிருக்கணும். இரண்டு மணிக்கு ஒரு தடவை டில்லிக்கு போன் செய்து எனக்கு தகவல் தெரிவித்துக் கொண்டிரு. ஹோட்டலில் நான் இல்லாவிட்டாலும் செய்தியைத் தெரிவித்துவிடு'' என்று அவசரமாக ரன்வேயை நோக்கி ஓடினான்.

வித்யார்த்தி அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் கையிலிருந்த செக்குகள் காற்றில் படபடத்தன.

★ ★ ★

மாலை 4.55. ஹோம் மினிஸ்டரும், காந்தியும் இருந்த கார் பிரதமரின் அலுவலக வளாகத்திற்குள்

நுழைந்தது. சரியாக ஐந்து மணிக்கு பிரதமரிடமிருந்து அழைப்பு வந்தது. ஹோம் மினிஸ்டர் காந்தியை பிரத மருக்கு அறிமுகப்படுத்தி விட்டு, "தமிழ் நாட்டில் காகித உற்பத்தியை கண்ட்ரோல் செய்யும் மூன்று பெரும் தொழிலதிபர்களில் ஒருவர்" என்று சொன்னார்.

பிரதமர் கையை நீட்டினார். காந்தி கை குலுக்கி னான். அவன் மனதில் உத்வேகம் நிரம்பியிருந்தது. ரிக்ஷாவுக்குக் கொடுக்க காசு இல்லாமல் ஆஸ்பத்திரிக்கு ஓட்டமும் நடையுமாக போய்ச் சேர்ந்த நிலையிலிருந்து ஐந்து ஆண்டுகளில் நாட்டிலேயே மிகப் பெரிய பதவி யில் இருக்கும் பிரதமருடன் உரையாடும் நிலைக்கு உயருவது என்றால் சாதாரண விஷயம் இல்லையே.

இதெல்லாம் சுய முன்னேற்றமா அல்லது வெறும் அதிர்ஷ்டமா?

பிரதமரின் கேள்வியால் இவ்வுலகிற்கு மீண்டான் காந்தி. அதற்குள் நிதி அமைச்சரும் அங்கு வந்து சேர்ந் தார். கூட்டம் தொடங்கப்பட்டது. காந்தி நிலைமையை விவரித்தான்.

"என்னைத் தவிர இந்தத் தொழிலில் வேறு இரண்டு குரூப்புகள் உண்டு. இதில் ஒரு குரூப் பேப்பரின் விலையைக் குறைக்கவும் தயாராக இருக்கிறது. (ராஜா ராமைச் சேர்ந்தது) சில்லறை வியாபாரிகள் இவர் களுடைய ஆளுமையில் இருக்கிறார்கள். இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் அரசு முடிவு செய்யப்போகும் விலைக்கு சப்ளை செய்ய முடியாது என்று தீர்மானித்து தொழிற்சாலைகளை மூடி விட்டார்கள். (அஞ்சி

ரெட்டியைச் சேர்ந்தவர்கள்) இதுதான் தற்போதைய நிலைமை.''

''வேறு மாநிலத்திலிருந்து பேப்பர் சப்ளை செய்தால்?''

''பிரச்னை பேப்பர் சப்ளை பற்றி இல்லை.'' நிதி அமைச்சர் சொன்னார். ''நோட்டுப் புத்தகங்களை, பாடப் புத்தகங்களை பிரிண்ட் செய்யும் விஷயத்தில் கல்வி அமைச்சர் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இன்னும் சில லட்சம் புத்தகங்கள் பிரிண்ட் ஆக வேண்டிய வேலை அப்படியே தேங்கியிருக்கிறது.''

''இந்தச் சின்ன வேலையைக் கூட சரியாக செய்யாதவர் முதலமைச்சர் பதவியில் அமர வேண்டுமென்று முயற்சி செய்கிறாரே'' பிரதமர் முறுவலித்தார்.

அறைக்குள் அமர்ந்தபடியே பிரதமர் எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்திருப்பது காந்திக்கு வியப்பாக இருந்தது. உண்மையில் கல்வியமைச்சர் இவ்வாறு தாமதம் செய்வதற்குக் காரணமே நாட்டில் கலகத்தை ஏற்படுத்தத்தான். இந்த விஷயமும் பிரதமருக்குத் தெரிந்திருக்குமோ.

''அரசு அச்சகங்கள் என்ன செய்கின்றன?''

''ஏதோ சாக்கு சொல்லி ஸ்ட்ரைக் செய்து வருகிறார்கள்.''

பிரதமர் யோசனையில் ஆழ்ந்தார். சிறிது நேரம் கழித்து ''நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் தொழிலதிபர்கள் கோர்ட்டுக்குப் போவார்களா?'' என்று கேட்டார்.

''போகமாட்டார்கள். இரண்டு குரூப்புகளும் வேறு வேறு அமைச்சர்களுக்கு வேண்டியவர்கள். அவ்வளவு சீக்கிரமாக வெளிப்பட்டு விடமாட்டார்கள். மிஞ்சிப் போனால் அதிருப்தியைத் தெரிவிப்பார்கள். அவ்வளவு தான்.''

''ராஜாராம் முதலமைச்சருக்கு சப்போர்ட் செய்து வருவது தெரியும். அஞ்சிரெட்டி எப்படி?''

''கல்வி அமைச்சரை–''

விஷயம் புரிந்து விட்டாற் போல் பிரதமர் முறுவலித்தார். காந்தியின் பக்கம் திரும்பி, ''உங்களுடைய பிரபோசல் என்ன?'' என்று கேட்டார்.

''கோடவுன்களில் உள்ள சரக்கை எல்லாம் வெளியில் கொண்டு வரச் சொல்லி உத்தரவு போடுவோம். நம் எதிர்கால திட்டம், அரசியல் மாற்றங்கள் இவற்றை எல்லாம் சொல்லாமல் அஞ்சிரெட்டி, ராஜாராமையும் காண்ட்ராக்டுகளில் கையெழுத்து போடச் செய்வோம். காகித உற்பத்தியில் பாதியை அரசாங்கத்திற்கு லெவி விலைக்கு தரவேண்டுமென்று மில் அதிகாரிகளை சம்மதிக்கச் செய்வோம். அந்த விலையை அரசாங்கம் தீர்மானிக்கும். நோட்டுப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கும், பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கும் நாட்டிலுள்ள தனியார் அச்சகங்களுக்கு காண்ட்ராக்ட் தந்து குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டுமென்று நிபந்தனையைப் போடணும். இதெல்லாம் செய்யப் போவதாக நாளேடுகளில் அறிக்கையைத் தந்து மக்களுக்குத் தெரிவிப்போம். அத்துடன் ரகளையும், ஆர்ப்பாட்டங்களும் அடங்கி விடும்.''

பிரதமர் சிரித்துவிட்டு, ''ரகளையும், ஆர்ப்பாட்டமும் குறைப்பதற்கு வழி இது இல்லை. மக்களுக்கு வேண்டியது ஆட்சி மாற்றம்தான்'' என்று சொல்லிவிட்டு நிதியமைச்சர் பக்கம் பார்த்தார். ''லெவி விலையைத் தீர்மானிக்கும் யோசனை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

''ரொம்ப நல்ல யோசனை'' சௌதரி சொன்னார்.

''இன்னும் ஏதாவது சொல்ல வேண்டியது பாக்கி இருக்கிறதா?''

''ஆமாம்'' என்றான் காந்தி.

''என்ன?''

''சோல்செல்லிங் ஏஜெண்டுகள், உற்பத்தியாளர்கள் கோர்ட் நடவடிக்கை எடுக்காமல் தடுக்க வேண்டும். அரசாங்கம் என்றால் பயப்படுவார்களோ என்னவோ. ஆனால் எங்களை உயிரோடு விட்டு வைக்க மாட்டார்கள். அதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும்.''

''சரி. என்ன செய்யலாம்?''

''காகிதத் தொழிலில் சோல்செல்லிங் ஏஜென்ஸியைத் தற்காலிகமாக ரத்து செய்ய சட்டம் கொண்டு வரணும்.''

அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது. தான் பிரதமரை சங்கடத்தில் ஆழ்த்துவதை உணர்ந்தான் காந்தி. ஆனால் அரசியலில் 'கொடுப்பது – பெற்றுக் கொள்வது' என்ற ரீதியில் இதெல்லாம் சகஜம். தன் எதிர்காலமே அவர்

எடுக்கப் போகும் தீர்மானத்தில்தான் அடங்கியிருக் கிறது. ராஜாராமுக்கு வித்யார்த்தி எழுதித் தந்த அக்ரி மெண்ட் ரத்து செய்யப் படவேண்டுமென்றால் பிரதமர் இந்த முடிவை எடுக்க வேண்டும்.

பிரதமர் நிதி அமைச்சர் பக்கம் திரும்பி 'என்ன செய்யலாம்?' என்பது போல் பார்த்தார்.

''காந்தி சொல்லும் காரணம் சரியானதாகத்தான் தோன்றுகிறது'' என்று சௌதரி சொல்லிவிட்டதால் பிரதமர் மேற்கொண்டு யோசிக்காமல் ''ஓ.கே.'' என்று சம்மதம் தெரிவித்து விட்டார்.

என்றோ ஒரு நாள் அதிகாலையிலே அமைச்சருடன் பறவைகளைப் பார்க்கப் போனபோது ஏற்பட்ட அறி முகம் தனக்கு இந்த அளவுக்கு உதவும் என்ற காந்தி நினைக்கவில்லை. ''தாங்க்யூ சார். தாங்க்யூ.''

''இதனால் நாட்டில் எதிர்ப்பு கிளம்புமோ?'' சந்தே கத்தை வெளியிட்டார் பிரதமர்.

''அஞ்சி ரெட்டி நம் கட்சியை ஒப்புக் கொள்வார். ராஜாராம்தான் ஏற்றுக் கொள்ள மாட்டாரோ என்று தோன்றுகிறது.''

''எப்படி சமாளிப்பது?''

''கடைசி அஸ்திரம் பயன்படுத்தி மிரட்டுவதன் மூலம் ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும். காகிதத் தொழிற்சாலைகளை அரசுடமை ஆக்கப் போவதாகச் சொல்லி பயம் காட்ட வேண்டும்.''

மீட்டிங் நடுவிலேயே ஹோம்மினிஸ்டர் ராஜாராமை தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமையை விவரித்து அவருடைய சம்மதத்தைக் கேட்டார்.

''யாரெல்லாம் இதற்கு ஒப்புக் கொண்டார்கள்?'' மறுமுனையில் ராஜாராம் கேட்டார்.

''காந்தி!''

''செத்தாலும் நான் இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன்.'' காந்தியின் பெயரைக் கேட்டதும் ராஜாராம் ஆவேசமாக கத்தினார்.

''நாட்டின் அமைதியை, மக்கள் நலனைக் கருதி நீங்க இதற்கு ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.''

''மாட்டேன்.''

காந்தி இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டு இருந்தான். அவன் எதிர்பார்த்தது போலவே அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ராஜாராம் ஆவேசத்தில் தவறான முடிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார். போகட்டும். அதுதான் அவனுக்கு வேண்டியது.

''அப்படி என்றால் நாங்கள் மேலும் கடினமான முடிவை எடுக்க வேண்டியிருக்கும்.'' போனில் ஹோம் மினிஸ்டர் சொன்னார்.

மறுமுனையில் இருந்த ராஜாராமுக்கு அந்தப் பக்கம் நிதியமைச்சரும் இருப்பது தெரியாது. ''அதென்ன கடினமான முடிவு?'' ஏளனமான குரலில் கேட்டார்.

''காகிதத் தொழிற்சாலைகளை அரசுடமை ஆக்குவது.''

அதைக் கேட்டதும் ராஜாராம் மேலும் எரிச்சலடைந் தார். ''நீங்க நாட்டுக்கே அமைச்சராக இருக்கலாம். ஒரே ஒரு மாநிலத்தில் மட்டும்தான் அரசுடமை ஆக்கப் போறீங்களா? செய்யுங்கள். பார்த்துவிடலாம்'' என்று போனை வைத்து விட்டார்.

இந்த வார்த்தைகள் அப்படியே பிரதமருக்குப் போய்ச் சேர்ந்தன.

''நாட்டின் நிலைமை இத்தனை மோசமாக இருக்கும் போது இவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்கிற இந்த ராஜாராம் யாரு?'' பிரதமர் கேட்டார்.

''தற்போதைய முதலமைச்சரின் சப்போர்ட் இருப்ப தால் தன்னைப் பெரிய ஆளாக நினைத்துக் கொள்ளும் ஒரு தொழிலதிபர்.''

''கொஞ்சம் அடக்கி வையுங்கள்.''

இது நடந்த பத்து நாட்களில் ராஜாராம் ஃபாக்டரி யில் பெரும்பாலான தொழிலாளர்கள் சொல்லாமல் கொள்ளாமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். தொழிற் சாலை மேனேஜ்மெண்டில் அரசாங்கம் தன்னுடைய ஆளை நியமித்தது. அது மட்டுமே இல்லை. சிவ கைலாஸ் வங்கி டைரக்டர் பதவியிலிருந்து ராஜாராம் நீக்கப்பட்டார். உண்மையான காரணம் தெரியாமல் ராஜாராம் இந்த அடிகளைத் தாங்க முடியாமல் தவித்துப் போய் விட்டார்.

17

''இப்பொழுது நாம் விவாதித்த விஷயங்களில் சட்ட ரீதியாக ஏதாவது சிக்கல் இருக்கிறதா என்று பாருங்கள். எது எப்படி இருந்தாலும் இரண்டு நாட்களில் நாட்டின் நிலமையையும், நம் தீர்மானத்தையும் அனுசரித்து ஒரு அறிக்கை தரவேண்டும். எல்லாவற்றையும் தயார் செய்து வையுங்கள்'' என்று சொல்லிவிட்டு பிரதமர் எழுந்து கொண்டார். அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் எழுந்து கொண்டார்கள்.

''நீங்கள் எப்பொழுது திரும்பிப் போகிறீர்கள்?'' பிரதமர் ஹோம் மினிஸ்டரிடம் கேட்டார்.

''இன்று மாலையிலேயே. நாட்டில் நிலைமை மோசமாக இருக்கு'' என்றார் அவர்.

''நாளை வரையிலும் இருந்து விட்டுப் போகலாம்.'' பிரதமர் யோசித்துக் கொண்டே சொன்னார். ''காகிதத் தொழிலுடன் நாட்டின் நிலைமையையும் சீர் திருத்தும் அரசியல் முடிவையும் எடுத்து விடுவோம்.''

அதிலிருந்த பொருளை உணர்ந்து கொண்ட அமைச்சரின் முகம் பிரகாசமடைந்தது. எல்லோரும் இருந்ததால் சும்மாயிருந்தார். இல்லா விட்டால் காந்தியை அலக்காக தூக்கிக் காற்றில் சுழற்றியிருப்பார்.

தொடர்ந்து நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் மாறிவிட்டதால் எதிர்க்கட்சியினர் தம் பிடி

வாதத்தைத் தளர்த்திக் கொண்டார்கள். காகிதக் கட்டுப் பாட்டைக் கொண்டு வந்ததுமே ஒரு வாரத்திற்குள் பாடப் புத்தகங்களை ரிலீஸ் செய்யப் போவதாக பிரதமர் அறிவித்ததும் மாணவர்கள் அமைதி அடைந்தார்கள். அது போலவே பரீடப் புத்தகங்கள் மார்க்கெட்டுக்கு வந்தன. ஸ்ட்ரைக் பின் வாங்கப்பட்டது.

★ ★ ★

''இது அநியாயம்!'' கையிலிருந்த பேப்பரை விட்டெறிந்தான் அஞ்சிரெட்டி. டில்லியில் ஒரு பெரிய ஹோட்டல் ரூமில் காந்திக்கு எதிரே ஆவேசமாக நடை பயின்று கொண்டிருந்தான்.

நாடகபாணியில் திருப்பம் ஏற்பட்ட இந்த அரசியல் மாற்றங்களால் அதிர்ச்சி அடைந்தவனும் எரிச்சல் அடைந்தவனும் அஞ்சிரெட்டிதான். காந்தி அவன் கத்தி முடிக்கும் வரையிலும் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு மெதுவாக தன் இருக்கையை விட்டு எழுந்து கொண்டான்.

''நான் இதையெல்லாம் உங்களிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். என்னுடைய குரு நீங்கதான். நீங்க எனக்குச் சொல்லித் தந்த முதல் பாடம் 'இந்தத் துறை யில் யாரும் யாருக்குமே கட்டுப்பட்டவர்கள் இல்லை என்றும், ஒருவன் தனக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றும்', அதைத்தான் நான் உங்கள் மீது பிரயோகித்தேன். ஒரு அற்புதமான முடிவை எடுப்பதன் மூலம் கல்வி அமைச்சர் முதலமைச்சர் பதவிக்கு வருவார் என்று நீங்க சொன்னீங்க. அந்த முடிவு என்ன

வாக இருக்கும் என்று யோசித்தேன். அதிர்ஷ்டவசமாக அது என் மூளைக்கு எட்டிவிட்டது. நீங்க சொன்னதுகளே நினைவு இருக்கா? பேப்பர் வியாபாரத்தை விட முத லமைச்சர் பதவி பன்மடங்கு மதிப்பு வாய்ந்தது என்று சொன்னீங்க. அதை நானே ஏன் செய்து பார்க்கக் கூடாது என்று நினைத்தேன். அவ்வளவுதான்'' என்றான் காந்தி.

பொங்கி வந்த கோபுத்தை அடக்கியபடி அஞ்சி ரெட்டி சொன்னான். ''அந்த எண்ணம் உனக்குத் தோன்றி னாலும் அதை கல்வி அமைச்சர் மூலமே செயல்படுத்தி யிருக்கலாமே? நடுவில் அந்த ஹோம் மினிஸ்டருடன் கூட்டு சேருவானேன்?''

''இதுவும் நீங்க சொல்லித் தந்த வித்தைதான். கல்வி அமைச்சர் வேறு இனம், நானும் ஹோம்மினிஸ்டரும் ஒரே இனம் என்பதுதான் காரணம்.''

அஞ்சிரெட்டி பற்களை நறநறவென்று கடித்தான். ''இந்த வெற்றி கடைசி வரையிலும் நீடித்து நிற்கும் என்று நினைக்கிறாயா?''

''அரசியலில் யாருடைய வெற்றியுமே நிரந்தர மில்லை என்று உங்களுக்கும் தெரியும். இருபத்தி ஐந்து ஆண்டுகளாக முடிசூடா மன்னனாக இந்தத் துறையை ஆண்டு வந்தீங்க. ஏதோ ஒரு சின்ன இடையூறு என்னால் ஏற்பட்டதென்று எடுத்துக் கொள்ளுங்கள். அதை கண்டும் காணாதது போல் விட்டுவிடக்கூடாதா? என்னை ஒரு ஐம்பது லட்சம் சம்பாதித்துக் கொள்ள விடுங்கள். என் பந்தய கெடுவும் முடியும் தருவாயில் இருக்கிறது.''

காந்தி இதமாக பேசியதும் அஞ்சிரெட்டியின் கோபம் சற்றுக் குறைந்தது. ''நீ என்னை அடித்த அடி எத்தனை பெரியது தெரியுமா? என் நீண்டகால அரசியல் வாழ்க்கையில் யாருமே இந்த மாதிரி செய்ததில்லை.'' அஞ்சிரெட்டி கிளம்புவதற்காக எழுந்து கொண்டான்.

காந்தி அவன் அருகில் சென்று கையை நீட்டி ''கேன் வி ஷேக் அவர் ஹேண்ட்ஸ்'' என்று கேட்டான்.

அஞ்சிரெட்டி காந்தியின் கண்களை உற்றுப் பார்த்து விட்டு, ''மிஷயித்து விட்டதாக சந்தோஷப்பட்டுக் கொள்ளாதே. என்றாவது ஒரு நாள் நான் இதற்கு பதிலடி கொடுக்கத்தான் போகிறேன்'' என்றான்.

''அந்தச் சாமர்த்தியம் உங்களுக்கு உண்டு. போகட்டும், இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் என்னை விட்டு விடுங்கள்'' என்றான் காந்தி.

அஞ்சிரெட்டி போய் விட்டான்.

காந்தியின் முகத்தில் சட்டென்று மாறுபாடு தோன்றியது. அது வரையிலும் இருந்த குறும்புத்தனம் மறைந்தது. மேஜையை நெருங்கி காகிதங்களை கையில் எடுத்துக் கொண்டான்.

அவை அனைத்தும் டெலெக்ஸ் செய்திகள். லக்ஷ்மியின் நிலைமையைப் பற்றி ஆஸ்பத்திரியிலிருந்து ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் வித்யார்த்தி அனுப்பிக் கொண்டிருந்தவை. வரிசையாக எடுத்துப் படிக்கத் தொடங்கினான்.

அப்படியே இருக்கிறது... கொஞ்சம் சீரியஸாக இருக்கிறது... நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. ஆக்ஸிஜன் வைத்திருக்கிறார்கள்... கண்டிஷன் சீரியஸ்... ஸ்டார்ட் இம்மீடியட்லி.

ஹோட்டலிலிருந்து ஆஸ்பத்திரிக்கு டிரங்கால் போட்டுப் பேசினான். மறுமுனையில் வித்யார்த்தி பேசினான்.

''எப்படி இருக்கு?'' காந்தி கேட்டான்.

''டாக்டர் ரொம்ப சீரியஸ் என்கிறார். நிலைமை மோசமாகிவிட்டது.''

''டாமிட்!'' காந்தி கத்தி விட்டான். ''அவர்களால் முடியாவிட்டால் ஜெஸ்லோக் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போவதாகச் சொல்லு. பணத்திற்குப் பின் வாங்க வேண்டாமென்று சொன்னேனே.''

''டாக்டர்களுக்கும், பணத்திற்கும் குறைவில்லை. நீங்க ஏன் புறப்பட்டு வரமாட்டேங்கறீங்க? இங்கே நிலைமை எப்படி இருக்கிறதோ கொஞ்சமாவது உங்களுக்குப் புரிகிறதா?'' வித்யார்த்தியும் குரலை உயர்த்தினான்.

காந்தி துணுக்குற்றான். எப்போதும் பணிவாகவும், நிதானமாகவும் இருக்கும் வித்யார்த்தி இப்படிப் பேசுகிறான் என்றால் லக்ஷ்மியின் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறதோ புரிந்து கொள்ளமுடியும்.

''ஓ.கே. நான் இரண்டு மூன்று நாட்களில் வந்துவிடுவேன். உடனுக்குடன் தகவல் தெரிவித்துக் கொண்டிரு'' என்று சொல்லிவிட்டு போனை வைத்து விட்டான்.

வெளியில் அவனுக்காக நிதி அமைச்சரின் கார் காத்துக் கொண்டிருந்தது. இரண்டு கோடி ரூபாய் மூலதனத்துடன் நிறுவப்போகும் தொழிற்சாலையைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப் போகிறார்கள்.

★ ★ ★

''ஹாரிகா!'' என்று அழைத்தபடியே உள்ளே வந்தார் ராஜாராம். அவர் கையில் டிராவெலிங் ஏஜெண்ட் அனுப்பிய டிக்கெட்டுகள் இருந்தன. ''அடுத்த வியாழனன்று நம் பிரயாணம்.''

ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்த ஹாரிகா திரும்பினாள். ஜன்னல் வழியாக வீசும் காற்றில் அவள் கேசக்குழல்கள் அசைந்து கொண்டிருந்தன. கண்ணிமைகளுக்குக் கீழே சோகம் அந்த மங்கலான வெளிச்சத்திலும் லேசாகப் புலப்பட்டது.

''எப்போ கிளம்பணும்?''

''பதினெட்டாம் தேதி மாலை பிளைட்டுக்கு.''

''பத்தொன்பதாம் தேதி என்று சொல்லியிருந்தீர்களே.''

''ஒருநாள் முன்னாடியே கிளம்பிவிடுவோம்.''

''பயமாக இருக்கிறதா டாடி?'' நிதானமான குரலில் கேட்டாள்.

சட்டென்று நிமிர்ந்து பார்த்தார் ராஜாராம். மகள் தன்னையே பார்ப்பதை உணர்ந்து பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

''பத்தொன்பதாம் தேதி மாலையிலேயே போக லாம். பிளைட் நேரத்தைக் கூட நமக்காகவே வைத்திருக் கிறார்கள் போலிருக்கு. சரியாக ஐந்து மணி ஐந்து நிமிடத்திற்கு'' ஹாரிகா சொன்னாள்.

''ஆனால்...

''ஒரு பயமும் இல்லை டாடீ. உங்களை இத்தனை மோசமாக தோற்கடித்தவன் எனக்கு மாப்பிள்ளையாக வரமாட்டான்.''

ராஜாராமின் முகம் வெளிறிப் போய்விட்டது. ''அப்படியென்றால்...'' அதற்கு மேல் என்ன பேசுவது என்று அவருக்குத் தெரியவில்லை.

''உங்க பந்தயத்தைப் பற்றி நான் பேசவில்லை டாடீ. காந்தி அதில் ஜெயிப்பானா மாட்டானா என்று கூட எனக்குத் தெரியாது. அதனால்தான் பயணத்தை பத்தொன்பதாம் தேதிக்கு ஒத்திப் போடச் சொல்கிறேன். இந்த நாடகத்தின் கடைசிக் கட்டத்தையும் பார்த்து விட்டே போவோம்.''

''உன் பேச்சு புரியவே இல்லை. எனக்குக் குழப்ப மாகவும் பயமாகவும் இருக்கிறது.''

ஹாரிகாவின் முகத்தில் திடீரென்று மாறுதல் தோன் றியது. ''உங்க மகளுக்கும் தனித் தன்மை இருக்கும் என்ற விஷயத்தை மறந்து போய் அவளை ஒரு ஜடப் பொருளாக பாவித்து பந்தயத்தில் பணயமாக வைத்த போது இந்தப் பயம் எங்கே போயிற்று டாடீ? எதிரி எப்படிப்பட்டவன் என்று தெரிந்து கொள்ளாமல்.

அவனுடன் சரிக்குச் சரி நின்று எல்லாவற்றையும் இழந்த போது இந்தப் பயம் எங்கே போயிற்று?''

ராஜாராம் தடுமாறினார். ''அப்படி என்றால் உண்மையிலேயே அவன் ஜெயித்து விடப் போகிறானா?''

''இல்லை டாடீ. நானும் இன்னொரு நபரும் சேர்ந்து இந்த ஆட்டத்தின் கடைசி கட்டமாக ஒரு திட்டம் தீட்டியிருக்கிறோம். அந்தத் திட்டத்தில் காந்தி முழுவதுமாக தோற்றுவிடப் போகிறான்.''

ராஜாராம் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்பட்டது. ''நீயும் இன்னொரு நபருமா? யார் அந்த இன்னொருத்தர்?'' அவசரமாகக் கேட்டார்.

''இந்தக் கேள்விக்கு பதில் நாம் இந்த நாட்டை விட்டுப் போகும் போது விமானத்தில் சொல்கிறேன்.''

அவள் குரலில் தென்பட்ட வேதனை அவர் மனதை உலுக்கிவிட்டது. மகளை நெருங்கினார். அவள் ஜன்னல் பக்கம் திரும்பியிருந்தாள். ராஜாராம் தடுமாறும் குரலில் ''நான் இந்த மாதிரி பந்தயம் கட்டி உன் மனதைப் புண் படுத்தி விட்டேனாம்மா?'' என்று கேட்டார்.

அவள் திரும்பவில்லை. ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டே, ''பணத்தை விட அன்பைப் பெறுவது ரொம்ப கஷ்டம் டாடீ. பந்தயம் அதுதான் என்றால் காந்தி ஒரு முறையில்லை இரண்டு முறை ஜெயித்து விட்டான்.''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லையே?''

''ஹிந்தியில் ஒரு பழமொழி இருக்கு. முடிவு வ்ரை யிலும் கொண்டு போக முடியாத கதையை ஏதாவது ஒரு திருப்பத்தில் முடித்து விடு என்று. அதுதான் இப் பொழுது நடக்கப் போகிறது. கவலைப்படாமல் நிம்மதி யாக இருங்கள். காந்தி பந்தயத்தில் ஜெயித்து உங்கள் மீது போர் முழக்கம் செய்யப் போவதில்லை.''

''இறுதிக் கட்டத்தில் காந்தியைத் தோற்கடித்து நமக்கு உதவப் போகிற அந்த நபர் யாரென்று இப் பொழுதே சொல்லிவிட்டால் ஓடிப்போய் நன்றி தெரிவித்து விட்டு வருகிறேன்.''

''நீங்க நினைப்பது போல் காந்தி படுதோல்வி அடையப் போவதில்லை. இதை விடப் பெரிய பந்த யத்தை எதிர்கொள்ளப் போகிறான். உங்களைத் தோற் கடித்து அதை ஜெயிப்பானா அல்லது நம்மை ஜெயித்து விட்டு அதை தோற்கப் போகிறானா என்று பார்ப்போம்.''

''அப்படி என்றால்?''

''ப்ளீஸ்! என்னைக் கொஞ்ச நேரம் தனியாக இருக்க விடுங்கள் டாடீ.''

ராஜாராம் ஏதோ சொல்ல நினைத்து நிறுத்திக் கொண்டு அங்கிருந்து போய் விட்டார். ஹாரிகா அதே இடத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் குரல் எப்பொழுதும் போல் இருந்ததால் அவருக்குச் சந்தேகம் வராமல் போய்விட்டது. இல்லாவிட்டால் அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீர்த் துளிகளைக் கண்டு விட்டிருப்பார்.

★ ★ ★

'வாயு வேக்'

இந்தியாவிலேயே சிறந்த கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை அது. ஷா அண்ட் ஷா லிமிடெட், டில்லியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 20,000 கார்களைத் தயாரிக்கும் நிறுவனம்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவரின் மாப்பிள்ளை அதன் மேனேஜிங் டைரக்டராக இருந்தார். அவர் மூலம் பிரஷர் கொண்டு வந்து காண்ட்ராக்டை முடித்தார்கள். இரண்டே நாட்களில் லைசன்ஸ் கிடைத்து விட்டது. அதற்கு முன்பே கம்பெனி பதிவு செய்யப்பட்டது. இருபது லட்சம் மூலதனத்துடன் ஷா அண்ட் ஷாவின் புதுக்கிளை தொடங்கப்பட்டது. அதே நாளில் நாளேடு களில் அழகான விளம்பரம் வெளி வந்தது.

''புதிய ஸ்கூட்டர் வாங்க வேண்டுமென்று விரும்பு கிறீர்களா?''

இந்தியாவிலேயே மிக நவீனமான கார்களைத் தயாரிக்கும் வாயுவேக் கம்பெனி ஸ்கூட்டர்களைத் தயார் செய்யப் போகிறது. நாட்டில் தயாரிக்கப்படும் மற்ற ஸ்கூட்டர் எல்லாவற்றையும் விட சிறப்பாக விளங்கப் போகும் இந்த ஸ்கூட்டரின் விலை 3,000 ரூபாய்தான். ஏமாற்றமடையாமல் இருக்க உங்கள் டீலரிடமோ அல்லது நிறுவனத்திற்கோ ஐநூறு ரூபாய்க்கு டிராப்ட் அனுப்பி உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.''

இந்த விளம்பரம் இந்தியாவின் எல்லாச் செய்தித் தாள்களிலும் ஒரே நாளில் வெளி வந்தது. இந்தச் செய்தி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மக்கள் வங்கிகளில் பணம் போட்டு நின்றார்கள். வாயுவேக் கம்பெனிக்கு இருந்த பெயர் அப்படி. கார் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் கம்பெனி ஸ்கூட்டர்களையும் தயாரிக்கப் போகிறதென்றால் மக்கள் கூட்டம் அலை மோதுவது சகஜம்தானே. அதோடு மற்ற ஸ்கூட்டர்களின் விலை பிளாக் மார்க்கெட்டில் நாலைந்தாயிரத்துக்கு மேல் இருந்தது.

''நாம் எந்த இயந்திரங்களும் இல்லாமல் எப்படி தொழிற்சாலையைத் தொடங்கப் போகிறோம்?'' ஹோம் மினிஸ்டர் (தற்போதைய முதலமைச்சர்) கேட்டார்.

''மக்கள் பணத்தில்.'' காந்தி முறுவலுடன் சொன்னான். போனில் உரையாடல் நடந்து கொண்டிருந்தது. காந்தி இன்னும் டில்லியில்தான் இருந்தான்.

''கோடி ரூபாய் வேண்டியிருக்கும்.''

''மக்களே தருவார்கள்.''

''எனக்கு நம்பிக்கை இல்லை'' என்றார் அவர். அவருக்கு அரசியலில் அனுபவம் இருந்ததே தவிர பிசினெஸ் விவகாரங்கள் தெரியாது.

''சரி போகட்டும். உங்களுடைய ஷேர்களை விற்கத் தயாரா?''

''எத்தனைக்கு?''

''இருபது லட்சத்திற்கு.''

அமைச்சர் மூச்சை அடக்கிக் கொண்டு, ''எத்தனைக்கு?'' என்று மறுபடியும் கேட்டார்.

''இருபது லட்சம். நீங்க ஒப்புக் கொண்டால் நான் கொண்டு வந்து தருகிறேன். நாளை காலையிலேயே பிளைட்டில் வருகிறேன்.''

''நாளை நான் எங்க சொந்த ஊர் வேலூருக்குப் போகிறேன்.''

''அங்கேயே கொண்டு வந்து தருகிறேன்.''

''சரி.''

காந்தி போனை வைத்து விட்டான். மக்கள் அந்த விளம்பரத்தைப் பார்த்து விட்டு அவ்வளவு மொத்தத் திற்கு டிபாசிட் செய்வார்களா?

அவன் எதிர்பார்ப்பு பொய்த்துப் போகவில்லை. மறுநாள் டீலர்களிடம் வசூலான தொகையும், நேரடி யாக டிராஃப்ட் மூலம் வந்த தொகையும் சேர்த்துப் பத்து லட்சங்கள் தேறின. மறுநாள் காந்தி டில்லியை விட்டுக் கிளம்பினான். விமான நிலையத்தில் வித்யார்த்தி காத் திருந்தான்.

''பாக்கி பணத்திற்கு வழி செய்து விட்டாயா?'' காந்தி கேட்டான்.

''விமானத்திலிருந்து இறங்கியதுமே வேறு ஒரு கேள்வியைத்தான் கேட்பீங்கன்னு எதிர்பார்த்தேன்.''

''என்னது?''

''லக்ஷ்மி எப்படி இருக்கிறாள் என்று?''

காந்தியின் முகத்தில் குற்ற உணர்வு தென்பட்டது. ''சாரி. லக்ஷ்மி எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான்.

''I.C.U.வில் இருக்கிறாள். ஆக்ஸிஜன் வைத்திருக்கிறார்கள்.''

''வா அங்கே போவோம். அவளைப் பார்த்து விட்டு அங்கிருந்து அப்படியே வேலூருக்குப் போகிறோம்.''

''எதுக்கு?''

காரில் போய்க் கொண்டே மற்ற விஷயங்களை பேசிக் கொண்டார்கள். கார் ஆஸ்பத்திரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

''முதலமைச்சரின் ஷேரை இருபது லட்சங்களுக்கு வாங்கிவிட்டேன். டிபாசிட் மூலம் அவ்வளவு பணம் சம்பாதிக்க முடியும் என்று அவருக்கு நம்பிக்கை இல்லை. இதுவும் நமக்கு நல்லதுதான். மொத்த ஷேர்களும் நம்மிடமே இருக்கும்.''

''இதில் முதலமைச்சர் போட்ட முதல் எவ்வளவு?''

''அவருடைய பங்கு ஐந்து பர்சென்ட்.''

''நான் கேட்டது எவ்வளவு முதலீடு செய்தார் என்று?''

''ஒன்றுமே இல்லை.''

வித்யார்த்தி புரியாதவன் போல் விழித்தான்.

''வாயுவேக் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டரை சம்மதிக்கச் செய்வதற்கும், தேவையான லைசன்ஸ்களை பெறுவதற்கும் முதலமைச்சருக்கு ஐந்து பர்சென்ட் ஷேர் தர வேண்டியிருந்தது.''

''அவருக்கு நம்மீது அத்தனை நம்பிக்கை எப்படி வந்தது?''

''ஸ்ட்ரைக்கை பின் வாங்கச் செய்து, முதலமைச்சர் பதவியில் அவர் அமருவதற்கு மறைமுகமாக உதவியது நாம்தானே. அவர் மறுபடியும் மனம் மாறுவதற்குள் இருபது லட்சத்தை அவரிடம் கொடுத்து விடணும்.''

''நாம் மக்களை ஏமாற்றுகிறோமா?''

''இல்லை இல்லை. எல்லாம் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செய்கிறேன். அடுத்த ஆண்டு இதே நேரத்தில் ஸ்கூட்டர் மார்க்கெட்டுக்கு வந்து விடும். நாம் செய்வதெல்லாம் டிபாசிட் வசூல் செய்வது மட்டும்தான். இது ஒன்றும் புதுசு இல்லை. நாட்டில் நடப்பது தான்.''

கார் ஆஸ்பத்திரிக்கு முன்னால் வந்து நின்றது. இருவரும் வேகமாக நுழைந்தார்கள். வித்யார்த்தி நர்ஸிடம் போய்ப் பேசினான். தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த காந்திக்கு அவன் முகத்தில் பதட்டமும், கவலையும் வெளிப்படையாகத் தென்பட்டன. காந்தியிடம் திரும்பி வந்த வித்யார்த்தி, ''ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போயிருக்காங்களாம்'' என்றான்.

காந்தி துக்கம் தோய்ந்த குரலில், ''ஆபரேஷன் தியேட்டருக்கா?'' என்றான். ஒரு நிமிடம் அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கடியாரத்தைப் பார்த்தான். மணி பன்னிரெண்டு. வெளியே வெயில் சுட்டெரித்தது.

''ஆபரேஷன் எவ்வளவு நேரமாகும்?''

''சுமார் ஒரு மணி நேரம்.''

''அவ்வளவு நேரம் தாமதித்தால் இருட்டிவிடும். இரவு நேரத்தில் பணத்தோடு பயணம் செய்வது நல்லது இல்லை.''

''என்ன சொல்றீங்க?''

''இவங்கதானா இந்த வார்டின் ஹெட்நர்ஸ்?'' கேட்டான் காந்தி.

வித்யார்த்தி தலையை அசைத்தான். காந்தி அவளிடம் ஐநூறு ரூபாயைக் கொடுத்து விட்டு, ''லக்ஷ்மி என்கிற பேஷண்ட் ஆபரேஷன் தியேட்டரில் இருக்கிறாள். அவளை வெளியே அழைத்து வந்ததும் நன்றாகப் பார்த்துக் கொள்ளணும்'' என்றான்.

நர்ஸ் சந்தோஷத்தில் திக்குமுக்காடிவிட்டாள். ''கண்டிப்பாக. இது வரைக்கும் யாருக்குமே நடந்திராத அளவில் என் சொந்த மனுஷி போல் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

காந்தி வித்யார்த்தியிடம் வந்து ''கிளம்பு'' என்றான்.

''எங்கே?''

''வேலூருக்கு.''

''இங்கே நிலைமை இப்படி இருக்கும்போதா?''

''அதற்குத்தான் எல்லா ஏற்பாடும் செய்து விட்டேனே?''

''இருந்தாலும்.''

''மாலைக்குள் திரும்பி வந்துவிடப் போகிறோம். லக்ஷ்மிக்கு ஒன்றும் ஆகாது என்று என் மனம் சொல்லுகிறது. நாம் இங்கே இருந்தாலும் செய்யப்போவது

ஒன்றுமில்லை. இன்னிக்கு தபால் மூலமாகவும், D.D. மூலமாகவும் மேலும் இருபத்தி ஐந்து லட்சம் வரலாமென்று எதிர்பார்க்கிறேன். இந்த விஷயம் முதலமைச்சருக்குத் தெரிந்து விட்டால், தான் அந்த ஐந்து பர்சென்ட் ஷேரையே வைத்துக் கொள்வதாகச் சொல்லுவார். நாம் எவ்வளவு சீக்கிரமாக பணத்தை அவரிடம் தந்துவிட்டு அவரிடமிருந்து விடுபகிறோமோ அவ்வளவு நல்லது. இவ்வளவு பணத்துடன் காரில் டிரைவருடன் கிளம்புவதில் எனக்கு விருப்பம் இல்லை. அதனால் தான் உன்னை வரச் சொல்கிறேன். தேவையில்லாத செண்டிமெண்டுகளை உதறித் தள்ளு. லக்ஷ்மி உன்னை விட எனக்கு ரொம்ப வேண்டியவள். அவளுக்கு ஒன்றும் ஆகாது- பெரிய பெரிய டாக்டர்கள் அவளை பார்த்துக் கொள்கிறார்கள். நாளைக்குத்தான் பத்தொன்பதாம் தேதி. நாளை மாலை ஐந்து மணிக்கெல்லாம் என் எதிர்காலம் என்னவென்று தெரிந்துவிடும். லக்ஷ்மியின் மீது எனக்கு அன்பு இல்லை என்று நினைக்காதே. பி பிராக்டிகல்.''

வித்யார்த்தி கண்ணிமைக்காமல் காந்தியை உற்றுப் பார்த்தான். பிறகு ''ஓ.கே. புறப்படுவோம்'' என்றான்.

★ ★ ★

நன்றாக களைத்து விட்டிருந்ததால் காந்திக்குத் தூக்கம் வந்தது. வித்யார்த்தி காரை ஓட்டிக் கொண்டிருந்தான். ஆறுமணிக்கே இருட்டிவிட்டது. கார் பெரிய பள்ளத்தில் இறங்கி குலுங்கியதில் காந்திக்கு விழிப்பு வந்தது. தாகத்தில் நாக்கு உலர்ந்து விட்டது. சுற்றிலும் பெரிய பெரிய கற்பாறைகள். நடுவில் மண்சாலை.

''நாம் வழி தவறி விட்டோம் என்று நினைக்கி றேன்'' என்றான் வித்யார்த்தி. ''மெயின் ரோடடில் டைவர்ஷன் எழுதியிருந்தது. அதனால் இப்படித் திருப்பி விட்டேன்.''

''எனக்குத் தாகமாக இருக்கு.''

''இந்த இருட்டில் என்ன செய்ய முடியும்?''

''காரைப் பின்னால் திருப்பு.''

''மாட்டுவண்டிச் சாலை இது. இங்கே ரிவர்ஸ் எடுக்க முடியாது.''

''தாகத்தில் தொண்டை வறண்டு போகிறது எனக்கு.''

வித்யார்த்தி காரை நிறுத்தினான். ''நான் உங்களை விட பலசாலியாயிற்றே. எப்படி என்னை நம்பி இருபது லட்சம் கொண்டு வந்தீங்க?'' என்று கேட்டான்.

திடீரென்று அவன் இப்படிக் கேட்டதும் காந்திக்கு ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை. புரிந்ததும் சிரித் தான். ''நீ ஒன்றும் என்னை பயமுறுத்தத் தேவை யில்லை. நீ எப்படிப்பட்டவன் என்றும், நியாயத்திற்கு எவ்வளவு மதிப்புக் கொடுப்பவன் என்றும் எனக்குத் தெரியும்.''

வித்யார்த்தியும் சிரித்து விட்டு, ''உண்மைதான். நான் நியாயத்தை மதிப்பவன். உங்களையும் மதிக்கிறேன். என்னிடம் திறமை இருக்கிறது. தரமான காகிதத்தை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பமும் தெரியும். நாமிரு வரும் வாழ்க்கையை ஒரே இடத்திலிருந்து தொடங்கி னோம். நான் உங்களைத் தொடக்கத்திலிருந்து கவனித்துக்

கொண்டு வருகிறேன். இப்பொழுது நீங்கள் கோடீஸ்வரனாகப் போறீங்க. நானோ பிளான்ட் இஞ்ஜினியராகவே இருக்கப் போகிறேன். என் புத்திசாலித்தனத்தை நீங்க பயன்படுத்தி கோடிக் கணக்கில் சம்பாதிக்கப் போறீங்க. அதே புத்திசாலித்தனத்தை எனக்காக நான் ஏன் பயன்படுத்தக்கூடாது?''

''அது எப்படி?'

''என் வாட்டர் பாட்டிலில் உள்ள தண்ணீரை இருபது லட்சம் ரூபாய்க்கு விற்பதன் மூலம்.''

காந்தி சிலையாகி விட்டான். சுற்றிலும் இருந்த இருட்டு அவனைப் பரிகாசம் செய்வது போல் இருந்தது. ''இது அநியாயம்!'' என்றான்.

''எது அநியாயம்? டிமாண்ட் சப்ளை பொறுத்து பொருளின் விலையைத் தீர்மானிப்பது அநியாயமா? அப்படிப் பார்த்தால் இத்தனை நாளாக நாம் செய்து வந்த வியாபாரம் கூட நியாயமில்லைதான்.''

''உன் மனதில் இத்தனை வஞ்சகம் இருக்கும் என்று நினைக்கவில்லை.''

''கையில் இருக்கும் பொருளை விற்க நினைப்பது வஞ்சகம் இல்லையே. நான் ஒன்றும் துப்பாக்கியைக் காட்டி உங்களை மிரட்டவில்லையே. உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் விட்டு விடுங்கள்.''

காந்தி சற்று யோசித்தான். ''காரை ஓட்டு. கொஞ்சம் தூரம் போனதும் எங்கே ரிவர்ஸ் எடுக்க முடியுமோ அங்கே காரைத் திருப்பு.''

வித்யார்த்தி மறுப்பேச்சு பேசாமல் காரை ஓட்டத் தொடங்கினான். பத்து நிமிட்டங்கள் ஆனதும் காந்தியால் தாகத்தை அடக்க முடியவில்லை. இருபது லட்சத்தை வித்யார்த்தியிடம் தந்து விட்டால் பிறகு பந்தயத்தில் தான் தோற்றுவிட்டாற் போல்தான். இந்த ஐந்து வருடங் களாக பாடுபட்டது வியர்த்தமாகிவிடும்.

ஆனால் தாகம்!

''நிறுத்து காரை'' என்றான்.

வித்யார்த்தி காரை நிறுத்தினான். காந்தி பிரீஃப் கேஸை அவனுக்கு முன்னால் தள்ளிவிட்டு ''வாட்டர் பாட்டிலை எடு'' என்றான்.

வித்யார்த்தி காந்தியின் முகத்தைக் கூர்ந்து பார்த்து விட்டு வாட்டர் பாட்டிலை நீட்டினான். காந்தி தண்ணீரைக் குடித்துவிட்டு பாட்டிலை பின் சீட்டில் வீசி எறிந்தான். சீட்டில் பின்னால் சாய்ந்து கொண்டு கண் களை மூடிக் கொண்டான்.

''இனி வேலூருக்குப் போக வேண்டியதில்லை. காரைத் திருப்பு. விடியற்காலைக்குள் நாம் ஊருக்குப் போய்ச் சேர்ந்து விடணும். இன்னொரு விஷயம். நாளையிலிருந்து உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஃபாக்டரியிலிருந்து உன்னை நீக்கி விட்டேன். உனக்குச் சேர வேண்டிய பணத்தை கணக்குப் பார்த்து வாங்கிக் கொண்டு ஓடி விடு. காலை பத்து மணிக்குப் பிறகு நீ என் கண்ணில் பட்டால் அங்கேயே உன்னை ஷூட் செய்து விடுவேன். நியாய அநியாயத் தைப் பற்றிய கவலை எனக்கு இல்லை.''

வித்யார்த்தி பதில் பேசாமல் காரை ரிவர்ஸ் செய் தான். அதற்குள் காந்தியை உறக்கம் ஆட்கொள்ளத் தொடங்கியது. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனோ தெரியவில்லை. தனக்கு டிப்ரெஷன் வரவில்லை. தோற்றுப் போய்விடுவோமோ என்ற உணர்ச்சி ஏற்படுத் தும் வருத்தம் தோல்வியைச் சந்திக்கும்போது ஏற்பட வில்லை. போர் புரியும்போது இருக்கும் பதட்டத்தை விட போர் முடிந்து விட்டது என்ற நினைப்பே அதிக மாக திருப்தியைத் தருகிறது. நாளை என்ன நடக்குமோ என்ற அச்சம் இல்லை. ஸ்டாக் மார்க்கெட் பற்றிய கவலை இல்லை. தொழிலாளர்களைப் பற்றி யோசிக்க வேண்டியதில்லை.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு பழையபடி அவன் நிம்மதியாக தூங்கினான். இரவு எவ்வளவு நேரம் கழிந் ததோ தெரியவில்லை. வித்யார்த்தி எழுப்பியபோது விழிப்பு ஏற்பட்டது. வெளியே இன்னும் இருள் படர்ந் திருப்பதைக் கண்டு ''அதற்குள் வந்து சேர்ந்து விட்டோமா?'' என்று கேட்டான்.

''ஆமாம்.''

உறக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட காந்தி சுற்றுமுற்றும் பார்த்தான். பட்டணத்து சந்தடி எதுவும் தென்படாமல் போகவே குழம்பியவனாக ''நாம் எங்கே வந்திருக்கிறோம்?'' என்று கேட்டான்.

''வேலூருக்கு''

காந்தி ஒன்றுமே புரியாமல் வித்யார்த்தியைப் பார்த் தான். வித்யார்த்தி பிரீஃப்கேஸை காந்தியின் முன்னால்

தள்ளிவிட்டு, ''இதுதான் அமைச்சரின் வீடு. வாங்க போகலாம்'' என்றான்.

''அப்படி என்றால்?''

வித்யார்த்தி சிரித்துவிட்டு, ''நேற்றிரவு விளையாட்டுக்கு அப்படிச் சொன்னேன் சார்'' என்றான்.

காந்திக்கு ரொம்ப கோபம் வந்து விட்டது. ''என்னை முட்டாளாக்கி வேடிக்கை பார்ப்பதில் உன்னுடைய உத்தேசம் என்ன?'' என்றான் கடுமையாக.

வித்யார்த்தியின் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்து விட்டது. ''சாரி சார். இத்தனை நாளாக உங்களைப் பார்த்து வந்ததில் என்னை ஒரு சந்தேகம் துளைத்துக் கொண்டே இருந்தது. பணம் சம்பாதிப்பது உண்மையிலேயே அத்தனை கஷ்டமான விஷயமா என்பதுதான் என் கேள்வி. அதற்கு பதில் தெரிந்து கொள்ளத்தான் கொஞ்சம் உரிமை எடுத்துக் கொண்டுவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் ப்ளீஸ்.''

அவன் குரலில் இருந்த நேர்மை காந்தியின் இதயத்தைத் தொட்டது. கொஞ்ச நேரம் மௌனமாக இருந்து விட்டு பிறகு தாழ்ந்த குரலில், ''பணம் சம்பாதிப்பது உண்மையிலேயே அவ்வளவு சுலபமான விஷயம் என்கிறாயா வித்யார்த்தீ?'' என்றான்.

''இல்லை சார் இல்லை.'' சட்டென்று சொன்னான் வித்யார்த்தி. ''இந்த ஒரே ஒரு சம்பவத்தின் மூலம் நான் ஹீரோவாகியிருக்கலாமோ என்னவோ. ஆனால் நான் எப்பொழுதுமே உங்களை, உங்கள் வாழ்க்கையின்

போக்கைப் பார்த்து ஆச்சரியப்படுவது உண்டு. பணம் சம்பாதிக்கத் தெரியாதவர்கள் எந்த வறட்டு வேதாந்தமோ, சாக்குப் போக்கோ சொல்லிவிட்டுப் போகட்டும். ஆனால் உண்மையில் பணம் சம்பாதிப்பது ஒரு கலை. சார்! மணி பன்னிரெண்டைத் தாண்டிவிட்டது. உங்க ஐந்து ஆண்டு கெடுவும் முடிவடையப் போகிறது. நீங்க ஜெயிக்கலாம் அல்லது தோற்கலாம். பிரச்னை அது இல்லை. உங்கள் வாழ்க்கை எங்களைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. எங்கேயோ தொடங்கி எங்கேயோ போய்ச் சேர்ந்துட்டீங்க. என்னால் என்றாவது இந்த நிலையை அடைய முடியுமா?''

காந்தி அவனையே கண்ணிமைக்காமல் பார்த்தான். பிரீஃப்கேஸை கையில் எடுத்துக் கொண்டு ''நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு வித்யார்த்தீ. நான் உனக்கு இருபது லட்சம் கடன்பட்டிருக்கிறேன்'' என்றான்.

வித்யார்த்தி சங்கடப்படுவது போல் சிரித்தான். ''நீங்க சம்மதித்தால் அதை வேறு வழியில் தீர்த்துக் கொள்ள முடியும்'' என்றான்.

''எப்படி?''

''அதை நாளை மாலை ஐந்து மணிக்குச் சொல்கிறேன்.''

''என் பந்தய கெடுவுக்கும் அதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதா?'' சந்தேகத்துடன் கேட்டான் காந்தி.

வித்யார்த்தி தடுமாற்றத்துடன் ஆமாம் இல்லை என்பதற்கு இடையில் தலையை அசைத்தான்.

18

அவர்கள் நினைத்தது போல் இரவோடு இரவாக திரும்பி வர முடியவில்லை. முதலமைச்சர் அவர்களை விடவில்லை. அந்த நள்ளிரவில் திரும்பிப் போகக் கூடாது என்று பிடிவாதம் பிடித்தார். என்னதான் அரசியலில் அனுபவம் பெற்றிருந்தாலும் இருபது லட்சங்கள் அடங்கிய நோட்டுக் கற்றைகளை அவர் ஒரே திரியாய் தன் வாழ்நாளில் சொந்தமாக்கிக் கொண்டதில்லை. காந்திக்குத் தான் செய்த உதவி ரொம்ப சின்னதென்று அவருக்குத் தெரியும். சொன்ன சொல் தவறாமல், இரவோடு இரவாக அவன் அவ்வளவு பணத்தைக் கொண்டு வந்து தந்ததில் அவருக்கு காந்தியின் மீது அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டது.

காலையில் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

''எப்பொழுது ஊருக்குப் போய்ச் சேருவோம்?'' காந்தி கேட்டான்.

''மதியம் ஒரு மணியாகலாம்.''

''அதற்குள் போஸ்ட் வந்துவிட்டிருக்கும்'' என்றான் காந்தி. என்றுமில்லாத உத்வேகம் அவன் குரலில் வெளிப்பட்டது. ''பந்தயத்தில் நான் ஜெயிப்பேனா இல்லையா என்பது அந்த நிமிடமே தெரிந்து போய் விடும்.''

''நாம் முதலமைச்சருக்கு இருபது லட்சம் தருவதை ஒரு நாள் தள்ளிப் போட்டிருக்கலாம்'' வித்யார்த்தி சொன்னான்.

''தேவையில்லை. மக்களின் முட்டாள்தனத்தைப் பயன்படுத்தி இத்தனை நாளும் திட்டம் தீட்டி வந்தேன். இந்தக் கடைசி திட்டமும் அது போலவே செய்து விடு கிறேன். இரவோடு இரவாக நல்ல ஸ்கூட்டரை குறைந்த விலையில் தட்டிக் கொண்டு போய்விடலாம் என்ற ஆசையில் ஐநூறு ரூபாய் டிபாசிட் கட்டுபவர்கள் லட்சக் கணக்கில் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதிலும் இன்றுதான் கடைசி நாள். ஏஜெண்டுகளிடமிருந்து கூட ஐம்பது லட்சம் வந்து சேரலாம். மக்களின் சுபாவத்தின் மீது நம்பிக்கை வைத்து நான் ஆடும் இந்தச் சூதாட்டத் தில் கண்டிப்பாக ஜெயிப்பேன் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. இரண்டு மணிக்குள் வங்கிகளை மூடிவிடுவார்கள். அதற்குள் நாம் ஊருக்குப் போய்ச் சேர்ந்து விடணும்'' என்று சொல்லிக் கொண்டே காரின் வேகத்தைக் கூட்டினான்.

ஊர் எல்லையைச் சேரும்போது பிற்பகல் மணி ஒன்றைத் தாண்டிவிட்டது. காந்தி கலவரமடைந்தான். செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. நிறைய இடங்களிலிருந்து டெலிகிராம்பிக் டிரான்ஸ்ம் பர்கள் வரவேண்டும். அதோடு ஒரே நாளில் ஒரே வங்கியிலிருந்து ஐம்பது லட்சம் எடுத்துவிட்டால் பல்வேறு கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டி யிருக்கும். அதான் முன் கூட்டியே இருபத்தி ஐந்து வங்கி

களில் கணக்கைத் தொடங்கியிருந்தான். எல்லா வங்கியிலிருந்தும் D.D. பெற்றுக் கொள்ள வேண்டும்.

காரை ஆபீசுக்கு முன்னால் நிறுத்தி விட்டு மணியைப் பார்த்தான்.

1.35 p.m.

பின்சீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வித்யார்த்தி கார் நின்று விட்டதை உணர்ந்து கண்களைத் திறந்து பார்த்தான். ஆபீஸ் கட்டடத்தைப் பார்த்துவிட்டு வியப்புடன், ''இதென்ன? இங்கே வந்திருக்கிறோம்?'' என்று கேட்டான்.

காந்தி காரிலிருந்து இறங்கிக் கொண்டான். ''வித்யார்த்தி! நீ ஆஸ்பத்திரிக்குப் போய் இரு. நான் அரை மணிக்கெல்லாம் அங்கே வந்து சேருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வேகமாக ஆபீசுக்குள் நுழைந்தான்.

போனை நெருங்கி வரிசையாக ஒவ்வொரு வங்கிக்கும் போன் செய்து ஏஜெண்டுகளிடமிருந்து எவ்வளவு பணம் வந்தது என்று கேட்டுத் தெரிந்து கொண்டு குறித்துக் கொண்டான். D.D. களைத் தயாரித்து வைத்திருந்தால் யாரையாவது அனுப்பி பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்தான். கடைசி பிராஞ்சுக்குப் போன் செய்து முடித்த போது மணி இரண்டு அடித்து ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டது. D.D. களை வாங்கி வருவதற்கு ப்யூனை அனுப்பி வைத்தான்.

மணி இரண்டே கால் ஆகும்போது தபால் வந்தது. நேரடியாக வந்த டிராஃப்டுகள் அவை. ஒவ்வொரு

கவரையும் பிரிக்கும்போது அவன் கைகள் நடுங்கின. அதற்குள் வங்கிகளுக்குச் சென்றிருந்த ப்யூன் D.D. களையும் பணத்தையும் கொண்டு வந்தான்.

அவனுக்கு முன்னால் நோட்டுக் கட்டுகளும், D.D. களும் இருந்தன. வெற்றியா தோல்வியா என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும் தருணம் நெருங்கி விட்டது. எண்ணிக்கையை பேப்பரில் குறித்து முடிக்க கால்மணி நேரம் பிடித்தது. இனி கூட்ட வேண்டியது தான் பாக்கி. ஒருமுறை காகிதத்தின் மேல் பார்வையைச் செலுத்தி விட்டு மூச்சை இழுத்துப் பிடித்தபடி கூட்டத் தொடங்கினான். பாதி கூட்டும்போதே தன்னால் முடியாத காரியம் அது என்று தெரிந்து விட்டது. இண்டர்காமில் செகரெட்ரியை அழைத்துக் கூட்டச் சொன்னான். செகரெட்ரி எதிர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு கூட்டலைச் சரிபார்த்துக் கொண்டிருந்தாள். காந்தி நாற்காலியில் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

சுமார் பத்து நிமிடங்கள் கழிந்தன.

''சார்!''

காந்தி கண்களைத் திறந்தான்.

''டோட்டல் செய்து விட்டேன் சார்.'' மெதுவாக பயந்து கொண்டே சொன்னாள்.

''எவ்வளவு வந்தது?'' மூச்சை அடக்கிக் கொண்டு கேட்டான்.

அவள் கையிலிருந்த பேப்பரைப் பார்த்து விட்டுச் சொன்னாள். ''நாற்பத்தி எட்டு லட்சத்து ஐம்பதாயிரத்து ஐநூறு.''

கீழே சாய்ந்து விடாமல் நாற்காலியின் விளிம்பை அழுத்தமாகப் பற்றிக் கொண்டான். அவள் காந்தியைப் பார்த்தாள். பந்தயம் விஷயம் எல்லோருக்குமே தெரிந்ததுதான். தன் கணக்குத் தவறாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்து மறுபடியும் கூட்டினாள். அது சரியாகத்தான் இருந்தது. மெதுவாக எழுந்து முன்னறைக்கு வந்து விட்டாள்.

மேஜையின் மீது கைகளை ஊன்றி கண்களை மூடியபடி எத்தனை நேரம்தான் இருந்தானோ தெரியாது. கடிகாரத்தில் மூன்றரை மணி அடித்தது. இன்றும் ஒன்றரை மணி நேரத்தில் ஒன்றரை லட்சம் எங்கேயிருந்து சம்பாதிப்பான்? அந்தச் சம்பாத்தியமும் கடனாக இருக்கக் கூடாது.

ஜெயித்தாலாவது பரவாயில்லை. முற்றிலும் தோற்று விட்டாலும் பரவாயில்லை. ஆனால் இவ்வளவு தூரம் வந்து வெற்றி கைக்கு எட்டாமல் போவது எத்தனை வேதனைக்குரிய விஷயம்?

அறையின் நிசப்தத்தைத் தாங்க முடியாமல் காந்தி வெளியில் வந்தான். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவன் முன் அறையில் தென்பட்ட காட்சியைக் கண்டு திகைத்து விட்டான்.

அவனுடைய செகரெட்ரி டைப்மிஷின் முன்னால் உட்கார்ந்தபடி விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தாள்.

அவன் அவளை நெருங்கி ''என்ன நடந்தது?'' என்று கேட்டான். அவள் உடனே பதில் சொல்லவில்லை. பிறகு மெதுவாக, ''நாம் தோற்றுப் போய் விட்டோம் சார்'' என்றாள்.

திடீரென்று குளிர்ந்த நீர் முகத்தில் பட்டாற்போல் முதுகுத்தண்டு சிலிர்த்தது அவனுக்கு. அது சந்தோஷமோ வேதனையோ தெரியவில்லை. தனக்குப் பக்கபலமாக இத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற உணர்வு அவன் மனதை நெகிழ்த்தி விட்டது. கண்களில் நீர் தளும்பியது. உடனே தேறிக் கொண்டு உயிரற்ற சிரிப்புடன், ''இட்ஸ் ஓ.கே. தைரியமா இரு'' என்று அவளுடைய தோளில் தட்டிக் கொடுத்தான்.

அப்பொழுது வெளிக் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. ஒரு வினாடி கழித்து கதவைத் திறந்து கொண்டு இரண்டு பேர் உள்ளே வந்தார்கள். ரொம்ப நாட்களுக்குப் பிறகு அவர்களைப் பார்க்க நேர்ந்தாலும் காந்தி உடனே அடையாளம் கண்டு கொண்டு விட்டான். ஒரு காலத்தில் T.F.T. கம்பெனியைத் தொடங்கியவர்களுக்குள் டாடாவாலாவைத் தவிர இன்னும் இரண்டு பேர் இருந்தார்களே, அவர்களே தான் – ஃபெர்னான்டஸ் மற்றும் திரிவேதி.

★ ★ ★

மேதாவிகள் ஆடிக் கொண்டிருந்த அந்த ஆட்டத்தில் வழி தெரியாமல் நின்று விட்டது பிரியம்வதா ஒருத்திதான். காந்தியின் வாழ்க்கையைப் போலவே அவளுடைய வாழ்க்கையும் எங்கேயோ தொடங்கி எப்படியோ ஓடிக் கொண்டிருந்தது.

திருமணமான பிறகு கீழ்த்தர குணம் கொண்ட அவள் கணவன் அவள் வாழ்க்கையின் நிலையையும் கீழ்த்தரமாக்கினான். அவளும் அந்த இருட்டு வாழ்க்கைக்குப் பழகி விட்டாள். லக்ஷ்மிக்கும் அவளுக்கும் தொடக்கத்திலிருந்தே ஒத்துப் போகவில்லை. லக்ஷ்மியின் புனிதம் அவளை பயமுறுத்தியது. ராஜாராம் அனுமந்துவை காந்தியின் வீட்டுக்கு வேவு பார்க்க அனுப்பி வைத்த போது முதல்முறையாக காந்தியைச் சந்தித்தாள்.

அதுவரையில் அவள் பார்த்திருந்த உலகமே வேறு. அந்த உலகத்தில் ஆண்கள் பெண்களை வெறும் போகப் பொருளாகத்தான் கருதி வந்தார்கள். ஒரு லட்சியத்தை ஏற்படுத்திக் கொண்டு அதை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் காந்தி போன்ற நபரை அவள் அது வரையிலும் சந்தித்தது இல்லை. அவனால் கவரப்பட்ட வளாக, அந்த மயக்கத்தில் கணவனின் உளவுத் தனத்தைப் பற்றிச் சொல்லிவிட்டாள். காந்தி ராஜாராமின் திட்டத்தை முறியடித்தான். அதன் விளைவாக கணவன் என்ன ஆனான் என்று தெரியாத நிலைமை ஏற்பட்டது.

ஆதரவு இன்றி தனியாக இருந்த பிரியம்வதாவை ராஜாராமின் வீட்டுக்குப் போய் அவரைப் பற்றிய

ரகசியங்களைத் தெரிந்து கொண்டு வரச் சொல்லி காந்தி அவளை அனுப்பி வைத்தான்.

அவள் மௌனமாக இதற்கு ஒப்புக் கொண்டாள். இந்தக் காரியத்தில் மறைந்திருக்கும் கஷ்டங்களை அவள் அறிவாள். ஆனால் துரும்பு போன்ற தனக்கும் ஒரு மதிப்பு தரப்படுவதை நினைத்து சந்தோஷப்பட்டாள். இதில் அவள் புதிதாக இழக்கப் போவது எதுவும் இல்லை.

அனுமந்து என்ன ஆனான் என்று தெரியும் வரை யிலும் பிரியம்வதா தன் வீட்டிலேயே இருக்கட்டும் என்று நினைத்த ராஜாராம் அவளை தன் அவுட் ஹௌஸில் குடியிருக்கச் செய்தார். அப்பொழுது அவர் மனைவி இறந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டிருந்தன. புத்திசாலியான ஹாரிகா எளிதில் இந்த விவகாரத்தைப் புரிந்து கொண்டு விட்டாள்.

கணவனுடன் இருந்து வந்த காலத்தில் லக்ஷ்மியின் மூலம் எந்த விதமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி யிருந்ததோ, அதே எதிர்ப்பை ராஜாராம் வீட்டில் ஹாரிகா மூலம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பற்களைக் கடித்துக் கொண்டு மனதில் இருந்த எண்ணங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டவளாக காந்தி தனக்குக் கொடுத்த வேலையைச் செய்து முடித்தாள். அதன் பலனாக ராஜாராம் வீட்டின் மீது சி.பி.ஐ.யின் படையெடுப்பு நிகழ்ந்தது.

அதற்குப் பிறகு அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. காந்தி நன்றியற்றவன் இல்லை. தனக்குத்

தெரிந்த இடத்தில் வேலை வாங்கிக் கொடுத்தான். காந்தி தனியாக இருந்ததால் அவள் அங்கே தங்காமல் சின்னதாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டாள். திடீரென்று வாழ்க்கையே சூனியமாகி விட்டாற்போல் இருந்தது அவளுக்கு.

★ ★ ★

ரொம்ப சாதாரணமாக ஏதோ நாடகம் நடப்பது போல் அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது. அவளுடன் வேலை பார்க்கும் சிநேகிதி ஒருத்தி ஒருநாள் சாப்பிட அழைத்திருந்தாள்.

சிநேகிதி வீட்டில் டேப்ரிகார்டர் இருப்பதை பிரியம்வதா அறிவாள். முன்பு எப்பவோ கணவன் வாங்கிப் போட்டிருந்த காசெட்டுகள் வீட்டில் இருப்பது நினைவுக்கு வந்தது. அவை எப்படியும் தனக்குப் பயன் படப் போவதில்லை என்பதால் எடுத்துக் கொண்டு போய் சிநேகிதியிடம் தந்தாள்.

சாப்பிட்டு முடித்த பிறகு டேப்ரிகார்டரில் காசெட்டை போட்ட சிநேகிதி, ''நீ கொண்டு வந்த காசட்டுகளில் நல்ல பாட்டுகள் ஏதாவது இருக்கா?'' என்று கேட்டாள்.

''நான் போட்டுக் கேட்டதே இல்லை'' என்றாள் பிரியம்வதா. அதற்குள் டேப்பிலிருந்து தன் கணவனின் குரலுடன், லக்ஷ்மியின் குரலும் ஒலித்ததும் திடுக்கிட் டாள்.

''ஆறேழு மாதங்கள் இருக்கும்.''

''அப்படிக் கணக்காக எதுவும் இல்லை. இரண்டு மாதங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன்.''

அந்த உரையாடல் புரியாமல் அவள் யோசனையில் ஆழ்ந்திருந்தபோது சிநேகிதி அந்தக் காசெட்டை எடுத்து விட்டு வேறொன்றைப் போட்டாள். நடுவில் நின்று போன உரையாடல் தொடருவது போல் மீண்டும் குரல் கேட்டது. ஆனால் இந்த முறை கணவனின் குரல் மட்டுமே கேட்டது.

''எவ்வளவு நாளாகிறது உங்களுக்குக் கல்யாணம் ஆகி?''

அவ்வளவுதான். யாருடன் பேசிக் கொண்டிருந் தானோ அந்த நபரிடமிருந்து பதில் இல்லை. மறு படியும் அனுமந்துவின் குரல்.

''எத்தனாம் மாதம்?''

பிரியம்வதாவுக்கு சட்டென்று ஏதோ புரிவதுபோல் இருந்தது. அத்துடன் எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. தன் கணவன் காணாமல் போவதற்குக் கொஞ்ச நேரம் முன்பு வரையிலும் டேப்ரிகார்டரை வைத்துக் கொண்டு வேலை செய்தது, யாரோ இருவர் வந்தது, அவர்களுடன் அவன் கிளம்பிப் போனது, பிறகு ராஜா ராம் வந்து காசெட்டை எடுத்துக் கொண்டு போனது, ஹாரிகா அப்பொழுதிலிருந்தே உதாசீனமாக இருந்து வந்தது, காந்தி பற்றிய பேச்சு வந்தபொழுதெல்லாம் பட்டுக் கொள்ளாமல் இருந்தது... இவற்றுக்குப் பின்னால் இருந்த காரணம் புரிந்தபோது சட்டென்று எழுந்து நின்றாள்.

இரண்டு காசெட்டுகளையும் எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறிய பிரியம்வதாவை ஆச்சரியத்துடன் பார்த்தபடி நின்று விட்டாள் அந்த சிநேகிதி.

தெருவில் இறங்கிய பிரியம்வதா ஆட்டோ ஸ்டாண்ட் வரையிலும் வேகமாக ஓடினாள். இந்தத் தவறான கருத்தை எப்படியாவது போக்கி விட வேண்டும். பந்தயக் கெடு முடிவடைவதற்குள் இதைச் செய்தாக வேண்டும். ஹாரிகாவின் முகத்தில் மறுபடியும் சிரிப்பைக் காண வேண்டும். தன்மீது, அவர்களுக்கு எப்படிப்பட்ட தாழ்வான அபிப்பிராயம் இருந்தாலும் பரவாயில்லை. அந்த ஜோடிக்கு இந்த உதவியாவது செய்ய வேண்டும். தன் கணவன் அவர்களுக்குச் செய்த துரோகத்திற்குத் தான் பரிகாரம் செய்தது போலிருக்கும்.

அவள் ராஜாராமின் வீட்டை அடைந்த பொழுது மாலை நாலுமணி. அந்த வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்ததால் அங்கிருந்த வேலைக்காரர்களை அவளுக்கு நன்றாகத் தெரியும்.

''ஐயாவும், சின்னம்மாவும் சேர்ந்து வெளிநாட்டுக்கு கிளம்பிட்டாங்களே. அதான் இந்த வீட்டை விற்று விட்டார்கள்.'' வேலைக்காரர்கள் தெரிவித்தார்கள்.

அவள் கல்லாகச் சமைந்து விட்டாள். தன் பொறுப்பு இன்னும் அதிகமாகி விட்டதை உணர்ந்தாள். விவரங்களைத் தெரிந்து கொண்டு அதே ஆட்டோவில் விமான நிலையத்திற்குப் புறப்பட்டாள்.

★ ★ ★

''எங்களுக்கு இந்த உதவியைச் செய்து தரணும். எப்படியாவது உங்களுடைய நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்கிறோம்'' என்றார் திரிவேதி.

காந்திக்கு வியப்பாக இருந்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''என்னால் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான்.

''அப்படிச் சொல்லாதீங்க. உங்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதோ, பிரதமருடன் எவ்வளவு நெருக்கமாக பழகுவீர்களோ எங்களுக்கு எல்லாமே தெரியும்.'' ஃபெர்ணான்டஸ் சொன்னார்.

செய்திகள் எவ்வளவு வேகமாக போய்ச் சேருகின்றனவோ காந்திக்குப் புரிந்தது. இந்த இரண்டு பேரும் சேர்ந்துதானே ஒரு காலத்தில் தன்னை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் T.F.T. என்ற கம்பெனியைத் தொடங்கியது? தன்னுடைய அப்பாவித்தனத்தையும், அறியாமையையும் பயன்படுத்திக் கொண்டு எப்படியெல்லாம் தன்னை ஆட்டுவித்தார்கள்?

உணர்ச்சிகளை உள்ளேயே அடக்கியபடி ''என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று கேட்டான்.

ஃபெர்னாண்டஸ் முகத்தில் ஆர்வம் வெளிப்படையாகத் தென்பட்டது. ''சிவ கைலாஸ் வங்கியில் டைரக்டர் பதவியை காலியாகி விட்டது. ராஜாராமை நீக்கி விட்டார்கள். அந்த பதவி திரிவேதிக்கு வருகிற மாதிரி செய்யணும்.''

''சரி. உங்களுக்கு என்ன வேண்டும்?'' காந்தி கேட்டான்.

திரிவேதி இடைமறித்து விட்டு, ''ராஜாராமின் மில்லை இப்போ அரசாங்கம் எடுத்துக் கொண்டு விட்டது. அதன் ஏலம் எப்படியாவது ஃபெர்னாண்டஸுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்'' என்றார்.

நல்லதோ கெட்டதோ இத்தனை நாளும் மூவரும் சேர்ந்து சில காரியங்களைச் செய்தார்கள். இப்பொழுது ராஜாராம் வீழ்ச்சியுற்றதும் அவரை விட்டுவிட்டு தன்னைச் சுற்றுகிறார்கள். உண்மையில் பிசிநெஸ்மென் என்றால் இவர்கள்தான்.

காந்தியின் மௌனத்தை வேறுவிதமாக புரிந்து கொண்ட திரிவேதி, ''நீங்க என்னை மன்னிக்கணும். அப்பொழுதே ராஜாராமிடம் சொன்னேன். 'இந்தப் பையன் ரொம்ப அப்பாவி. உங்க பிசிநெஸ் டிரிக்குகளை அவன்மீது பயன்படுத்தி அவன் வாழ்க்கையை நாசமாக்காதீங்க!' என்று. அவன் கேட்கவில்லை. எங்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா. நல்லவர்களை கடவுள் எப்போதும் காப்பாற்றுவார். இன்றைக்கு நீங்க இந்த நிலைக்கு வந்ததைக் கண்டு எங்களுக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு. பழைய விரோதத்தை மறந்து விடுங்கள். அதுதான் நாங்கள் வேண்டுவது'' என்று சொன்னார்.

காந்தி ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு, ''நீங்க சொன்னது நன்றாகத்தான் இருக்கு. ஆனால் நானும் ஒரு வியாபாரிதான். இந்த இரண்டு உதவிகளையும் என்னால் செய்ய முடியும். அதற்காக எனக்குக் கிடைக்கப் போகும் பிரதிபலன் என்ன?'' என்றான்.

அவன் இப்படி நேரிடையாகக் கேட்டு விடுவான் என்று ஊகித்திராத அந்த இருவரும் மிரண்டு விட்டார்கள். ஃபெர்னாண்டஸ் சட்டென்று சுதாரித்துக் கொண்டு முறுவலுடன், ''உங்க உதவியை என்னிக்குமே மறக்க மாட்டோம். நீங்கள் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத சில விஷயங்களை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி உங்களை மகிழ்ச்சிக் கடலில் திக்குமுக்காடச் செய்வோம்'' என்றார்.

''நான் எதிர்பார்க்காத விஷயமா? அது என்ன?''

''எங்களுடைய வேலை?'' மென்று விழுங்குவது போல் சொன்னார் திரிவேதி.

இத்தனை அவசர நிலையிலும் பிடி கிடைத்தால் தவிர விஷயத்தை வெளிப்படுத்தாத அவருடைய வியாபார திறமைக்கு வியப்படைந்தவனாக ''செய்கிறேன்'' என்றான் காந்தி.

ஃபெர்னாண்டஸ் ப்ரீஃப்கேஸிலிருந்து பேப்பர்களை எடுத்து காந்தியின் முன்னால் வைத்துக் கொண்டே ''நாட்டை ஏமாற்றி, ஸ்விட்ஜர்லாண்ட் வங்கியில் ராஜாராம் பணம் சேமித்து வைத்திருக்கும் விஷயத்தை வெளிப்படுத்தும் பத்திரங்கள் இவை. ரொம்ப சிரமப்பட்டு இவற்றைச் சம்பாதித்தோம். இவற்றை நீங்க அரசாங்கத்திடம் ஒப்படைத்தால் அவருடைய விசா கான்சல் ஆகிவிடும்'' என்றார்.

காந்தி ஆர்வமின்றி அவற்றைப் பார்த்துவிட்டு, ''அவருடைய விசாவை நான் எதற்காக கான்சல்

செய்யணும்? அதனால் எனக்குக் கிடைக்கும் லாபம் என்ன?'' என்று கேட்டான்.

''அதென்ன அப்படிச் சொல்லிவிட்டீங்க? உங்களுடன் பந்தயம் கட்டிவிட்டு அந்தக் கெடு முடிவதற்குள் வெளிநாட்டுக்குக் கம்பி நீட்டினால் அதைத் தடுக்க வேண்டாமா?'' என்றார் திரிவேதி.

காந்திக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. ராஜாராம் வெளி நாட்டுக்குப் போய் விடப் போகிறாரா? அதுவும் கெடு முடிவடைவதற்குள்? அதாவது இன்று மாலைக்குள்! அப்படி என்றால் ஹாரிகா என்னவானாள்? அவன் மூளையில் கடல் அலைகளின் பேரிரைச்சல்! தனக்குத் தெரியாமல் இத்தனை பெரிய திட்டம் தீட்டியிருக்கிறார் ராஜாராம். இதை எப்படியாவது தடுத்து விட வேண்டும்.

காந்தியின் முகத்தில் தோன்றிய மாறுபாட்டை கவனித்த திரிவேதியும், ஃபெர்னாண்டஸும் நிம்மதி யாக மூச்சு விட்டுக் கொண்டார்கள். ராஜாராம் நாட்டை விட்டுப் போகும் விஷயம் காந்திக்கு இதுவரை தெரி யாது என்ற உண்மை அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இனி வேலை முடிந்து விட்டாற்போல்தான்.

''ரொம்ப சந்தோஷம் திரிவேதி சார். இந்த விஷயத்தை இத்தனை சிரமப்பட்டு ஆதாரப்பூர்வமாக சேகரித்து வந்து எனக்குத் தெரிவித்ததற்கு ரொம்ப தாங்க்ஸ். ஆனால் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்ன வென்றால் இன்று மாலை ராஜாராம் வெளிநாட்டுக்குப்

போகாமல் தடுத்து நிறுத்துவதால் நான் சாதிக்கப் போவது எதுவும் இல்லை.''

''அதென்ன சார்? ஏன்?''

''ஏன் என்றால் பந்தய நிபந்தனையின்படி என்னால் ஐம்பது லட்சம் சம்பாதிக்க முடியவில்லை. அதனால் தான்.''

திடீரென்று அந்த அறையில் நிசப்தம் நிலவியது. மறுபடியும் காந்தியே பேசினான். ''மொத்தம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் குறைவாக இருக்கிறது. அதுவும் கிடைத்திருந்தால் விமானத்தில் இருந்தாலும் சரி ராஜா ராமை வெளியே இழுத்து வந்திருப்பேன். ஆனால் இப்போ எதுவும் செய்ய முடியாது. நேரமோ இன்னும் சரியாக ஒரு மணி நேரம் கூட இல்லையே. உங்களுக்கு நான் செய்து தரப் போகும் இரண்டு காரியங்களுக்காக உங்களிடமிருந்து ஒன்றரை லட்சம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். ஆனால் அது சரியில்லை. எங்கள் பந்தயத் தின்படி சட்டத்திற்கு உட்பட்டு சம்பாதிக்க வேண்டுமே தவிர லஞ்சம் வாங்கக் கூடாது.''

எதிரே இருந்த இருவரும் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள். காந்தி மட்டும் அந்தப் பணத்தைக் கேட் டிருந்தால் சங்கடத்தில் ஆழ்ந்திருப்பார்கள். ஏன் என்றால் அந்த இரண்டு வேலைகளின் மதிப்பும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பெறாது. தங்களை காந்தி சங்கடத்தில் ஆழ்த்தவில்லை என்ற மகிழ்ச்சியில் திரி வேதி, ''வேண்டுமானால் அந்தப் பணத்தைக் கடனாகத் தருகிறோம் சார்'' என்றார்.

''எப்படி முடியும்? மாலைக்குள் அவ்வளவு பணம் எங்கேயிருந்து கிடைக்கும்? வங்கிகள் கூட மூடி விட்டிருப்பார்களே?''

திரிவேதி நாற்காலியை விட்டு எழுந்து கொண்டே, ''இனி நீங்க இந்த விஷயத்தைப் பற்றி யோசிக்காதீங்க. எங்கள் செல்வாக்கைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. நான் இப்பொழுதே போய் தேவையான பணத்தையும், பிராமிசரி நோட்டையும் கொண்டு வருகிறேன்'' என்றார். அத்தனை அவசரத்திலும் அவர் பிராமிசரி நோட்டை மறக்கவில்லை.

''பிராமிசரி நோட்டு என்றதும் நினைவுக்கு வருகிறது. பந்தயத்தின் நிபந்தனைபடி நான் ஐம்பது லட்சம் சம்பாதிக்கணுமே தவிர கடன் வாங்கக் கூடாது.'' காந்தி சொன்னான்.

''இந்த விஷயம் ராஜாராமுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லையே?''

''மன்னித்து விடுங்கள். அந்த மாதிரி மோசடி நான் செய்ய மாட்டேன்.''

அறையில் மறுபடியும் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. பந்தயத்தில் தோற்கப் போகும் நிலையில் இருக்கும் காந்தியிடம் தங்களுடைய வேலைகளை செய்து தரச் சொல்லி எப்படி நினைவுபடுத்துவது என்று இருவரும் தயங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் ஏதோ யோசனை வந்தவனாய், ''ஒன்று வேண்டுமானால் செய்யலாம்'' என்றான் காந்தி.

இருவரும் ஆர்வத்துடன் அவன் பக்கம் பார்த்தார்கள்.

''என் பேப்பர் மில் சம்பந்தப்பட்ட ஷேர்களை விற்று விட்டால்...'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன் ''உங்களுக்குத் தெரியும் இல்லையா ஊட்டி எல்லையில் எனக்கு ஒரு பேப்பர் மில் இருப்பது? அதனால்தான் நான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்தேன். அந்த மில் என்றால் எனக்கு ரொம்ப பிரியம். ஆனால் வேறு வழியில்லை. என் வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது இந்தப் பந்தயத்தில் வெற்றி பெறுவது. அதற்காக எதை இழக்க நேர்ந்தாலும் பரவாயில்லை'' என்றான் ஆவேசமாக. அந்த ஆவேசத்தில் வேதனையும் இழையோடியது.

காந்தி பேசியதைக் கேட்ட பிறகு ஃபெர்னாண்டஸ் யோசித்தார். இந்த மில்லை தான் வாங்கிவிட்டால், ராஜாராமின் மில்லும் தனக்குச் சொந்தமாகப் போவதால் காகிதத் தொழிலில் மகுடம் சூட்டாத மன்னனாக வளையம் வரலாம். ஆனால் தன்னுடைய பரபரப்பை வெளியில் காட்டிக் கொள்ளக்கூடாது. காந்தி எப்படியும் அவசரத்தில் இருக்கிறான். அதுவும் மாலை ஐந்து மணிக்குள் பணம் வேண்டும். தான் சற்று பிடி கொடுக்காமல் பேசினால் அவனே இறங்கிவருவான். குறைந்த விலையில் ஷேர்களை தட்டிக் கொள்ளலாம்.

ஃபெர்னாண்டஸ் எதிர்பார்த்தது போலவே காந்தி அவசரமாக, ''அந்த ஷேர்களை நீங்க வாங்கிக் கொள்வீர்களா? ஒன்றரை லட்சத்திற்கு ஷேர்களை கொடுத்து விடு

கிறேன்'' என்றான். காந்தி எதையும் யோசிக்கும் நிலையில் இல்லை. ரொம்ப பாடுபட்டு உருவாக்கிய மில் அது. ஆனால் இப்பொழுது அவசரத் தேவை அதனை வென்று விட்டது. வேறு சமயமாக இருந்தால் உயிர் போனாலும் அதை விற்றிருக்க மாட்டான்.

எதிரே இருந்த இருவரும் மூச்சை அடக்கியபடி உட்கார்ந்திருந்தார்கள். மார்க்கெட்டில் அதன் மதிப்பு மூன்று லட்சத்திற்குக் குறையாது. பந்தயத்தில் ஜெயிக்க வேண்டும் என்ற அவசரத்தில் இருக்கிறான். இந்த இளைஞனுக்கு இன்னும் வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை தெரியவில்லை.

திரிவேதி பண்பு கலந்த குரலில் ''நீங்க இவ்வளவு தூரம் சொல்லணுமா. கண்டிப்பாக வாங்கிக் கொள்கிறோம்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் காந்தி மனம் மாறுவதற்குள்ளே போனை அருகில் இழுத்துக் கொண்டு வங்கிக்குப் போன் செய்தார். ஒரு ஆள் பணத்துடன் வந்து சேர்ந்தான்.

சரியாக ஐந்து நிமிடங்களில் தஸ்தாவேஜுகள் எழுதி முடிக்கப்பட்டன். வித்யார்த்தி கையெழுத்துப் போட்டுத் தந்த பவர் ஆஃப் அடார்னியை காந்தி அவர்களிடம் கொடுத்து ஷேர்களை விற்று விட்டான். ஃபெர்னாண்டஸ் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்களை காந்தியிடம் கொடுத்தார்.

மூவரும் பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டார்கள்.

''கங்கிராட்சுலேஷன்ஸ். பந்தயத்தில் ஜெயிச்சுட்டீங்க!''

''தாங்க்யூ'' என்றான் காந்தி. அவன் முகம் சந்தோ ஷத்தினால் மலர்ந்திருந்தது. அதுதான் சமயம் என்று திரி வேதி ''எங்களுடைய வேலைகள்'' என்று நினைவு படுத்தினார்.

''கண்டிப்பாக செய்து தருகிறேன்.''

இருவரும் ப்ரீஃப்கேஸுகள் ஏடுத்துக் கொண்டு வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டார்கள்.

அவர்கள் போனதும் காந்தி கவர்களை எடுத்து ஏதோ எழுதிவிட்டு போஸ்ட் செய்யச் சொல்லி தெத ரெட்ரியிடம் கொடுத்தான்.

காரில் போகும்போது திரிவேதியும் ஃபெர்னாண்ட ஸும் ஒருவரை ஒருவர் பார்த்து சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டார்கள்.

''இன்று அதிர்ஷ்டக் காற்று நம் பக்கம் வீசுகிறது'' என்றார் திரிவேதி.

''இந்த விஷயத்தை வெளியில் எங்கேயும் மூச்சு விடாதே. அவனுடைய அவசரத்தை நாம் இப்படி உப யோகப்படுத்திக் கொண்டோம் என்று யாராவது அவனுக்குச் சொல்லித் தந்தால் பிறகு நம் வேலை களைச் செய்து தரமாட்டான்.'' ஃபெர்னாண்டஸ் சொன்னார்.

அவர்கள் வீட்டுக்கு போய்ச் சேர்ந்தபோது மாலை செய்தித்தாள் வந்திருந்தது. பேப்பருக்கு லெவி விதிப்ப தாக ஜனாதிபதி சட்டத்தை அமலக்குக் கொண்டு வந்த செய்தி பத்திரிகையில் வெளியாகி யிருந்தது. கண்ட்

ரோல் விலைக்கு பேப்பரை விற்க முடியாத மில்லு களின் ஷேர்கள் இரவோடு இரவாக பாதி விலைக்கு இறங்கி விட்டன. அதற்கு அடுத்த நாள் சோல்செல்லிங் ஏஜென்ஸியை ரத்து செய்வதாக அரசாங்கம் உத்தரவு போட்டது. அந்தச் செய்தி வெளியில் வந்ததுமே பத்து ரூபாய் இருந்த ஷேரின் விலை இரண்டரை ரூபாய்க்கு படுத்து விட்டது. ஒன்றரை லட்சம் கொடுத்து வாங்கிய ஷேர்களின் விலை நாற்பதாயிரமாக குறைந்து விட்டது.

இரண்டே நாளில் ஃபெர்ணாண்டஸ் மற்றும் திரி வேதிக்கும் ஒரு லட்சத்திற்கும் மேல் நஷ்டம் வந்து விட்டது. மூன்றாவது நாள் இருவருக்கும் தனித்தனியாக தபாலில் கவர் வந்தது. உள்ளே ஒரே ஒரு வரி எழுதப் பட்டிருந்தது.

'டிட் ஃபர் டாட்.'

19

பிரியம்வதாவுக்கு விமானநிலையம் புதுசு. கேட் அருகில் டிக்கெட்டி வாங்க வேண்டுமென்று சொன்னார் கள். கௌண்டரில் டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். விமானம் எத்தனை மணிக்கு என்றுகூட அவளுக்குத் தெரியாது. அவர்கள் இருக்கிறார்களா போய் விட்டார்களா என்பது கூட சந்தேகம்தான். இரண்டு மூன்று விமானங்கள் வரவேண்டிய நேரம் என் பதால் அந்த இடம் பரபரப்புடன் இயங்கிற்று. அதிர்ஷ்ட வசமாக அவர்கள் தென்பட்டார்கள். ஒரு மூலையில் ராஜாராம் அமர்ந்திருந்தார். ஹாரிகா தொலைவில் புக்ஸ்டாலில் நின்று கொண்டிருந்தாள்.

அத்தனை பதட்டத்திலும் பிரியம்வதாவின் மனம் துணுக்குற்றது. எப்போதும் மக்கள் சூழ்ந்திருக்க அவர் களுக்கு நடுவில் நாயகனாக விளங்கும் ராஜாராம் இப் பொழுது ஒரு பிச்சைக்காரனைப்போல் தனியாக உட் கார்ந்திருந்தார்.

அதே சமயத்தில் அவரும் அவளைப் பார்த்து விட்டார். பழைய தொடர்பை வைத்துக் கொண்டு ரகளை செய்ய வந்திருப்பாளோ என்று பயந்தார். பிரியம் வதா நேராக ஹாரிகாவிடம் சென்றாள். விஷயத்தை எப்படி தொடங்குவது என்று புரியவில்லை.

''நான்... நான் உங்களோடு கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

ஹாரிகா வியப்படைந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் ''என்ன?'' என்றாள்.

''நீங்க நினைப்பதுபோல் லக்ஷ்மிக்கும் காந்திக்கும் இடையே எந்த சம்பந்தமும் இல்லை. எல்லாம் என் கணவர் செய்த சதி. அதற்கு சாட்சியம் இதோ இந்த டேப்புகள். சாதாரணமாக லக்ஷ்மி பேசியதற்கு நடுவில் கேள்விகளைக் கேட்டு பதிவு செய்து வேறு அர்த்தம் வருவது போல் செய்திருக்கிறார். உங்கள் மனதை முறிப் பதற்கு இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. லக்ஷ்மி கர்ப்பவதி இல்லை.'' வேக வேகமாக சொல்லி முடித்த வள் தான் சொன்னது ஹாரிகாவுக்குப் புரிந்ததா இல்லையா என்ற சந்தேகத்துடன் அவள் பக்கம் பார்த்தாள்.

ஆனால் ஹாரிகாவின் முகத்தில் புதிய விஷயத்தைக் கேட்ட பரபரப்பு எதுவும் தென்படவில்லை. அவள் முறுவலுடன், ''இந்த விஷயம் எனக்குத் தெரியாதுன்னு எப்படி நினைத்தாய்?'' என்றாள்.

பிரியம்வதாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''அப்படி என்றால்?'' என்றாள்.

''காந்தி கல்யாணம் செய்து கொள்ளாமல் ஒரு பெண்ணை ஏமாற்றி விட்டான் என்று சொன்னால் நான் நம்பமாட்டேன். டேப்பை முதல் தடவை கேட்டபோது

கலவரமடைந்தது உண்மைதான். சரியாக ஒரு மணி நேரம் விசாரணை செய்த பிறகு லக்ஷ்மி காந்தியின் புனிதமான நட்பு புரிந்து விட்டது.''

''பின்னே காந்தியிடம் வெறுப்பு இல்லை என்றால் அவரைவிட்டு இவ்வளவு தொலைவாகப் போவானேன்?''

''என்னுடைய விசாரணை அந்த ஒரு மணி நேரத்துடன் நிற்கவில்லை என்பதால்''என்றாள் ஹாரிகா. இந்த முறை அவள் சிரிப்பில் வேதனை கலந்திருந்தது.

பிரியம்வதாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''போயிட்டு வா பிரியம்வதா. உன்னால் புரிந்து கொள்ள முடிந்தால் இதுவே போதும். சிரமம் எடுத்துக் கொண்டு இவ்வளவு தூரம் வந்ததற்கு நன்றி. '' ஹாரிகா விடைபெற்றுக் கொள்வதுபோல் சொல்லிவிட்டு தந்தையை நோக்கி சென்றாள்.

என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறிய பிரியம்வதா ஒரு நிமிடம் கழித்து அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்.

★ ★ ★

''மே ஐ கமின் சார்?''

''ப்ளீஸ் கமின்.''

செகரெட்ரி உள்ளே வந்தாள். காந்தியின் முகத்தைப் பார்த்ததுமே அவளுக்குப் புரிந்து விட்டது.

காந்தி முறுவலுடன் ''ஜெயித்து விட்டோம்'' என்றான்.

அவளும் சிரித்தபடி ''ஆபீசில் எல்லோருக்கும் தெரிந்து விட்டது சார்'' என்றாள்.

''எப்படித் தெரியும்?'' வியப்புடன் கேட்டான்.

''அந்த மார்வாடிகள் வந்தது, வங்கிக்கு போன் செய்தது.''

''நம் ஆட்கள் என்னை விட புத்திசாலியாக இருப்பாங்க போலிருக்கே. சரி எல்லோரும் வீட்டுக்குப் போகலாம். கொண்டாடுங்கள். நாளைக்குக் கூட வரவேண்டிய அவசியம் இல்லை.'

''ஏன் சார்?''

''ஐந்தாவது ஆண்டின் இறுதிநாள்'' என்றான் காந்தி. அவனுக்குச் சிறு பிள்ளையைப் போல் குதித்துக் கும்மாளமிட வேண்டும் போலிருந்தது. ''ஒரு விஷயம்'' என்றான்.

அவள் திரும்பி வந்தாள்.

''உன் பாய் பிரண்ட் பெயர் என்ன? இல்லை என்று பொய் சொல்லாதே. தியேட்டர் வாசலில் உன்னையும் அவனையும் ஒன்றாக பலமுறை பார்த்திருக்கிறேன்.''

அவள் சற்று வெட்கமடைந்தவளாக ''ஜேம்ஸ்'' என்றாள்.

காந்தி மேஜை டிராயரிலிருந்து காம்ப்ளிமெண்டாக வந்த வாட்சை எடுத்தான். ''காதலி தரும் பரிசு காதலனுக்கு திரில்லை தரும். ஆனால் கல்யாணம் முடியும் வரையில் இதைக் கட்டிக் கொள்ளாதே என்று கண்டிஷன் போடு. பெஸ்ட் ஆஃப் லக்'' என்றான்.

அவள் தயக்கத்துடன் ''எதுக்கு சார் இதெல்லாம்?'' என்றாள்.

'என்னுடைய வேதனைக்கு உன் கண்களில் நீர் தளும்பியதற்கு,' மனதில் நினைத்ததை வெளியில் சொல்லாமல் வாட்சை நீட்டினான்.

''தாங்க்ஸ் சார். மெனி மெனிதாங்க்ஸ்.'' சொல்லி விட்டு வெளியேறினாள்.

கரெண்ட் போய்விட்டதால் ஏ.சி.யின் சத்தம் நின்று விட்டது. எல்லோரும் கிளம்பிப் போய் விட்டார்கள். ப்யூன் பின்புறக் கதவைச் சாத்திக் கொண்டிருந்தான். காந்தி ப்ரீஃப்கேஸைத் திறந்தான். பியூன் ஐந்து மெழுகு வத்திகள் கொண்ட ஸ்டாண்டைக் கொண்டு வந்து மேஜை மீது வைத்துவிட்டு போனான்.

அறையில் வெளிச்சம் பரவியது. காந்தி மற்றொரு முறை பணத்தைச் சரி பார்த்துக் கொண்டான். பிரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு நாற்காலியை விட்டு எழுந்து கொள்ளப் போன பொழுது தடாலென்று கதவுகள் திறந்து கொண்டன. வித்யார்த்தி மூச்சு இறைக்க நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் சிவந்திருந்தன. தலை

முடி கலைந்திருந்தது. அவன் உள்ளே வரவில்லை. கதவின்மீது கைகளை ஊன்றியபடி நின்றிருந்தான்.

காந்தியின் மனம் தீங்கை எடைபோட்டது.

உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட வெறுமையுடன் வித்யார்த்தி சொன்னான். ''எல்லாம் முடிந்து விட்டது காந்தீ! லக்ஷ்மி நம்மை விட்டுப் போய் விட்டாள்.''

அம்பு பட்டு ஒரு பறவை அனாதரவாக கீழே விழுந்து விட்டால், மற்ற பறவைகள் எல்லாம் படபட வென்று சிறகுகளை அடித்துக் கொண்டு பறந்து போய் விட்டபிறகு, சுற்றிலும் சூழ்ந்து விட்ட தனிமை... உயிர் போகும் வேதனையினால் மூடிய கண்ணிமைகளின் வழியே வழிந்தோடிய இறுதிக் கண்ணீர்த் துளி.

அமைதியைக் கிழித்துக் கொண்டு பெருத்த ஓசை யுடன் காந்தியின் கையிலிருந்து ப்ரீஃப்கேஸ் நழுவி விழுந்தது. டிராஃப்டுகளும், நோட்டுக் கட்டுகளும் நாலாப் பக்கமும் சிதறின. நடுவில் காந்தி சிலையாக நின்று கொண்டிருந்தான்.

வித்யார்த்தி சொல்லத் தொடங்கினான். ''அவளுக்குச் சரியாக அரை மணிக்கு முன்னால்தான் நினைவு திரும்பியது. கண்ணைத் திறந்ததுமே அவள் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா? பத்தொன்பதாம் தேதிக்கு இன்னும் எவ்வளவு நாள் இருக்கு என்றுதான். இன்னிக்குத்தான் என்று சொன்னேன். இத்தனை நாளாக சாவுக்கும் வாழ்வுக்குமிடையே போராடிக் கொண்டிருந்

தேனா என்று கேட்கவில்லை. காந்தீ ஜெயித்தானா என்று கேட்டாள். ஒரு வாரமாக உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தவள் நினைவு வந்ததுமே கேட்ட இரண்டாவது கேள்வி அதுதான். அதுவும் உன்னைப் பற்றித்தான். தான் இப்படி படுக்கையில் உயிரோடு போராடிக் கொண்டு, பந்தயத்தின் கடைசி நாட்களில் உன் பொன்னான நேரத்தை வீணாக்கி விட்டதாக வருத்தப் பட்டாள். பாவம் லக்ஷ்மீ! இத்தனை நாளாக உன்னுடன் வாழ்ந்தபோதும் பணத்தின் மீது உனக்கு இருக்கும் ஆசையைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலேயே போய் விட்டாள். உன் மனதில் ஏதோ ஒரு மூலையில் அவள்பால் அன்பும், பரிவும் இருக்குமென்று கனவு கண்டிருக்கிறாள். இந்த ஒரு வாரத்தில் ஒரே ஒருநாள் கூட வந்து பார்க்க முடியாதவாறு பணம் சம்பாதிப்பதிலேயே மூழ்கி விட்டான் உன் நண்பன் என்று நான் சொன்னதுமே அவள் கண்களிலிருந்து சூடான கண்ணீர்த் துளி உதிர்ந்தது.

ரொம்ப நேரம் அப்படியே கண்களை மூடிக் கொண்டிருந்து விட்டாள். ஒருகால் நீயும் அவளும் நட்புடன் பழகிய நாட்களையும், முதல் ரூபாயைச் சம்பாதிப்பதற்காக பட்ட கஷ்டத்தையும் நினைவு கூர்ந்தாளோ என்னவோ. ஆனாலும் அவள் உங்களை கோபித்துக் கொண்டதாகத் தெரியவில்லை காந்தீ! அவள் உனக்காக வேதனைப்பட்டது போல் தெரிந்தது. அதற்குள் மரணம் இரு கரங்களையும் நீட்டி தன்னை அரவணைக்க

நெருங்கி விட்டதை உணர்ந்து விட்டாள் போலும். கண் களைத் திறந்து இறுதியாகப் பேசத் தொடங்கினாள். அதுவும் உன்னைப் பற்றித்தான். எப்பொழுதோ இரண்டு வருடங்களுக்கு முன்னால் அவளுக்கு ஒரு வாட்ச் பரிசளித்தாயாம். ஐந்து ஆண்டுகளில் கெடு முடிவடையப் போகும் தருணத்தை நினைவூட்டும் படியாக சொல்லி அதை அவளுக்குத் தந்தாயாம். அந்தப் பரிசை தான் ரொம்ப அபூர்வமானதாக எண்ணியிருந்ததாக உன்னிடம் சொல்லச் சொன்னாள். இறுதியாக தன் கடமையை நிறைவேற்றாமல் போனதற்காக வருத்தப்பட்டாள். இதோ இதைத் திரும்ப உன்னிடமே தரச் சொல்லி கொடுத்துவிட்டாள்.'' ஸ்ட்ராப்போடு இருந்த வாட்ச்சை மேஜைமீது வைத்தான் வித்யார்த்தி.

காந்தி ஏதோ பேச முயன்றான். வார்த்தைகள் வெளியில் வர மறுத்தன.

வித்யார்த்தி மேலும் சொன்னான். ''காந்தீ! என்றோ உன் பார்ட்னராக இருந்த கிழவிக்காக வெட்டியானுக்கு பணம் கொடுத்து அகௌளண்டை செட்டில் செய்தாயாம். அந்த மாதிரி தொந்தரவெல்லாம் தான் உனக்குத் தரக் கூடாது என்பதால், இறுதி வேண்டுகோளாக தன் ஈமக் கடன்களை செய்வதற்கு உன்னை வரவேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள். உயிரோடு இருக்கும் வரையிலும் பார்க்க வராதவன் செத்த பிறகு எங்கே வரப் போகிறாய்? என் தங்கையின் சிதைக்கு நானே கொள்ளி வைத்துக் கொள்வேன். உன் நேரம் மிச்சமானதற்கு சந்தோஷப்

படு. இந்தக் கொஞ்ச நேரத்தில் இன்னும் சம்பாதித்துக் கொள். பெஸ்ட் ஆஃப் லக்.''கோபத்துடன் அறைக் கதவை அறைந்து சாத்தினான் வித்யார்த்தி.

★ ★ ★

கரையில் நின்று கொண்டு கடலை பார்ப்பவர் களுக்கு ஒரு விநோதமான காட்சி புலப்படும். முதலில் கொஞ்சமாக தண்ணீர் கரையை நோக்கி வரும். அது திரும்பவும் பின்னோக்கிச் செல்ல முயலும்போது வேறொரு அலை எழும்பி வந்து அதனை திரும்பவும் முன்னுக்கு தள்ளிவிடும். மொத்தத்தில் திரும்பத் திரும்ப தண்ணீர் அந்த இடத்திலேயே சுழன்று கொண்டிருக்கும்.

காந்தியின் மனநிலையும் அது போலத்தான் இருந்தது. திரும்பத்திரும்ப லக்ஷ்மியின் நினைவுகளே அவன் மனதில் சுழன்று கொண்டிருந்தன. அவற்றிலிருந்து அவனால் தப்பிக்க முடியவில்லை. அவள் அவனுடைய சிநேகிதி மட்டுமே இல்லை. சிறுமியைப் போல் அவனிடம் கோபம் கொள்வாள். பெரிய மனுஷியாய் யோசனை வழங்குவாள். பின்னால் நின்று கொண்டு அவனை ஊக்குவித்துக் கொண்டிருந்த சக்தி அவள். மிகச் சாதாரணமாக தென்படும் அந்தப் பெண் எத்தனையோ காரியங்களை அனாயாசமாக செய்து முடித்தாள். அந்த லக்ஷ்மி இனி இல்லையா? அவனை விட்டு அவளால் எப்படி போக முடிந்தது? இது உண்மைதானா!

அவன் நாற்காலியில் சரிந்தான். மெழுகுவர்த்தி எரிந்து கீழே ஒவ்வொரு சொட்டாக உருகி வழிந்து கொண்டிருந்தது. லஷ்மியின் தற்கொலை முயற்சி பற்றி தெரிந்ததும் அவன் கலவரப்பட்டது உண்மைதான். ஆனால் போகப் போக அவளுக்கு ஒன்றும் ஆகாது என்று தனக்குள்ளேயே பலமுறை சொல்லிக் கொண்டு அந்த பிரமையிலேயே இருந்து விட்டான். பிரதமரைச் சந்திக்க டில்லிக்குப் போய்விட்டான். திரும்பி வந்த பிறகு கூட அவள் குணமாகிவிடுவாள் என்ற எண்ணத்திலேயே இருந்து விட்டான். இப்பொழுது இந்த உண்மையை ஜீரணித்துக் கொள்ள முடியாதவனாகி விட்டான்.

தன் பிரியமான சிநேகிதி சாவுடன் போராடிக் கொண்டிருந்த போது ஐம்பது லட்சம் சம்பாதிப்பது எப்படி என்ற யோசனையில் மூழ்கிவிட்டிருந்தான். குறைந்த பட்சம் அவளைப் பார்க்கக் கூட நேரமில்லாமல் போய்விட்டது. எத்தனை வேதனைப் பட்டிருந்தால் ஈமக்கடன்களுக்கு அவன் வரவேண்டாம் என்று சொல்லியிருப்பாள்? என்றுமே அமைதியாக இருக்கும் வித்யார்த்தியே தன்னை அப்படிச் சொன்னான் என்றால் தன்னுள் அத்தகைய அரக்கன் ஒளிந்திருக்கிறான் என்று தானே பொருள்?

லக்ஷ்மியின் கைகளை இத்தனை நாளாக அலங்கரித்து வந்த வாட்ச் அவனுக்கு முன்னால் மேஜையின் மீது இருந்தது.

அவனுக்கு அந்த நாள் நினைவுக்கு வந்தது. இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் சரியாக பந்தயக் கெடுவில் பாதியைக் கடந்து விட்டிருந்த அன்றைக்குத் தான் அவளுக்கு வாட்ச் பரிசளித்தது. அவள் ஒரு கடிதத்தை எழுதி கவரில் வைத்து சீல் செய்து தன்னிடம் தந்தது.

ஆமாம். அது எங்கே? சரியாக கடைசி நாளன்று பிரித்துப் பார்க்கச் சொல்லி தன்னிடம் தந்த அந்த கவரில் என்ன இருக்கிறது? இன்றுதானே கடைசி நாள்?

அவன் சட்டென்று மேஜை டிராயரில் தேடினான். ரொம்ப நாட்களுக்கு முன்னால் வைத்த கவர். எங்கே போயிற்றோ? ஆனால் ஐந்து நிமிடங்கள் தேடிய பிறகு கிடைத்து விட்டது. மனம் முழுவதும் பதட்டம் நிரம்பியிருக்க, அதில் என்ன இருக்குமோ என்று பரபரப்புடன் கவரைக் கிழித்துப் பார்த்தான். அவன் எதிர்பார்த்தாற் போல் அதில் பெரிய கடிதம் எதுவும் இல்லை. நாலைந்து வரிகள் ஆங்கிலத்தில் இருந்தன. முத்துக்கள் போன்ற கையெழுத்தில்

MONEY CAN BUY BOOKS – BUT NOT WISDOM
MONEY CAN BUY CLOTHES – BUT NOT BEAUTY
MONEY CAN BUY MEDICINES – BUT NOT HEALTH
MONEY CAN BUY A HOUSE – BUT NOT HOME
MONEY CAN BUY WEALTH – BUT NOT HAPPINESS

எத்தனையோ அர்த்தங்களை அந்த ஐந்து வரிகளுக்குள் அடக்கி, இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பே கவரில் சீல் செய்து தந்தாள் என்றால் தான் ஜெயிக்கப்

போவதை அவள் முன்கூட்டியே ஊகித்தாள் என்று தானே அர்த்தம்? அன்றைய தினத்திலிருந்தே மனத்தளவில் தன்னை விட்டு விலகிப் போய்க் கொண்டிருந்தாளா? அதை அவன் புரிந்து கொள்ள வில்லையோ. தான் அப்படி என்ன தவறு செய்து விட்டோம்? செய்யவே இல்லையா? அனுமந்துவின் மரணம்? அதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? ஸ்கூட்டருக்காக டிபாசிட் சேகரித்தது நியாயம்தானா என்று கேட்டால் என்ன பதில் இருக்கிறது? எது நியாயம், எது சட்டம்? உண்மையில்தான் ஜெயித்தானா அல்லது தோற்றானா? ஜெயிப்பதற்கும் தோற்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

உயிர்போகும் தருணத்தில் சைக்கிளை விற்றுக் கடனைத் தீர்த்துக் கொள்ளச் சொன்ன வார்ட் பாய், இருபது லட்சத்தை துச்சமாக மதித்து மறுத்து விட்ட வித்யார்த்தி... இவர்கள் எல்லாம் உயர்ந்தவர்களா? கையாலாகாதவர்களா? எந்தக் கொள்கைக்குக் கட்டுப்பட்டு லக்ஷ்மி உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார்கள்? திட்டங்கள்... எதிராளியை முறியடிக்க மேலும் சதித் திட்டங்கள். மேலும் மேலும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை. இவற்றிலிருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று தான் லஷ்மி தற்கொலை செய்து கொண்டாளா?

அந்த யோசனை வந்ததுமே நடுநடுங்கி விட்டான் காந்தி. யோசித்தப் பார்த்தபொழுது அதுவே உண்மை என்று பட்டது. தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்

தைத் தடுத்து நிறுத்திவிட்டு போட்டியில்தான் வென்று விட்டதாக இறுமாப்புக் கொண்டான். ஆனால் தன் சாவின் மூலம் நிரந்தரமான வெற்றியைப் பெற்று விட்டாள் லக்ஷ்மி.

அவனுக்கு முதல்முதலாக அவளைச் சந்தித்தது நினைவுக்கு வந்தது. தான் தற்கொலை செய்து கொள்ள முயன்ற அதே சமயத்தில் அவளும் தண்ணீரில் விழுந்தது. தான் அவளைக் காப்பாற்றியது, 'தற்கொலையா? அது கோழைகளின் செயல்' என்று அவள் சொன்னதைக் கேட்டு தான் துணுக்குற்றது எல்லாம் வரிசையாக நினைவுக்கு வந்தன. அத்தனை கஷ்டத்திலும் தற்கொலை செய்து கொள்ளாத லக்ஷ்மி இன்று இறந்ததற்குக் காரணம் நிச்சயம் தன்னை மாற்றுவதற்காகத்தான்.

அவனுக்கு துக்கம் பொங்கி வந்தது. லக்ஷ்மீ – லக்ஷ்மீ என்று மனதிற்குள் புலம்பினான். இத்தனை சிறிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக அத்தனை பெரிய தியாகத்தை ஏன் செய்தாய் லக்ஷ்மீ? அவள் மட்டும் இப்படிச் செய்யவில்லை என்றால் தன்னுடைய இந்தப் பணதாகம் தீர்ந்திருக்குமா? எத்தனை முறை தங்களுக்குள் வாதங்கள் நிகழவில்லை? அவள் எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் தான் காது கொடுத்து கேட்கவில்லையே? தன் கொள்கைக்காக உயிரையே தியாகம் செய்யத் துணிந்து விட்டாள்.

அவள் எவ்வளவு உயர்ந்தவள் என்றும், அவளுக்கு முன்னால் தான் எவ்வளவு அற்பமாகி விட்டோம் என்றும் புரியத் தொடங்கியது. அந்த லக்ஷ்மி இப்

பொழுது எங்கே போய் விட்டாள்? மயானத்தில் அவள் உடல் இந்நேரத்திற்கு எரிந்து சாம்பலாகி விட்டிருக்கும்.

அவன் பார்வை மெழுகுவத்தியின் மீது விழுந்தது. சிவப்பாக எரியும் மேல்பாகம், மயானத்தின் நடுவில் சிதையின் தீயைப் போல் காட்சி தந்தது. இமைக்காமல் அதையே பார்த்தான். அந்த தீயில் உலகத்தையே சுட்டெரித்து விடவேண்டும் என்ற வெறி.

திறந்து கிடந்த பிரீஃப்கேஸிலிருந்து நோட்டுக் கற்றைகள் வெளியே எட்டிப் பார்த்தன. குனிந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து எரியும் மெழுகுவத்தியின் நுனியில் வைத்தான். தீ பரவியது. அந்தக் காட்சி அவனுக்குத் திருப்தியாக இருந்தது. முதலில் சிவப்பு, அதைச் சுற்றிலும் நீல நிறம், அதற்கும் மேலே வெண்மையான புகை வளையம்.

மனிதனை ஆட்டிப் படைக்கும் பணம் எரிந்து போவதைப் பார்க்கும்போது எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது? ஐந்து ஆண்டுகள் இரவும் பகலும் உழைத்து, பந்தயத்தில் வெற்றி பெற்று, அந்த விஷயத்தை அறிவிப்பதற்குள், இறுதி தருணத்தில் தான் என்ன செய்கிறோம் என்று கொஞ்சமாவது உணர்ந்தானா? உணர்ந்துதான் செய்கிறான். இழந்து போனதைவிட இந்தப் பணம் ஒன்றுமே பெரிசு இல்லை.

மற்றொரு நோட்டை எடுத்துப் பற்ற வைத்தான். யார் மீதென்று தெரியாத வெறுப்பை இந்தச் செயல் மூலமாக தீர்த்துக் கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடம்... கால்மணி... அரைமணி...

தடைபட்டிருந்த மின்சாரம் திரும்ப வந்து விட்டது. இருந்தாலும் அவன் மெழுகு வத்தியை அணைக்க வில்லை. தன் காரியத்திலேயே ஆழ்ந்திருந்தான்.

★ ★ ★

I.C.24 விமானம் கிளம்பத் தயாராக இருந்தது. பயணிகளை செக் – இன்னுக்கு வரச்சொல்லி அழைப்பு கேட்டதும் ராஜாராம் எழுந்து கொண்டு மகளைப் பார்த் தார். ஹாரிகாவும் எழுந்து நின்றாள். ஹாலின் நுழை வாயிலை நோக்கினாள். அவன் வரும் அறிகுறியே காண வில்லை. அவன் வரக்கூடாது என்றுதான் நினைத்தாள். ஆனால் உண்மையாகவே வராமல் போனது வருத்தமாக இருந்தது.

விமான நிலையத்தில் பெண்கள் செல்லும் தனி வழியை நோக்கி நடந்து கொண்டே மற்றொரு முறை நுழைவாயிலைப் பார்த்தாள். செக்யூரிட்டி செக்கை முடித்துக் கொண்டு லௌஞ்சுக்குள் அடியெடுத்து வைத் தாள். அத்துடன் அவளுக்கும் இந்த நாட்டிற்கும் அடியோடு உறவு முடிந்து விட்டது.

தந்தையின் வரவுக்காக அவள் காத்திருந்தாள். அவர் இன்னும் உள்ளே வரவில்லை. ஆண்களின் க்யூ நீளமாக இருந்தது. ஒவ்வொருவரின் பேக்கையும் பரிசோதித்து உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். லௌஞ்சுக்கும் வெளியே இருந்தவர்களுக்கும் இடையே கண்ணாடித்

தடுப்புச் சுவர் இருந்தது. ராஜாராமுக்கு முன்னால் இன்னும் இரண்டு பேர் இருந்தார்கள்.

ஹாரிகா கண்ணாடி வழியாக தந்தையைப் பார்த்தாள். முன்னால் இருந்த இருவரில் ஒருவர் உள்ளே வந்து விட்டார். ராஜாராம் ஓரடி முன்னோக்கி நகர்ந்தார். அப்பொழுதுதான் அவள் பார்த்தாள் ஹாலுக்குள் நுழைந்து கொண்டிருந்த அவன் அறிமுகமான உருவத்தை. கடியாரம் சரியாக ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது.

கையில் ப்ரீஃப்கேஸுடன் வேகவேகமாக வந்து கொண்டிருந்தான் காந்தி.

''ஹலோ!''

ஏதோ யோசித்தவாறு நின்றிருந்த ராஜாராம் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார். காந்தி!

காற்று ஸ்தம்பித்து விட்டாற் போலிருந்தது. அந்த நேரத்தில் அங்கே மிக அண்மையில் அவனைப் பார்த்தும் அவருக்கு வாயிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை. விமான நிலையம் முழுவதும் திடீரென்று நிசப்தமாகி விட்டது போலவும், எல்லோரும் தன்னையே பார்ப்பது போலவும் பிரமை ஏற்பட்டது. காந்தியும் உடனே எதுவும் பேசவில்லை. இருவரும் சலனமற்று அப்படியே நின்று கொண்டிருந்தார்கள். சரியாக ஐந்து வருடங்களுக்கு முன்னால் பந்தயம் வைத்துக் கொண்டபோது ஒருவரை ஒருவர் எப்படி பார்த்துக் கொண்டார்களோ அதே பார்வை.

'ஒரு நிமிடம் தாமதமாகி இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். நான் இந்த எல்லையை விட்டு தொலைவாக போயிருப்பேன் இல்லையா.' நினைத்துக் கொண்டார் ராஜாராம்.

'எப்படி இருந்தவர் எப்படி ஆகிவிட்டார்? சீரும் சிறப்புமாக இருந்தவர் அவை போனதுமே மன வேதனையில் எப்படி உருக்குலைந்து போய்விட்டார்?' என்று நினைத்தான் காந்தி.

அவ்விருவருக்குமிடையே பணயமாக வைக்கப் பட்ட ஹாரிகா கண்ணாடித் தடுப்புச் சுவருக்கு அப்பால் நின்றிருந்தாள். இரு ராஜ்ஜியங்களின் படை வீரர்களும் முற்றிலும் இறந்து போனபிறகு, போர்களத்தில் மன்னர்கள் இருவர் மட்டுமே மிஞ்சியிருக்கும் நிலையில் தாமும் போரிட்டு மடிய வேண்டுமா அல்லது நிகழ்ந்த அழிவைப் பார்த்து துக்கப்பட வேண்டுமா என்று புரியாமல் கலங்கி நிற்பது போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள்.

''நான் தோற்றுப் போய் விட்டேன்'' என்றான் காந்தி.

முதலில் ராஜாராமுக்கு ஒரு வினாடி அவன் சொன்னது புரியவில்லை. காந்தி தோற்கக் கூடும் என்ற சந்தேகம் அவருக்கு அதுவரையில் வரவே இல்லை. தொழிலில் அணுஅணுவாக அவன் முன்னேறிக் கொண் டிருந்தது அவருக்குத் தெரியும். காந்தி சொன்னதைப் புரிந்து கொள்ள அவருக்குக் கொஞ்ச நேரம் பிடித்தது.

ராஜாராம் பதில் பேசாததால் காந்தியே மேலும் சொன்னான். ''பின்னே எதுக்காக வந்தாய் என்று கேட்பீங்கன்னு நினைத்தேன்'' ப்ரீஃப்கேஸைத் திறந்து அதிலிருந்த காகிதங்களை அவர் கையில் திணித்தான். ''இதை உங்களிடம் கொடுத்து விட்டுப் போகத்தான் வந்தேன். கவனம்! இந்த பேப்பர்கள் வெளிப்பட்டால் போலீஸார் உங்களை அரெஸ்ட் செய்து விடுவார்கள்.''

ராஜாராம் சட்டென்று அவற்றைப் பார்த்தார். ஸ்விஸ் வங்கியில் போட்ட பணம், வரிகட்டாமல் பதுக்கி வைத்த கறுப்புப் பணம் முதலியவற்றைப் பற்றிய ஆதாரங்கள் அடங்கிய பேப்பர்கள்.

''இதெல்லாம் உனக்கு எப்படி?'' என்றார் உலர்ந்து விட்ட குரலில்.

''உங்க நண்பர்கள் ஃபெர்னாண்டஸும், திரிவேதியும் கொடுத்தார்கள்.''

நடுங்கும் கரங்களுக்கு இடையில் படபடத்த காகிதங்களைப் பார்த்தபடி ஒரு நிமிடம் மௌனமாக இருந்தவர் பிறகு மெதுவாக நிமிர்ந்தார். அவர் கண்களில் நீர் நிரம்பி இருந்தது.

''நான் உனக்கு எப்படி நன்றியைத் தெரிவிப்பேன்?'' என்றார் கம்மி விட்ட குரலில்.

''நான் பெரிதாக என்ன செய்து விட்டேன்?''

''அப்படிச் சொல்லாதே. நீ செய்ததைப் பற்றி உனக்கும் எனக்கும் தெரியும். இது மட்டும் வெளிப்

பட்டு இருந்தால் மோசடி செய்த குற்றத்திற்காக எனக்குக் குறைந்தது மூன்று ஆண்டுகள் சிறைவாசம் கிடைத்திருக்கும்.''

காந்தி பதில் பேசவில்லை.

அவர் திடீரென்று ஆவேசத்துடன், ''உனக்குத் தெரியுமா காந்தி? உன்னை விட்டு ஓடிப் போகணும்னுதான் இந்த முயற்சியே. பந்தயத்தில் நீ ஜெயித்து விடுவாய் என்று நினைத்து, உனக்கு என் மகளைத் தருவதற்கு என் சுயகௌரவமும், ஆணவமும் இடம் தராததால் இப்படி கோழையாக ஓடிப் போகிறேன். ஆனால் நீ அப்படி இல்லை. கடைசி நேரத்தில் என்னைக் காப்பாற்றி விட்டாய். உன் முன்னால் நான் எத்தனை அற்ப மானவன் என்று இந்த நிமிடம் புரிந்து கொண்டு விட்டேன். சொல்லு காந்தி... சொல்லு. உனக்கு...''

திடீரென்று ஒலிபெருக்கியிலிருந்து அறிவிப்பு பெரிதாக ஒலித்து அங்கிருந்த அனைவரின் குரல்களையும் விழுங்கி விட்டது. பயணிகள் விமானத்தை நோக்கி செல்லும்படி வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருந்தார்கள். ஹால் ஏறக்குறைய காலியாகிவிட்டது. பேசிக் கொண்டிருந்த அவ்விருவரும் அதைக் கவனிக்கவில்லை.

காந்தி கையை நீட்டி, ''போயிட்டு வாங்க. வெளிநாட்டில் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாக கழிய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்'' என்றான்.

அவர் ஏமாற்றம் அடைந்தது போல் தென்பட்டார். ஆனால் மேற்கொண்டு பேச்சை வளர்க்கவில்லை. ஒருகால் காந்தியின் முகத்தில் தென்பட்ட பற்றற்ற தன்மையை உணர்ந்திருப்பாரோ என்னவோ. ப்ரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு செக்யூரிடிக்குள் நுழைந்தார்.

காந்தீ அப்படியே நின்று கொண்டிருந்தான். ஹாரி காவும்.

மௌனம் பேசுவது போல் எந்த மொழியாலேயும் பேச முடியாது. கடலின் மகிழ்ச்சியை, பிரிவின் வேதனையை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தக் கூடிய மொழி மௌனத்தை விட வேறு இல்லை.

''ஆர் யூ மிஸ்டர் காந்தி?''

ஏர்போர்ட் அதிகாரியின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''எஸ்'' என்றான்.

''அதோ அந்தப் பெண் உங்களிடம் இதைத் தரச் சொன்னாள்'' என்று பத்திரிகை ஒன்றை தந்தார்.

காந்தி ஹாரிகாவைப் பார்த்தான்.

சாதாரணமாக செக்யூரிடியைத் தாண்டி அந்தப் பக்கம் போய்விட்டவர்களை மறுபடியும் வெளியில் வரவிடமாட்டார்கள். அவன் அதை பெற்றுக் கொள்ளும் வரையிலும் நின்று பார்த்துவிட்டு பிறகு தந்தையுடன் நகர்ந்தாள். சலனமற்ற கம்பீரம் அவள் முகத்தில் குடி கொண்டிருந்தது.

காந்தி கையிலிருந்த பத்திரிகையைப் பார்த்தான். அதன் பெயரைப் பார்த்ததும் அத்தனை வேதனையிலும் சிரிப்புதான் வந்தது.

'FUTURE'

அவன் நிமிர்ந்தான். அவள் படிகளில் ஏறி உள்ளே நுழையும்முன் திரும்பிப் பார்த்தாள். அவன் கை உயரே எழும்பிக் காற்றில் அசைந்தது. அவளும் மெதுவாக கையை அசைத்தாள். பிறகு உள்ளே போய்விட்டாள்.

ஐந்து நிமிடங்கள் கழித்து விமானம் புறப்பட்டது. அவன் கையிலிருந்த புத்தகம் அப்படியே இருந்தது. புத்தகத்தின் அட்டை மீது எழுதியிருந்த வரிகளை மற்றொரு முறை படித்தான்.

'சிலரால் இந்த உலகமே சிறப்பானதாக மாறி விடுகிறது. என் சின்னஞ்சிறு உலகம் உங்களால். wish you all the success in your'

அதுவரையிலும் தான் எழுதியிருந்தது. பத்திரிகை யின் மேல் பாகத்தில் இது எழுதியிருந்ததால் பத்திரிகை யின் பெயர் மற்றதை இட்டு நிரப்பியது.

20

விமானம் புறப்பட்ட பிறகும் சீட் பெல்டை மாட்டிக் கொள்ளாமல் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்த மகளிடம் பேச்சுக் கொடுக்கவும் பயந்தார் ராஜாராம். இருந்தாலும் பரபரப்பை அடக்கிக் கொள்ள முடியாமல் ''ஹாரிகா! காந்தி தோற்றுப்போய் விட்டான்'' என்றார்.

அந்த வார்த்தைகள் அவளிடம் எந்த விதமான மாறு தலையும் ஏற்படுத்தவில்லை. தந்தையின் பக்கம் திரும் பாமலேயே ''இல்லை டாடீ. ஜெயித்து விட்டார். தப்பித் தவறி ஜெயித்திருந்தாலும் தோற்றுத்தான் போயிருப் பார்'' என்றாள்.

சில நாட்களுக்கு முன்னால் கூட அதே வார்த்தை யைத்தான் அவள் சொன்னாள். அப்பொழுதும் அவருக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் ''விமானம் புறப்பட்டதும் ஏதோ சொல்வதாகச் சொன்னாயே. சொல்லும்மா. உன்னுடன் சேர்ந்து கடைசி நேரத்தில் காந்தியைத் தோற்கடித்தது யாரு?'' என்று கேட்டார்.

''காந்தி தோற்கவில்லை டாடீ. நாங்க இருவரும் சேர்ந்து வைத்த பரீட்சையில் ஜெயித்து விட்டார்.''

''சரி போகட்டும். அந்த இன்னொரு நபர் யாரும்மா?''

''இந்த ஒரு கேள்விக்குப் பதில் கேட்காமல் மறந்து விடக் கூடாதா டாடீ?''

இதுவரையில் இல்லாத வேதனை மகளின் குரலில் திடீரென்று வெளிப்பட்டதைக் கண்டு ராஜாராம் கலங்கி விட்டார். ஒரு நிமிடம் தடுமாறினார். மனதில் இருந்த வார்த்தை வெளிவரமுடியாமல் தவித்தது. மகளின் நிலையைப் பார்க்கும்போது இதயம் பாரமாகிவிட்டது-

''நீ என்னை மன்னிப்பதாகச் சொன்னால் ஒரு விஷயம் சொல்கிறேன். அதைக் கேட்டபிறகு நீ என்னை வெறுக்கக் கூடும். ஆனால் சொல்லவில்லை என்றால் மனசாட்சி என்னைத் துளைத்துவிடும். எல்லாம் கேட்ட பிறகு திரும்பிப் போய் விடலாம் என்று நீ சொன்னால் சந்தோஷமாக ஒப்புக் கொள்கிறேன்'' ராஜாராம் சொன்னார்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

ஒரு நிமிடம் மௌனமாக இருந்து விட்டு பிறகு சொன்னார். ''ஹாரிகா! நான் உன்னை ஏமாற்றி விட்டேன். லக்ஷ்மிக்கும் காந்திக்கும் சம்பந்தம் இருப்பது போல் ஒரு காசெட்டை உருவாக்கி, அவனை நீ வெறுக்க வேண்டுமென்று திட்டம் போட்டேன். அது உண்மை யான காசெட் இல்லை.''

''எனக்கு அந்த விஷயம் எப்பொழுதோ தெரியும் டாடீ.''

ராஜாராமுக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது.

''ஏதோ ஒரு சின்ன ருசு கிடைத்தால் அதையே நம்பி தவறாக புரிந்து கொள்வதற்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை. உங்களுடைய மகள் நான். வியாபாரத்தில் நீங்கள் செய்வது போல் பலவிதமாக யோசித்து, சில பரிசோதனைகளை மேற்கொண்டேன். அந்தப் பரிசோதனைகள் மூலமாக உங்கள் யாருக்குமே தெரியாத உண்மை ஒன்று வெளிப்பட்டது. அது பொருள் சம்பந்தப்பட்டது இல்லை. மனம் சம்பந்தப்பட்டது. ஒரு விதத்தில் நீங்க எனக்குப் பெரிய உதவி செய்திருக்கீங்க. இனி அதைப் பற்றி யோசிப்பதை நிறத்தி விடுங்கள். நான் எடுத்த முடிவு சரியானதுதான்.''

விமானம் மேகத்தைத் துளைத்துக் கொண்டு வேகமாகப் பறக்கத் தொடங்கியது. வெண்மையான மேகத் துணுக்கு விமானத்தைச் சூழ்ந்து கொண்டு பின் தங்கி விட்டது. இறுதியில் தங்கியிருப்பது காதல் நினைவு மட்டும்தான்.

★ ★ ★

காந்தி மறுபடியும் ஆபீசுக்கு வந்தபோது மணி ஆறரை. நன்றாக இருட்டிவிட்டது. ஆபீஸ் ப்யூனைக் கூட காணவில்லை. அந்த இடமே ஆளரவமற்று இருந்தது. கதவைத் திறந்து கொண்டு தன்னுடைய அறைக்குள் நுழைந்தான்.

அணைந்து போன மெழுகுவத்தியின் மணம் அந்த அறை முழுவதும் பரவிக் கிடந்தது. எரிந்து கரியாகி விட்ட காகிதங்கள் காலடி பட்டதும் பொடியாக உதிர்ந்தன.

அவன் பழைய காந்தியாக மாறி விட்டான். மனதை ஒருமுகப்படுத்தி கவனமாக அரைமணிநேரம் வேலை பார்த்தான். பாக்கியிருந்த டிராப்டுகள் மற்றும் செக்கு களை கணக்கிட்டு ஸ்டேட்மெண்ட் ஒன்றைத் தயாரித் தான். ஒரு மோசக் காரனாக, ஏமாற்றுப் பேர்வழியாக இந்தத் துறையை விட்டு விலகுவதில் விருப்பம் இல்லை. எரிந்து போன பணம் தன்னுடையது. மீதி இருப்பதெல்லாம் தன்மீது நம்பிக்கை வைத்திருக்கும் பங்குதாரர்கள் மற்றும் டிபாசிட் கட்டியவர்களுடையது.

கணக்கை முடித்துக் கொண்டு எழுந்து கொண்ட போது மனம் இலேசாகி விட்டிருந்தது. ஜன்னல் அருகில் சென்று திரைச்சீலையை ஒதுக்கி வெளியே பார்வை யிட்டான். குளிர்ந்த காற்று விர்ரென்று முகத்தில் வந்து மோதியது. எதிரே நகரம் அப்பொழுதுதான் ஒளிக் கோலம் பூண்டிருந்தது. இருட்டில் அகல் விளக்குகளை ஏற்றி வைத்தாற்போல் தீபவரிசைகள். நீரில் மிதந்து வரும் கார்த்திகை தீபம் போல் தெருவில் செல்லும் வாகனங்கள்.

அவன் ஜன்னலை விட்டு நகர்ந்தான். இனி அங்கே இருந்து செய்யப் போவது ஒன்றுமில்லை. காலையில் அறையைச் சுத்தம் செய்ய வரும் வேலைக்காரி மட்டும் கொஞ்சம் வியப்படைவது நிச்சயம். மற்றவர்கள் தன்னுடைய பங்கு பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு போனதற்கு சந்தோஷப்பட்டுக் கொள்வார்கள். நாற்காலியில் கிடந்த கோட்டை எடுத்துக் கொண்டு

வெளியே கிளம்புவதற்காக ஓரடி முன் வைத்தான். அப் பொழுது போன் ஒலித்தது. எடுத்து ''ஹலோ!'' என்றான் அலுப்புடன்.

முதலில் மெல்லிய சிரிப்பு, அந்தச் சிரிப்பை அடக்கிக் கொண்ட ஓசை. அதே குறும்பு நிறைந்த குரல்... அதே விளையாட்டுத் தனம்.

''நான்தான் லக்ஷ்மி.''

முதலில் அவனுக்கு எதுவுமே புரியவில்லை. உண்மையாகவே லக்ஷ்மிதானா? வீலென்று கத்தப் போனான். சந்தோஷத்தில் குரல் எழும்பவே இல்லை. சந்தோஷம் மட்டுமே இல்லை. வெறி கலந்த உணர்வு களின் கொந்தளிப்பு! கை நடுங்கியது. வார்த்தைகள் தடு மாறின. இது கனவா நினைவா? கனவாக இருக்க முடி யாது. இருக்கவும் கூடாது.

''எங்கேயிருந்து பேசுகிறாய்?''

அதே சிரிப்பு. ''நிச்சயமாக மயானத்திலிருந்து இல்லை.''

''தமாஷ் பேச்சு வேண்டாம்.''

''தெருவுக்கு அந்தப் பக்கம் இருக்கும் ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு உன் அறையின் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''மேற்கொண்டு ஒன்றும் பேசாதே. வந்து கொண்டே இருக்கிறேன்.''

★ ★ ★

''எனக்கு உன்னைக் கொன்று போட்டு விடணும் போல் ஆத்திரமாக இருக்கு.'' மேஜைக்கு அந்தப் பக்க மாக நின்றபடி சொன்னான் காந்தி.

கோபத்தாலும், ரோஷத்தாலும் சிவந்திருந்த அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்த லக்ஷ்மி ''எல்லோரும் நம்மையே பார்க்கிறார்கள். கொஞ்சம் சாதாரணமாக பேசக் கூடாதா?'' என்றாள்.

''நிஜமாகவே உன்னைக் கொலை செய்யணும். எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா?''

''எப்படி இருக்கிறதாம்?''

''எப்படி இருக்கிறதென்றால்?'' காந்தி தடுமாறினான். ''தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளணும் போலிருக்கு. சந்தோஷம் என்று நினைத்து மகிழ்ந்து போக வேண்டாம். உன்னையில்லை. அந்த வித்யார்த்தியைத் தான் முதலில் கொல்லணும். பெரிய நாடகம் ஆடி விட்டதாக நினைப்பு போலும்.''

''காந்தி! முதலில் உட்காரு, ப்ளீஸ்.''

மிகச் சிறிய டூ ஸ்டால் அது. ஒரு பெண் அது போன்ற ஹோட்டலுக்கு வந்தது வித்தியாசமாக இருந்த போதிலும் கொஞ்ச நேரத்தில் பழக்கப்பட்டுப் போனதும் எல்லோரும் பழையபடி தங்களுடைய வேலைகளில் ஆழ்ந்து விட்டார்கள். காந்திக்கு தன் நிலைமை புரிய வில்லை. அவன் மனம் முழுவதும் சந்தோஷம் நிரம்பி யிருந்தது. வெளியில் மட்டும் கோபமாக இருப்பது போல் நடிக்க வேண்டியிருந்தது.

லக்ஷ்மி அவனைப் பார்த்து, ''தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின் போது பந்தயம் கட்டினேன் இல்லையா. அதுக்குத்தான் இந்த நாடகம்'' என்றாள்.

''நான் ஏதோ வில்லன் என்றும், என்னை மாற்றி விட்டதாகவும் நினைத்து சந்தோஷப்பட்டுக் கொள்கிறாயா?'' காந்தியின் குரலில் கோபம் இன்னும் தணிய வில்லை.

அவன் கோபத்தைப் பார்க்கும்போது அவளுக்கு மேலும் சந்தோஷமாக இருந்தது. ''இந்தப் பந்தயம் யோசனை என்னுடையது இல்லை. நீ தொழிலாளர் களை வேலை நிறுத்தத்திலிருந்து பின்வாங்கச் செய்த போதே நான் தோற்றுப் போய்விட்டதாக நினைத்தேன். இந்தத் திட்டம் கூட என்னுடையது இல்லை.''

''பின்னே யாருடையது?''

''ஹாரிகாவுடையது.''

கடல் அலை ஒன்று வேகமாக வந்து பெருத்த ஓசை யுடன் பாறையில் மோதிய சத்தம்! அவன் குழப்பத் துடன் அவளைப் பார்த்தான்.

அவனே புரிந்து கொள்ளட்டும் என்பது போல் கொஞ்ச நேரம் அவளும் பேசாமல் இருந்தாள். பிறகு சொன்னாள். ''ரொம்ப நாட்களுக்கு முன்னால் ஹாரிகா என்னிடம் வந்தாள். நாங்கள் ஒன்றும் பரஸ்பர தியாகங் களைப் பற்றிப் பேசிக் கொள்ளவில்லை. அவள் ரொம்ப பிடிவாதமாக இருந்தாள். அந்தப் பிடிவாதம் காசெட்டைக்

கேட்டதால் வந்ததில்லை. நம் ஐந்து ஆண்டுகளின் அறி முகத்தைப் பற்றித் தெரிந்து கொண்டதால் வந்தது. நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். ஆனால் அவள் கேட்கவில்லை. அவளுக்குள் ஒரு தீர்மானம் உறுதியாகி விட்டது. இந்த நாடகம் நடத்தியே ஆக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள். கடைசி வரையிலும் நீ ஆஸ்பத்திரிக்கு வராமல் போனதும் எங்க இருவரின் எதிர்பார்ப்பும் பொய்த்து விட்டதென்றும் பணம் உன்னை முற்றிலும் மாற்றிவிட்டதென்றும் நினைத் தோம். இந்த நிலையில் பந்தயத்தில் நீ ஜெயித்திருந் தாலும் ஹாரிகாவை இழந்துதான் விட்டிருப்பாய். ஹாரிகா ரொம்ப புத்திசாலி. வெளியில் பார்ப்பதற்கு அழகும், பணமும் கொண்ட பெண்ணாக தோற்றமளித் தாலும் உயர்வான எண்ணங்களும், தனித் தன்மையும் கொண்டவள். என் மனதில் எந்த மூலையிலேயோ ஒட்டிக் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச அகம்பாவமும் ஹாரிகாவைப் பார்த்தபிறகு போய்விட்டது. உன்னிடம் எப்போ மாற்றம் வரக்கூடும் என்று சரியாக எடை போட்டாள். பந்தயத்தில் தோற்றுப் போய்விட்டதாக ராஜாராமிடம் சொன்னதற்கு வருத்தப்படாதே. இந்தப் பந்தயத்தில் தோற்றுப் போனதன் மூலம் இரு பெண்கள் உன் மேல் வைத்திருந்த நம்பிக்கையை நீ காப்பாற்றி விட்டாய். இதைவிட பெரிய வெற்றி, வேறு ஒன்றும் இருக்குமென்று நான் நினைக்கவில்லை.''

காந்தி கண்களை மூடிக் கொண்டான். ஹாரிகா போ வதற்கு முன்னால் பத்திரிகையின் மீது எழுதிய வரிகள்

நினைவுக்கு வந்தன. 'சிலரால் இந்த உலகமே சிறப்பான தாக மாறி விடுகிறது. என் சின்னஞ் சிறு உலகம் உங்களால்... அதன் முழு அர்த்தம் விளங்கிவிட்டது.

லக்ஷ்மி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இதையெல்லாம் ஜீரணித்துக் கொள்வது அவனுக்கு சிரமம் என்று தெரியும். சில நாட்கள் பிடிக்கலாம். ஹாரிகா ஒத்துக் கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? ஹாரிகா ஒரு கற்பனைச் சித்திரம்; கற்பனை என்றுமே உண்மையை விட நன்றாகவே இருக்கும்.

காந்தி கண்களைத் திறந்தான். ''உங்க இருவரையும் விட்டு விடுகிறேன். ஆனால் உங்களுடன் ஒத்துழைத்த வித்யார்த்தியை மட்டும் சும்மா விடப் போவதில்லை'' என்றான்.

''அவனை உன்னால் ஒன்றும் செய்ய முடியாது.''

''ஏன்?''

''ஒரு டம்ளர் தண்ணீரை இருபது லட்சத்திற்கு வாங்கிக் கொண்டு, மறுபடியும் அவன் அந்தப் பணத்தை மறுத்து விட்டபோது தசரதர் கைகேயிக்கு வரம் தந்தது போல் நீயும் அவனுக்கு வரம் தந்து விட்டாய். 'என்னை மன்னித்து விடுங்கள்' என்று அவன் அதைத் தான் கேட்கப் போகிறான்.'' லக்ஷ்மி முறுவலித்தாள்.

காந்தி நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டு, ''டீக்கு சொல்லு'' என்றான்.

''என்னிடம் பணம் இல்லையே?''

காந்தி சட்டைப் பையைத் தடவிப் பார்த்தான். ஒரே ஒரு நாணயம் தட்டுப்பட்டது. வெளியில் எடுத்தான். நாலணா!

''போட்ட இடத்திலேயே இருப்பது என்பார்களே. அதுபோல் ஐந்து ஆண்டுகள் கழித்து இதுதான் மிச்சம்.''

''ஏன் அப்படி? உன்னுடைய பணம் என்ன வாயிற்று?''

''என்னுடையது என்று எதுவும் கிடையாது. எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்கி விட்டு கட்டிய உடையுடன் நிற்கிறேன். அது சரி. ரூபாய் நோட்டு எரியும் போது பார்த்திருக்கிறாயா? அடுத்த தடவை காட்டுகிறேன்.''

''மறுபடியும் சம்பாதிக்கப் போகிறாயா என்ன?''

''உனக்குக் காண்பிப்பதற்காகவாவது மறுபடியும் சம்பாதிக்கணும். மறுபடியும் பந்தயம் கட்டத் தயார். ஒரே வருடத்தில் ஐம்பது லட்சம். இந்தத் தடவை முட்டாளைப்போல் பணத்தை எல்லாம் எரித்து விட மாட்டேன். உயிர் சிநேகிதி இறந்து விட்டாளே என்று பைத்தியம் பிடித்து அந்தக் காரியத்தைச் செய்து விட்டேன். உண்மையிலேயே நான் முட்டாள்தான். ஒரு தடவை ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தால் உங்க இருவரின் நாடகமும் வெளிப்பட்டிருக்கும்.''

லக்ஷ்மி மறுப்பது போல் தலையை அசைத்தாள். ''அப்பொழுது வேறொரு திட்டம் போட்டிருப்போம்.

நானும் ஹாரிகாவும் சேர்ந்து கொண்டால் உன்னைவிட மாஸ்டர் மைண்ட் ஆகிவிடும் என்று தெரிந்து கொள்.''

மேலும் வாதம் புரிந்தால் தோல்வியடைந்து விடுவோம் என்று உணர்ந்த காந்தி, ''பணம் சம்பாதிக்காமல் என்ன செய்ய முடியும் நம்மால்?'' என்றான்.

''அப்படி என்றால் இந்த உலகத்திலுள்ள புத்திசாலிகள் எல்லோருமே பிறருடைய பலவீனத்தைப் பயன்படுத்தி லட்சம் லட்சமாக சம்பாதிக்கிறார்களா என்ன? வாழ்க்கையில் வெறும் பணம் மட்டுமே இல்லை. மனிதனுக்கு ஒழுக்கமும், கட்டுப்பாடுகளும் தேவை. இந்த விஷயமாக நம் இருவருக்கும் ஐந்து ஆண்டுகளாக சர்ச்சை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இப்பொழுதாவது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுவோம்.''

''அப்படி என்றால் நீதான் என் வழிக்கு வாயேன்.''

''இம்பாசிபிள்!''

''லக்ஷ்மீ! ப்ளீஸ்.''

''ஊஹூம்.''

''சரி பூவா தலையா போட்டுப் பார்ப்போம்,'' சிறுப்பிள்ளை போல் கெஞ்சினான்.

அவன் முகத்தைப் பார்க்கும்போது அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவனை இமைக்காமல் சீரியஸாகப் பார்த்தாள்.

''ப்ளீஸ்'' என்றான்.

''சரி'' என்றாள்.

''பூ விழுந்தால் மறுபடியும் சம்பாதிப்போம். தலை விழுந்தால் சாதாரணமாக வாழ்வோம்.'' வெற்றி தன் பக்கம்தான் என்ற இறுமாப்பில் காந்தி காற்றில் நாணயத்தைச் சுண்டினான்.

நாணயம் இரண்டு மூன்று முறை டில்டே அடித்து மேஜை மீது விழுந்தது. அதே சமயத்தில் ''ஹலோ!'' என்ற வித்யார்த்தியின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் காந்தி.

தான் நினைத்ததைச் செயல்படுத்த அந்தச் சொற்ப நேரம் போதும் லக்ஷ்மிக்கு.

முற்றும்.



மின்நூலாக்கம்

சுபாஷ் சண்முகா


भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
केन्द्रीय सरकार द्वारा प्रत्याभूत
GUARANTEED BY THE CENTRAL GOVERNMENT
100
एक सौ रुपये
I PROMISE TO PAY THE BEARER THE SUM OF ONE HUNDRED RUPEES
MAHATMA GANDHI
பத்து
எண்டமூரி வீரேந்திரநாத்